# வணிகக் கல்வி

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் 12

வணிகக் கல்வித் துறை
விஞ்ஞான, தொழில்நுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
2009

**வணிகக் கல்வி**
**தரம் - 12 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**

**© தேசிய கல்வி நிறுவகம்**
**முதலாம் பதிப்பு - 2009**

**வணிகக் கல்வித் துறை**
**விஞ்ஞான தொழில்நுட்பப் பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

**அச்சுப்பதிப்பு**
அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

2007ம் ஆண்டில் தரம் 6, தரம் 10 என்பவற்றில் அறிமுகம் செய்யப்பட்ட தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல்-கற்பித்தல் அணுகுமுறை படிப்படியாக அடுத்தடுத்தாண்டு களில் 7 ஆம், 8 ஆம், 11 ஆம் தரங்களுக்கான கலைத்திட்டங்களில் உள்வாங்கப்பட்டதுடன் 2009 இல் க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய கலைத் திட்டங்களிலும் அதனை விரிவுபடுத்து வதற்கு தேசிய கல்வி நிறுவக கலைத்திட்ட வடிவமைப்பாளர்கள் வெற்றிகண்டுள்ளனர். இதன் காரணமாக, 12ஆம், 13ஆம் தரங்களின் பல்வேறு பாடங்கள் அவற்றுக்குரிய பாடத்திட்டங்கள்; ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் மாணவரிடத்தில் விருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பன தொடர்பாக விரிவான தகவல்கள் இப்போது முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள் தமது பாடம் தொடர்பான கற்றல் - கற்பித்தல் சந்தர்ப்பங்களை வகுத்துக் கொள்வதற்கு ஆசிரியர்களுக்குத் துணையாக அமையும்.

கலைத் திட்டம் வடிவமைப்போரால் கனிஷ்ட இடைநிலை (6-9) சிரேஷ்ட இடைநிலை (10-11) தரங்களுக்கு உரிய கலைத்திட்டங்களை தயாரிப்பதற்காக கையாண்ட அணுகு முறையிலும் பார்க்க வேறுபட்ட ஓர் அணுகுமுறை க.பொ.த உயர்தர பாடங்களுக்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 6, 7, 8, 9, 10, 11 ஆம் தரங்களில் பாட விடயங்களைக் கற்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய கற்றல்-கற்பித்தல் அணுகுமுறைகள் தொடர்பாக ஆசிரியர்கள் குறித்த மாதிரி ஒன்றின்பால் வழிப்படுத்தப்பட்டனர்.

எனினும் க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய பாடத்திட்டங்களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் ஆசிரியர்கள் தமது விருப்பின்படி செயற்படுவதற்கான சுதந்திரத்தை உயரிய மட்டத்தில் அனுபவிப்பதற்கு இடமளிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் குறித்த பாட அலகுகளுக்கு அல்லது பாடத்துக்கு (Lesson) உரிய தேர்ச்சியையும்; தேர்ச்சி மட்டத்தையும் விருத்தி செய்வதற்காக உத்தேச கற்றல் முறைகளில் தாம் விரும்பிய முறையினை ஆசிரியர்கள் பயன்படுத்துதலே எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தாம் பயன்படுத்தும் கற்பித்தல் அணுகுமுறை மகிழ்ச்சி அளிப்பதாகவும் வினைத்திறன் உடையதாகவும் அமையும் விதத்தில் பயன்படுத்தி மாணவர்களை உத்தேச தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் என்பவற்றின்பால் இட்டுச் செல்லும் பணியில் ஆசிரியர்கள் குறைவேதும் இன்றி நிறைவேற்றுதல் வேண்டும். க.பொ.த உயர்தர பரீட்சையின் முக்கியத்துவம், அப்பரீட்சை தொடர்பாக கல்வித் துறையை சார்ந்த சகலரும் காட்டும் கரிசனை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே ஆசிரியருக்கு இவ்வாறான சுதந்திரத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி ஆசிரியர்களுக்கு இன்றியமையாத ஒரு கைந்நூலாக அமையட்டும் என பிரார்த்திக்கின்றேன். எமது (மாணவர்களின்) பிள்ளைகளின் அறிவுக் கண்ணை திறப்பதற்கு இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் அடங்கியுள்ள தகவல்கள்; கற்பித்தல் முறைகள், அறிவுறுத்தல்கள் என்பன ஆசிரியர்களுக்கு முறையான வழிகாட்டல்களை வழங்கும் என பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# முகவுரை

தெரிந்தவற்றைப் பேணவும் ஏலவே தீர்மானிக்கப்பட்டவற்றைக் கற்பிக்கவும், நாம் நீண்டகாலமாகப் பழக்கப்பட்டதனால் இருப்பவற்றை மீள்நிர்மாணம் செய்யும் ஆற்றல் கூட எம்மிடம் ஓரளவுதான் உள்ளது. பாடசாலை மட்ட கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் பாரிய அளவிலான மாற்றத்தை ஏற்படுத்தி வெளியாகும் இவ்விடைநிலைக் கற்பித்தல் புதிய புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது கலைத்திட்ட மறுசீரமைப்பானது மேற்கூறிய இயலாமையை வெற்றிகொள்ளக் கருமமாற்றுவதுடன் தெரிந்தவற்றை நெறிப்படுத்துவதற்கும் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டதை ஆராய்வதற்கும் நாளைய விடயத்தைக் கட்டியெழுப்பும் ஆற்றலுள்ள நாட்டுக்குப் பயனுள்ள பிரசைகள் குழுவொன்றை உருவாக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

நீங்கள் 6-11 ஆம் தரங்களில் இப்பாடத்தை அல்லது வேறொரு பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியரெனின் உயர்தர வகுப்புக்காக எதிர்பார்க்கப்படும் கற்றல் - கற்பித்தல் முறைகளின் பால் இசைவாக்கம் பெறுதல் இலகுவாக இருக்கும். ஒவ்வொரு தேர்ச்சிகளின் கீழுள்ள தேர்ச்சி மட்டங்களை இனங்கண்டு அவற்றை அடைவதற்குப் பொருத்தமான செயற்பாடுகளைத் தயார்செய்து கொள்வது இம்மறுசீரமைப்பில் முக்கியத்துவம் பெறுகிறது. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் ஆசிரியர் இதுவரை காலமும் வெளிக் கொண்டு வந்த முறைகள் நிகழ்காலத்துக்குப் பொருந்துவதாக இல்லையென்றும் மாணவர்கள் தனித்தனியே கற்பதை விட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு ஒத்துழைப்புடன் கற்றல் அர்த்தமுள்ளதாக உள்ளதென்றும் புதிய வகிபாகத்தில் பிரவேசிக்கும் ஆசிரியர் புரிந்து கொள்ள வேண்டும். அதன்படி ஆசிரியர் தான் பின்னணியில் நின்று மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வரும் கற்றல் - கற்பித்தல் முறைகளை முடியுமான அளவு தெரிவு செய்து கற்பித்தலை ஒரு புதிய பாதைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுப்பதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இடைநிலைக் கல்விக் கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தேசிய கல்வி நிறுவனத்தினால் 6-11 தரங்களுக்கான கணிதம், விஞ்ஞானம், சுகாதாரமும் உடற்கல்வியும், தொழில்நுட்பம், வணிகவியல் ஆகிய பாடங்கள் தொடர்பான ஆசிரியர் வழிகாட்டிக் கோவைகளையும் பரிசீலனை செய்யும்போது மாணவர் மைய, தேர்ச்சி மைய செயற்பாடுகளை முன்னிலைப் படுத்திய கற்றல் - கற்பித்தல் தொடர்பான ஒரு தெளிவான அறிவு உங்களுக்குக் கிடைக்கும். இவ்வாசிரியர் வழிகாட்டிக் கோவைகள் மூலம் முன்வைக்கப்படும் செயற்பாடுகள் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு என்பவற்றை ஒரே மேடைக்குக் கொண்டு வர முயற்சிக் கிறது. அத்துடன் 5E மாதிரியை அடிப்படையாகக் கொண்டும் ஒத்துழைப்புக் கற்றல் (Co-operative Learning) நுட்பமுறையைக் கையாண்டும் இதுவரை தேடிப் பெற்றவற்றை மீண்டும் கட்டியெழுப்பி அதற்கப்பாலும் சென்று புத்தாக்கங்களை உருவாக்கி மலரும் நாளைய உலகை எதிர்கொள்ள முன்கூட்டியே ஆயத்தமாகவும் இச்செயற்பாடுகள் மாணவர்களுக்கு வழியமைத்துக் கொடுக்கும்.

ஆக்கத்திறன் வாய்ந்த ஆசிரியர் பரம்பரையொன்றை உருவாக்கும் நோக்கில் கற்பித்தற் செயலொழுங்குடன் தொடர்பான செயற்பாட்டுத் தொழிலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சில செயற்பாடுகள் மட்டும் க.பொ.த. உயர்தர ஆசிரியர் வழிகாட்டித் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆயினும் வழங்கப்பட்டுள்ள மாதிரிச் செயற்பாடுகளைப் பரிசீலிப்பதாலும் க.பொ.த. சாதாரண தர மறுசீரமைப்பை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தை மேம்படுத்திக் கொண்டு பாடத்துக்கும் வகுப்புக்கும் பொருத்தமான விதத்தில் செயற்பாடுகளைத் தயாரித்துக் கொள்ளும் சுதந்திரம் உங்களுக் குண்டு. இவ்வாசிரியர் வழிகாட்டி கோவைகளுக்குட்படுத்தப்பட்டுள்ள மாதிரிச் செயற்பாடுகள் நான்கு வகையான தகவற் தொகுதியொன்றை உங்களுக்கு வழங்கும் அனைத்துச் செயற்பாடுகளிலும், ஆரம்பத்தில் நீங்கள் காண்பது அச்செயற்பாட்டின் ஊடாக மாணவரைக் கொண்டு செல்ல எதிர்பார்க்கும் இறுதி எல்லையேயாகும். தேர்ச்சி எனப் பெயரிடப்பட்டுள்ள இது பரந்ததாகும். நீண்டகாலத்தில் நிறைவேறுவதாகும். அதற்கடுத்தபடியாகவுள்ள தேர்ச்சி மட்டம் இத்தேர்ச்சியை அடைவதற்காக மாணவர்கள் கடந்து செல்ல வேண்டிய பல்வேறு ஆற்றல்களுள் ஒன்றை மட்டும் குறித்து நிற்கும். இதன்படி பார்க்கும்போது அந்தந்த தேர்ச்சி மட்டத்துக்குரிய தேர்ச்சியுடன் இணைந்ததாகும். அது குறுங்காலத்தில் அடையப் பெறுவதாகும். அதற்கடுத்து இருப்பது செயற்பாட்டின் இறுதியில் ஆசிரியர் அவதானித்த எதிர்பார்க்கும் நடத்தைகள் சிலவாகும். ஆசிரியர்; மாணவர் என்ற இரு சாராருக்கும் சுமையற்ற விதத்தில் இந்நடத்தைகளை ஐந்தாக மட்டுப்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளது. கற்றற்பேறு என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்நடத்தைகள் தேர்ச்சி மட்டத்தை விடச் சிறப்பானதாக இருப்பதுடன் பாடத்தை அடிப்படையாகக் கொண்ட மூன்று ஆற்றல்களையும் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கினால் வெளிக்கொணரும் இரண்டு ஆற்றல்களையும் உள்ளடக்கியவாறு பாட ஆற்றல்கள் மூன்றும் இலகுவிலிருந்து கடினத்தை நோக்கியதாக வரிசைப்படுத்தப்பட்டிருப்பதுடன் குறைந்தபட்சம் முதல் இரண்டையாவது அடைந்து கொள்வதற்காக வகுப்பின் அனைத்து மாணவர்களையும் வகுப்பின் கற்றல் கற்பித்தலின் இதயத்தையொத்த தேடலின் மீது வழிப்படுத்தும் வகையில் ஆசிரியர் கருமமாற்ற வேண்டிய முறையை செயற்பாட்டின் அடுத்த பகுதியில் முன்வைக்கப்பட்டுள்ளது. தொடர்புபடுத்தலுடன் (Engegement) எல்லாச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டாலும், செயற்பாடு திட்டமிடல் ஆரம்பமாவது 5E மாதிரியின் இரண்டாவது ‘E’ யுடன் தொடர்பான தேடல் அல்லது கண்டறிதலுடன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

தேடலுக்கு (Exploration) வழிகாட்டும் அறிவுறுத்தல்கள் செயற்பாட்டின் அடுத்த பகுதியாகும். பிரச்சினையைப் பல்வேறு கோணங்களில் தனது குழுவுக்குக் கிடைக்கும் பக்கத்தை பற்றி மட்டும் தேடலில் ஈடுபடும் மாணவன் பல்வேறு கற்றல் - கற்பித்தல் முறைகளினூடாக உரிய எல்லையை நோக்கிக் கொண்டு செல்ல ஆசிரியரை இவ்வறி வுறுத்தல் தூண்டுகிறது. பிரச்சினைகளூடாக மேற்கொள்ளப்படும் விசாரணை ரீதியான கற்றல் (Inquiry Lesrning) அல்லது செயல்மூலக் கற்றலுக்கு வழிஅமைக்கும் அனுபவ மையக் கற்றலை (Euperiental Learning) த் தெரிவு செய்து கொள்வதற்கு இங்கு ஆசிரி யருக்குச் சுதந்திரமுண்டு. மேற்கூறிய எந்த முறையிலாயினும் மாணவர் பெறும் அறிவை மையமாகக் கொண்டு பாடத்துக்குரிய அல்லது கலைத்திட்டத்தின் சில பாடங்களூடாகச்

செல்லும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களை வழிப்படுத்துதல் க.பொ.த. உயர்தர ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

வேறு பிரச்சினை மையக் கற்றல் - கற்பித்தல் முறைகளையும் வாழ்க்கை யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடுதல் கருத்துள்ளதாகும். கருத்து வேற்றுமைக்குரிய நிலைமைகள், எடுகோள் நிலைமைகள், சமாந்தரமான கருத்துக்கள் மற்றும் முதன்மை மூலாதாரங்களை இதற்காகப் பயன்படுத்தும் சுதந்திரம் உங்களுக்குண்டு. வாசித்தல், தகவல் திரட்டல், முகாமைத்துவம், மீள்சிந்தனை, அவதானிப்பு, கலந்துரையாடல், எடுகோள் அமைத்தல், பரிசோதனை (சோதித்தல்) எதிர்வு கூறுதல்களைப் பரீட்சித்தல், வினாவிடைகளைத் தயாரித்தல், போலச் செய்தல், பிரச்சினை தீர்த்தல், அழகியற் பணிகள் போன்றவை தேடலுக்காகப் பயன்படுத்தக்கூடிய சில நுட்பமுறைகளாகும். மரபு ரீதியான மனப்பாடமிடல் முறையும் இங்கு புறக்கணிக்கப்படவில்லை என்பது முக்கியம்.

மாணவர்கள் சிறு குழுக்களாக நின்று தேடலில் ஈடுபடுவர். ஆசிரியரிடமுள்ள அறிவை வெளியிலிருந்து பெறுவதற்குப் பதிலாக ஆசிரியர் உதவியுடன் அறிவையும் விளக்கத்தையும் உருவாக்குவர். பெற்ற அறிவை குழு அங்கத்தவர்களுள் கருத்துப் பரிமாறி விரிவாக்கிக் கொள்வர். இப்பணிகள் அனைத்தும் உச்ச அளவில் நடைபெறுவது மாணவர்களுக்குத் தேவையான வாசிப்பு ஆவணங்களை வழங்க ஆசிரியர் முன்வந்தால் மட்டுமே சாத்தியமாகும். அத்துடன் மாணவர்கள் கற்றலில் ஈடுபடும் நேரம் பூராவும் ஆசிரியர் அவர்களுக்கிடையே நடமாடி அறிவைத் தேடிக்கொள்ள மாணவர்களுக்கு உதவுதல் மட்டுமேயாகும். இத்தகையதொரு கற்றற் பிரவேசத்தின்போது கண்டறிதல் என்பது முக்கியமாக இருப்பினும் அது சுதந்திரமான அல்லது திறந்த ஒரு கண்டறிதலாக அன்றி வழிகாட்டப்பட்ட (Guided discovery) கண்டறிதல் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்களிடமிருந்தும் சமவயதினரிடமிருந்தும் ஊட்டத்தைப் பெற்று கற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு வாழ்க்கை தொடர்பான பல அனுபவங்கள் கிடைப்பதைத் தனியாகச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை.

தேடலின் பின்னர் வருவது விளக்குதல் (Explanation) படிமுறையாகும். இங்கு சிறு குழுக்கள் தம் ஆக்கங்களைக் கூட்டாகவும் ஆக்கரீதியாகவும் பொதுக் குழுக்களுக்கு முன்வைப்பதற்கு ஆயத்தமாவர். முன்வைப்பது பற்றிய பொறுப்பு குழுவின் அங்கத்தவர் களிடையே சமமாகப் பங்கிடப்பட்டிருப்பதும் முன்வைப்பதற்கான முறையைத் தெரிவு செய்வதில் நெகிழ்ச்சித்தன்மை கடைப்பிடிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதனையடுத்து வரும் (Elaboration) விவரித்தல் படிமுறையின்போது தெளிவற்றதைத் தெளிவுபடுத்துவதற்கும் பிழையானவற்றைச் சரிப்படுத்துவதற்கும் விடுபட்டவற்றைப் பூரணப் படுத்துவதற்கும் வாய்ப்புக் கிடைக்கும். அத்துடன் இப்போது தெரிந்தவற்றுக்கு அப்பாற் சென்று புதிய கருத்துக்களை முன்வைக்கும் சுதந்திரமும் மாணவர்களுக்குண்டு. அனைத்துச் செயற்பாடுகளும் ஆசிரியரின் சிறு விரிவுரையுடனேயே முற்றுப்பெறும். கடத்தல் வகிபாகத்தை மேற்கொள்ள இது ஆசிரியருக்குச் சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு உத்தேச தேர்ச்சி தொடர்பாக பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அனைத்து முக்கியமான

விடயங்களையும் உள்ளடக்கியதாக இச்சிறு விரிவுரையை அந்த ஆசிரியர் முயற்சிக்க வேண்டும். அனைத்து ஆசிரியர்களும் அவசியம் செய்ய வேண்டிய இவ்விபரித்தலுக்கு வழிகாட்டும் நோக்கில் செயற்பாட்டுத் திட்டத்தின் இறுதிப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

பொதுக் கல்வித் தொகுதியில் கட்புலனாகவுள்ள பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்காக பரிமாற்றத்தின் மூலம் ஆரம்பித்து நீண்ட தேடல், மாணவர் விளக்கம், விபரிப்பு வரிசையினூடாக இறுதியில் ஆசிரியர் விரிவுரையுடன் (கடத்தல்) நிறைவு எனும் நிலை மாற்று வகிபாகத்துடன் கூடிய புதியதொரு கல்வி முறையை இவ்வாறு கல்வித் தொகுதிக்கு அறிமுகம் செய்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆசிரியரை முதன்மைப்படுத்திய கற்பித்தலுக்குப் பதிலாக ஆசிரியர் வழிகாட்டலுடன் மாணவர்கள் ஈடுபடும் ஒரு கற்றலாக இதனைக் குறிப்பிடலாம். மாணவர்கள் வசதிப்படி ஆவணங்களை உசாவியும் தரஉள்ளீடுகளைப் பயன்படுத்தியும் தேடலில் ஈடுபடுவர். நாளாந்தம் பாடசாலைக்குச் சமூகமளித்து மகிழ்ச்சியுடன் கற்றுக் கொள்வர். வாழ்க்கைக்கும் தொழில் உலகிற்கும் தேவையான பல்வேறு தேர்ச்சிகளை பாடசாலைக் கல்வியினூடாக அடைந்து கொள்வர். சிந்தனை ஆற்றல், சமூக ஆற்றல், தனியாள் ஆற்றல்களை விருத்தி செய்து கொண்டு தேசத்தைக் கட்டியெழுப்ப ஆயத்தமாவர். இவையனைத்தையும் யதார்த்தமாக்கிக் கொள்ள மாதிரி வினாக்களுக்கு விடை எழுதி, நினைவில் வைத்திருந்த அறிவை விசாரித்துப் பார்க்கும் பரீட்சைமுறைக்குப் பதிலாக யதார்த்த வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான ஆயத்தத்தை உதவும் ஒரு பரீட்சை முறையின் தேவை உணரப்படுகிறது.

இக் கற்றல் - கற்பித்தல் முறையின் குறிப்பிடத்தக்க ஆய்வு யாதெனில் செயற்பாடு பூராவும் ஊடுருவும் இரட்டை வடிவம் கொண்டதும் கருத்துள்ளதுமான மதிப்பீட்டுச் (Evaluation) செயலொழுங்கையும் தொடர்புபடுத்தலையும் ஆசிரியரின் விருப்புக்கேற்ப முன்னறிவைச் சேர்ப்பதாக அமைத்துக் கொள்ளலாம். அதேபோன்று தேடல், விளக்கம், விவரிப்பு மூலம் மதிப்பீட்டை மேலும் உறுதிப்படுத்துதல் ஆசிரியரின் பொறுப்பாகும். எழுத்துப் பரீட்சைகளைக் குறைத்து பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் யதார்த்த இயல்பைப் பாதுகாப்பாற்காகவும் தவணைப் பரீட்சைகளின்போது கட்டாய வினாக்களை உட்படுத்தி பாடசாலை மட்டக் கணிப்பீட்டை நோக்கி பாடசாலைச் சமூகத்தை அணுக வைக்கவும். கற்றலின் உண்மையான பெறுபேற்றை அடைந்ததை உறுதிப்படுத்தும் உண்மையான மதிப்பீட்டு (Autheutic Evaluation) வேலைத்திட்டமொன்றை நாட்டுக்கு அறிமுகப்படுத்தவுமான பல நடவடிக்கைகள் ஏலவே தேசிய மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவப் பிரிவினரின் சீரான போதனை தலைமைத்துவம் மற்றும் தர உறுதிப்பாட்டுப் பொறுப்பு என்பவற்றின் கீழ் இப்புதிய வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்து புதிய இலங்கைக்கான கதவுகளைத் திறந்து விடுதல் நாட்டின் நன்மையை விரும்பும் சகலரதும் ஒன்றிணைந்த பொறுப்பாகும்.

***தேசமானி கலாநிதி ஐ. எல். கினிகே***
உதவிப் பணிப்பாளர் நாயகம் (கலைத்திட்ட விருத்தி)
விஞ்ஞான தொழில் நுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

**நெறிப்படுத்தல் :** **பேராசிரியர் லால் பெரேரா,** பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**ஆலோசனை :** **கலாநிதி ஐ.எல்.கினிகே,** உதவிப் பணிப்பாளர் நாயகம்,
விஞ்ஞான தொழில்நுட்பப்பீடம், தேசிய கல்வி நிறுவகம்.

**திட்டமிடலும் பாடஇணைப்பும்:** **திருமதி எம். ஏ. இந்திரா பத்மினி பெரேரா,**
செயற்திட்ட அதிகாரி, வணிகக் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாடத்திட்டக் குழு:**

1. **திரு. ஜகத் பண்டாரநாயக்க,** சிரேட்ட நிபுணத்துவ ஆலோசகர்.
2. **பேராசிரியர் சுனில் குணதுங்க,** சிரேட்ட விரிவுரையாளர்,
   வணிக நிர்வாகத் துறை, ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
3. **கலாநிதி அனில் சந்திரகுமார,** சிரேட்ட விரிவுரையாளர்,
   வணிக நிர்வாகத் துறை, ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
4. **திரு. எஸ். எஸ். நாஒடுன்ன,** சிரேட்ட விரிவுரையாளர்,
   வணிகத் துறை, ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
5. **திரு. டீ. வசந்தகுமார,** சிரேட்ட விரிவுரையாளர்,
   வணிக மற்றும் நிர்வாகத் துறை, களனி பல்கலைக்கழகம்.
6. **திரு. கே. எல். டப்ளியு. பெரேரா,** துறைத் தலைவர், சிரேட்ட விரிவுரையாளர்,
   நிதித்துறை, ஸ்ரீயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
7. **திருமதி. பீ. டீ. எச். டீ. குணதிலக,** துறைத் தலைவர், சிரேட்ட விரிவுரையாளர்,
   வணிக நிர்வாகத் துறை, ஸ்ரீயஜவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
8. **திரு. டப்ளியு. ஜீ. பிரேமரத்ன,** துறைத் தலைவர், சிரேட்ட விரிவுரையாளர்,
   சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை, ஸ்ரீயஜவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
9. **திரு. பீ. கே. கரந்தகெட்டிய,** சிரேட்ட விரிவுரையாளர்,
   வணிக முகாமைத்துவத் துறை, இலங்கை வடமேல் பல்கலைக்கழகம்.
10. **திரு. வ. தர்மதாசன்,** சிரேஸ்ட விரிவுரையாளர்,
    பேராதனைப் பல்கலைக்கழகம்.
11. **திரு. எ. பீ. விஜேசூரிய,** பிரதான செயற்திட்ட அதிகாரி,
    வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
12. **திரு. ஏ. சிவனேசராஜா,** பிரதான செயற்திட்ட அதிகாரி,
    வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
13. **திருமதி எம். ஏ. இந்திரா பத்மினி பெரேரா,** செயற்திட்ட அதிகாரி,
    வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
14. **திரு. எஸ். கே. பிரபாகரன்,** செயற்றிட்ட அதிகாரி,
    வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
15. **திருமதி பி. எச். குசுமாவதி,** செயற்திட்ட அதிகாரி,
    வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
16. **திரு. எஸ். ஆர். ரத்னஜீவ,** உதவிச் செயற்திட்ட அதிகாரி,
    வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
17. **திரு. டீ. எல். சீ. ஆர். அஜித்குமார,** உதவிச் செயற்திட்ட அதிகாரி,
    வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**எழுத்தாளர் குழு:**

1. **திரு. வை. எச். எம். விமலசேன,** உதவிக் கல்விப் பணிப்பாளர் (வர்த்தகம்), வலயக் கல்விப் பணிமனை, மொனராகல.
2. **திருமதி. ஜீ. சுபாசினி பெரேரா,** உதவிக் கல்விப் பணிப்பாளர் (வர்த்தகம்), வலயக் கல்விப் பணிமனை, சிலாபம்.
3. **திருமதி. பி. ஜி. தமரா நந்தினி,** ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, மாத்தறை.
4. **திரு. டப்ளியு. ஏ. தயாரத்ன,** ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, தங்கல்ல.
5. **திருமதி. ஆர். கொடிப்பிலி ஆராச்சி,** ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, தபுத்தேகம.
6. **திருமதி. கே.டீ. புஷ்பா ரஞ்சனி,** ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, மத்துகம.
7. **செல்வி. எம்.டி. சிறியலதா,** ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, ஹோமாகம.
8. **திரு. எம்.எச். எம். புஹாரி,** ஆசிரியர் ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, கேகாலை.
9. **திரு. ஸி.எல்.எம். நவாஸ்,** ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, இப்பாகமுவ.
10. **திருமதி. எம். பியசீலி,** ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, தெல்தெனிய.
11. **திருமதி. எம்.எச். கருணா தமயந்தி,** ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, பிபில.
12. **திரு. டப்ளியு. எம். விஜேரத்ன,** ஆசிரிய ஆலோசகர், எஹலியகொட ம.ம.வி., எஹலியகொட.
13. **திருமதி. ஏ. எம். ஜே. மெனிக்கே,** ஆசிரியர் ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, அனுராதபுரம்.
14. **திருமதி. ஜே. விஜயவிக்ரம,** உப அதிபர், பரிசுத்த மகளிர் ம.ம.வி. மாரவில்
15. **திருமதி. ஜே. பி. என். ரி. கே. விஜேசேன,** உப அதிபர், பிட்டபத்தர நவோதய வித்தியாலயம், பிட்டபத்தர.
16. **திரு. எ. வி. பந்துசிறி,** இலங்கை ஆசிரியர் சேவை, மகரகம மத்திய மகா வித்தியாலயம், மகரகம.
17. **திரு. டி. எஸ். ராஜபக்ஸ,** இலங்கை ஆசிரியர் சேவை, வித்யாகார ம.வி. ஒபநாயக்க.
18. **திரு. எஸ். ஏ. டீ. சுபசிங்க,** இலங்கை ஆசிரியர் சேவை, தர்மராஜ ம.வி. கண்டி.
19. **திருமதி. டப்ளியு. எம். எம். பீ. பத்மகாந்தி,** இலங்கை ஆசிரியர் சேவை, வெல்லஸ்ஸ தேசிய பாடசாலை, பிபில.
20. **திருமதி. எம். எம். மாலனி,** இலங்கை ஆசிரியர் சேவை, புனித அந்தோனி மகளிர் வித்தியாலயம், கண்டி.

21. **திரு. எ. பி. பியதேவ,** இலங்கை ஆசிரியர் சேவை,
டி எஸ் சேனநாயக்க ம.ம.வி. அம்பாறை.
22. **திருமதி. டி. எ.எஸ். கஹவ,** இலங்கை ஆசிரியர் சேவை,
வித்யாலோக ம.வி. காலி.
23. **திரு. பி. ஏ. ஆனந்த,** இலங்கை ஆசிரியர் சேவை,
சிறிபராக்கிரம ம.வி. ஹோமாகம.
24. **திருமதி. ஜே.டப்ளியு. நாளிகா தமயந்தி,** இலங்கை ஆசிரியர் சேவை,
ஹபரன ம.வி. ஹபரன
25. **திரு. ஜே. எல். சோமரத்ன,** இலங்கை ஆசிரியர் சேவை,
மஹாநாம ம.வி. திறப்பனே.
26. **திருமதி. டீ. எம். டப்ளியு. கிரிவந்தெனிய,** இலங்கை ஆசிரியர் சேவை,
புனித தோமஸ் வித்தியாலயம், கோட்டை.
27. **திரு. பீ. கே. தீபால் சந்தன பெரேரா,** இலங்கை ஆசிரியர் சேவை,
தரனகம ம.வி. சியம்பலாயே.
28. **திருமதி. கே. எம். சீ. ஜயமான்ன,** இலங்கை ஆசிரியர் சேவை,
பர்கசன் உயர் பாடசாலை, இரத்தினபுரி.

**பதிப்பாளர் குழு (சிங்களம்):**
1. **திரு. ஜகத் பண்டாரநாயக்க,** சிரேட்ட முகாமைத்துவ ஆலோசகர்.
2. **திரு. ஜீ. ஜீ. மெத்தானந்த,** சிரேட்ட விரிவுரையாளர்,
களனி பல்கலைக்கழகம்.
3. **திரு. ஏ. பி. விஜேசூரிய,** பிரதான செயற்திட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்.
4. **திருமதி எம். ஏ. இந்ரா பத்மினி பெரேரா,** செயற்திட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்.

**பதிப்பாளர் குழு (தமிழ்):**
1. **திரு. வ. தர்மதாசன்,** சிரேஸ்ட விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
2. **திரு. ஏ. சிவனேசராஜா,** பிரதான செயற்திட்ட அதிகாரி,
வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
3. **திரு. எஸ். கே. பிரபாகரன்,** செயற்றிட்ட அதிகாரி,
வணிகக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
4. **திரு. எம். எச். எம். புஹாரி,** ஆசிரியர் ஆலோசகர்,
வலயக் கல்விப் பணிமனை, கேகாலை.
5. **திரு. ஸி.எல்.எம். நவாஸ்,** ஆசிரிய ஆலோசகர்,
வலயக் கல்விப் பணிமனை, இப்பாகமுவ.

**கணினித் தொழினுட்பம்:**
**செல்வி. கமலவேணி கந்தையா,**
விஞ்ஞான தொழினுட்பப்பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# உள்ளடக்கம்

**பக்கம்**

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் ........................................ 1

கற்றல்பேறுகளும், மாதிரிச் செயற்பாடுகளும் ........................................ 2-166

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு முறைகள் .................. 167

பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம் ........................................ 168-170

கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்கள் ........................................ 171-187

உசாத்துணை ........................................ 188

# ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியினைப் பரிசீலிப்பதற்கான ஆலோசனைகள்

2009 ஆம் ஆண்டு தொடக்கம் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புகளில் நடைமுறைப் படுத்துவதற்குரிய வணிகக்கல்விப் பாடத்திட்டமானது தேர்ச்சி மட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. வணிகக்கல்விப் பாடத்திட்டத்திலுள்ள 1 தொடக்கம் 11 வரையான தேர்ச்சிகளை உள்ளடக்கியதாக ஆண்டு 12க்கான இவ்வணிகக்கல்விப் பாட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்தின் மூலம் வணிகக் கல்விக்குரிய பாடவிடயங்கள் மாத்திரமன்றி அது தொடர்பான சிறந்த மனப்பாங்கு, திறன், பழக்கவழக்கங்கள் என்பவற்றையும் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் மூலமாக மாணவர்களின் தேர்ச்சியினை விருத்தி செய்யும் வகையில் உங்களது கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது திட்டமிடப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான வழிகாட்டல்களாக உங்களுக்கு இங்கு சில மாதிரிச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ் அறிவுரைப்பு வழிகாட்டி வகுப்பில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கில் உருவாக்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்திலுள்ள ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்திற்குமான கற்றல் பேறுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தக் கற்றல் பேறுகளையும் தேர்ச்சி மட்டங்களையும் சகல மாணவர்களும் அண்மிக்கக்கூடிய வகையில் மாணவர் மைய கற்றல் - கற்பித்தல் முறையொன்றினை நீங்கள் பின்பற்றுவீர்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது. அதற்கு உங்களுக்கு வழங்கப்படுகின்ற வழிகாட்டலொன்றாகத் தெரிவு செய்த சில தேர்ச்சி மட்டங்களுக்கான பிரவேசம், கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ் ஆலோசனைகளை அவ்வாறே பின்பற்றல் வேண்டும் என்பது கட்டாயமல்ல; மாணவர்களின் தேர்ச்சியினை விருத்தி செய்யும் முறையில் பொருத்தமானது எனக் கருதுகின்ற மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் செயற் பாடொன்றை பின்பற்றுவதில் உங்களுக்குப் பூரண சுதந்திரமுண்டு.

அதேபோன்று செயற்பாட்டு முடிவில் **“பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற் கான வழிகாட்டல்கள்”** எனும் விடயம் இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் முன்வைக்கப்பட்டுள்ளது. அது உங்கள் வகுப்பில் செயற்பாடொன்றினுள் உள்ளடங்க வேண்டியதும், மாணவர்களுக்கு குறிப்பாக பெற்றுக் கொடுக்க வேண்டிய பாடவிடயங்களுக்குரிய வழிகாட்டலாகும்.

தேர்ச்சிமட்டம் தொடர்பான **பிரவேசம்** அல்லது **கற்றல் தொடர்பாக முன்மொழியப்படும் ஆலோசனைகள்** முன்வைக்கப்படாத தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாக பொருத்தமான பிரவேசத்தையும் ஏற்ற கற்றல் தொடர்பான ஆலோசனைப் பத்திரமொன்றையும் தயாரித்து மாணவர் மைய கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கொன்றினை வகுப்பறையினுள் மேற்கொள் வதற்கு உங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

வணிகம் அதிகமாக நடைமுறை ரீதியானது என்ற வகையில் வணிகர்களுக்கான விடயங் கள் மிகவும் விரைவாக மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதனால், அது தொடர்பாக எச்சரிக்கையாக இருந்து ஆசிரியர்கள் என்ற வகையில் உங்களது அறிவினை உரிய வகையில் புதுப்பித்துக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

# கற்றல்பேறும் மாதிரிச் செயற்பாடுகளும்

**தேர்ச்சி 1.0** : வணிகங்களுக்கு செயல்ரீதியில் பங்களிப்பைச் செய்வதற்காக வணிக அடிப்படைகளைத் தேடியறிவார்.

**தேர்ச்சிமட்டம் 1.1** : வணிக எண்ணக்கருவைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை** : 06

**கற்றல் பேறுகள்:**

- ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களினூடாக வணிக எண்ணக்கருவினை தெளிவுபடுத்துவார்.
- வணிகங்களுக்கு அடிப்படையாக அமைந்த மூல எண்ணக்கருக்களை விமர்சிப்பார்.
- மனிதர்கள் தமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்து கொள்வது உற்பத்தியினூடாக என்பதைக் கண்டுகொள்வார்.
- தேவைகளையும், விருப்பங்களையும் உதாரணங்களை முன்வைத்து ஒப்பிடுவார்.
- பொருளாதார உறுதிப்பாட்டிற்கு வணிகங்களின் பங்களிப்பினை மதிப்பிடுவார்.
- வணிக நோக்கங்களை தெளிவுபடுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலாபம் பெறும் நோக்கில் மனித தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்வதற்குத் தேவையான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், விற்பனை என்பவற்றுடன் இணைந்த அனைத்து நடவடிக்கைகளும் பொதுவாக வணிகம் என வரைவிலக்கணப்படுத்தலாம் என,
- இலாப நோக்கற்ற மனித தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்வதற் காக நடாத்தப்படும் வணிகங்களும் காணப்படுகின்றதென
- இவற்றுக்கமைய வணிகம் என்பது மனித தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்துப் பொருளாதாரச் செயற்பாடு டென்றும் அறிமுகப்படுத்த முடியுமென,
- மனிதனினால் கட்டாயமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டிய உடல், உள ரீதியான நிலைமை மனித தேவைகள் ஆகுமென,
- உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து, பாதுகாப்பு போன்றவை தேவைகளாகுமென,
- தேவையினை நிறைவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகள் விருப்ப மாகுமென,
- உணவுத் தேவையினை நிறைவு செய்கின்ற பல்வேறு முறைகளாக சோறு, பாண், இடியப்பம், தேநீர் போன்றவை விருப்பங்களுக்கு உதாரணங்கள் ஆகுமென,
- வாழ்தன்மைக்கு தேவையாயிருத்தல் பொதுவானவை, கட்டாயமானவை என்பவை தேவைகளின் சில பண்புகளாகுமென,

- வரையறுக்கப்படாதவை, பல்தன்மையுடையவை, வணிகர்களினால் உருவாக்கப் படுபவை, தனிமனிதனுக்கு உரித்தானவை என்பவை விருப்பங்களின் பண்புகளில் சிலவாகுமென,

- மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்யும் கருமங்களில் ஒன்றாக உற்பத்தி அமையுமென,

- உற்பத்தியினை பிரதானமாக பொருட்கள், சேவைகள் என வகைப்படுத்த முடியும் என,

- இதற்கு மேலாக எண்ணங்கள், நிகழ்வுகள், தனிநபர்கள், அமைப்புக்கள், செயற் பாடுகள், தகவல்கள், அனுபவங்கள், இடங்கள் போன்றவற்றையும் பொதுவாக உற்பத்தியாகக் கருதமுடியும் என,

- ஒரு உற்பத்திப் பொருள் தொடர்பாக தனிநபரிடமுள்ள விருப்பமும், அதனைக் கொள்வனவு செய்யக்கூடிய ஆற்றலாகிய கொள்வனவு சக்தியினால் கேள்வி உருவாகின்றதென,

- மனித விருப்பங்களினை நிறைவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளை உருவாக்கும் செயற்பாடு உற்பத்தியாகுமென,

- கொள்வனவாளரும், விற்பனையாளரும் சந்திக்கின்ற அல்லது தொடர்பு கொள்கின்ற எந்தவொரு சந்தர்ப்பமும் சந்தையாகுமென,

- சந்தை பௌதீக ரீதியாக (நிலையான சந்தை) என்றும், இலத்திரனியல் ஊடாக (இலத்திரனியல் சந்தை) என்றும் உருவாகின்றது என,

- நுகர்வோர் சந்தை, கைத்தொழில் சந்தை, சேவைச் சந்தை எனும் முறையில் சந்தைகளை வகைப்படுத்த முடியுமென,

- நிகழ்கால சமுதாயத்தில் மனிதனின் நீடித்த வாழ்விற்கு மாத்திரமன்றி வளர்ச்சிகளும் வணிகம் அத்தியாவசியமானது என,

- வணிகங்களுக்கு பல்வேறுபட்ட நோக்கங்கள் இருக்கலாம் எனவும், அவற்றில் சிலவற்றை பின்வருமாறு காட்டமுடியும் என,

    - சந்தையில் நிலைத்திருத்தல்

    - இலாபத்தை உச்சப்படுத்தல்

    - விற்பனையை உச்சப்படுத்தல்

    - சந்தைப்பங்கினை அதிகரித்துக் கொள்ளல்

**தேர்ச்சிமட்டம் 1.2 :** வணிகங்களின் பரம்பலைக் கண்டறிந்து வணிகங்களின் போக்குகளை எதிர்வுகூறுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- வணிகப் பரம்பலின் முக்கியமான சந்தர்ப்பங்களை வெளிப்படுத்திக் காட்டுவார்.
- பணத்தின் பரம்பலை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துவார்.
- வியாபாரத்தின் கடந்தகால, நிகழ்கால நிலைமையினை ஒப்பிடுவார்.
- வணிகம் என்பது கைத்தொழில் வர்த்தகம் என வகைப்படுத்திக் காட்டுவார்.
- வணிகத்தின் போக்கினை (வளர்ச்சியினை) எதிர்வு கூறுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- ஆதிகாலத்தில் சுயதேவைப் பூர்த்தி முறை காணப்பட்டதென,
- சுயதேவை பூர்த்தி முறையினுள் நேர் உற்பத்தி முறை காணப்பட்டதென,
- நேர் உற்பத்தி மூலம் தனியாள் சிறப்புத் தேர்ச்சி ஏற்பட்டதென,
- தனியாள் சிறப்புத் தேர்ச்சியின் பெறுபேறாக மிகை உற்பத்தி ஏற்பட்டதென,
- மிகை உற்பத்தி காரணமாக பண்டமாற்று தோன்றியதென,
- பண்டமாற்றுடன் வியாபாரம் தோன்றியதென,
- சந்தைப்படுத்தலுக்கான உற்பத்தி நேரில் உற்பத்தியாகக் கருதப்படுமென,
- பண்டமாற்றில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பரிமாற்று ஊடகமாகப் பல்வேறு பொருட்கள் பயன்படுத்தப்பட்டதென,
- மிகவும் சிறந்த பரிமாற்று ஊடகமொன்றாக குற்றி நாணயம், நாணயத்தாள் இனங் காணப்பட்டதென,
- தற்காலத்தில் குற்றி நாணயம், நாணயத்தாள்களுக்கு மேலதிகமாக வங்கிப்பணம், இலத்திரனியல் பணம் பயன்படுத்தப்படுகின்றதென,
- கைத்தொழில் புரட்சி காரணமாக பாரியளவான உற்பத்திகள் தோன்றியதென,
- பாரியளவான உற்பத்தியானது வியாபாரத்தின் பரம்பலுக்கு காரணமாயமைந்தது என,

- வியாபாரத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு வணிகச் சேவைகள் உதவுகின்றன என,
    - வங்கி
    - போக்குவரத்து
    - காப்புறுதி
    - களஞ்சியப்படுத்தல்
    - தொடர்பாடல்
- வியாபாரத்தினதும், வணிகச் சேவைகளினதும் சேர்க்கை வர்த்தகம் ஆகுமென,
- வர்த்தகம், கைத்தொழில் என்பவற்றின் சேர்க்கை வணிகம் ஆகுமென,
- வணிகமானது கைத்தொழில், வர்த்தகம் என்ற அடிப்படையில் பிரிந்து செல்லும் முறையினை காட்டும் பாய்ச்சல் கோட்டுப்படம் அடுத்த பக்கத்தில் காட்டப்பட்டுள்ள வாறு முன்வைக்க முடியும் என,
- பின்வருவன வணிகத்தின் நவீன வளர்ச்சிக் போக்குகளில் சிலவாகுமென,
    - பூகோளமயமாதல்
    - இலத்திரனியல் வணிகம்
    - இலத்திரனியல் பணம்
    - சூழல் தொடர்பாக ஆர்வம் காட்டல்
    - வணிகச் சமூக பொறுப்புக்கள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ளல்.
- தகவல் பொருளாதாரத்துடன் வணிகமானது, இலத்திரனியல் வணிகமாக வளர்ச்சி யடைந்துள்ளது என,


வணிகம்
கைத்தொழில்
வர்த்தகம் (3ம் நிலை)
அகழ்வுக் (பிரித்தெடுக்கும்)
கைத்தொழில் (1ம் நிலை)
ஆக்கக்
கைத்தொழில் (2ம் நிலை)
வியாபாரம்
துணைச்சேவைகள்
(வணிகத்திற்கு உதவும் சேவைகள்)
வங்கி
போக்குவரத்து
தொடர்பாடல்
களஞ்சியப்படுத்தல்
காப்புறுதி
விவசாயம்
மீன்பிடி
சுரங்கமறுத்தல்
மாற்றிடுகை
பொருத்துதல் (நிர்மாணித்தல்)
உள்நாட்டு
வெளிநாட்டு
சில்லறை
மொத்த
ஏற்றுமதி
இறக்குமதி

**தேர்ச்சிமட்டம் 1.3 :** வெவ்வேறு நியதிகளின் அடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்துவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- வணிகங்களை வகைப்படுத்தக்கூடிய பல்வேறு நியதிகளைப் பட்டியல்படுத்துவார்.
- பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தில் காணப்படும் வணிகங்களை பல்வேறு நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்துவார்.
- ஒரே வணிகத்தை பல்வேறு நியதிகளின் கீழ் பல வகைகளுக்கு உட்படுத்தலாம் என்பதை காட்டிக் கொடுப்பார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- பின்வரும் முறையில் பாத்திரமேற்று நடித்தலை உருவாக்கி சுயமாக முன்வரும் மாணவர்கள் இருவர்களைக் கொண்டு அதனை வகுப்பில் முன்வைக்கச் செய்யவும்.

**பாத்திரமேற்று நடித்தல்**

**பிரபா:** ஹலோ மிஸ்டர் சிராஸ் நீண்டகாலத்திற்கு பிறகு சந்திக்கின்றேன் ஏன் இவ்வளவு மெலிந்து விட்டீர்.

**சிராஸ்:** ஐயோ! எனக்கு சர்க்கரை நோய் இருக்கிறது.

**பிரபா:** எனக்கும் சர்க்கரை நோய்தான். எனினும் நான் மெலியவில்லையே.

**சிராஸ்:** மருந்து எங்கே எடுக்கிறாய்.

**பிரபா:** நான் அரச வைத்தியசாலையில் மருந்து எடுக்கிறேன்.

**சிராஸ்:** ஐயோ! எனக்கென்றால் வைத்தியசாலைக்கெல்லாம் செல்ல நேரமில்லை. அதனால் நான் தனியார் வைத்தியரொருவரிடம் மருந்தெடுக்கிறேன்.

**பிரபா:** நீங்கள் எங்கே மருந்தெடுக்கிறீர்.

**சிராஸ்:** நான் மருந்துகள் அனைத்தையும் சிவா பாமசி (மருந்து விற்பனை நிலையம்) இல் எடுக்கின்றேன்.

**பிரபா:** வைத்தியசாலையில் வழங்காத மருந்துகளை நானென்றால் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தில் (ஒசுசல) எடுக்கின்றேன்.

**சிராஸ்:** ஐயோ..... எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஒசுசல இல்லையே.

**பிரபா:** ஆ...... எமது பாதைக்குரிய பஸ் வருகின்றது. நான் போகின்றேன்.

**சிராஸ்:** ஆ...... நல்லது நல்லது. போய் வாருங்கள்.

- பாத்திரமேற்று நடித்தல் மூலமாக வெளிப்படுத்தப்படும் வணிக நிறுவனங்கள் தொடர்பாக மாணவர்களிடம் கேட்கவும்.
- அந்த நிறுவனம் உரித்தாகும் வணிக வகையினை வெளிப்படுத்தியவாறு கலந்துரையாடலை நடாத்தவும்.
    - அரச வைத்தியசாலையும், அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனமும் (ஒசுசல) அரச துறை வணிகங்களாகும் என,
    - தனியார் மருத்துவ நிலையமும், சிவா பாமசியும் தனியார் துறை வணிகங்களாகும் என,
    - அரச வைத்தியசாலையும், ஒசுசலவும் பாரியளவு வணிகங்களாகும் என,
    - தனியார் மருத்துவ நிலையமும், சிவாவின் பாமசியும் சிற்றளவு வணிகங்களென,
    - அரச வைத்தியசாலை சமூக நலனை நோக்காகக் கொண்ட வணிகமொன்றாகும் என,
    - தனியார் மருத்துவ நிலையமும், சிவா பாமசியும் இலாபத்தை நோக்காகக் கொண்ட நிறுவனங்களாகும் என,
    - அரச வைத்தியசாலையும், தனியார் மருத்துவ நிலையமும் பேரூந்து சேவையும் சேவை வழங்குகின்ற வணிகங்களாகும் என,
    - ஒசுசலவும், சிவா பாமசியும் பொருட்களை விநியோகம் செய்யும் வணிகங்களாகும் என,

## கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- பின்வருவன வணிகத்தினை வகைப்படுத்தக்கூடிய நியதிகள் ஐந்தாகும். அவற்றில் உங்களது குழுவிற்கு கிடைக்கும் நியதி தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.
    - உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில்
    - அளவின் அடிப்படையில்
    - உற்பத்தித் துறையின் அடிப்படையில்
    - நோக்கத்தின் அடிப்படையில்
    - உரிமையின் அடிப்படையில்
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வணிக வகைகள் தொடர்பான பாய்ச்சல் கோட்டுப் படத்தை நன்றாகக் அவதானிக்கவும்.
- வழங்கப்பட்டுள்ள நியதியினை விளக்குவதற்கு குழுக் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.
- உங்களது பிரதேசத்திலுள்ள, உங்களுக்கு நன்றாகப் பழக்கப்பட்ட, நீங்கள் அறிந்த பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்ய அடிக்கடி செல்கின்ற வணிக நிறுவனங்களை முடியுமான வகையில் பட்டியல்படுத்தவும்.
- அந்த வணிகங்களை உங்களுக்கு கிடைத்துள்ள நியதிகளுக்கேற்ப வகைப்படுத்துவதற்கு முயற்சிக்கவும்.
- உங்களது தேடலை ஆக்கரீதியாக முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு தயாராகவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடவும்.
- வணிகத்தை பின்வரும் நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்த முடியும் என,
    - உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில் / மட்டம்
        - முதலாம் நிலை
        - இரண்டாம் நிலை / இடைநிலை
        - மூன்றாம் நிலை
    - உற்பத்தித் துறையின் அடிப்படையில்
        - விவசாயம்
        - கைத்தொழில்
        - சேவை
    - உரிமையின் அடிப்படையில்
        - தனியார் துறை
        - பொதுத் துறை
    - நோக்கத்தின் அடிப்படையில்
        - இலாப நோக்ககுடைய
        - இலாப நோக்கற்ற
    - அளவின் அடிப்படையில்
        - சிறிய, நடுத்தர அளவாக
        - பேரளவு (பாரிய)
- பிரதேசத்திலுள்ள வணிகங்களை மேற்குறித்த ஒவ்வொரு நியதிகளுக்கேற்ப வகைப் படுத்த முடியுமென,

## வணிக வகைப்படுத்தல்

### வணிக வகைப்படுத்தலின் அடிப்படை



**தேர்ச்சிமட்டம் 1.4 :** இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு ஒவ்வோர் உற்பத்தித் துறையினதும் பங்களிப்பினை மதிப்பார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மொத்தத் தேசிய உற்பத்தியின் ஒவ்வொரு துறையினதும் பங்களிப்பினையும் கேட்டறிவார்.
- கடந்த சில ஆண்டுகளின் மொத்தத் தேசிய உற்பத்தியின் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சியினை ஒப்பிடுவார்.
- பிரதேசத்திலுள்ள வணிக நிறுவனங்களை மொத்தத் தேசிய உற்பத்தியில் பல்வேறு துறைகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொருளாதாரமொன்றின் வருடாந்த செயற்பாட்டு முன்னேற்றமானது மொத்தத் தேசிய உற்பத்தியின் மூலம் வெளிப்படுத்தப்படுமென,
- மொத்தத் தேசிய உற்பத்தியானது விவசாயம், கைத்தொழில், சேவை என மூன்று துறைகளாக வகைப்படுத்தப்படுகின்றன என,
- இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறை ரீதியான அமைப்பானது இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்படுகின்றது என,
- இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை - 2008 இற்கேற்ப மொத்த தேசிய உற்பத்தியின் துறைரீதியான அமைப்பு பின்வருமாறு என,

**விவசாயம்**

**1. வேளாண்மையும் காட்டுத்தொழில் சார் பொருட்கள்**

1.1 தேயிலை
1.2 இறப்பர்
1.3 தென்னை
1.4 சிறு ஏற்றுமதிப் பொருட்கள்
1.5 நெல்
1.6 கால்நடை வளம்
1.7 ஏனைய உணவு தானியங்கள்
1.8 புகையிலை
1.9 வெற்றிலையும் பாக்கும்
1.10 தோட்ட அபிவிருத்தி
1.11 வேறு விவசாய உற்பத்திகள்
1.12 விறகும் காட்டுத்தொழிலும்

2. கடற்றொழில்

**கைத்தொழில்**

3. சுரங்கமும், அகழ்வும்

4. உற்பத்தித்தொழில்

   4.1 தயாரிப்பு (தேயிலை, இறப்பர், தெங்கு)

   4.2 தொழிற்சாலை உற்பத்திகள்

   4.3 மனைத்தொழில்

5. மின்சாரம், வாயு, நீர்

   5.1 மின்சாரம்

   5.2 வாயு

   5.3 நீர்

6. கட்டுமானம்

**சேவை**

7. மொத்த, சில்லறை வியாபாரம்

   7.1 ஏற்றுமதி வியாபாரம்

   7.2 இறக்குமதி வியாபாரம்

   7.3 உள்நாட்டு வியாபாரம்

8. ஹோட்டலும் உணவகமும்

9. போக்குவரத்தும் தொடர்பாடலும்

   9.1 போக்குவரத்து

   9.2 பொருட்களை கையாளுதல் - துறைமுக, சிவில்

   9.3 அஞ்சல் தந்திப் போக்குவரத்து - விமானசேவை

10. வங்கி, காப்புறுதி, ஆதன விற்பனை போன்றவை

11. வீட்டுரிமை

12. அரச சேவை

13. தனிப்பட்ட சேவை

- மொத்த தேசிய உற்பத்திக்கு ஒவ்வொரு துறையிலும் வழங்கப்படுகின்ற பங்களிப்பினை வீதமாகவும் முன்வைக்க முடியும் என,

(கிட்டிய வருடமொன்றின் மத்திய வங்கி அறிக்கையினை பரிசீலனை செய்யவும்.)

**தேர்ச்சிமட்டம் 1.5 :** வணிக உள்ளீடுகளையும், வெளியீடுகளையும் கொண்ட ஒரு செயன்முறையாகப் பகுப்பாய்வு செய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- பாடசாலையைச் சூழவுள்ள பிரதேசத்தின் பல்வேறு வணிகங்களினது வெளியீடுகளைப் பட்டியல்படுத்துவார்.
- வணிகங்களின் உள்ளீடுகளுக்கு உதாரணங்களை முன்வைப்பார்.
- வணிகச் செயன்முறையை உள்ளீட்டு - வெளியீட்டுச் செயன்முறையொன்றாக வரைபடமொன்றின் மூலம் காட்டுவார்.
- வணிகச் செயன்முறையில் ஏதாவது வெளியீட்டிலிருந்து உள்ளீட்டினை வேறுபடுத்திக் காட்டுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- உள்ளீட்டு, வெளியீட்டுச் செயற்பாடுகளினால் ஏதாவது உற்பத்திப் பொருளொன்று உருவாகின்றது என,
- வணிகச் செயற்பாடுகளுக்காக நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி, தகவல், காலம் போன்ற உள்ளீடுகள் (வளங்கள்) பயன்படுத்தப்படுகின்றன என,
- உற்பத்தி, விநியோகம், நிதிச் செயற்பாடுகள், மனித வளங்கள், ஆய்வும் அபிவிருத்தியும், நிர்வாகம் போன்றவை அடிப்படை வணிக செயற்பாடாகுமென,
- வளங்களை பொருட்கள் அல்லது சேவைகளாக மாற்றுகின்ற செயன்முறை உற்பத்தி யாகும் என,
- வாடிக்கையாளர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் இனங்கண்டு அவற்றை நிறைவு செய்வது தொடர்பாக கருமமாற்றுவது சந்தைப்படுத்தல் எனப்படுமென,
- நிதியீட்டலும், ஈடுபடுத்தலும், மற்றும் அதற்குரிய நடவடிக்கைகள் நிதி என்று அறிமுகப்படுத்தப்படும் என,
- ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, தெரிவு செய்தல், இணைத்துக் கொள்ளல், பயிற்சியளித்தல், மதிப்பீடு, நலன்புரி என்பவை தொடர்பாகச் செயலாற்றல் மனித வளச் செயற்பாடாகு மென,
- வெளியீட்டின் தரத்தினை மேம்படுத்துவதற்காக புதிய வெளியீட்டு முறைகளைத் தேடுதல் போன்ற நடவடிக்கைகள் ஆய்வும் அபிவிருத்தியுமாகுமென,
- வணிகச் செயற்பாடு தொடர்பான ஆவணங்களை பராமரித்தல், தொடர்பாடல் கருமங் களை நடைமுறைப்படுத்திச் செல்லல் என்பன நிர்வாகச் செயன்முறையில் உள்ளடங்குமென,

- முடிவுப் பொருட்களை பொருட்கள், சேவைகள் என்று வகைப்படுத்த முடியும் என,
- வணிகச் செயன்முறையினை உள்ளீடு - வெளியீட்டுச் செயன்முறையொன்றாக பின்வருமாறு படம் மூலம் முன்வைக்கலாம் என,



**தேர்ச்சிமட்டம் 1.6 :** தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்கு பல்வேறு உற்பத்திகளை வகைப்படுத்துவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- பொருட்களை சேவைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற காரணிகளை முன் வைப்பார்.
- பொருட்களை வகைப்படுத்துவார்.
- சேவைகளை வகைப்படுத்துவார்.
- பொருட்கள், சேவைகளின் வகைப்படுத்தலை பாய்ச்சல் கோட்டு வரைபடத்தின் மூலம் முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- உற்பத்திகளை (பொருட்கள், சேவைகள்) பின்வரும் பாய்ச்சல் கோட்டு வரைபடத்தின் படி வகைப்படுத்த முடியும் என,



**தேர்ச்சிமட்டம் 1.7 :** வணிக நடவடிக்கைகளில் ஆர்வம் செலுத்தும் தரப்பினர் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களைக் கேட்டறிவர்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினரை, தெரிவு செய்த வணிகத்தினூடாக பட்டியலப்படுத்துவார்கள்.
- வெவ்வேறுபட்ட பிரிவினர் வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங் களைத் தேடியறிவார்.
- ஒவ்வொரு தரப்பினரும் வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் வெவ்வேறுபட்டவை என்பதை வெளிப்படுத்துவார்.
- வணிகமொன்றின் வெற்றிகரமான வாழ்தன்மைக்காக அவ்வாறு அக்கறை காட்டும் பிரிவினர்களின் எதிர்பார்க்கைகளை நிறைவேற்றும் வகையில் செயற்பட வேண்டிய முறைகளை காட்டிக் கொடுப்பார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- மாணவர் தொடர்பாக அக்கறை காட்டும் பிரிவினரை இனங்கண்டு பின்வரும் படங்களை பூரணப்படுத்துங்கள்.



- பாடசாலை தொடர்பாக அக்கறை செலுத்தும் பிரிவினரை கேட்டறிந்து பின்வரும் படத்தினைப் பூரணப்படுத்துங்கள்.




- வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்தும் பிரிவினரை இனங் காண்பதற்கு பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தி கலந்துரையாடலை நடாத்தவும்.
    - பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், சகோதர சகோதரிகள், உறவினர்கள், அரசு போன்ற பிரிவினர்கள், மாணவர் தொடர்பாக ஆர்வம் செலுத்தும் பிரிவினர்களில் சிலராகும் என,
    - பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர்கள், அரசு, சமூகம் போன்ற பிரிவினர் பாடசாலை தொடர்பாக ஆர்வம் செலுத்தும் பிரிவினர்களில் சிலராகு மென,
    - மேற்குறிப்பிட்ட பிரிவினர்களில் அரசு, சமூகம் போன்றன வணிகம் தொடர்பாக ஆர்வம் செலுத்தும் பிரிவுகள் சிலவாகுமென,
    - வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்தும் பிரிவினர் பலர் உள்ளனரென,

## கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- பின்வரும் வணிக நிறுவனங்களில் உங்களது குழுவிற்குக் கிடைக்கின்ற வணிகம் தொடர்பாகக் கவனத்தை செலுத்தவும்.
    - ஆடைகளைத் தைத்து விற்பனை செய்கின்ற நிறுவனமொன்று
    - தனியார் வைத்திய நிலையமொன்று
    - உணவகமொன்று
- உமது தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய உமது பிரதேசத்திலுள்ள வணிகமொன்றை இனங்கண்டு கொள்ளவும்.
- அந்த வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்தும் பிரிவினரை குழுக் கலந்துரையாட லொன்றின் மூலம் வெளிக்கொணரவும்.
- அவர்கள் / அப்பிரிவினர் வணிகத்திலிருந்து எதிர்பார்ப்பது என்ன? என்பது தொடர் பாகக் கலந்துரையாடவும்.
- அப்பிரிவினர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் வணிகம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதைக் காட்டவும்.

- வணிகமானது அப்பிரிவினர்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியது ஏன் என்பதைத் தெளிவுபடுத்தவும்.
- உங்களது தேடலை முழுவகுப்பிற்கும் ஆக்கரீதியாக முன்வைப்பதற்கு தயாராகவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் சிலர் பின்வருமாறு:
  - உரிமையாளர்கள்
  - முகாமையாளர்கள்
  - ஊழியர்கள்
  - வழங்குநர்கள்
  - வாடிக்கையாளர்கள்
  - அரசு
  - சமூகம்
  - போட்டியாளர்கள்
  - கடன் வழங்குநர்
  - எதிர்கால முதலீட்டாளர்கள்
- அந்த ஒவ்வொரு பிரிவினரும் வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்துவதற்கான காரணிகள் பின்வருமாறு என,
  - உரிமையாளர்கள் - இலாபம், அபிவிருத்தி, சந்தைப்பங்கு
  - முகாமையாளர்கள் - இலாபம், அபிவிருத்தி, எடுத்த தீர்மானங்களின் வெற்றிகரத்தன்மை, தொழில்விருத்தி
  - ஊழியர்கள் - சம்பளம், மேலதிகக் கொடுப்பனவுகள், வேலையில் திருப்தி, தொழில் உறுதி, பதவி உயர்வு
  - வழங்குநர்கள் - கட்டளைகளைத் தொடர்ந்து பெறலும், பணத்தை மீளஅறவிடலும்.
  - வாடிக்கையாளர்கள் - தரமான பொருட்கள் அல்லது சேவை கள், வணிகத்தின் உறுதிப்பாடு, பொறுப்புக் களை ஒழுங்காக நிறைவேற்றல்.
  - அரசு - வரி, வேலைவாய்ப்பு, பொருளாதார அபிவிருத்தி
  - சமூகம் - சூழலைப் பாதுகாத்தல், வேலைவாய்ப்புக்கள்
  - போட்டியாளர்கள் - விற்பனை உபாயங்களை தீர்மானம் செய்தல், தகவல்களை அறிந்து கொள்ளல்.
  - கடன் வழங்குநர்கள் - கடன் பணத்தின் பாதுகாப்பு, மீளப் பெறும் திறன், பிணைகளின் பாதுகாப்பு.
  - எதிர்கால முதலீட்டாளர்கள் - எதிர்காலத்தில் தமது வளங்களை முதலீடு செய்வதற்கு

- வணிகம் அப்பிரிவினர் தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்கான காரணங்களில் சில பின்வருமாறு:
    - உரிமையாளர்கள் - வாழ்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு
    - ஊழியர்கள் - ஊழிய வினைத்திறனை அதிகரித்துக் கொள்வதற்கு ஊழியர்களின் வேலையில் திருப்தியினை ஏற்படுத்தல்.
    - கடன் வழங்குநர்கள் - தொடர்ச்சியாகத் தேவைப்படுகின்ற நிதியினை ஈட்டிக் கொள்வதற்கு
    - அரசு - சிறப்புச் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு
    - வாடிக்கையாளர்கள் - குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக் கான சந்தையினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு

**தேர்ச்சி 2.0** : வணிகச் சூழல் வணிகங்களின் வாழ்தன்மையில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை உறுதிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 2.1** : வணிகச் சூழலைப் பகுப்பாய்வு செய்வதனை இலகுபடுத்துவதற்காக வணிகச் சூழலை வகைப்படுத்துவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை** : 04

**கற்றல் பேறுகள்:**

- வணிகச் சூழல் பற்றிக் கருத்துரைப்பார்.
- வணிகச் சூழலைக் கற்பதன் மூலம் வணிகரொருவருக்குக் கிடைக்கின்ற நன்மைகளைப் பட்டியல்படுத்துவார்.
- வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் சூழல் காரணிகளைப் பட்டியல்படுத்துவார்.
- சூழற் காரணிகளின் தன்மைக்கேற்ப வணிகச் சூழலை வகைப்படுத்துவார்.
- வழங்கப்பட்ட நிறுவனமொன்றின் உள்ளக (அக), வெளியகச் (புற) சூழல் காரணிகளை வெவ்வேறாகப் பட்டியல்படுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வணிக நடவடிக்கைகளில் தாக்கங்களை உருவாக்குகின்ற காரணிகள் செயற்படும் சூழலினை வணிகச் சூழல் என்று அறிமுகப்படுத்தலாம் என,
- வணிகச் சூழல்களை ஆய்வு செய்வதன் மூலம் வணிகரொருவருக்குப் பல நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றதென,

  **உதாரணம்:**
  - பலங்களை இனங் காண்பதற்கு
  - பலவீனங்களை இனங் காண்பதற்கு
  - வாய்ப்புக்களை இனங் காண்பதற்கு
  - அச்சுறுத்தல்களை இனங் காண்பதற்கு

- வணிகச் சூழலைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் என,




- நிறுவனத்தினுள் காணப்படுவதும் அதில் தாக்கத்தை ஏற்படுத்துவதுமான சூழல் உள்ளகச் சூழல் ஆகுமென,

- வணிகச்சூழலின் வகைப்படுத்தலை பின்வருமாறு வரைபடம் மூலம் முன்வைக்க முடியும் என,



- வணிக உள்ளகச் சூழல் என்பது அமைப்பினுள் காணப்படுகின்ற அதில் பாதிப்பை செலுத்துகின்ற குழுக்களும் (Forces) நிலைமைகளும் (Condition) ஆகுமென,
- நிறுவனத்தினுள் தாக்கஞ் செலுத்துகின்ற வணிகத்திற்கு வெளியே காணப்படுகின்ற நிலைமைகள் அனைத்தும் வணிக வெளியகச் சூழலாகுமென,
- வணிக அமைப்பில் தாக்கஞ் செலுத்துகின்ற சிறப்பு அமைப்புக்கள் அல்லது குழுக்கள் வணிக வேலைச் (அண்மிய) சூழலாகுமென,
- அமைப்பொன்றின் முழுமையை நிர்மாணிக்கின்ற அதன் சுற்றுப்புறத்தின் கூடுதலான அம்சங்களில் தாக்கங்களை ஏற்படுத்துவதுமான குழுக்கள் பேரினச்சூழல் எனப்படுகின்ற பொதுச் சூழலாகுமென,

**தேர்ச்சிமட்டம் 2.2 :** அகச் சூழல் (உள்ளக) காரணிகள் வணிகங்களில் செலுத்தும் செல்வாக்கைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- தெரிவு செய்த வணிகமொன்றில் தாக்கஞ் செலுத்துகின்ற அகச்சூழல் காரணிகளைப் பட்டியல்படுத்துவார்.
- அகச்சூழல் காரணிகளை அறிந்து நிறுவனமொன்றின் பலங்களை இனங்கண்டு பட்டியல்படுத்துவார்.
- அகச்சூழல் காரணிகளை அறிந்து நிறுவனமொன்றின் பலவீனங்களை இனங்கண்டு பட்டியல்படுத்துவார்.
- அகச்சூழல் காரணிகளின் பலம், பலவீனங்கள் வணிகச் செயற்பாடுகளில் ஏற்படுத்து கின்ற தாக்கங்களை ஒப்பிட்டுப் பகுத்தாய்வார்.
- பலங்களைப் பயன்படுத்தி வணிகத்தின் வெற்றிக்கு அதனை சாதகமாக்கிக் கொள்ள முடிவதுடன் பலவீனங்களைத் தவிர்ப்பதற்கு தேவையான படிமுறைகளை எடுக்க முடியும் என்பதைக் காரணங்களுடன் விபரிப்பார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- பாடசாலைக் கருமங்களில் தாக்கஞ் செலுத்தும் அகக் குழுவினரை மாணவர்களிடம் கேட்கவும்.
- அப்பிரிவினர் / அக்காரணிகள் பாடசாலைக் கருமங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கேட்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தி கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
    - அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள், பாடசாலை வளங்கள் என்பவை பாடசாலைச் செயற்பாடுகளில் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற காரணிகளாகுமென,
    - அத்தகைய காரணிகள் பாடசாலைச் செயற்பாடுகளில் (கருமங்களில்) தாக்கத்தை ஏற்படுத்தும் பலங்கள் ஆகுமென,

      **உதாரணம்:**
        - அதிபரின் ஆளுமை
        - ஆசிரியரின் பயிற்சியும் அனுபவமும்
        - பழைய மாணவர்களது உதவிகள்
        - தேவையான பௌதீக வளங்கள் காணப்படல்
    - அந்தக் காரணிகளில் பலவீனங்களும் காணப்பட முடியும் என,

      **உதாரணம்:**
        - ஆசிரியர் பற்றாக்குறை
        - பழைய மாணவர்களின் உதவி கிடைக்கப் பெறாமை
        - தேவையான பௌதீக வளங்கள் காணப்படாமை
    - வணிக நிறுவனங்களில் உள்ளகச் சூழல் காரணிகளில் பலங்களும் பலவீனங் களும் காணப்படுகின்றன என,

## கற்றலுக்காக முன்மொழியப்பட்ட ஆலோசனைகள்:

- பின்வருவன வணிகத்தில் தாக்கம் செலுத்தும் அகச்சூழல் காரணிகளின் 3 சோடிகள் ஆகும். உங்கள் குழுவிற்கு கிடைக்கும் சூழற் காரணிச்சோடியில் கவனம் செலுத்தவும்.
    - உரிமையாளர்கள் - ஒழுங்கமைக்கப்பட்ட கலாசாரம்
    - முகாமையாளர்கள் - அமைப்பு முறை
    - ஊழியர்கள் - வளங்கள்
- தலைப்புக்குரிய காரணிகளை இனம் காண்பதற்கு உங்களுக்கு பரிச்சயமான வணிக நிறுவனமொன்றின் மீது கவனம் செலுத்தவும்.
- வணிகத்தின் வெற்றிக்கு உங்களுக்கு கிடைத்த காரணிகளால் எதிர்பார்க்கப்படுகின்ற உதவிகளை கலந்துரையாடலின் மூலம் இனங் காணுங்கள்.
- வணிகத்தின் வெற்றிக்கு குறிப்பிட்ட காரணிகளில் இருக்கவேண்டிய பலங்களை இனங்கண்டு கொள்ளுங்கள்.
- வணிகத்தின் வெற்றிக்குப் பாதகமான முறையில் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற காரணிகளில் இருக்கக்கூடிய பலவீனங்களைப் பட்டியல்படுத்தவும்.
- அப்பலங்களினால் நன்மையை பெற்றுக் கொள்வதற்கும், பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்கும் உங்களால் வழங்கக்கூடிய முன்மொழிவுகளை முன்வைக்கவும்.
- உங்களது தேடலை ஆக்கரீதியாகவும், ஒருமைப்பாட்டுடனும் முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- வணிகத்தின் அகச்சூழல் காரணிகள் கீழே காட்டப்படுகின்றன என,
    - உரிமையாளர்கள்
    - முகாமையாளர்கள்
    - ஊழியர்கள்
    - அமைப்புக் கலாசாரம்
    - அமைப்பு முறை
    - வளங்கள்
- உரிமையாளர்கள் அநேகர் இருத்தல், உரிமையாளரின் அறிவு, அனுபவம், நிதிப்பலம் போன்றவை உரிமையாளரின் பலங்களாகுமென,
- உரிமையாளர்கள் எண்ணிக்கையில் குறைவாயிருத்தல், நிதிப்பலம் குறைவாக இருத்தல், அறிவும் அனுபவமும் குறைவாயிருத்தல் என்பன உரிமையாளர்களின் பலவீனங்களாகுமென,
- பயிற்சியும் அனுபவமும் பெற்றவர்களாக இருத்தல், சரியான தீர்மானங்கள் எடுக்கக் கூடியவர்களாக இருத்தல் போன்றவை முகாமையாளர்களின் பலங்கள் ஆகுமென,

- பயிற்சியற்றவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் இருத்தல், பிழையான தீர்மான மெடுத்தல் என்பவை முகாமையாளர்களின் பலவீனங்களாகுமென,
- திறமையான பயிற்சி பெற்ற ஊழியர்கள் இருத்தல், விசுவாசமிக்க ஊழியர் குழு வொன்று இருத்தல் என்பவை வணிகத்தின் பலமாகுமென,
- பயிற்சியற்ற ஊழியர்கள் மற்றும் செயற்றிறனற்ற ஊழியர்கள் இருத்தல் போன்றன ஊழியர்களின் பலவீனங்களாகுமென,
- வணிகங்களில் ஒருவரிடமிருந்து அடுத்தவருக்குப் பகிரப்படுகின்ற, அடுத்த பரம்பரைக்கு கையளிக்கப்படுகின்ற நம்பிக்கைகள், பெறுமானங்கள், விழுமியங்கள், பழக்கங்கள், சட்டமும் நடத்தை முறைகள் போன்றன அமைப்புக் கலாசாரமென அறிமுகப்படுத்த லாம் என,
- அமைப்புக் கலாசாரத்தினுள் பலங்கள் போன்றே பலவீனங்களும் காணப்பட முடியுமென,
- நிறுவன அமைப்பின் நோக்கத்தை இலகுவாக அடைந்து கொள்ளக்கூடிய முறையில் அமைப்பின் வேலைகளையும், வளங்களையும், அதிகாரங்களையும் அதன் அங்கத் தவர்களிடையே பகிர்ந்து கொள்கின்ற முறையினை நிறுவன அமைப்பாக அறிமுகப் படுத்தலாம் என,
- வணிகத்தின் அமைப்பு முறையானது வணிகத்திற்கு பலங்கள் அல்லது பலவீனங் களையும் கொண்டு வர முடியுமென,
- பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்வதற்கு உள்ளீடாக பயன்படுத் தப்படுகின்ற எந்தவொரு விடயமும் “வளம்” ஆக இனங்காட்டப்பட முடியுமென,
- நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி, காலம், தகவல்கள், அறிவு என்பவைகள் வணிகத்தின் வளங்களாகுமென,
- இந்த வளங்களில் பலங்களைப் போன்றே பலவீனங்களும் காணப்படலாம் என,
- சகல அகச்சூழற் காரணிகளின் பலங்கள் மூலம் பயன்களை பெற்றுக் கொள்வதற்கும், பலவீனங்களைக் குறைத்துக் கொள்வதற்கும் வணிகம் முயற்சிக்க வேண்டும் என,

**தேர்ச்சிமட்டம் 2.3 :** வேலைச் சூழல் (அண்மிய) காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்துகின்ற செல்வாக்குகளைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- தெரிவு செய்த வணிகமொன்றில் செல்வாக்குச் செலுத்தும் வேலைச்சூழல் (அண்மிய சூழல்) காரணிகளை பட்டியல்படுத்துவார்.
- வேலைச்சூழல் காரணிகளுடன் இணைந்ததாக உருவாகின்ற வணிக வாய்ப்புக்களை இனங்காண்பார்.
- வேலைச்சூழல் காரணிகளுடன் இணைந்ததாக வணிகங்களுக்கு ஏற்படுகின்ற சவால் களை வெளிப்படுத்துவார்.
- வேலைச்சூழல் காரணிகள் வணிகங்களுக்கு ஏற்படுத்துகின்ற தாக்கங்களை உதாரணங் களுடன் தெளிவுபடுத்துவார்.
- வணிக வாய்ப்புக்களை இனங்கண்டு அவற்றிலிருந்து பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கும், சவால்களைக் குறைத்துக் கொள்வதற்குமான முன்மொழிவுகளை முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வணிக வேலைச்சூழல் காரணிகள் பின்வருமாறு என,
  - வாடிக்கையாளர்கள்
  - வழங்குநர்கள்
  - போட்டியாளர்கள்
  - பதிலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வோர்
  - சந்தைக்குள் பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கும் புதிய வணிகர்கள்
- வணிகத்தில் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வோர் வாடிக்கை யாளர்கள் ஆவார்கள் என,
- வாடிக்கையாளரின் அறிவு, அவர்களின் வருமானங்கள் போன்ற காரணிகள் வணிகத்திற்கான வாய்ப்புக்களை உருவாக்குவது போன்று சவால்களையும் உருவாக்குகின்றன என,
- வணிகத்திற்குத் தேவையான வளங்களை வழங்குகின்ற தனிநபர்களும் நிறுவனங் களும் வழங்குநர்கள் ஆவார்களென,
- வழங்குநர்கள் உரிய நேரத்திற்கு தரமான மூலப்பொருட்களை வழங்குதல் அல்லது வழங்காதிருத்தல், கழிவு கிடைத்தல் அல்லது கிடைக்காதிருத்தல் போன்ற காரணிகள் வணிகங்களுக்கு சவால்களை அல்லது சந்தர்ப்பங்களை உருவாக்கும் என,

- வணிகத்தினது பொருட்கள் சேவைகளுக்குச் சமமான உற்பத்திப் பொருட்களை நிரம்பல் செய்யும் வேறு வணிகங்கள் போட்டியாளர்களாகுமென,

- புதிய போட்டியாளர்கள் சந்தைக்கு பிரவேசித்தல், சந்தையில் இருக்கும் போட்டியாளர் கள் விலகுதல், போட்டியாளர்கள் அவர்களின் பொருட்கள் சேவைகளுடன் பல்வேறு வசதிகளை வாடிக்கையாளருக்கு செய்தல் போன்றன வணிகங்களுக்கான வாய்ப்புக் களைப் போன்றே சவால்களையும் உருவாக்குகின்றன என,

- வணிகம் முன்வைக்கின்ற பொருட்கள் அல்லது சேவைகளைப் பயன்படுத்துவதற்கு மாற்றீடான வேறு பொருட்களை உற்பத்தி செய்வோர் - பதிலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வோராவரென,

- பதிலீட்டுப் பொருட்கள் சந்தையில் கூடுதலாகக் காணப்படுதல், வணிகத்திற்கு அச்சுறுத்தலாகின்ற அதேவேளையில் அது வேறு வணிக வாய்ப்புக்களையும் உருவாக்குவதற்குக் காரணமாக அமைகின்றதென,

- எதிர்காலத்தில் சந்தையில் நுழைவதற்கு எதிர்பார்ப்புடன் இருக்கும் எதிர்கால முதலீட்டாளர்கள் வணிகத்திற்கு வாய்ப்புக்களையும் சவால்களையும் உருவாக்கு கின்றனர் என,

**தேர்ச்சிமட்டம் 2.4 :** பேரினச் சூழல் காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்தும் செல்வாக்குகளைப் பகுப்பாய்வு செய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- தெரிவு செய்த வணிகமொன்றில் செல்வாக்குச் (தாக்கம்) செலுத்துகின்ற பேரினச் சூழல் காரணிகளை பட்டியல்படுத்துவார்.
- ஒவ்வொரு பேரினச் சூழல் காரணிகளின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.

  ஒவ்வொரு பேரினச் சூழல் காரணிகளதும் முக்கியத்துவத்தைக் காட்டுவார்.
- பேரினச் சூழல் காரணிகள் வணிகத்தின் மீது ஏற்படுத்துகின்ற தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வார்.
- பேரினச் சூழல் காரணிகளிடையே இடைத் தொடர்கள் காணப்படுகின்றன என்பதை உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- "மசகு எண்ணெயின் விலை உயர்வினை குறிப்பிடுகின்ற பத்திரிகைச் செய்தி" யினை வகுப்பில் முன்வைக்கவும்.
- மசகு எண்ணெயின் விலை உயர்வானது எந்தவொரு வணிகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பூகோள தாக்கமொன்றாகுமென்பதை கலந்துரையாடல் மூலம் உருவாக்கிக் கொள்ளவும்.
- மசகு எண்ணெய் என்பது இயற்கைச் சூழலில் காணப்படுகின்றதும் குறைவடைகின்றதுமான வளமாகுமென்பதையும், இவ்வளமானது போக்குவரத்துத் துறைக்கு மாத்திரமன்றி அனைத்து வணிகத் துறைகளுக்கும் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற முறையினைக் கலந்துரையாடவும்.

**கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:**

- பின்வரும் செய்தித் தலைப்பில் உங்களது குழுவிற்கு கிடைக்கும் செய்தித் தலைப்புத் தொடர்பாகக் கவனஞ் செலுத்தவும்.

  **செய்தித் தலைப்பு 1**

  - அனைத்து வியாபார நிலையங்களிலும் பொருட்களின் விலைகளைக் காட்சிப் படுத்தல் கட்டாயமானதாகும்.
  - அடுத்த வருடம் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறும்.

  **செய்தித் தலைப்பு 2**

  - இலங்கைச் சனத்தொகையில் நான்கு பேர்களில் ஒருவர் முதியோர் ஆவார்.
  - தலதா பெரஹராவை மிகவும் சிறப்பாக நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**செய்தித் தலைப்பு 3**

- அடுத்த மாதத்தில் மீண்டும் சமையல் வாயுவின் விலை உயரும்.
- வேளாண்மையை அறுவடை செய்வதற்கும், சூடு மிதித்தலுக்குமாக நவீன மயமான இயந்திரமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

**செய்தித் தலைப்பு 4**

- இலங்கை நிலத்தில் மசகு எண்ணெய்
- சார்க் (SAARC) வலய நாடுகள் ஒரேவகையான நாணய அலகினைப் பயன் படுத்துவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- உங்களது குழுவிற்கு கிடைத்த செய்தித் தலைப்பின் ஊடாக விபரிக்கப்படும் பேரினச் சூழலை இனங்காணவும்.
- உங்களுக்குக் கிடைத்த நிகழ்வின் காரணமாக வணிகங்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தெளிவுபடுத்தவும்.
- நீங்கள் இனங்கண்ட பேரினச் சூழலினுள் இடம் பெறக்கூடிய வணிகங்களில் தாக்கம் செலுத்தக்கூடிய வேறு நிகழ்வுகளுக்கான உதாரணங்களை முன்வைக்கவும்.
- நீங்கள் இனங்கண்ட பேரினச் சூழலில் இடம்பெறும் நிகழ்வுகள் வணிகத்தின் வேலைச் சூழல் காரணிகளில் உருவாக்குகின்ற தாக்கங்களைத் தரவும்.
- உங்களது தேடலை ஆக்கபூர்வமாகவும் ஒருமைப்பாட்டுடனும் முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கும் ஆயத்தமாகவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- வணிகங்களில் தாக்கங்களை ஏற்படுத்தும் பேரினச்சூழல் காரணிகளை பின்வருமாறு பட்டியற்படுத்தலாம் என,
  - அரசியல், சட்டச்சூழல்
  - பொருளாதாரச் சூழல்
  - சமூக, கலாசாரச் சூழல்
  - தொழில்நுட்பச் சூழல்
  - மக்கட் சூழல்
  - இயற்கைச் சூழல்
  - பூகோளச் சூழல்
- ஒவ்வொரு பேரினச் சூழல் காரணிகளும் வணிகங்களின் நிலைப்பாட்டிலும் வாழ்தன்மையிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என,
  - **அரசியல், சட்டச்சூழல்**

    அரசின் சட்டமூலங்கள், சட்டதிட்டங்கள், அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள், நிகழ்கால அரசின் அரசியல் கொள்கைகள் என்பன வணிகங் களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

- **பொருளாதாரச் சூழல்**

வணிகங்களின் நிலைப்பாட்டிற்கு (உறுதிப்பாட்டிற்கு) அதனுடைய செயற்பாட் டுத்திறன் தாக்கத்தையேற்படுத்தும். இது பொருளாதாரக் காரணியில் தங்கி யுள்ளது. அதேபோன்று வணிகச் செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற கிரயமும் பொருளாதாரக் காரணிகளின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இவ்வாறான வணிக, நுகர்வுச் செலவுகளுக்கு மேலதிகமாக வட்டி வீதம், வருமானப் பகிர்வு, பணவீக்க வீதம், வேலையற்றோர் தொகை, உலகச் சந்தையில் விலைமட்டங்களில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவைகளும் வணிகங் களில் தாக்கத்தையேற்படுத்தும் பொருளாதாரச் சூழல் காரணிகளாகும்.

- **சமூக, கலாசாரச் சூழல்**

தனிநபர்களின் நம்பிக்கைப் பெறுமானங்கள், எதிர்பார்ப்புக்கள் என்பவை சமூக, கலாசாரச் சூழலினூடாக மெருகூட்டப்படுகின்றன. நிகழ்காலத்தில் நாடுகளிடையே காணப்படுகின்ற நெருங்கிய தொடர்பு காரணமாக மனிதர்களின் எண்ணங்கள், அபிலாஷைகள், பாரம்பரியங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலைமை வணிகச் செயற்பாடுகளில் தாக்கத்தை உருவாக்கும்.

- **தொழில்நுட்பச்சூழல்**

விவசாயம், கைத்தொழில், வைத்தியம், தொடர்பாடல், போக்குவரத்து போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப மாற்றங்கள் மனிதர்களின் வாழ்க்கை முறையிலும் அதிசயத்தக்க வகையில் மாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளன. இந் நிலைமைகளும் வணிகக் கருமங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

- **மக்கட் சூழல்**

வணிகத்துடன் தொடர்புபடுகின்ற பிரதான காரணி சனத்தொகையாகும். அவ் வாறாயின் சந்தை கொண்டிருப்பது தனிநபர்களையாகும். சனத்தொகை அளவு, சனத்தொகை வளர்ச்சி வீதம், வயது அமைப்பு, ஆண் பெண் பால் வேறுபாடு, மக்கள் கலப்பு, கல்வி மட்டம், குடும்ப அமைப்பு, வீட்டுச் சூழல் போன்ற மக்கட் சூழல் காரணிகள் பல்வேறு வகையில் வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

- **இயற்கைச் சூழல்**

இயற்கை வளங்களுக்கு ஏற்படுகின்ற அழிவு நிலைமைகள் தொடர்பில் இன்று உலக மக்களின் கவனம் திரும்பியுள்ளது. உலகிலுள்ள கூடுதலான நாடுகளில் வணிகச் செயற்பாடுகள் காரணமாக, காற்று, நீர், மண் என்பவை மாசடைந் துள்ளன. இயற்கைச் சூழலில் சிறப்பான நிலைமையை உருவாக்கி வணிகக் கருமங்களில் ஈடுபடுவது தொடர்பாக சட்டதிட்டங்களும் தற்போது விதிக்கப் பட்டுள்ளன.

- **பூகோளச் சூழல்**

  பூகோளமயமாக்கல் காரணமாக நாடுகளிடையே பொருட்கள், சேவைகளின் பரிமாற்றத்திற்குக் கூடுதலான சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன. அதேபோன்று மனிதர்களின் கலாசாரமும் மாற்றத்திற்குள்ளாகியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு பொருட்கள், சேவைகள் உலகச்சந்தையில் இணைந்துள்ளன. கடுமையான போட்டி நிலைமையும் காணப்படுகின்றது.

- பேரினச் சூழல் காரணிகளிடையே இடைத்தொடர்பு காணப்படுகின்றதென,

  - இரத்தினக்கல்லுக்கான கேள்வி இயற்கைச் சூழலுக்கு உரித்தானது. எனினும் அதனை வணிகச் செயற்பாடொன்றாக மாற்றும்போது சட்ட அனுமதி பெறல் அவசியமானது.

  - வணிக வங்கிகளினால் வாடிக்கையாளரின் வசதி கருதி நவீன தொடர்பாடல் உபகரணமாகிய தன்னியக்க “டெலர்” இயந்திரத்தை பொருத்தும்போது மத்திய வங்கியின் அனுமதி பெறல் அவசியமானதாகும்.

  - சமூக கலாசார காரணிகள் மக்கட் சூழல் காரணிகளுடன் தொடர்புடையதாகும்.

  - பூகோளச் சூழல் மாற்றமானது பொருளாதாரச் சூழல் காரணிகளுடன் தொடர் புடையதாகும்.

  - பொருதாராச் சூழலானது இயற்கைச் சூழல், பூகோளச் சூழல் போன்றவற்றுடன் தொடர்புடையதாகும்.

- பேரினச் சூழல் காரணிகள் வெவ்வேறாக விபரிக்கப்பட்டாலும் இவற்றுக்கிடையே உள்ளகத் தொடர்புகள் காணப்படுகின்றன என,

**தேர்ச்சி 3.0** : இயங்கு வணிகச் சூழலுக்கு இயைபாக்கம் பெறுவதற்கு வணிகத்தின் சமூகப் பொறுப்புக்களையும் விழுமியங்களையும் கவனத்தில் கொள்வார்.

**தேர்ச்சிமட்டம் 3.1** : வணிகங்கள் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை** : 07

**கற்றல் பேறுகள்:**

- ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களினூடாக வணிக சமூகப் பொறுப்புக்களை இனங்காண்பார்.
- வணிகர்கள் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை தெளிவு படுத்துவார்.
- வணிகங்களினால் சமூக பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டிய தரப்பினரைப் பட்டியல்படுத்துவார்.
- ஒவ்வொரு தரப்பினருக்கும் வணிகம் நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்களை வெவ்வேறாக உதாரணங்களுடன் முன்வைப்பார்.
- வணிகமொன்றை உதாரணமாக எடுத்து குறிப்பிட்ட ஒவ்வொரு தரப்பினர்களுக்கும் சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்ற முறையினைக் காட்டிக் கொடுப்பார்.
- சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனால் வணிகமொன்றிற்கு உரித்தாக்கிக் கொள்ளக்கூடிய அனுகூலங்களைப் பட்டியல்படுத்துவார்.
- வணிகமொன்றை உதாரணமாக எடுத்து அது சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றிய தன் மூலம் பெற்றுள்ள அனுகூலங்களைத் தெளிவுபடுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வணிகங்களின் சமூகப் பொறுப்பு எண்ணக்கரு தொடர்பாகப் பல்வேறு வரைவிலக் கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என,

**உதாரணம்:** “அனைத்து சமூகத்தினதும் பிரதேச மக்களினதும் ஊழியர்களினதும் அவர்களின் குடும்பத்தினரதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதிலும், ஒழுக்கமாக நடந்து கொள்வதிலும் வணிகங்கள் தொடர்ச்சியாக ஈடுபாடு காட்டுதல் வணிகங்களின் சமூகப் பொறுப்பாகும்.”

- World Business Council for Sustainable Development -

“சமூகத்தினுள் நேரடித் தாக்கத்தினை உருவாக்குவதற்கு வணிக நடைமுறைகளை முகாமைத்துவம் செய்வது எவ்வாறு? என்பது தொடர்பான கருத்தொன்றே சமூகப் பொறுப்பாகும்.”

- Mallen Baker -

- வணிகங்களின் சமூகப் பொறுப்புக்கள் தொடர்பான வேறு வரைவிலக்கணங்களும் உள்ளன என,

    - **ஐக்கிய அமெரிக்கா (USA)**

      “தனது வணிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் அதனால் சமூகத்திற்கு ஏற்படுகின்ற தாக்கம் தொடர்பாகவும் தனிப்பட்ட வகையில் வணிகங்களுக்குள்ள பொறுப்பு சமூகப் பொறுப்பாகும்.”

    - **பிலிப்பைன்ஸ்**

      “வணிகங்கள் சமூகங்களுக்கு மீளச் செலுத்தும் விடயங்கள்” சமூகப் பொறுப்பாகும்.

- இலத்திரனியல் வணிகம், பூகோளமயமாதல், வணிகப்போட்டி போன்றவற்றின் வளர்ச்சி காரணமாக வணிகங்களின் செயற்பாடுகள் வணிகத்தில் அக்கறை காட்டும் பிரிவினருக்கு மட்டுமன்றி சமூகத்திற்கும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என,

- இவை காரணமாக நிகழ்காலத்தில் வணிகங்களால் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றும் தேவை அதிகரித்துள்ளன என,

- பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு தரப்பினருக்கும் வணிகங்கள் சமூக பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டுமென,

**வணிகம் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய தரப்பினர்**




- வணிகங்களால் ஒவ்வொரு தரப்பினருக்கும் செய்ய வேண்டிய சமூக பொறுப்புக்களை வெவ்வேறாக முன்வைக்க முடியுமென,
- வணிகங்கள் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதினூடாக வணிகத்தின் நிலைப்பாடு உறுதி செய்யப்படுகின்றது என,

  **உதாரணம்:**
    - நன்மதிப்பு உயர்வடைதல்
    - வணிகம் தொடர்பான நம்பகத்தன்மை உறுதியாதல்

**தேர்ச்சிமட்டம் 3.2 :** வணிகங்களின் விழுமியக்கோவையொன்றின் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 08

**கற்றல் பேறுகள்:**

- வணிகங்களின் விழுமிய எண்ணக்கருவினைத் தெளிவுபடுத்துவார்.
- வணிகங்களில் இடம்பெறுகின்ற நல்ல மற்றும் தீய விடயங்களுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.
- வணிக விழுமியங்களை பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்.
- வணிகங்கள் தொடர்பான விழுமியக்கோவையொன்றினைக் கட்டியெழுப்பும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளை ஒழுங்குபடுத்துவார்.
- அந்த ஒவ்வொரு காரணிகளுக்கும் பொருத்தமான விழுமியங்களை தமது அனுபவங்களினூடாக முன்மொழிவார்.
- தானறிந்த வணிகமொன்றை கவனத்தில் எடுத்து அந்நிறுவனம் பின்பற்றுகின்ற விழுமியங்களைக் கலந்துரையாடுவார்.
- தான் கருதிய வணிகத்திற்கு பொருத்தமான வணிக விழுமியக்கோவையொன்றினைக் கட்டியெழுப்புவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- பாடசாலையினுள் பின்பற்றப்படுகின்ற விழுமியங்கள் தொடர்பாக மாணவர்களிடம் வினவவும்.
- பின்வரும் கருத்துக்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
    - ஆசிரியரொருவர் வகுப்புக்கு வந்தவுடன் அவருக்கு மரியாதை செலுத்துதல், பாடசாலை ஆரம்பிக்க முன்னர் சமய ஆராதனை செய்தல், நீர் மற்றும் மின்சாரம் என்பவற்றை வீணாக்காதிருத்தல், கழிவுப்பொருட்களை உரிய முறையில் அகற்றுதல், ஆசிரியர் உரிய நேரத்திற்கு வருதல், ஆடையணிகள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல், பாடசாலை வளவினுள் புகைபிடிக்காதிருத்தல், சகல மாணவர்களையும் சமமாக மதித்தல் போன்ற விழுமியங்கள் பாடசாலையினுள் பின்பற்றப்படுகின்றன என,
    - வணிக நிறுவனங்களும் இவ்வாறு நுகர்வோருடன் கருமமாற்றும் போதும் வணிகக் கருமங்களை மேற்கொள்ளும்போதும் விழுமியங்களை பின்பற்றுகின்றன என,

## கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- பின்வருபவை நீங்கள் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்த சில சந்தர்ப்பங்களாகும். அவற்றில் உங்கள் குழுவிற்கு கிடைக்கும் சந்தர்ப்பம் தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.
    - ஆடைகள் அல்லது துணிகள் கொள்வனவு இடம்பெற்ற சந்தர்ப்பமொன்று
    - நன்கொடையளிப்பதற்காகப் பரிசுப் பொருளொன்றைக் கொள்வனவு செய்த சந்தர்ப்பமொன்று
    - பொதுப் போக்குவரத்து சேவை வசதியினைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பமொன்று
- குறிப்பிட்ட சந்தர்ப்பம் தொடர்பாகக் குழு அங்கத்தவர்களின் அனுபவங்களை நினைவூட்டுவதற்கான கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
- அச் சந்தர்ப்பத்தின்போது ஒவ்வொரு அங்கத்தவரும் பெற்றுக் கொண்ட நல்ல மற்றும் தீய அனுபவங்களைப் பட்டியல்படுத்தவும்.
- நல்லவை, தீயவை தொடர்பாகச் சரியான விளக்கத்துடன் வணிகர்கள் ஏன் செயலாற்ற வேண்டும் என்பது தொடர்பாக உங்களது கருத்துக்களைத் தரவும்.
- உங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற்குரிய வணிகமொன்றினை உங்களது குழு நடாத்திச் செல்கின்றது எனக் கருதி, அவ்வணிகம் தொடர்பாகப் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற விழுமிய முறையொன்றினைக் கட்டியெழுப்பவும்.
- அந்த விழுமியக்கோவையினை கட்டியெழுப்பும்போது நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை ஒழுங்குபடுத்தவும்
- உங்களது தேடலை ஆக்கபூர்வமாகவும் ஒருமைப்பாட்டுடனும் முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- வணிகங்கள் தம்முடன் சேவையாற்றுகின்ற சகல தரப்பினருக்கும் நல்லது இடம்பெறக் கூடிய முறையில் நல்லது, தீயது தொடர்பான அவதானத்துடன் செயற்படல் வணிக விழுமியங்கள் என்று அறிமுகப்படுத்தலாம் என,
- வணிக விழுமியங்களைப் பின்பற்றுவது வணிகங்களுக்கு மிக முக்கியமானது என,

**உதாரணம்:**

- கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கான விழுமியங்களை பின்பற்றுவதன் மூலம் வணிகத்தில் இடம்பெறக்கூடிய நிதி மோசடிகள், ஏமாற்றங்கள் போன்றவைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியுமாதல்.
- ஊழியர்களின் வேலை உரிமையினையும், கடமையினையும் பாதுகாக்கின்ற விழுமியங்களினூடாகவும் ஊழியர்களது இனம், குலம், சமயம் அல்லது ஆண், பெண் என்ற வகையில் இடம்பெறுகின்ற நியாயமற்ற விடயங்கள் இடம்பெறாத நிலையில் சிறந்த மனித வள முகாமைத்துவம் இடம்பெறும் என,
- தரமான பொருட்கள் சேவைகளை வழங்குவதினூடாக வாடிக்கையாளர்களுக்கு நியாயம் வழங்கப்படுகின்றது என,

- வணிக ஒழுக்கக்கோவையொன்றினைக் கட்டியெழுப்பும்போது பல்வேறு அம்சங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டுமென,

| | |
|---|---|
| ஒழுக்கக் கோவையினைக் கட்டியெழுப்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் | → வணிகம் |
| | → வாடிக்கையாளர் |
| | → ஊழியர் |
| | → போட்டியாளர்கள் |
| | → சமூக கலாசாரம் |
| | → அமைப்புக் கலாசாரம் |
| | → நடைமுறைச் சாத்தியமானது என, |

**உதாரணம்:**

- **வாடிக்கையாளர்** : அவன் யார் என்ற விளக்கத்துடன் அதாவது சமய, சமூக மற்றும் கலாசாரம் போன்ற விடயங்களுடன் கேள்வி முறை, தொடர்பாடல் போன்ற விடயங்களை யும் கவனத்தில் கொள்ளவும்.
- **சமூக கலாசாரம்** : மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ள கலாசார விழுமியங்களையும் பெறுமதிகளையும் துணைக் கலாசாரம் தொடர்பாகவும் கவனத்தில் கொண்டு விழுமியக்கோவையினை உருவாக்கல்.

**தேர்ச்சி 4.0 :** அரசுடன் தொடர்புகளைப் பேணியவாறு வணிகங்களை நடாத்தி வருவதன் அவசியத்தை உறுதிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 4.1 :** வணிகத்தின் மீது அரசு செல்வாக்கினை ஏற்படுத்துகின்ற முறையினைத் தேடியறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- இலங்கையிலுள்ள வணிகங்களுக்கு அரசின் செல்வாக்கு மத்திய அரசு, மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பவற்றினூடாக இடம்பெறுகின்றது என்பதைச் சுட்டிக் காட்டுவார்.
- வணிகமொன்றினை உதாரணமாகத் தெரிவு செய்து அதற்கு மத்திய அரசு, மாகாண சபைகள் உள்ளூராட்சி சபைகள் என்பவை தொடர்புபடுகின்ற முறையினை வெவ்வேறாகச் சுட்டிக் காட்டுவார்.
- அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற பல்வேறு முறைகளைத் தெளிவு படுத்துவார்.
- அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற பல்வேறு முறைகளுக்கான உதாரணங்களை வெவ்வேறாக முன்வைப்பார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- கற்றல் செயற்பாடுகளை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு அரசினால் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற பல்வேறு வசதிகளை மாணவர்களிடம் கேட்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தி கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
    - அரசு மாணவர்களுக்கு இலவச சீருடை, பேரூந்து பருவகால அனுமதிச்சீட்டு, புலமைப்பரிசில், பாடப்புத்தகங்கள், பாடசாலைக்கட்டடம் போன்றவைகளை வழங்குகின்றது என,
    - அதேபோன்று வணிகக் கருமங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அரசினால் வணிகர்களுக்கும் பல்வேறு வசதிகள் வழங்கப்படுகின்றதென,

**கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:**

- பின்வருவன இலங்கையில் செயற்படுகின்ற மூன்று வகை நிறுவனங்களாகும். அவற்றில் உங்களது குழுவிற்கு கிடைக்கும் வணிக நிறுவனம் தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.
    - ஆடை ஏற்றுமதி செய்யும் நிறுவனமொன்று
    - உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயப் பண்ணையொன்று
    - போக்குவரத்துச் சேவையினை வழங்கும் நிறுவனமொன்று

- குறிப்பிட்ட வணிக நிறுவனம் உங்களது குழுவினால் நடாத்திச் செல்லப்படுகின்றது எனக் கருதவும்.
- குறிப்பிட்ட வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு உங்களது குழு அரசிடமிருந்து எதிர்பார்க்கின்ற உதவிகளை ஒவ்வொன்றாக ஒழுங்கபடுத்தவும்.
- அவை ஒவ்வொன்றுக்கும் உதவிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அரச நிறுவனங் களை பட்டியல்படுத்தவும்.
- அந்நிறுவனங்களை மத்திய அரசுக்குரிய நிறுவனம், மாகாண சபையின் கீழுள்ள நிறுவனம், உள்ளூராட்சி சபையின் கீழுள்ள நிறுவனம் என்ற வகையில் வகைப்படுத் திக் காட்டவும்.
- அரசு அந்த உதவிகளை வணிகங்களுக்கு வழங்குவது ஏன் முக்கியத்துவமானது என்பதை தெளிவுபடுத்தவும்.
- உங்களது தேடலை ஆக்கபூர்வமாகவும், ஒருமைப்பாட்டுடனும் முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு தயாராகவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- இலங்கையிலுள்ள வணிகங்களில் அரசின் செல்வாக்கு பின்வரும் முறைகளில் இடம்பெறுகின்றது என,
    - மத்திய அரசின் கொள்கைகள், சட்டதிட்டங்களும் நியதிகளும்
    - மாகாண அரசின் கொள்கைகள், சட்டதிட்டங்களும் நியதிகளும்
    - உள்ளூராட்சி சபைகளின் கொள்கைகள், சட்டதிட்டங்களும் நியதிகளும்
- அரசானது வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற முறையினை பின்வரும் விடயங்களினூடாகத் தெளிவுபடுத்த முடியுமென,
    - உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்
    - போட்டியாளரொருவராதல்
    - கொள்கைகளை உருவாக்கல்
    - சட்டதிட்டங்களை விதித்தல்
    - ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்
    - வரி அறவீட்டாளரொருவராதல்

**தேர்ச்சிமட்டம் 4.2 :** அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறையினை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- அரசொன்றின் பொருளாதார நோக்கங்களை விபரிப்பார்.
- அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்கின்ற முறையினைத் தெளிவுபடுத்துவார்.
- தெரிவு செய்த வணிகமொன்றினை உதாரணமாகக் கொண்டு அது அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பங்களிப்புச் செய்கின்ற முறையினைக் காட்டுவார்.
- அரசுக்கும், வணிகத்திற்குமிடையிலான நெருங்கிய தொடர்பின் மூலம், இரு பகுதியினரினதும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய முறையினைச் சுட்டிக் காட்டுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- அனைத்து பொருளாதாரங்களும் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சிக்கின்றன என,
    - முறையான பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்
    - பூரண வேலைவாய்ப்பு மட்டம்
    - பொருளாதார உறுதித்தன்மை
    - நியாயமான வருமானப்பரம்பல்
    - சிறந்த சர்வதேச வியாபாரம்

    (ஒவ்வொரு நோக்கத்தினையும் தனித்தனியாக தெளிவுபடுத்துதல் வேண்டும்.)
- வணிகங்கள், அரசின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பின்வரும் வகையில் பங்களிப்புச் செய்கின்றன என,
    - வரி செலுத்துதல்
    - உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தல்
    - அரசு விதிக்கின்ற கொள்கைகளைப் பின்பற்றுதல்
    - சட்டதிட்டங்களைப் பின்பற்றல்
    - வேலைவாய்ப்புக்களை வழங்கிப் பங்களிப்புச் செய்தல்
    - சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை இழிவுபடுத்தல்
- அரசானது வணிகங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதனூடாக வணிகங்களை ஊக்குவிப்பதற்குக் கருமமாற்றுவதுடன், வணிகங்களை விருத்தி செய்வதினூடாக அரசின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியுமாயிருத்தல் காரணமாக, அரசாங்கத்திற்கும் வணிகத்திற்குமிடையில் நெருங்கிய தொடர்பு முக்கியமானது என,

**தேர்ச்சிமட்டம் 4.3 :** அரசின் இறைக் கொள்கைக்கு (பிசிக்கால் கொள்கை) ஏற்ப வணிகங்களை நடாத்திச் செல்வதன் முக்கியத்து வத்தினை உறுதிப்படுத்துவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- அரசின் இறைக் கொள்கையினை தெளிவுபடுத்துவார்.
- அரசின் இறைக்கொள்கையினை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை விபரிப்பார்.
- அரசின் வருமானங்கள் செலவுகளது அமைப்பினை வரைபடம் மூலம் காட்டுவார்.
- வரிகளை வகைப்படுத்தி ஒவ்வொரு வகைக்கும் உதாரணம் காட்டி தெளிவுபடுத்துவார்.
- அரசின் வரியல்லாத வருமானங்களை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துவார்.
- கிட்டிய வருடத்தில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை கவனத்தில் எடுத்து அவை வணிகத்தில் ஏற்படுத்தும் செல்வாக்கினை பகுப்பாய்வு செய்வார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- அரசின் வருமானங்கள் செலவுகள் தொடர்பான நடவடிக்கைகள் இறைக்கொள்கை யாகும் என,
- இறைக் கொள்கையின் நோக்கம் பேரினப் பொருளாதார நிலைப்பாட்டினைப் பாதுகாத் துக் கொள்வதாகுமென,
- பொருளாதாரமொன்றில் நிதியாண்டொன்றினுள் கிடைக்கப் பெறுகின்ற வருமானங்கள் அரச வருமானங்களாகுமெனவும், அரசொன்று அன்றாடக் கருமங்களை மேற்கொள்வ தற்காகவும், பொருளாதார அபிவிருத்திக் கருமங்களுக்காகவும் ஆண்டினுள் மேற்கொள்கின்ற மொத்தச் செலவுகள் அரச செலவுகளாகுமெனவும்,
- அரச வருமானங்களையும், அரச செலவினங்களையும் பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டமுடியுமென,




- தனிநபர் ஒருவரினால் அல்லது நிறுவனமொன்றினால் கட்டாயமாகச் செலுத்த வேண்டுமென அரச அதிகாரம் கொண்ட நிறுவனமொன்றினால் விதிக்கப்படுகின்ற கொடுப்பனவு வரியாகுமென,

- பின்வரும் முறையில் வரியினை வகைப்படுத்த முடியுமென,




- குறித்த நபர் அல்லது நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட வரி நேர்வரி ஆகுமென,
- செலுத்தப்பட்ட வரியினை இன்னொருவர் மேல் சுமத்தக் கூடியதான வரி நேரில் வரியாகுமென,
- அரசொன்றிற்கு வரி வருமானங்கள் போன்றே வரியல்லாத வருமானங்களும் காணப் படுகின்றது என,
- வரியல்லாத வருமானங்களுக்காக சில உதாரணங்களை பின்வருமாறு காட்டமுடியுமென,

**உதாரணம்:**
- அனுமதிப்பத்திரக் கட்டணம்
- தண்டப்பணம்
- முத்திரைக்கட்டணம்

- அரச சேவையினைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக ஏற்படுகின்ற செலவுகள் மீண்டெழும் செலவுகள் அல்லது நடைமுறைச் செலவுகள் எனக் கூறப்படுமென,
- நடைமுறைச் செலவுகளுக்கான உதாரணங்கள் சில பின்வருமாறு:
  - சம்பளமும் கூலியும்
  - வட்டிச் செலுத்துகை
- நீண்டகால முதலீட்டுக்காக அரசினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் மூலதனச் செலவுகள் என அழைக்கப்படுமென,
- மூலதனச் செலவுகளுக்கான உதாரணங்களைப் பின்வருமாறு காட்ட முடியுமென,
  - பாரிய வீதிகள் அமைத்தல்
  - பாலங்கள் கட்டுதல்

- அரசின் இறைக் கொள்கை வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற முறையினை பின்வரும் உதாரணம் மூலம் தெளிவுபடுத்த முடியும் என,
    - வணிகங்களினால் அறவிடப்படுகின்ற வரி வருமானங்கள் அரசு உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தல்.
    - இறக்குமதியின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற பல்வேறு வரிகள் காரணமாக உள்நாட்டுக் கைத்தொழில் / உற்பத்தி போன்ற துறைகள் பாதுகாக்கப்படல்.
    - உற்பத்தியின் அடிப்படையில் பல்வேறு வகையான வரிகள் விதிக்கப்படுவதன் காரணமாக பொருட்களின் விலை உயர்வடைதல்.
    - கிட்டிய வருடத்தில் அரசின் வரவு செலவு முன்மொழிவுகளை கவனத்தில் கொண்டு அவை வணிகத்தில் ஏற்படுத்துகின்ற செல்வாக்கினை தெளிவுபடுத்திக் கொடுக்கவும்.

**தேர்ச்சிமட்டம் 4.4 :** அரசின் நாணயக் கொள்கைக்கு ஏற்ப வணிகங்களை நடாத்திச் செல்வதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- அரசின் நாணயக் கொள்கைகளைத் தெளிவுபடுத்துவார்.
- அரசின் நாணயக் கொள்கையின் நோக்கத்தை விபரிப்பார்.
- நாடொன்றின் நாணயச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசொன்றினால் பின்பற்றக் கூடிய மாற்று வழிகளை காட்டுவார்.
- அரசு பின்பற்றுகின்ற நாணயக் கட்டுப்பாட்டு உபாயங்கள் வணிகர்களைப் பாதிக்கின்ற முறைகளைப் பகுத்தாய்வார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொருளாதாரமொன்றின் பண வழங்கலில், செல்வாக்குச் செலுத்துவதற்காக அரசு பின்பற்றுவது நாணயக் கொள்கையாகுமென,
- அரசின் சார்பாக இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையினைச் செயற்படுத்து கின்றது என,
- அரசின் நாணயக் கொள்கையின் பிரதான நோக்கமாக இருப்பது உள்நாட்டுப் பொருளாதாரத்தில் விலையினை நிலையாகப் பேணிச் செல்வதாகும் என,
- விலையினை நிலையாகப் பேணுவதென்பது நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக விலைமட்டத்தினை நிலையான மட்டத்திலும் பேணிச் செல்வதுமாகும் என,
- நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வரும் கருவிகள் (சாதனங்கள்) பயன்படுத்தப்படுகின்றன என,
    - வட்டி வீதம்
    - ஒதுக்க வீதத்தின் அளவினை மாற்றுதல்
    - திறந்த சந்தை நடவடிக்கைகள்
    - கழிவு வீதத்தினை மாற்றுதல்
    - கடன் அளவினை வரையறுத்தல்
- நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படுகின்ற வட்டி வீதம் "கொள்கை வட்டி வீதம்" எனக் கூறப்படுமென,
- கொள்கை வட்டிவீதத்தினைக் கீழே காட்டப்பட்டுள்ளவாறு பிரதானமாக மூன்று வகைகளாக வகைப்படுத்த முடியுமென,
    - மீள் கொள்வனவு வீதம்
    - மீள் விற்பனை வீதம்
    - வங்கி வட்டி வீதம்

- மீள் கொள்வனவு வீதம் என்பது வணிக வங்கிகளும் முதல் நிலை வியாபாரிகளும் அவர்களின் மேலதிக நிதியினை மத்திய வங்கியிலுள்ள அரச பிணைப் பத்திரங்களில் முதலீடு செய்யும்போது செலுத்தப்படுகின்ற வட்டி வீதமாகுமென,

- மீள் விற்பனை வீதம் என்பது வணிக வங்கிகளும் முதல் நிலை விற்பனையாளரும் அரசின் பிணைப் பத்திரங்களை பிணையாக வைத்து மத்திய வங்கியிலிருந்து நிதியினைப் பெற்றுக் கொள்ளும்போது அறவிடப்படுகின்ற வட்டிவீதமாகுமென,

- வங்கி வட்டி வீதம் என்பது திரவத்தன்மைக் குறைபாட்டிற்கு முகம் கொடுக்கின்ற வணிக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் இறுதிக் கடன் வழங்குநர் என்ற வகையில் வழங்கப்படுகின்ற கடனுக்காக அறவிடப்படுகின்ற வட்டி வீதமாகு மென,

- வணிக வங்கிகளினால் தமது வைப்புக்களுக்கேற்ப மத்திய வங்கியில் பேணிச் செல்ல வேண்டிய பணத்தின் அளவு சட்டரீதியான ஒதுக்கம் ஆகுமென இந்த ஒதுக்கத்தின் அளவினை மாற்றுவதன் மூலம் மத்திய வங்கி பொருளாதாரத்தின் பணவழங்கலை கட்டுப்படுத்துகின்றது என,

- மத்திய வங்கியானது அரசின் பிணைப்பத்திரங்களைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் போன்ற கருமங்கள் திறந்த சந்தைக் கருமங்களாகுமென,

- மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற பிணைப்பத்திரங்களைக் கொள்வனவு செய்த நபர்கள் அது காலாவதியாக முன்னர் வணிக வங்கிகளுக்கு முன்வைத்துக் கழிவுடன் மாற்றும் போது அறவிடப்படுகின்ற கழிவு வீதத்தின் அளவினை மாற்றுவதன் மூலம் பொருளாதாரத்தின் பணவழங்கலைக் கட்டுப்படுத்த முடியுமென,

- கடன் அளவினை வரையறுப்பது அளவுசார் முறையிலும், பண்புசார் முறையிலும் மேற்கொள்ள முடியுமென,

- தெரிவு செய்த துறைகளுக்கு கடன் அளவினை வரையறுப்பது பண்புசார் கடன் அளவுக் கட்டுப்பாடு எனப்படுமென,

- கடன் தொடர்பான அளவுசார் கட்டுப்பாடு என்பது பின்வரும் முறைகளில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என,

    - வணிக வங்கிகளினால் வழங்கப்படுகின்ற கடன்களுக்கு உச்ச முதிர்வுக் காலத்தை நிர்ணயித்தல்.

    - புதிதாக வழங்கப்படுகின்ற கடன்களுக்கு உச்ச வரையறைகளை நிர்ணயித்தலும் அல்லது கடன் வழங்கலை நிறுத்துதலும்.

    - வணிக வங்கிகளின் மூலதனத்திற்கும் சொத்துக்களுக்குமிடையில் ஆகக் குறைந்த விகிதத்தினை நிர்ணயித்தல்.

    - நாணயக் கடிதங்களை வழங்கும்போது வைப்புச் செய்ய வேண்டிய ஆகக் குறைந்த பண அளவினை நிர்ணயித்தல். (நாணயக் கொள்கையினை நடை முறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் தொடர்பாகச் சிறிய விளக்கமொன்று போதுமானது)

- பின்வரும் உதாரணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு நிதிக்கட்டுப்பாட்டுக் கருவிகளும் சாதனங்களும் வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற முறையினைத் தெளிவுபடுத்தலாம் என,

**உதாரணம்:**

வணிக வங்கிகளினால் மத்திய வங்கியில் பேணிச் செல்ல வேண்டிய ஒதுக்கத்தின் அளவினை குறைக்கும்போது, வணிக வங்கிகள் கடன் வழங்கு வதற்கு ஒதுக்கக்கூடிய பணத்தின் அளவும் அதிகரிப்பதனால் வணிகர்களுக்கு இலகுவாகக் கடன்களைப் பெற்றுக் கௌ்ள முடியுமாகையால் முதலீடுகள் அதிகரிக்கும். அதன் மூலம் உற்பத்தி அதிகரித்து பொருட்களின் விலை குறைவடையும். விலை குறைவு காரணமாக வணிகங்களின் புரள்வு அதிகரித்து இலாபம் அதிகரிக்குமென,

**தேர்ச்சிமட்டம் 4.5 :** நுகர்வோரின் பாதுகாப்பிற்காக அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு ஏற்ப வணிகங்களை நடாத்திச் செல்வதன் தேவைப்பாட்டினை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- நுகர்வோர் பாதுகாப்பு எண்ணக்கருவினைத் தெளிவுபடுத்துவார்.
- நுகர்வோர் பாதுகாப்பு தற்காலத்திற்கு மிகமுக்கியமானது என்பதற்கான காரணத்தை முன்வைப்பார்.
- நுகர்வோர் பாதுகாப்பினால் நுகர்வோருக்கும், வணிகர்களுக்கும் கிடைக்கப் பெறுகின்ற நன்மைகளை வெவ்வேறாகப் பட்டியல்படுத்துவார்.
- நுகர்வோர் உரிமைகளைப் போன்றே, நுகர்வோர் பொறுப்புக்களும் காணப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவார்.
- பகுத்தறிவுள்ள நுகர்வோரின் நடத்தையை விபரிப்பார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- சுயமாக முன்வரும் மாணவர்கள் இருவர்களைக் கொண்டு பின்வரும் பாத்திரமேற்று நடித்தலை வகுப்புக்கு முன்வைக்கவும்.

**பாத்திரமேற்று நடித்தல்**

**நுகர்வோன்:** முதலாளி எனக்கு பிஸ்கட் பக்கெட் ஒன்று தாருங்கள்.

**வியாபாரி:** ஆ...... இந்தாரும் ரூபா 65/= தாருங்கள்.

**நுகர்வோன்:** (பிஸ்கட் பக்கெட்டை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து) முதலாளி, இந்த பிஸ்கட் பக்கெட்டின் பாவனைக்காலம் முடிந்துவிட்டதே.

**வியாபாரி:** (அதை வாங்கிப் பரீட்சித்துப் பார்த்த பின்) ஆம்...... உண்மைதான்?....... நான் வேறொன்று தருகின்றேன்.

(வேறொரு பிஸ்கட் பக்கெட்டைக் கொடுக்கிறார்)

**நுகர்வோன்:** (அதன் விலையைப் பரீட்சித்துப் பார்த்த பின்) முதலாளி இந்த பிஸ்கட் பக்கெட்டின் விலை மாற்றப்பட்டுள்ளதே. மேலே வேறோர் விலை ஒட்டப்பட்டுள்ளதே.

**வியாபாரி:** அதனை நாம் செய்யவில்லை. கொம்பனியிலே மாற்றப்பட்டிருந்தது. பரவாயில்லை; நான் அதற்கு வேறொன்று தருகின்றேன்.

**நுகர்வோன்:** விலை மாற்றப்பட்டது எனக்கு வேண்டாம் முதலாளி. இதோ உங்களது பிஸ்கட்; நான் போகிறேன்.

- பாத்திரமேற்று நடித்தலின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற வியாபார மோசடி தொடர்பாகக் கேட்கவும்.

- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்திக் கலந்துரையாடலை நடத்தவும்.
    - நுகர்வோருக்குச் சந்தையில் பல்வேறு வியாபார மோசடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது என,
    - அறிவுடைய தர்க்கரீதியான நுகர்வோன் சந்தையில் வியாபார மோசடிகளி லிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றான் என,
    - வியாபார மோசடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருத்தல் சிறந்த வணிகப் பண்பொன்றாவதுடன் வெற்றிகரமான வியாபாரத்திற்கும் காரணமாக அமை கின்றது என,

## கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- நுகர்வோர் உரிமைகளின் சோடிகளில் சில கீழே காட்டப்பட்டுள்ளன. அவற்றில் உங்கள் குழுவிற்கு கிடைக்கும் சோடி தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.
    - பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை - தகவல்களைத் தெரிந்து கொள்ளும் உரிமை
    - தெரிவு செய்யும் உரிமை - கவனத்தை ஈர்ப்பதற்கான உரிமை
    - அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் உரிமை - இழப்பீட்டினைப் (நிவாரணம்) பெறும் உரிமை
    - நுகர்வோர் கல்விக்கான உரிமை - சுகாதார வளமுள்ள சூழலில் வாழும் உரிமை
- உங்களுக்குக் கிடைத்த நுகர்வோர் உரிமைச்சோடியை விளக்கவும்.
- அவ்வாறான உரிமைகள் உருவாக்கப்படுவதற்கான காரணங்களாக நீங்கள் இனங்காண்பவற்றை விபரிக்கவும்.
- உங்களுக்கு கிடைத்த உரிமைகளின் சோடி காரணமாக நுகர்வோர் பாதுகாக்கப் படுகின்ற முறையினைத் தெளிவுபடுத்தவும்.
- உங்களுக்குக் கிடைத்த உரிமைகள் சோடியினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நீங்கள் செய்ய வேண்டிய பொறுப்புக்களைத் தரவும்.
- அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் உங்களது உரிமைகள் பாதுகாக் கப்படுகின்ற முறையினை விபரிக்கவும்.
- நுகர்வோர் உரிமைகளும் பொறுப்புக்களும் தொடர்பாகக் கவனத்தில் கொள்வதனால் வணிகரொருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளைத் தெளிவுபடுத்தவும்.
- உங்களது தேடலை ஆக்கரீதியாகவும், ஒருமைப்பாட்டுடனும் முழுவகுப்பிற்கும் முன்வைக்க ஆயத்தமாகுங்கள்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- நுகர்வோன் செலுத்துகின்ற பணத்திற்குப் போதுமானளவு திருப்தியினைப் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்துமுகமாக வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான பாதுகாப்பு நுகர்வோர் பாதுகாப்பாகும் என,

- அண்மைக் காலங்களில் நுகர்வோர் பாதுகாப்பின் தேவை அதிகரித்தமைக்குப் பின்வரும் விடயங்கள் காரணியாக அமைந்துள்ளன.
    - சந்தை விரிவாக்கம்
    - போட்டிநிலை
    - சுதந்திர வர்த்தகம்
    - பூகோளமயம்

- நுகர்வோருக்குப் பின்வரும் காரணங்களினால் நுகர்வோர் பாதுகாப்பு முக்கியமானது என,
    - செலுத்துகின்ற பணத்திற்கு ஏற்ற பெறுமதி கொண்ட பொருட்களைப் பயன்படுத் தக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப் பெறல்.
    - வியாபார மோசடிகளுக்கு எதிராகச் சட்டப் பாதுகாப்பினை பெறக்கூடியதாக இருத்தல்.
    - நுகர்வோர் உடல்நலனும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படல்

  போன்றவைகளாகும்.
- வணிகர்களுக்கு பின்வரும் காரணங்களினால் நுகர்வோர் பாதுகாப்பு முக்கியமானது என,
    - தரமான பொருட்களை வழங்குவதன் மூலம் நுகர்வோரின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளமுடியுமாயிருத்தல்.
    - புரள்வு அதிகரிப்பதன் மூலம் கிடைக்கின்ற இலாபம் அதிகரித்தல்.
    - ஒரு தரத்துக்கேற்ப பொருட்களை உற்பத்தி செய்வதனால் செலவு குறை வடைதல்.

  போன்றவைகளாகும்.

- ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஜனாதிபதியாகவிருந்த ஜோன் எப். கென்னடி என்பவரால் பின்வரும் நுகர்வோன் உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என,
    - பாதுகாப்பை பெறும் உரிமை
    - தகவல்களைத் தெரிந்து கொள்ளும் உரிமை
    - தெரிவு செய்வதற்கான உரிமை
    - கவனத்தை ஈர்ப்பதற்கான உரிமை

- சர்வதேச நுகர்வோர் சங்கங்களின் சம்மேளனத்தால் பின்வரும் நுகர்வோன் உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.
    - அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்வதற்கான உரிமை
    - இழப்பீடு (நிவாரணம்) பெறும் உரிமை
    - நுகர்வோர் கல்விக்கான உரிமை
    - சுகாதார நலமுள்ள சூழலில் வாழ்வதற்கான உரிமை
- மேற்குறிப்பிட்ட எட்டு உரிமைகளும் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நுகர்வோர் உரிமைகளாகுமென,

- பின்வரும் பொறுப்புக்கள் நுகர்வோருக்கு உரித்தானது என,
    - அறியும் ஊக்கத்துடன் செயலாற்றல்
    - செயற்பாட்டு ரீதியாகப் பங்களித்தல்
    - சமூகம் தொடர்பாகக் கவனம் செலுத்தல்
    - சூழல் பற்றிய அறிவு
    - ஏனையோருடன் இணைந்து செயற்படல்

**தேர்ச்சிமட்டம் 4.6 :** நுகர்வோரின் பாதுகாப்பிற்காக செயற்படுகின்ற அரச நிறுவனங்களின் தொழிற்பாடுகளைத் தேடியறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காகச் செயற்படுகின்ற அரச நிறுவனங்களைப் பட்டியல்படுத்துவார்.
- நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் நோக்கங்களையும் கருமங்களையும் விபரிப்பார்.
- வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கான நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரங்களையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்துவார்.
- இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகத்தின் நோக்கங்களையும் கடமைகளையும் விபரிப்பார்.
- நுகர்வோர் உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக முறைப்பாடு செய்யவேண்டிய நிறுவனங்களைக் காட்டுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறுவப்பட்டுள்ளது என,
  - நுகர்வோர்களின் உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் தீங்கு ஏற்படுத்துகின்ற பொருட்களை விநியோகித்தல், சேவைகளை வழங்கல் என்பனவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல்.
  - நியாயமற்ற வியாபார முறைகளுக்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாத்தலும், நுகர்வோர் உரிமைகளில் உரிய கவனம் செலுத்துவதனை உறுதிப்படுத்தலும்.
  - முடியுமான எச்சந்தர்ப்பத்திலும் நுகர்வோருக்குப் போட்டி விலையில் பொருட்கள் சேவைகளை போதுமான அளவில் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்தல்.
  - நியாயமற்ற வியாபார நடைமுறை, மட்டுப்படுத்தப்பட்ட வியாபார நடைமுறை அல்லது வியாபாரிகளால் மேற்கொள்ளப்படுகின்ற வேறு எம்முறைகளாலும் நுகர்வோர் பாதுகாப்பிற்கு எதிரானவைகளுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் கடமைகள் தொடர்பான சில உதாரணங்கள் கீழே காட்டப்படுகின்றன.

**உதாரணம்:**

- முயற்சியாளர்களிடையேயான மட்டுப்படுத்தல் ஒப்பந்தங்களை கட்டுப்படுத்தல் அல்லது அவற்றை அகற்றுதல்.
- சந்தையில் உள்ள அல்லது சந்தையில் குறிப்பிடக்கூடிய பகுதியினருக்கு உள்நாட்டு வியாபாரத்தில் அல்லது பொரு ளாதார அபிவிருத்தி தொடர்பாகக் காணப்படும் ஆதிக்க நிலைமையினைப் பொருத்தமற்ற முறையில் பயன்படுத்திக் கொள்வதைத் தடுத்தல்.

- உள்நாட்டு அல்லது சர்வதேச வியாபாரத்திற்கு அல்லது பொருளாதார அபிவிருத்திக்குப் பாதகமான முறையில் தாக் கத்தை ஏற்படுத்துகின்ற போட்டிநிலை தொடர்பான இடை யூறுகளை இல்லாதொழித்தல்.
- போட்டி எதிர்ப்பு நடத்தையினையும் ஆதிக்க நிலையினை யும் துஷ்பிரயோகம் பயன்படுத்துவது தொடர்பாகத் தேடிப் பார்த்தல் அல்லது பரீட்சித்தல்.
- பொருட்கள் சேவைகளை வழங்குவோரிடையே காணப்படு கின்ற பயனுறுதிவாய்ந்த போட்டித் தன்மையினைப் பேணுத லும் அதனை விருத்தி செய்தலும்.
- பொருட்கள் சேவைகளின் விலைகளையும், அவற்றை பெற்றுக் கொள்ள முடியுமாயிருத்தலையும் மற்றும் அவற் றின் தரம் என்பவை தொடர்பாகவும் நுகர்வோரின் உரிமை கள் மற்றும் தொடர்புகளையும் விருத்தி செய்தலும் பாதுகாத்தலும்.

- வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபைக்குள்ள அதிகாரங்கள் சில பின்வருமாறு:
  - ஒவ்வொரு பொருட்களினதும் விலையைக் குறித்தல், சுட்டுத்துண்டு ஒட்டுதல், பொதிகட்டல், விற்பனை செய்தல் அல்லது உற்பத்தி செய்தல் தொடர்பான உற்பத்தியாளர்களினதும், வியாபாரிகளினதும், நுகர்வோரினதும் பாதுகாப்பிற் காக அதிகார சபைக்குப் பொருத்தமான முறையில் செயற்பட முடியும்.
  - நுகர்வோரின் பாதுகாப்பில் செல்வாக்குள்ள விடயங்கள் தொடர்பாக உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்வதற்கான இருப்புக்களைப் பேணல் தொடர்பாக உற்பத்தியாளருக்கும், வியாபாரி களுக்கும் சிறப்புக் கட்டளைகளை வெளியிடுவதற்கு அதிகார சபைக்கு முடியும்.
  - அதிகார சபையினால் மேற்குறிப்பிட்டவாறு வெளியிடப்படுகின்ற கட்டளை களுக்கு ஏற்ப செயற்படாது துஷ்பிரயோகம் செய்யும் நபர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் தவறு செய்த குற்றவாளிகளாகக் காணப்படுவர்.
  - பொருட்கள், சேவைகளின் தரம் தொடர்பாக நுகர்வோரின் பாதுகாப்பின் பொருட்டு சில கட்டளைகளை அதிகாரசபையினால் வெளியிட முடியும்.
  - அதிகார சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கேற்ப உற்பத்தி செய்தல், வழங்குதல், களஞ்சியப்படுத்தல், கொண்டு செல்லல், விற்பனை செய்தல் என்பவற்றைக் கடைப்பிடிக்காத வியாபாரிகளுக்கு எதிராக நுகர்வோர்கள் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்ய முடியும். அவ்வாறான பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவோருக்கு / வியாபாரிக்கு எதிராக விற்பனை அல்லது விநியோகம் இடம்பெற்று மூன்று மாதத்திற்குள் எழுத்து மூலமாக அதிகார சபைக்கு அறிவிக்க வேண்டும்.

- இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் செயற்படுகின்றது என,
    - உற்பத்திச் செயற்பாட்டின் ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ளும்போது தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையில் தரத்தினை உருவாக்கல்.
    - கைத்தொழில், வர்த்தகத்துறைகளில் நியமப்படுத்தலையும் தரக்கட்டுப்பாட்டினை யும் விருத்தி செய்தல். அதற்காக ஆய்வுகூட, நூலக சேவைகளை அமைத்து அதனை நடைமுறைப்படுத்தல்.
    - உள்நாட்டு உற்பத்தியைப் போன்றே இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களும் தரத்திற்கு ஏற்ப காணப்படுகின்றதா என்பதைப் பரீட்சித்தல்.
    - தரப்படுத்தல், நியமப்படுத்தல் தேவைகளுக்காக ஆய்வு வசதிகளை வழங்கல்.
    - தரச் சான்றிதழ் குறியீட்டு முறையினை நடைமுறைப்படுத்தல்.
    - சர்வதேச தர நிறுவனத்துடனும் அதனுடன் இணைந்த கருமங்களை மேற்கொள் கின்ற அமைப்புக்களுடனும் ஒத்துழைப்புடன் செயலாற்றல்.
    - கல்வி, ஆலோசனைகள் மற்றும் வேறு வழி வகைகளையும் பயன்படுத்தி நியமப்படுத்தலையும், தரக் கட்டுப்பாட்டு கருமங்களையும் ஊக்குவித்தல்.
- இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகம் பின்வரும் கருமங்களை மேற்கொள்கின்ற தென,
    - தரங்களை உருவாக்குதல்
    - தரங்களைச் செயற்படுத்தல்
        - சுயேட்சையாக
        - SLS சான்றுப்படுத்தப்பட்ட இலட்சினை முறை மூலம்
        - முழுமையான ஏற்றுமதிப் பரிசோதனை மூலம்
        - இறக்குமதிப் பரிசோதனை மூலம்
        - ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்ட கடல் உணவுப்பொருட்கள் பரிசோதனை மூலம்
    - ISO தரப்படுத்தலினை அமுல்படுத்தல்.
    - நியமப்படுத்தல், தரப்படுத்தல் தொடர்பான பயிற்சிப் பாடநெறிகளை ஏற்பாடு செய்தல்.
    - நியமப்படுத்தல் தரப்படுத்தல் என்பவற்றை விருத்தி செய்தல்.
    - அளவைக் கருவிகளை முறைமைப்படுத்தல்.
    - நுகர்வோர் கல்வியினைப் பிரசித்தப்படுத்தல்.
    - நூலகச் சேவை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தர வெளியீடுகள், தகவல்சேவை.
    - தர அமைப்புத் தொடர்பாகச் சர்வதேச தரத்தினைச் செயற்படுத்தல்.

**தேர்ச்சி 5.0** : முறைமையாக வணிக முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் நடாத்திச் செல்வதற்கும் வணிக அமைப்புக்கள் தேவை என்பதை உறுதிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 5.1** : உரிமையின் அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப் படுத்துவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை** : 04

**கற்றல் பேறுகள்:**

- அமைப்பு என்றால் என்ன என்பதை இனங்கண்டு அவற்றுக்கான உதாரணங்களைக் கூறுவார்.
- முறையான அமைப்பொன்றில் காணக்கூடிய பண்புகளைப் பட்டியல்படுத்துவார்.
- வணிக அமைப்புக்களை உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்துவார்.
- தனியார் துறைக்கு உரித்தான வணிக அமைப்புக்களைப் பட்டியல்படுத்துவார்.
- பொதுத்துறைக்கு உரித்தான வணிக அமைப்புக்களைப் பட்டியல்படுத்துவார்.
- சகல வணிக அமைப்புக்களையும் கவனத்தில் கொண்டு உரிமையின் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்தி பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் அதனை முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொதுவான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக ஒன்றிணைந்துள்ள தனிநபர் களைக் கொண்டுள்ள சமூக அலகு அமைப்பொன்றாகுமென,
- இலாபமீட்டல் அல்லது நலன்புரியினை நோக்கமாகக் கொண்டு பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தலிலும் பங்கீடு செய்தலிலும் ஈடுபடுகின்ற அமைப்பு வணிக அமைப்பாகுமென,
- முறையான அமைப்பொன்றில் காணக்கூடிய பொதுவான பண்புகள் கீழே காணப் படுகின்றன என,

  **உதாரணம்:** நோக்கமொன்று இருத்தல், அமைப்பு முறையொன்று இருத்தல், தனிநபர்கள் இருத்தல்.

- உரிமையின் அடிப்படையில் தனியார் துறை வணிகம், அரச துறை வணிகம் என வணிக அமைப்புக்களை வகைப்படுத்த முடியுமென,
- உரிமையின் அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்தலை பின்வருமாறு பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் முன்வைக்க முடியும் என,



வணிக அமைப்புக்கள்
தனியார் துறை
வணிக அமைப்புக்கள்
அரச துறை
வணிக அமைப்புக்கள்
தனியுடைமை
வணிகம்
பங்குடைமை
வணிகம்
கூட்டிணைக்கப்
பட்ட கம்பனிகள்
கூட்டுறவு
வணிகம்
விசேட
வணிகங்கள்
திணைக்களங்கள்
அரச
கூட்டுத்
தாபனங்கள்
உள்ளூராட்சி
அதிகாரிகளின்
கீழ் நடைபெறும்
வணிகங்கள்
அரச
கம்பனிகள்

**தேர்ச்சிமட்டம் 5.2 :** தனியுடைமை வணிகங்களின் பண்புகளைத் தேடியறிந்து அவ்வணிக அமைப்புக்களின் அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் ஒப்பிடுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 04

**கற்றல் பேறுகள்:**

- தனியுடைமை வணிகம் என்பதை இனங்காட்டுவார்.
- தெரிவு செய்த தனியுடைமை வணிகமொன்றின் சிறப்பான பண்புகளை விபரிப்பார்.
- தனியுடைமை வணிகங்களின் நன்மைகளையும், தீமைகளையும் ஒப்பிடுவார்.
- தனியுடைமை வணிகமொன்றைப் பதிவு செய்யும்போது செல்வாக்குச் செலுத்தும் சட்டதிட்டங்களைத் தெளிவுபடுத்துவார்.
- தெரிவு செய்த தனியுடைமை வணிகமொன்று பதிவு செய்யும்போது பின்பற்றியுள்ள நடைமுறைகளை விபரிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வணிக அமைப்பொன்றின் உரிமையானது தனி ஒருவருக்குச் சொந்தமாகக் காணப்படின் அவ்வணிகம் தனியுடைமை வணிகமாகுமென,
- பின்வரும் விசேட பண்புகள் தனியுடைமை வணிகங்களில் காணப்படுகின்றன என,
    - முகாமைத்துவம் தொடர்பான தீர்மானமெடுக்கப்படுவது உரிமையாளரினா லாகும்.
    - உரிமையாளரின் வரையறுக்கப்படாத பொறுப்பு.
    - வணிகத்திற்குச் சட்டரீதியான தனிமனித அந்தஸ்து இல்லை.
    - பதிவு செய்வது கட்டாயமில்லை.
    - இலாபம் அல்லது நட்டத்தினைத் தனியாக அனுபவித்தல்.
    - இடருக்குத் தனியாக முகங்கொடுத்தல்.
    - நீடித்த வாழ்வு இன்மை.
    - கணக்கு வைப்பு கட்டாயமில்லை.
    - வணிகத்தின் பெயரில் வரிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதில்லையென்ப துடன் உரிமையாளரின் பெயரில் வருமானவரி செலுத்தப்படல் வேண்டும்.
- தனியுடைமை வணிகங்களில் காணக்கூடிய நன்மைகளில் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - இலகுவாக ஆரம்பிக்க முடிதல்.
    - சகல இலாபங்களும் உரிமையாளர் ஒருவருக்கு உரித்தாதல்.

- சுதந்திரமான முறையில் தீர்மானம் எடுக்க முடிதல்.
- நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களும் கட்டுப்பாடுகளுக்கு குறைவாயிருத்தல்.
- வணிகத் தகவல்களின் இரகசியம் பாதுகாக்கப்படல்.
- வணிகத்தைக் கலைப்பது இலகுவாயிருத்தல்.

- தனியுடைமை வணிகங்களில் பின்வரும் தீமைகளும் காணப்படுகின்றன என,
    - உரிமையாளரின் வரையறுக்கப்படாத பொறுப்பு.
    - அதிக மூலதனத்தைப் பெற்றுக் கொள்வது சிரமமாக அமைதல்.
    - உரிமையாளரினால் தனித்து தீர்மானம் எடுக்கப்படுவதால் அது சிலவேளை களில் பிழையாகலாம்.
    - நீண்ட ஆயுள் காணப்படாமை.
    - தனியுடைமை வணிகமொன்று அதன் உரிமையாளரின் பெயரிலல்லாது வேறு பெயர்களில் நடாத்தப்படுமாயின் 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வியாபாரப் பெயர் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிய பிரதேசச் செயலாளர் காரியாலயத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும் என,
    - அவ்வாறு பதிவு செய்வதாயின் பின்வரும் படிமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென,
        - வணிகத்தை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் பிரதேசத்தில் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளல்.
            - தனியுடைமை வணிகப் பெயரினைப் பதிவு செய்வதற்கான விண்ணப் படிவம்
            - வணிகத்தின் பெயரினைப் பதிவு செய்வதற்காக கிராமசேவகரின் அத்தாட்சிக் கடிதம்.
        - கிராமசேவகர் அத்தாட்சிப்படுத்திய கடிதத்தினையும் பூரணப்படுத்தப்பட்ட மாதிரிப்படிவத்தினையும் பதிவு செய்வதற்கான கட்டணத்துடன் பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்தல்.
            - பிரதேசச் செயலாளர் மேற்குறிப்பிட்ட விடயங்களைச் சரிபார்த்த பின் வணிகம் பதிவு செய்யப்பட்டதற்கான பெயர்ப் பதிவுச் சான்றிதழை வழங்குவார்.

**தேர்ச்சிமட்டம் 5.3 :** பங்குடைமை வணிகங்களின் பண்புகளைத் தேடியறிந்து அவ்வணிக அமைப்புக்களின் அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் ஒன்றுடன்ஒன்று ஒப்பிடுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 04

**கற்றல் பேறுகள்:**

- பங்குடைமைச் சட்டத்தில் குறிப்பிட்டபடி பங்குடைமை வணிகமென்பதற்கு கருத்துக் கூறுவார்.
- பங்குடைமை வணிகத்தின் சிறப்பான பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுவார்.
- பங்குடைமை வணிகமொன்றின் அடிப்படைப் பண்புகளைப் பட்டியல்படுத்துவார்.
- பங்குடைமை வணிகமொன்றைப் பதிவு செய்கின்ற நடைமுறைகளைத் தெளிவு படுத்துவார்.
- பங்குடைமை வணிகங்களில் காணப்படுகின்ற நன்மைகளையும், தீமைகளையும் தெளிவுபடுத்துவார்.
- தனியுடைமை வணிகத்தினையும், பங்குடைமை வணிகத்தையும் ஒப்பிடுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பங்குடைமை வணிகக் கட்டளைச் சட்டத்தில் பங்குடைமை வணிகமொன்று பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது என,
    - இலாபம் பெறும் நோக்கின் அடிப்படையில் வணிகமொன்றை நடாத்திச் செல்லும் தனிநபர்களிடையே காணப்படுகின்ற தொடர்பு பங்குடைமை வணிகமாகுமென,
- பங்குடைமைக்கே உரித்தான பண்புகளில் சில கீழே காட்டப்பட்டுள்ளன என,
    - பங்காளர்கள் 2-20 பேர் காணப்படல் வேண்டுமென,
    - பங்காளரிடையே ஒப்பந்தமொன்று காணப்படல் வேண்டுமென,
    - ஏதாவது வணிக முயற்சியொன்று நடைபெறல்.
    - இலாபப் பங்கீட்டுக்கான ஒப்பந்தமொன்றைக் காணக்கூடியதாகவிருத்தல்.
    - சகல பங்காளர்களும் தன்னையும் ஏனைய பங்காளர்களையும் பிரதிநிதி யொருவராக அல்லது தலைவராக மதித்தல்.
- பங்குடைமை வணிகமொன்றிலுள்ள நன்மைகளில் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - இலகுவாக ஆரம்பிக்கக்கூடியதாயிருத்தல்.
    - கூடுதலான மூலதனத்தைத் திரட்டக்கூடியதாயிருத்தல்.

- பலரின் இயலுமைகளையும் திறமைகளையும் ஒன்றுசேர்க்க முடிதல்.
- பொறுப்புக்கள் பலரிடையே பங்கிடப்பட முடிதல்.

- பங்குடைமை வணிகமொன்றின் தீமைகளில் சில கீழே காட்டப்பட்டுள்ளன என,
    - பங்காளர்களின் நட்டப் பொறுப்புக்கள் வரையறுக்கப்படாதிருத்தல்.
    - பங்காளர்களிடையே ஏற்படக்கூடிய கருத்து மோதல்கள் பங்குடைமையைப் பாதித்தல்.
    - நீடித்த வாழ்வு காணப்படாமை.
- பங்குடைமை வணிகமொன்று அதன் எல்லாப் பங்காளர்களினதும் பெயருடனல்லாது வேறு பெயரில் நடாத்தப்படுமாயின் அதனை 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வியாபாரப் பெயர்ப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும் என,
- பங்குடைமை வணிகமொன்றினை பதிவு செய்யும் நடைமுறை தனியுடைமை வணிகமொன்றை பதிவு செய்யும்போது பின்பற்றுகின்ற நடைமுறையை ஒத்ததாக இருக்குமென,

**தேர்ச்சிமட்டம் 5.4 :** பங்குடைமை வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கும் அதனை நடாத்திச் செல்வதற்கும் பங்குடைமை ஒப்பந்தமொன்றின் தேவைப்பாட்டினை உறுதி செய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- பங்குடைமை ஒப்பந்தம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்துவார்.
- பங்குடைமை ஒப்பந்தமொன்று ஏற்படக்கூடிய முறையினை விபரிப்பார்.
- பங்குடைமை ஒப்பந்தமொன்றின் முக்கியத்துவத்தை மதிப்பார்.
- பங்குடைமை ஒப்பந்தமொன்றில் பொதுவாக உள்ளடக்கப்படுகின்ற விடயங்களைத் தெளிவுபடுத்துவார்.
- 1890 ஆம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தையும் அதன் 24 ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களையும் விபரிப்பார்.
- பங்காளரின் கடமைகளையும் உரிமைகளையும் பட்டியல்படுத்துவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- வகுப்பறையைச் சுத்தம் செய்வதற்கு மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ள முறையினைக் காட்டும் அட்டவணையைக் காட்டி, அதனை எழுத்து மூலம் பேணிச் செல்வதற்கான காரணங்களை மாணவர்களிடம் கேட்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தி கலந்துரையாடலை நடாத்தவும்.
    - வகுப்பறையைச் சுத்தம் செய்தலுக்கு மாணவர்களை நடத்தையின் அடிப்படை யில் அல்லது வாய்மொழி மூலம் பெயரிட்டு தெரிவு செய்ய முடியுமாயினும் அதில் பிரச்சினைகள் உருவாகுமென,
    - ஆனால் எழுத்து மூலமான ஒரு பெயர்ப்பட்டியல் நடைமுறைப்படுத்தப்படுமாயின் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் குறைக்கலாம் என,
    - பங்குடைமை வணிகமொன்றை வாய்மொழி; நடத்தை மற்றும் எழுத்து மூலம் ஆரம்பிக்க முடியுமென,

**கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:**

- பின்வருவன பங்குடைமை வணிகமொன்றின் பங்காளரிடையே இணக்கப்பாட்டினை (உடன்பாட்டினை) ஏற்படுத்த வேண்டிய விடயங்களின் மூன்று சோடிகளாகும். அவற்றில் உங்களது குழுவிற்கு கிடைக்கும் சோடி தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.
    - மூலதனமிடல் - இலாப நட்டப் பகிர்வு
    - வணிகக் கருமங்களை மேற்கொள்ளல் - தனிப்பட்ட பாவனைக்காகப் பொருட்களையும் காசையும் பற்றுதல்.
    - மூலதனத்திற்கு மேலதிகமாக வணிகத்திற்குக் கடன் வழங்கல் - புதிய பங்காளரொருவரைச் சேர்த்தல்

- உங்களது குழுவினர் பங்குடைமை வணிகமொன்றை நடாத்திச் செல்லும் பங்காளர்கள் எனக் கருதுங்கள்.
- குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக உங்களது குழுவினரினால் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய இணக்கப்பாடுகள் சகலவற்றையும் அங்கத்தவர்களின் இணக்கப்பாட்டுடன் தீர்மானம் செய்யவும்.
- உங்களது குழுவிற்குக் கிடைத்த உடன்பாட்டுச் சோடிக்கு மேலதிகமாக இணக்கப் பாட்டினை ஏற்படுத்த வேண்டிய விடயங்களை ஒழுங்குபடுத்தவும்.
- அவ்விடயங்கள் தொடர்பாக உங்களது குழு ஏற்படுத்திக் கொள்கின்ற உடன்பாட்டினைக் குழுக் கலந்துரையாடல் மூலம் உருவாக்கிக் கொள்ளவும்.
- உங்களது குழுவினால் ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்ற உடன்பாட்டினை நடைமுறைப் படுத்துதல் மிகவும் பொருத்தமாக அமைவது நடத்தை மூலமாகவா, வாய்மொழி மூலமாகவா, எழுத்து மூலமாகவா என்பதைக் காரணங்களுடன் தெளிவுபடுத்தவும்.
- பங்குடைமை வணிகத்தின் நிலைப்பாட்டினை (வாழ்தன்மை) உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு அங்கத்தவருக்குமுள்ள பொறுப்புக்களைத் தெளிவுபடுத்தவும்.
- உங்களது தேடலை ஆக்கபூர்வமாக முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்குத் தயாராகவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- பங்காளரிடையே ஏற்படுத்திக் கொள்ளப்படும் உடன்பாட்டினை உள்ளடக்கிய எழுத்து மூல ஒப்பந்தம் பங்குடைமை ஒப்பந்தமென,
- எழுத்து மூலமான ஒப்பந்தமொன்று இல்லாத சந்தர்ப்பத்தில் 1890 ஆம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன என,
    - பங்குடைமை வணிகத்தின் இலாப நட்டமானது பங்காளரிடையே சமமாகப் பகிரப்படல் வேண்டுமெனவும் வணிகத்தை கலைக்கும்போது மூலதன இலாபத்தைச் சமமாகப் பகிர்ந்து கொள்வதற்கும் பங்காளருக்கு உரிமையுண்டு.
    - வணிகத்திற்காக பங்காளர் தனிப்பட்ட முறையில் ஏற்கின்ற செலவுகள், வணிகத்தினால் அவர்களுக்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும்.
    - ஒப்பந்தப்படி இட்ட மூலதனத்திற்கு மேலதிகமாக பங்காளர்களால் வணிகத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடனுக்கு 5% வருட வட்டி உரித்துடையது.
    - மூலதன வட்டியினைப் பெற எந்தப் பங்காளருக்கும் உரிமையில்லை.
    - வணிகத்தின் முகாமைக் கருமங்களில் எல்லாப் பங்காளரும் பங்குபற்ற முடியும்.
    - எந்தப் பங்காளரும் தமது சேவைக்காகச் சம்பளமொன்றினைப் பங்குடைமையிலிருந்து பெறமுடியாது.
    - பங்காளர் எல்லோரினதும் அனுமதியின்றி எவரையும் புதிய பங்காளராகச் சேர்த்துக் கொள்ள முடியாது.

- பங்குடைமை வணிகம் தொடர்பாக ஏற்படுகின்ற பொதுப் பிரச்சினையொன்றின் போது கூடுதலான வாக்குகள் அடிப்படையில் தீர்மானம் எடுக்க முடியும் என்பதுடன், பங்குடைமை வணிகத்தின் தன்மையினை மாற்றுகின்ற எதனையும் அனைத்துப் பங்காளரினதும் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.

- பங்குடைமை வணிகத்தின் கணக்குப் புத்தகங்கள் பிரதான காரியாலயத்தில் வைக்கப்படுவதுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைப் பரீட்சிப்பதற்கும் பிரதி பண்ணுவதற்கும் எல்லாப் பங்காளருக்கும் அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

- பங்குடைமை வணிகத்தின் உரிமைகளில் சில கீழே காட்டப்படுகின்றன என,
  - பங்குடைமை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்கான உரிமை
  - பங்குடைமை ஈட்டும் இலாபத்தில் பங்குபெறும் உரிமை
  - இட்ட மூலதனத்திற்கு வட்டி பெறும் உரிமை
  - வழங்கிய மேலதிக நிதிக்கு வட்டி பெறும் உரிமை
  - கணக்குப் புத்தகங்களைப் பரிசோதிக்கும் உரிமை

- பங்காளர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகளில் சில கீழே காட்டப்படு கின்றன என,
  - வணிகக் கருமங்களில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளல்.
  - தனிப்பட்ட இலாபம் பெறாதிருத்தல்
  - நட்டத்தில் பங்குபெறல்
  - போட்டி வணிகங்களில் ஈடுபடாதிருத்தல்

**தேர்ச்சிமட்டம் 5.5 :** கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் விசேட பண்புகளைக் கண்டறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 04

**கற்றல் பேறுகள்:**

- கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் பற்றிக் கருத்துக் கூறுவார்.
- கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் விசேட பண்புகளை விபரிப்பார்.
- கம்பனிகளின் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் விபரிப்பார்.
- கம்பனியொன்றை கூட்டிணைப்பதற்குரிய நடைமுறைகளைத் தெளிவுபடுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட சட்டரீதியான தனிமனித அந்தஸ்துடனான நிறுவனமொன்று கம்பனியாக அறிமுகப்படுத்த முடியும் என,
- கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் காணக்கூடிய பொதுவான பண்புகளில் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாக இருத்தல்.
    - கம்பனியொன்று அதன் பங்குதாரர்களிலிருந்து வேறுபட்ட சட்டரீதியான தனி மனித அந்தஸ்துள்ள சட்ட அலகொன்றாக இருத்தல்.
    - நீடித்த வாழ்வு காணப்படுதல்.
    - உரிமையாளர்களின் நட்டப் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்.
    - முகாமையானது இயக்குனர் சபையொன்றினால் மேற்கொள்ளப்படல்.
- கம்பனிகள் தொடர்பாகக் காணப்படக்கூடிய அனுகூலங்களில் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - பாரிய மூலதனத்தைத் திரட்டக்கூடியதாக இருத்தல்.
    - பாரியளவான வணிகங்களை ஆரம்பிக்க முடியுமாயிருத்தல்.
    - திறமையான முகாமையாளர்களை இணைத்துக் கொண்டு வணிகக் கருமங்களை நடாத்திச் செல்லக்கூடியதாக இருத்தல்.
    - பங்குதாரர் நட்டப் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டிருப்பதனால் முதலீட்டாளர்களைக் கவரக்கூடியதாகவிருத்தல்.
    - பங்குதாரரின் இறப்பு அல்லது விலகல் வணிகத்தின் வாழ்தன்மையில் பாதிப்பை ஏற்படுத்தாதிருத்தல்.

- பங்குகளைப் பரிமாற்றம் செய்ய முடியுமாயிருத்தல்.
- உச்ச மட்டத்தில் மனித வளங்களை ஒன்றுசேர்க்க முடியுமாயிருத்தல்.

- கம்பனிகளில் காணக்கூடிய பிரதிகூலங்களில் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - சட்டக் கட்டுப்பாடுகள் கடினமாயிருத்தல்.
    - ஆரம்பிப்பதற்கு விரிவான முறையொன்றைப் பின்பற்ற வேண்டியிருத்தலும், அதற்காகச் செலவொன்றினை ஏற்க வேண்டியிருத்தலும்.
    - பங்குகளின் எண்ணிக்கைக்கேற்ப வாக்களிக்கும் அதிகாரம் கிடைப்பதனால் சிறுபான்மைப் பங்குதாரர் பாதிப்படைதல்.
    - கம்பனியின் இலாபத்திற்கேற்பவும், பங்குதாரருக்குக் கிடைக்கின்ற இலாபப் பங்குக்கேற்பவும் வரி செலுத்த வேண்டியிருத்தல்.
- கம்பனியொன்றைப் பதிவு செய்தல் குறிப்பிட்ட நாட்டின் கம்பனிகள் சட்டத்திற்கேற்ப மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும், இலங்கையில் கம்பனியொன்றைப் பதிவு செய்தல் 2007ம் ஆண்டு 07ம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின்படி மேற்கொள்ளப்படல் வேண்டுமென,
- கம்பனியொன்றைக் கூட்டிணைக்கும்போது கம்பனிப் பதிவாளருக்கு பின்வரும் ஆவணங்களை முன்வைத்தல் வேண்டுமென,
    - கம்பனிப் பதிவு விண்ணப்பப்படிவம்
    - கம்பனியின் அமைப்பக விதி
    - கம்பனியின் இயக்குநராக செயலாற்றுவதற்கு ஒவ்வொரு ஆரம்ப இயக்குநர்களின் சம்மதத்தைத் தெரிவிக்கும் கடிதம்
    - கம்பனிச் செயலாளராகக் கடமையாற்றுவதற்கான சம்மதத்தைத் தெரிவிக்கும் ஆரம்பச் செயலாளரின் கூற்றொன்று.

**தேர்ச்சிமட்டம் 5.6 :** பல்வேறு வகையான கம்பனிகளின் விசேட பண்புகளை ஒப்பிடுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளை வகைப்படுத்துவார்.
- கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் வகைகளை ஒப்பிடும் நியதிகளைத் தெளிவு படுத்துவார்.
- இனம்கண்ட நியதிகளை அடிப்படையாகக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட கம்பனி களின் வகைகளை ஒப்பிடுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பின்வரும் கம்பனி வகைகளைக் கூட்டிணைக்க முடியுமென,
    - வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
        - வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள்
        - வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள்
            - விலைகூறப்பட்ட கம்பனிகள்
            - விலை கூறப்படாத கம்பனிகள்
        - வரையறுக்கப்பட்ட கரைகடந்த கம்பனிகள்
    - வரையறுக்கப்படாத கம்பனிகள்
    - உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனிகள்
    - வெளிநாட்டுக் கம்பனிகள்
- ஒவ்வொரு கம்பனிகளின் வகைகளினையும் ஒன்றோடொன்று ஒப்பிடும்போது பின்வரும் நியதிகள் பயன்படுத்தப்படுமென,
        - பங்குதாரர்களின் எண்ணிக்கை
        - பொறுப்புக்கள்
        - மூலதன அமைப்பு முறை
            - பங்குகள்
            - தொகுதிக் கடன்கள்
        - முகாமைத்துவம்

- பங்குதாரர்கள் கொள்வனவு செய்த பங்குகளுக்குச் செலுத்திய அல்லது செலுத்து வதற்கு உடன்பட்ட பெறுமதிக்கு மாத்திரம் அவர்களது பொறுப்புக்கள் வரையறுக்கப்பட் டுள்ள கம்பனிகள் வரையறுக்கப்பட்ட கம்பனிகளாகுமெனவும், இவற்றைப் பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் எனவும் கூறலாமென,

- வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் பண்புகளில் சிலவற்றை பின்வருமாறு காட்டலாம் என,

    - ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை 01 ஆகவும், ஆகக்கூடிய பங்குதாரர் எண்ணிக்கை 50 ஆகவும் இருத்தல். இந்த உச்ச அளவில் கம்பனிகளின் ஊழியர்களான பங்குதாரர்கள் உட்படுத்தப்படுவதில்லை.

    - ஆகக் குறைந்த இயக்குநர் எண்ணிக்கை 01 ஆகும். உச்ச எண்ணிக்கைக்கு வரையறையில்லை.

    - கம்பனிகளின் பங்குகளை பகிரங்கமாக வெளியீடு செய்தல் தடுக்கப்பட்டுள்ளது.

    - கடனை மீளச் செலுத்தும் ஆற்றல் தொடர்பான பரிசீலனை இன்றி அனைத்துப் பங்குதாரரின் விருப்பப்படி இலாபத்தினைப் பகிர்ந்தளிக்க முடியுமாயிருத்தல்.

- வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியின் பண்புகளில் சிலவற்றை பின்வருமாறு காட்ட முடியுமென,

    - ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை 01 ஆகவும், உச்ச அளவு தொடர்பாக எந்த வரையறையுமில்லை.

    - ஆகக் குறைந்த இயக்குநர்கள் எண்ணிக்கை 02 ஆக இருத்தல், உச்ச அளவுக்கு வரையறையில்லை.

    - பங்குகளை அல்லது ஏனைய பிணைப்பத்திரங்களைப் பகிரங்கமாக வெளியீடு செய்ய முடியும்.

    - பங்குதாரர்களுக்கு இலாபம் வழங்கப்பட முன் கடன் மீளச் செலுத்தும் ஆற்றல் தொடர்பாக பரிசீலனை ஒன்று செய்யப்பட வேண்டியிருத்தல்.

- கொழும்பு பங்குப்பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட பொதுக்கம்பனிகள் விலைகூறப்பட்ட (பட்டியலிடப்பட்ட) பொதுக்கம்பனிகள் எனக் கூறப்படுவதுடன், அவ்வாறு கொழும்பு பங்கு பரிமாற்றகத்தில் பட்டியலிடப்படாத கம்பனிகள் விலைகூறப்படாத கம்பனிகள் எனவும் கூறப்படுமென,

- இலங்கைக்கு வெளியே வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று கரைகடந்த கம்பனியாக அழைக்கப்படும் என,

- வெளிநாடொன்றில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாயினும் மீண்டும் இலங்கைக் கம்பனிச் சட்டத்தின்படி இலங்கையில் கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித்து பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றாக இருப்பதுடன், வணிக நடவடிக்கைகளை வெளிநாட்டில் மட்டும் மேற்கொள்ளுமாயின் அவையும் கரைகடந்த கம்பனிகளாக அழைக்கப் படுமென,

- பங்குதாரர்களது பொறுப்புக்கள் அமைப்பக சட்ட விதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்குகளின் அளவுக்கு வரையறுக்கப் படாத கம்பனிகள் வரையறுக்கப்படாத கம்பனிகளாகும் என,

- உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனியொன்றின் பண்புகளைப் பின்வருமாறு காட்ட முடியுமென,
    - பங்கு வழங்கல் மேற்கொள்ளப்படுவதில்லை.
    - அமைப்பக சட்ட விதிப்பத்திரத்தில் ஒவ்வொரு பங்குதாரரினாலும் கம்பனி யினைப் பாதுகாப்பதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய தொகையினை குறித்துக் காட்ட வேண்டியிருத்தல்.
    - ஆகக் குறைந்த பங்குதாரர் இருவராவது இருத்தல். உச்ச அளவுக்கு வரையறையில்லை.
    - பொது நோக்கத்தை முன்னுணர்ந்து ஆரம்பித்தல்.
    - கம்பனியின் இலாபத்தை பகிர்ந்தளிக்காது இருத்தல்.
- இலங்கையினுள் வணிக நிலையம் அமைக்கப்பட்டுள்ள ஆனால், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனி வெளிநாட்டுக் கம்பனியொன்றாகுமென,
- வெளிநாட்டுக் கம்பனியொன்று இலங்கையில் வணிக நிலையமொன்றை அமைத்து ஒரு மாதத்தினுள் கம்பனி தொடர்பான விபரமொன்றினை இலங்கைக் கம்பனிப் பதிவாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டுமென,
- கம்பனிகளின் பதிவாளர், கம்பனி தொடர்பாகப் பரிசீலனை செய்தபின் அந்த வெளிநாட்டுக் கம்பனியைப் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனியொன்றாக வெளிநாட்டுக் கம்பனிகள் பட்டியலில் உள்ளடக்குவாரென,

**தேர்ச்சிமட்டம் 5.7 :** அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகங்களது விசேட பண்புகளைக் கேட்டறிந்து அதன் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் ஒப்பிடுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- அங்கீகார வணிகங்களை இனங்காண்பார்.
- அங்கீகார வணிகமொன்றுடன் தொடர்புடைய பிரிவினரைச் சுட்டிக் காட்டுவார்.
- அங்கீகாரம் வழங்குபவருக்கும் அங்கீகாரம் பெறுபவருக்குமிடையிலான இடைத் தொடர்பினை விபரிப்பார்.
- அங்கீகாரம் வழங்குபவர், அங்கீகாரம் பெறுபவருக்கு வழங்குகின்ற வசதிகளை தெளிவுபடுத்துவார்.
- அங்கீகார வணிகங்களை வகைப்படுத்துவார்.
- அங்கீகார வணிகங்களது அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஒப்பிடுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- ஏதேனும் பொருளொன்றை அல்லது சேவையொன்றை வழங்கும் வணிக நிறுவன மொன்று, அப்பொருள் அல்லது சேவையினைக் குறித்த பிரதேச சந்தையொன்றில் விற்பனை செய்வதற்கு வேறொரு நிறுவனத்திற்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்குப் பயன்படுத்தும் வணிக அமைப்பு முறை அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகம் என அழைக்கப்படும்.
- அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகத்துடன் தொடர்புடைய பிரதான இரு தரப்பினர்களைக் காணலாம் என,
    - அங்கீகாரமளிக்கப்பட்ட கம்பனியின் வியாபாரப் பெயரிலேயே பொருட்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கும் அங்கீகாரமளிக்கப்பட்ட கம்பனி (அங்கீகாரம் வழங்குபவர்)
    - அங்கீகாரமளிக்கப்பட்ட கம்பனியின் அனுமதி பெற்ற நிறுவனம் (அங்கீகாரம் பெறுபவர்)
- அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகத்தை ஆரம்பிக்கும்பொழுது அங்கீகாரம் பெறுபவருக்கும் அங்கீகாரமளிப்பவருக்குமிடையே ஏற்படுத்தப்படும் ஒப்பந்தம் அங்கீகார ஒப்பந்தம் எனப்படுமென,
- அங்கீகாரமளிப்பவரினால் அங்கீகாரம் பெறுபவருக்குப் பின்வரும் விடயங்கள் வழங்கப் படுமென,
    - அதனது வியாபாரக்குறியினைப் பயன்படுத்துவதற்கான அனுமதியினை வழங்கல்.
    - முகாமைத்துவப் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
    - சந்தைப்படுத்தலுக்கான உதவிகளை வழங்கல்.

    - நிதி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
    - விற்பனை நிலையத்தினை அமைத்து கொடுத்தல்.
    - உற்பத்தி செய்த பொருட்களையும் உபகரணங்களையும் வழங்கல்.
    - நுட்ப முறைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- அங்கீகாரம் பெறுபவர் மூலம் பின்வரும் கருமங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென,
    - அங்கீகாரம் வழங்கும் கம்பனிகள் விதிக்கின்ற சட்டதிட்டங்களுக்கேற்ப செயற் படுவதற்கு உடன்படல்.
    - மூலதனத்தை முதலீடு செய்தல்.
    - அங்கீகாரம் வழங்கும் கம்பனியிலிருந்து அல்லது அந்நிறுவனம் அனுமதித்த வழங்குநர்களிடமிருந்து மாத்திரமே பொருட்களை கொள்வனவு செய்தல்.
    - அங்கீகாரமளிக்கப்பட்ட கம்பனியுடன் செய்த ஒப்பந்தத்திற்கேற்ப இறையைச் செலுத்துதல்.

- அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகங்களைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும் என,
    - உற்பத்திப் பொருளுக்கு அங்கீகாரமளிக்ககப்பட்ட வணிகம்
    - உற்பத்தியாக்கலுக்கு அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகம்.
    - வணிக முறை தொடர்பான அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகம்.

- அங்கீகார வணிகமுறையின் அனுகூலங்களில் சிலவற்றைப் பின்வருமாறு காட்டலாம் என,
    - அங்கீகாரம் பெறுபவருக்கு அவரது முதலீடின்றி வணிகத்தை விரிவுபடுத்த முடியுமாயிருத்தல்.
    - அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பின் அடிப்படையில் அங்கீகாரம் பெறுபவர் பாரிய சந்தையினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாயிருத்தல்.
    - அங்கீகாரம் வழங்குபவருக்கு அதிக இலாபங்களைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தல்.
    - அங்கீகாரம் வழங்குபவரின் முகாமைத்துவப் பயிற்சியும், உதவிகளும் அங்கீகாரம் பெறுபவருக்கு கிடைக்கப் பெறல்.

- அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகமுறையின் பிரதிகூலங்கள் சிலவற்றை பின்வருமாறு காட்டலாம் என,
    - அங்கீகாரம் வழங்குபவரின் கட்டுப்பாடு காணப்படுவதனால் அங்கீகாரம் பெறுப வருக்குப் பூரண சுதந்திரம் காணப்படாதிருத்தல்.
    - அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பின் அடிப்படையில் நிறுவனம் காணப்படுவ தனால் முதலீடு தொடர்பான நட்ட அச்சம் காணப்படல்.
    - இலாபம் தொடர்பான நிச்சயமற்ற தன்மை காணப்படல்.
    - அங்கீகாரமளிக்கப்பட்ட வணிக முறையினைப் பெற அதிகமான செலவுகளை ஏற்க வேண்டியேற்படும்.

**தேர்ச்சிமட்டம் 5.8 :** கூட்டுறவு வணிகங்களின் பண்புகளைக் கேட்டறிந்து அவற்றின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஒப்பிடுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 04

**கற்றல் பேறுகள்:**

- கூட்டுறவு வணிகம் என்பதற்கு விளக்கம் கூறுவார்.
- கூட்டுறவு வணிகத்தின் விசேட பண்புகளை விமர்சிப்பார்.
- கூட்டுறவு வணிகத்தின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் சுட்டிக் காட்டுவார்.
- கூட்டுறவு வணிகமொன்றைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகளைத் தெளிவு படுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- சர்வதேச கூட்டுறவு அமைப்பானது கூட்டுறவு வணிகத்தைப் பின்வருமாறு அறிமுகப் படுத்தியுள்ளது என,
    - “சுயமாக ஒன்று சேர்ந்த தனிநபர் கூட்டத்தின் பொதுவான பொருளாதார, சமூக, கலாசாரத் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான சம உரிமைகளுடன் கூடிய ஜனநாயக ரீதியில் நிர்வாகம் செய்யப்படுகின்ற அமைப்பொன்றாகும்.”
- இதன்படி கூட்டுறவு வணிகத்தில் பின்வரும் பண்புகளைக் காணமுடியும் என,
    - சுதந்திர அமைப்பொன்றாகுமென,
    - சுயமாக இணைந்த தனிநபர் அமைப்பொன்றிருத்தல்
    - அங்கத்தவர்களின் சம உரிமை
    - தேவைகளும், எதிர்பார்ப்புக்களும் பொதுவாகக் காணப்படல்.
    - ஜனநாயக ரீதியான நிர்வாகத்துடன் கூடிய வணிகமொன்றாயிருத்தல்.
- கூட்டுறவு வணிகத்தின் அனுகூலங்களில் சில பின்வருமாறு:
    - ஜனநாயக ரீதியான நிர்வாகமொன்று காணப்படல்.
    - அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் நியாயமான விலைக்கு வழங்கல்.
    - பல்வேறுபட்ட துறைகளில் வணிகக் கருமங்களை மேற்கொள்ளல்.
    - நெருங்கிய ஒத்துழைப்புடன் கருமங்களை மேற்கொள்ளல்.

- கூட்டுறவு வணிகத்தின் பிரதிகூலங்களில் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - நிதியீட்டல் வழிமுறைகள் வரையறுக்கப்பட்டிருத்தல்
    - கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஆரம்பித்து கருமங்களை மேற் கொள்ள வேண்டியிருத்தல்.
- இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் மூலம் குறித்த மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கீழ் இடம்பெறுகின்றது என,
- கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவு செய்யும்போது பின்வரும் ஆவணங்களைக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டுமென,
    - விண்ணப்பப்பத்திரம் (பூரணப்படுத்தப்பட்ட)
    - உப விதிகளின் பிரதிகள் இரண்டு
    - முன்மொழியப்பட்டுள்ள பொருளாதாரக் கருமங்களின் பொருத்தப்பாட்டினைக் காட்டும் அறிக்கையொன்று.
    - கூட்டுறவுச் சங்கத்தினைப் பதிவு செய்வது தொடர்பான முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுக் கூட்டத் தீர்மான அறிக்கை.
    - விண்ணப்பப்பத்திரத்தில் கையொப்பம் வைத்த அங்கத்தவர்கள் அங்கத்தவக் கட்டணம் செலுத்திய படிக்கும், அந்நிதி செயற்குழுவின் பொறுப்பில் காணப்படு கின்றது என்பதற்கான செயற்குழுவின் சான்றிதழ்
    - சங்கம் அமைந்துள்ள முகவரியின் அமைவிடத்தைக் காட்டும் குறிப்பு/வரைபடம்.

**தேர்ச்சிமட்டம் 5.9 :** கூட்டுறவு வணிகத்தின் போக்கினைத் தேடியறிவதன் மூலம் கூட்டுறவின் வளர்ச்சிப் போக்கினை எதிர்வு கூறுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- இலங்கையில் கூட்டுறவு வணிகத்தின் போக்கினை விபரிப்பார்.
- கூட்டுறவின் கொள்கைகளை வெளிப்படுத்துவார்.
- கூட்டுறவு வணிகங்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் முறையை விபரிப்பார்.
- கூட்டுறவு வணிகங்களின் நவீன மாற்றங்களை எதிர்வு கூறுவார்.
- கூட்டுறவு வணிகங்களின் முன்னேற்றத்திற்குப் பொருத்தமான முன்மொழிவுகளை முன்வைப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கையில் கூட்டுறவு வணிகங்களின் போக்கு பின்வருமாறு இடம்பெற்றுள்ளதென,

| | |
|---|---|
| 1912 | கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பம் |
| 1942 | நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படல் |
| 1947 | விவசாயப் பொருள் உற்பத்தியும் பங்கீட்டுக்குமான கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படல். |
| 1957 | பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படல். |
| 1971 | கூட்டுறவு மறுசீரமைப்புச் செய்யப்படல். |
| 1992 | கூட்டுறவுச் சங்கங்களில் மாற்றம் செய்தல். |

- கூட்டுறவுக் கொள்கைகளைப் பின்வருமாறு காட்ட முடியுமென,
  - சுயேச்சையான, திறந்த அங்கத்துவம்
  - ஜனநாயகமான அங்கத்துவக் கட்டுப்பாடு
  - அங்கத்தவரின் பொருளாதார ஈடுபாடு
  - சுதந்திர உரிமை
  - கூட்டுறவுக் கல்விப் பயிற்சியும் தகவல்களும்
  - பிரதேச, தேசிய, சர்வதேச என்ற முறைகளில் கூட்டுறவு சங்கங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு
  - சமூகம் தொடர்பான அக்கறை

- நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குக் கூட்டுறவானது பல்வேறு முறைகளில் பங்களிப்புச் செய்கின்றதென,

  **உதாரணம்:**

  பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை தேசிய உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்து வேலை வாய்ப்புக்களையும் அதிகரித்துள்ளது.

- தற்போதைய போட்டிகள் நிறைந்த திறந்த பொருளாதாரத்தினுள் கூட்டுறவு வணிகத்தில் புதிய மாற்றங்களைக் காண முடியுமென,

  **உதாரணம்:**

  - சுயசேவை வியாபார நிலையங்களை ஆரம்பித்தல்.
  - புதிய வணிகத்துறைகளில் ஈடுபடல்

**தேர்ச்சிமட்டம் 5.10 :** அரசதுறை வணிக அமைப்புக்களின் பண்புகளைக் கண்டறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- வணிக நடவடிக்கைகளை அரசின் கீழ் நடாத்திச் செல்வதற்கான காரணங்களைக் கேட்டறிவார்.
- அரச துறை வணிக அமைப்புக்களை வகைப்படுத்துவார்.
- அரச துறை வணிக அமைப்புக்களுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.
- அரச துறை வணிக அமைப்புக்களின் பண்புகளைக் கேட்டறிவார்.
- தனியார் மயப்படுத்தல் என்பதை விபரிப்பார்.
- தனியார் மயப்படுத்தலின் சாதக, பாதக பெறுபேறுகளை ஒப்பிடுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொதுமக்களது நலன் கருதி வணிகங்களை நடாத்திச் செல்வதற்கு அரசு முன்வருகின்றது என,
- பின்வரும் காரணங்களினால் அரசு வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதைக் காணமுடியும் என,
    - தனியார் துறை நியாயமற்ற முறையில் இலாபம் உழைப்பதனைக் கட்டுப்படுத்து வதற்கு.
    - ஏகபோக நிறுவனங்கள் உருவாகுவதைத் தடுப்பதற்கு.
    - பொது மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு.
    - வளவிரயங்களைக் குறைத்தல்.
- விசேட அல்லது பொதுச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படுகின்ற, முழுமையான உரிமை அல்லது உரிமையில் கூடுதலான அளவு அரசுக்கு உரித்தான, அரசினால் நியமிக் கப்படுகின்ற இயக்குநர் குழுவொன்றினால் நிர்வகிக்கப்படுகின்ற வணிகம் அரசகூட்டுத் தாபனம் என அழைக்கப்படுமென,
- அமைச்சின் நேரடி நிர்வாகத்திற்கு உட்படுவதுடன் நிறுவனச் சுற்றறிக்கைகள், நிதிச் சட்ட திட்டங்களுக்கேற்ப செயற்படுகின்ற, அதிகமாக சேவைகளை வழங்குவதில் ஈடுபடும் நிறுவனங்கள் விசேடமாக அரச திணைக்களங்கள் என அறிமுகப்படுத்த முடியும் என,

- மாகாண சபை, நகர சபை, பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலமும் வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என,

- அரசதுறை வணிகங்கள் அனைத்தும் பொதுத்துறை வணிகங்கள் எனவும் அழைக்கப் படுமென,

- வினைத்திறன் குறைந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ள பொதுத்துறை வணிகங்களை வினைத்திறனுள்ள வணிகங்களாக மாற்றுவதற்கு அரசினால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள ஒரு செயற்பாட்டு முறையாக தனியார் மயப்படுத்தலைக் கூறலாம் என,

- தனியார் மயப்படுத்தலில் சாதக விளைவுகளைப் போன்றே பாதக விளைவுகளையும் காண முடியும் என,

- அரசதுறை வணிகங்களிலும் சாதக விளைவுகளைப் போன்றே பாதக விளைவுகளை யும் காணமுடியும் என,

**தேர்ச்சி 6.0 :** பொருளாதார மற்றும் தனியார் அபிவிருத்திக்கு முயற்சி யாண்மையின் பங்களிப்பினை எடுத்துக் காட்டுவார்.

**தேர்ச்சிமட்டம் 6.1 :** முயற்சியாண்மையின் முக்கியத்துவத்தையும் அதன் அனுகூலங்களையும் விளங்கி முயற்சியாளராகும் விருப்பத்தை உருவாக்கிக் கொள்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களை அறிவதன் மூலம் முயற்சியாண்மை தொடர்பான கருத்தொன்றினை உருவாக்குவார்.
- முயற்சியாண்மையின் முக்கியத்துவத்தை மதிப்பார்.
- முயற்சியாண்மையினூடாகக் கிடைக்கப் பெறுகின்ற தனியாள், சமூக, பொருளாதார நன்மைகளைப் பட்டியல்படுத்துவார்.
- தெரிவு செய்த முயற்சியொன்றினைக் கவனத்தில் கொண்டு அதன் மூலம் முயற்சி யாளனுக்கும் சமூகத்திற்கும் மற்றும் பொருளாதாரத்திற்கும் கிடைக்கின்ற நன்மை களை வெவ்வேறாகக் கோவைப்படுத்துவார்.
- முயற்சியாண்மைக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமிடையிலான தொடர்பினைத் தெளிவுபடுத்துவார்.
- முயற்சியாண்மையின் நவீன வளர்ச்சியினை அறிந்து முயற்சியாண்மையின் எதிர்காலம் தொடர்பாகக் கருத்துக் கூறுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- முயற்சியாண்மை தொடர்பாக பல்வேறு வரைவிலக்கணங்கள் உள்ளன என,

  **உதாரணம்:**

  "சந்தர்ப்பமொன்றினை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அமைப்பொன்றினை உருவாக்குபவர் முயற்சியாள ராவார். சந்தர்ப்பத்தினை உருவாக்கிக் கொண்டு அதன் மூலம் பயனைப் பெற்றுக் கொள்வதற்காக அமைப்பினை உருவாக்கும்போது தொடர்புபடும் சகல கருமங்களும், விடயங்களும் முயற்சியாண்மைச் செயற்பாடுகளில் உள்ளடக்கப்படும்."

- பின்வரும் காரணங்களினால் முயற்சியாண்மை முக்கியத்துவமுடையது என,
  - வேகமாக மாற்றமடையும் உலகில் அம்மாற்றங்களுக்கு எதிர் நடவடிக்கை களைக் காட்டக்கூடிய புதியவற்றைக் கண்டுபிடிக்கக்கூடிய முயற்சியாளர்களுக்கு தேவை அதிகம் காணப்படுகின்றதென,
  - போட்டி வணிக உலகினுள் வணிகத்துக்கான சந்தர்ப்பங்களை இனங் காண்பதற் கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய நிலைமையினை உருவாக்கிக் கொள்வதற்கும், அதில் எதிர்பார்த்த நன்மைகளைத் தோற்றுவிப்பதற்கும் முயற்சி யாண்மை தேவைப்படல்.

- மாற்றமுறும் உலகத்திற்குத் தலைமைத்துவத்தை வழங்கக்கூடியவர் முயற்சியாளராகையால், விவசாயப் பண்ணை, பாடசாலை, பல்கலைக்கழகம், வைத்திய சாலை, அரசு, சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள் போன்ற அனைத்து நிறுவனங்களுக்கும் முயற்சியாளர்கள் தேவைப்படல்.

- முயற்சியாண்மையினூடாக தனியாள், சமூக, பொருளாதார நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன என,

  **உதாரணம்:**

  **தனிநபருக்கான நன்மைகள்**

  - தனிநபர் திறனில் பயனைப் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
  - கூடிய அர்ப்பணிப்புக்கேற்ப அதிக நன்மைகளைப் பெறமுடிதல்.
  - சமூக அந்தஸ்து, ஏற்புடைமை உருவாதல்.
  - தனிப்பட்ட நிதி இலாபம்

  **சமூக, பொருளாதார நன்மைகள்**

  - புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படல்.
  - வருமானத்துக்கான சந்தர்ப்பங்கள் தோன்றுதல்.
  - புதிய பொருட்கள், சேவைகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெறல்.
  - மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைதல்.
  - நிறை தொழில் மட்டம் உருவாகுதல்.
  - பிரதேச வளங்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படல்.
  - புதிய சந்தைகள் அபிவிருத்தியடைதல்.

- முயற்சியாண்மைக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமிடையில் காணப்படுகின்ற தொடர்பினைத் தெளிவுபடுத்துவதற்கான சில விடயங்கள் கீழே காட்டப்படுகின்றன என,

  - முயற்சியாண்மை காரணமாகப் புதியன உருவாக்கப்படுவதனால் தேசிய உற்பத்தி உயர்வடைதல்.
  - புதிய தொழில் வாய்ப்புக்கள் தோற்றம் பெறுவதனால் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.
  - சந்தை நடவடிக்கைகள் விரிவடைவதன் காரணமாக புதிய போட்டிச் சந்தைகள் தோற்றம் பெற்று பொருளாதார அபிவிருத்திக்குக் காரணமாயமைதல்.
  - பிரதேச வளங்கள் பயன்படுத்தப்படுவதனால் அவற்றிற்கான கேள்வி அதிகரித்தல்.
  - புதிய வணிகங்கள் தோற்றம் பெறுவதனால் அவை பொருளாதார அபிவிருத்திக்குத் துணையாக அமைதல்.

- முயற்சியாண்மையின் நவீன போக்குகளில் சில கீழே காட்டப்பட்டள்ளன என,

  - சமூக முயற்சியாண்மை
  - பெண்கள் முயற்சியாண்மை
  - உள்ளக முயற்சியாண்மை

**தேர்ச்சிமட்டம் 6.2 :** முயற்சியாளர்கள் உருவாவதற்கான பின்னணிக் காரணிகளை அறிந்து கொள்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- முயற்சியாளர் யார் என்பதை இனங் காண்பார்.
- முயற்சியாளர்கள் உருவாவதற்கு உதவுகின்ற காரணிகளை முன்வைப்பார்.
- உண்மையான முயற்சியாளர்களின் வாழ்க்கைச் சரிதங்களை அறிந்து அவர்கள் முயற்சியாளராக மாறுவதற்குப் பின்னணியாக அமைந்த காரணிகளை வெளிப் படுத்துவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- பிரதேசத்திலுள்ள முயற்சியாளரொருவரைப் பாடசாலைக்கு அழைத்து அவரிடம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவும். அதன்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தவும்.

  **குறிப்பிட்ட வணிகங்களில்**

  - வணிகத்தின் தன்மை
  - வெற்றி / தோல்வி நிலைமைகள்
  - வெற்றி அல்லது தோல்விக்கான காரணிகள்
  - முயற்சியாளர்கள் உருவாகுவதற்குச் செல்வாக்குச் செலுத்தும் பொதுவான காரணிகள்

- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தி கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
  - முயற்சியாளர்கள் பிறப்பிலே தோற்றம் பெறுகின்றார்களா அல்லாவிடின் முயற்சி யாளர்கள் தோற்றுவிக்கப்பட முடியுமா என்பது விவாதத்திற்குரியதொன்றாகு மென,
  - எவ்வாறாயினும் இயல்பாக உருவாகின்ற முயற்சியாளர்களைக் போன்றே இயல்பின்றி தோற்றம் பெறுகின்ற முயற்சியாளர்களும் உள்ளனர் என,
  - வெற்றிகரமான முயற்சியாளர்களின் வாழ்க்கைச் சரிதையினை அறிந்து அவர்களின் வெற்றிக்கான காரணிகளை இனங் காண முடியுமென,

**கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:**

- பின்வரும் வணிகத் துறைகளில் உங்களது குழுவிற்கு கிடைக்கும் வணிகத் துறை தொடர்பாகக் கவனஞ் செலுத்தவும்.
  - கைத்தொழில் உற்பத்தி வணிகம்
  - வியாபார வணிகம்

- சேவை வணிகம்
- விவசாய உற்பத்தி வணிகம்

- உங்களுக்குக் கிடைத்த வணிகத்துறையினை இனங்காண்பதற்குக் குழுக் கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
- உங்களது தலைப்பிற்குரிய முயற்சியாளரொருவரைக் குழுக் கலந்துரையாடலொன்றின் மூலம் இனங்காணவும்.
- அவரின் தற்போதைய வணிகக் கருமங்கள் தொடர்பாகச் சுருக்கமாக விபரிக்கவும்.
- அவரின் வணிகத்தின் தொடக்கநிலை / காலப்பகுதி தொடர்பாகத் தகவல்களை வெளிப்படுத்தவும்.
- அவரின் வணிகம் தோற்றம் பெறுவதற்குப் பின்னணியாகவிருந்த காரணிகளை இனங்காட்டவும்.
- அவரது வணிகத்தின் வெற்றிக்கு மிகவும் உதவியாகவிருந்த சிறப்பான காரணிகள் எவை?
- அவரை முயற்சியாளரொருவராக நீங்கள் ஏன் கருதுகின்றீர்கள்? காரணம் தரவும்.
- உங்களது தேடலை ஆக்கபூர்வமாக முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு தயாராகவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- முயற்சியாளர் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன என,

  **உதாரணம்:**

  > "வணிகமொன்றின் இடரை எடுகோளாகக் கொண்டு அந்த வணிகத்தினை ஒழுங்குபடுத்தி அதனை முகாமை செய்யும் நபர் முயற்சியாளராவார்."
  >
  > **- The Merrian webster Dictionery**

- "நடைமுறையிலுள்ள பொருளாதார முறையினை மாற்றி புதிய மூலப்பொருட்களைத் தேடி அல்லது புதிய ஒழுங்கமைப்பு முறையொன்றை உருவாக்கி புதிய பொருட்கள் சேவைகளை அறிமுகப்படுத்துகின்ற நபர் முயற்சியாளராவார்."

  **- ஜோசப் சும்பீட்டர்**

- முயற்சியாளர்கள் தோற்றம் பெறுவதற்கான பின்னணிக் காரணிகளில் சில கீழே காட்டப்படுகின்றன என,
  - சுயஆக்கத்தில் ஈடுபடல்.

    **உதாரணம்:** புதிய பொருட்கள், சேவைகளை உருவாக்கல்.
- பெற்றோர்களும் குடும்ப அங்கத்தவர்களும் வணிகத்துறையில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கு அந்த அபிலாசை கிடைக்கப் பெறல்.

- முயற்சியாளர்கள் தோற்றம் பெறுவதற்கு பொருத்தமான சமூகப் பொருளாதாரப் பின்னணி காணப்படல்.

  **உதாரணம்:**

  - முயற்சியாளர்களை மதிக்கின்ற சமூகப்பின்னணியொன்று காணப்படல்.
  - அரசின் உதவியும் ஊக்கமும் கிடைக்கப் பெறல்.

- தொழிலில் கிடைத்த அனுபவம் மூலம்.
- பொழுதுபோக்காகச் செய்கின்ற கருமம் வணிகமொன்றாக மாற்றமடைதல்.

  **உதாரணம்:** அலங்கார மீன் வளர்ப்பு

- சில தொழில்கள் தொடர்பாக அல்லது பல்வேறு துறைகள் தொடர்பாகப் பெற்றுக் கொள்கின்ற கல்வியும், பயிற்சியும்.
- சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தேடுவதின் பெறுபேறாக.

  **உதாரணம்:**

  - கழிவுகளை அகற்றும் பிரச்சினைக்கு இயற்கைப் பசளை உற்பத்தி
  - இலையான், நுளம்புப் பெருக்கத்திற்குப் பல்வேறு தீர்வுகளை முன்வைத்தல்.
  - எரிபொருள் பிரச்சினைக்கு பல்வேறு அடுப்புகளை உருவாக்குதல்.

**தேர்ச்சிமட்டம் 6.3 :** முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்து கொண்டு முயற்சியாளரொருவராக செயற்படுவதிலுள்ள திறனை வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- முயற்சியாண்மைக்குரிய தேர்ச்சிகளைப் பட்டியல்படுத்துவார்.
- முயற்சியாளர்களின் நடத்தை தொடர்பான கதைகளை அறிந்து அவர்களினுள் காணக்கூடிய முயற்சியாண்மைக்குரிய தேர்ச்சிகளை வெளிப்படுத்துவார்.
- முயற்சியாண்மைக்குரிய தேர்ச்சிகளை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய வழிகளை முன்வைப்பார்.
- வெற்றிகரமான முயற்சியாளரொருவராவதற்கு முயற்சியாண்மைக்குரிய தேர்ச்சிகளை மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- சமூகத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றவர்களை உதாரணம் காட்டி அத்தொழில்களுக்கு அந்நபர்களிடம் இருக்கவேண்டிய திறன்கள் என்ன? என்ற வினாவினை வகுப்பில் முன்வைக்கவும்.

  **உதாரணம்:**
  - பாடலாசிரியர்
  - திட்டநுட்பவியலாளர்
  - வணிகரொருவர்
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தி கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
  - வணிகர்களுக்கு வணிகத்தில் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கு பல்வேறுபட்ட திறன்கள் அவசியமானவை என,
  - முயற்சியாளரினுள் சிறப்புத்திறன்களும் பண்புகளும் காணப்படுகின்றன என,
  - பின்வரும் விளையாட்டின் மூலம் அவ்வாறான பண்புகளை இனங்கண்டு கொள்ள முடியும் என,
- வளையம் வீசும் விளையாட்டு தொடர்பாக ஆசிரியருக்கு வழங்கப்படும் ஆலோ சனைகள்.
  - வகுப்பு மாணவர்களை இரண்டு அல்லது மூன்று குழுக்களாக பிரிக்கவும்.

    **உதாரணம்:** குழு - I

    குழு - II
- வளையம் வீசும் விளையாட்டினை விளையாடும் முறை தொடர்பான ஆலோசனை களை குழுக்களுக்கு பெற்றுக் கொடுக்கவும்.

- விட்டம் 6, 8, 10 செ.மீ. அளவுகளில் காணப்படுகின்ற வளையம் மூன்றினை தயாரித்துக் கொள்ளவும். இதற்காகப் பிளாஸ்டிக் குழாய் 1/2” (1/2 அங்குலம்) கம்பிக் குழாயினைப் பயன்படுத்த முடியும்.
- 8 அல்லது 10 செ.மீ. அளவில் நிலத்திலிருந்து வெளியே இருக்கும் வகையில் அளவுத்தடியினை நிலத்தில் நடவும். மேல்தள மட்டத்தில் நட்ட நிலத்திற்கு நேராக இருக்கக்கூடிய முறையில் தயார் செய்து கொள்ளவும்.

  அளவுத்தடி இருக்குமிடத்திலிருந்து 30 செ.மீ. அளவில் தூரத்தினைக் குறிக்கவும். அத்தூரம் 1, 2, 3, 4, ...... என்றவாறு குறிக்கவும்.

  **உதாரணம்:**




- அத் தூரத்திலிருந்து மேற்கொள்ளப்படும் வெற்றிகரமான வீசுதலுக்கு (தடியில் வளையம் விழும் வகையில் வீசுவதற்கு) கிடைக்கக்கூடிய புள்ளி அளவு தொடர்பாக குழுக்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- மூன்று வளையங்களில் ஏதாவதொரு வளையமொன்றினைத் தெரிவு செய்யமுடியும் என்பதையும், விளையாடுவதற்கு 6 முறைகள் கிடைக்குமென்பதையும் மாணவர் களுக்குத் தெரியப்படுத்தவும்.
- குழுவிலுள்ள சகலருக்கும் அல்லது தெரிவு செய்தவர்களுக்கு மாத்திரம் விளையாட்டில் ஈடுபட முடியும்.
- விளையாட்டு நடைபெறும் வேளையிலே ஒவ்வொரு குழுவும் பெற்றுக் கொள்கின்ற புள்ளியினை குழுக்களின் முன்னிலையிலேயே எழுதி வைக்கவும்.
- விளையாட்டில் ஈடுபட்ட பின்னர் கற்றலுக்குத் தேவையான ஆலோசனையைப் பெற்றுக் கொடுத்து மாணவர் அனுபவங்களை வெளிப்படுத்தவும்.
- மாணவர்கள் விளையாட்டில் ஈடுபட்டிருக்கும்போது நடந்து கொள்ளும் முறையை நன்றாக அவதானிப்பதற்கும், கலந்துரையாடலின்போது அந்த அவதானிப்பைப் பாட விடயங்களுக்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் கவனம் செலுத்தவும்.

### கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- ஆசிரியரின் ஆலோசனைக்கேற்ப வளையம் வீசும் விளையாட்டில் ஈடுபடவும்.
- விளையாட்டின் பின்னர் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் கலந் துரையாடலில் ஈடுபடவும்.
  - விளையாட்டில் ஈடுபட்டவர்கள் விளையாட்டில் செய்த விடயங்கள் என்ன?
  - வளையம் வீசும்போது தான் இருக்குமிடத்தை மாற்றுவதற்கு அல்லது மாற்றா திருப்பதற்கான காரணம் என்ன?

- தெரிவு செய்த வளையம் அல்லது வளையங்கள் தொடர்பான உங்களது கருத்தைத் தெரிவிக்கவும்.
- விளையாட்டின்போது வெளிச்சூழலின் தாக்கம் விளையாட்டின் பெறுபேற்றில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?
- விளையாட்டுக்குத் தெரிவு செய்யப்படல் அல்லது தெரிவு செய்யப்படாமை தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
- வெற்றி தோல்விக்குக் காரணமாயமைந்த சிறப்புக்காரணிகள் காண்பபட்டதா?
- இந்த விளையாட்டின் மூலம் நீங்கள் பெற்ற அனுபவங்கள் எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு உங்களது தேடலை வகுப்பறைக்கு முன்வைக்கவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- முயற்சியாளர்களின் சுயசரிதைகளை அறிந்து கொள்வதன் மூலம் அவர்களினுள்ளே காணப்படும் தேர்ச்சிகளைச் சுட்டிக் காட்டவும்.
- முயற்சியாளர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் பல்வேறு முறைகள் காணப் படுகின்றன என,

  **உதாரணம்:**

  - முதலாவதாக முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை உறுதியாக இனங்கண்டு அத்தேர்ச்சிகள் தன்னுள்ளே எந்தளவிற்குக் காணப்படுகின்றன? தன்னிடமில்லாத தேர்ச்சிகள் எவை? மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் எவை? என்பவை தொடர்பான சுய மதிப்பீட்டின் மூலம்,
  - முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்வதற்குக் காணப்படும் பல்வேறு பயிற்சி வேலைத்திட்டங்கள் மூலம்,
  - சாதாரண கல்விக்கு மேலதிகமாக முயற்சியாண்மை தொடர்பாகப் பெறுகின்ற கல்வியின் மூலம்,
  - வேறு முயற்சியாண்மைக் கருமங்களை மேற்கொள்ளும்போது அல்லது தானே முயற்சியாளரொருவராக வேலை செய்யும்போது கிடைக்கின்ற அனுபவங்கள் மூலம்,
- முயற்சியாண்மைத் தேர்ச்சிகளுடனான நபரொருவர் வெற்றிகரமான முயற்சியாளராக மாறுகின்றார் என,
- இந்தியாவின் முயற்சியாண்மை அபிவிருத்தி நிறுவனம் (EDI) மேற்கொண்ட ஆய்வின் பின்னர் பின்வருவன முயற்சியாண்மைக்குரிய தேர்ச்சிகளாக இனங்காணப்பட்டுள்ளன என,
  - ஆரம்பிக்கும் திறன் (Initiatives)
  - சந்தர்ப்பங்களை இனங்காணலும் செயற்படுத்தலும் (See and Act on Opportunities)
  - தொடர்ந்து (நிறுத்தாமல்) நடத்திச் செல்லல் (Persistence)
  - அறிந்திருத்தல் (Knowing)

- வேலையில் உயர்ந்த பண்பினைப் பேணுவதில் கவனஞ் செலுத்தல்.
- அர்ப்பணிப்புடன் வேலையில் ஈடுபடல் (Commitment to work contract)
- வினைத்திறனுடன் செயற்படுதல் (Efficiency orientation)
- முறையான திட்டமிடல் (Systamatic planning)
- பிரச்சினைகளைத் தீர்த்தல் (Problem Solving)
- செல்வாக்கு செலுத்தும் திறன் (Assretiveness)
- தன்னம்பிக்கை (Self Confidence)
- தூண்டும் திறன் (Persuation)
- செல்வாக்கு உத்திகளைப் பயன்படுத்தல் (Use of Influence strategies)
- கண்காணித்தல் (Monitoring)
- ஊழியர் நலன் தொடர்பாகக் கவனஞ் செலுத்துதல்

  (Concern for employee welfare)

- மாணவர்கள் விளையாட்டில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் செயற்பட்ட முறையினையும் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளவும்.
- அதேபோன்று மாணவர்கள் விளையாட்டில் ஈடுபட்ட பின்னர் கற்றலுக்காக முன்வைக் கப்படும் ஆலோசனைகளுக்கேற்ப முன்வைக்கின்ற மாணவர்களின் தேடல்களுக்குக் கவனமாகச் செவிமடுக்கவும்.
- கலந்துரையாடலின்போது மாணவர்களினால் வெளிப்படுத்தப்பட்ட அல்லது வெளிப் படுத்தப்படாத முயற்சியாண்மைத் தேர்ச்சிகள் தொடர்பாகவும் கலந்துரையாடவும்.

  **உதாரணம்:**

  - மாணவர்கள் ஒரு வளையத்தை மாத்திரம் பயன்படுத்தி விளையாடியிருந்தால் அப்போது மாணவர்கள் சந்தர்ப்பத்தை இனம் காணவில்லையெனவும், வளையங் களை மாற்றி விளையாடியிருப்பின் பல்வேறு சந்தர்ப்பங்களை இனம்கண்டு அவற்றைச் செயற்பாட்டுக்கு உட்படுத்துவதற்கு முயற்சித்தார்களென,
  - இடங்களை மாற்றி விளையாடியிருந்தால் அங்கு இடர்களைப் பொறுப்பேற்பது போன்றே எதிர்பார்க்கைகளை உருவாக்கிக் கொள்வதற்கும் செயற்பட்டார்க ளெனவும், ஒரே இடத்திலிருந்து வளையத்தைப் போடுவதற்கு முயற்சி செய் திருந்தால், இடர்களுக்கு முகம் கொடுப்பதற்குப் பயப்படுதலும், வெற்றி பெறும் விருப்பம் இல்லாதிருந்தமையும் என,

- இவ்வாறு ஒவ்வொரு குழுவிலுமுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களினாலும் வெளிப்படுத்தப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்படாத முயற்சியாண்மைத் தேர்ச்சிகளைக் கவனத்தில் கொண்டு அவற்றை மேம்படுத்திக் கொள்ளும் வகையிலான கலந்துரை யாடலொன்றை நடாத்தவும்.

**தேர்ச்சிமட்டம் 6.4 :** பொருளாதார அபிவிருத்திக்குச் சிறிய வணிகங்களின் பங்களிப்பினைத் தேடியறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதிகளைக் கவனத்திற் கொண்டு சிறிய வணிகங்கள் என்பதற்கு கருத்துக் கூறுவார்.
- சிறிய வணிகங்களில் காணக்கூடிய விசேட பண்புகளை ஒழுங்குபடுத்துவார்.
- நாடொன்றில் பொருளாதார அபிவிருத்திக்குச் சிறிய வணிகங்களினால் கிடைக்கின்ற உதவியினை உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துவார்.
- சிறிய வணிகங்களின் வெற்றிக்கு முயற்சியாண்மை காரணமாக அமைகின்ற முறையினைப் பகுத்தாய்வார்.
- சிறிய வணிகமொன்றை ஆரம்பிக்கும்போதும் நடாத்திச் செல்லும்போதும் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை வெவ்வேறாகப் பட்டியற்படுத்துவார்.
- சிறிய வணிகங்களின் வெற்றிக்கு அல்லது தோல்விக்கு காரணமாக அமைந்த விடயங்களை பகுத்தாய்வார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பல்வேறுபட்ட நிறுவனங்கள், பல்வேறு தேவைகளின் அடிப்படையில் பல்வேறு நியதிகளைப் பயன்படுத்திச் சிறிய வணிகங்களை வரைவிலக்கணப்படுத்தியுள்ளன என,
- அமெரிக்க ஐக்கிய அரசின் "Small Business Administration" எனும் நிறுவனம் சிறிய வணிகங்களைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளது என,

  "சுய உரிமையும் சுயமாகச் செயற்படுகின்ற அதேவேளை அந்தத் துறையினுள் அதிகாரமற்ற வணிகங்கள் சிறிய வணிகங்களாகும்."

- சிறிய வணிகங்களை இனங் காண்பதற்காக இலங்கையிலுள்ள சில நிறுவனங்கள் பல்வேறு நியதிகளைப் பயன்படுத்துகின்றனவென,

  **உதாரணம்:**

| நிறுவனங்கள் | நியதிகள் |
|---|---|
| 1. கைத்தொழில் அபிவிருத்தி சபை | 1. ஈடுபடுத்தியுள்ள மூலதனம் 4 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத வணிகம். |
| 2. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) | 2. ஈடுபடுத்தியுள்ள மூலதனம் 4 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத வணிகம் |

| | | | |
|---|---|---|---|
| 3. | சிறு தொழில் திணைக்களம் | 3. | ஈடுபடுத்திய மூலதனம் 4 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத வணிகம் |
| 4. | தொழில் அபிவிருத்தி அமைச்சு | 4. | முதலீட்டு மூலதனம் 20 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத வணிகம் |
| 5. | குடித்தொகை மதிப்பீட்டு திணைக்களம் | 5. | ஊழியர் எண்ணிக்கை 25க்கு குறைவாகவுள்ள வணிகம் |
| 6. | கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | 6. | நிலையான ஊழியர் எண்ணிக்கை 50க்கு குறைவான வணிகம் |
| 7. | இலங்கை மத்திய வங்கி | 7. | பயன்படுத்துகின்ற மின்சார சக்தியின் அளவு கிலோ வோட் (kw) 50 அம்பியருக்குக் குறைந்த வணிகம் |

- சிறிய வணிகங்களுக்கே உரித்தான சிறப்புப் பண்புகள் உள்ளன.

  **உதாரணம்:**

  - சந்தை சிறியதாயிருத்தல்.
  - குறைந்தளவு மூலதனம் முதலிடப்பட்டிருத்தல்.
  - குறைந்தளவு ஊழியர் தொகையொன்று காணப்படல்.
  - குடும்ப அங்கத்தவரின் உழைப்பு கூடுதலாகப் பயன்படுத்தப்படல்.
  - தீர்மானமெடுத்தல் தன்னிடமுள்ள தரவுகளினடிப்படையில் மாத்திரம் இடம்பெறல்.
  - வணிகத்தின் முகாமை சுதந்திரமாக இருத்தல். பெரும்பாலும் உரிமையாளனே முகாமையாளராவார்.
  - வணிகத்தின் செயற்பாட்டுத்துறை பெரும்பாலும் உள்நாட்டில் காணப்படும். ஆனால் சந்தை உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் காணப்படலாம்.
  - பாரிய வணிகங்களுடன் ஒப்பிடும்போது இவற்றின் மூலதன இணைப்பு குறைவான தாகும்.
  - நவீன தொழில்நுட்பப் பயன்பாடு குறைவாக இருத்தல்.

- நாடொன்றின் பொருளாதார அபிவிருத்திக்குச் சிறிய வணிகங்கள் பல்வேறு முறைகளில் உதவுகின்றதென,

  **உதாரணம்:**

  - பாரிய வணிகங்களுடன் ஒப்பிடும்போது கூடுதலான வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடியுமாயிருத்தல்.
  - தேசிய உற்பத்தியின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்த முடியுமா யிருத்தல்.
  - பாரியளவு வணிகங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்கலும் பண்டத் தொகுதிகளையும் சேவைகளையும் வழங்கலும்.
  - உள்நாட்டு மற்றும் பிரதேச வளங்களின் உச்சப் பயன்பாடு.
  - மக்களின் வருமான மட்டம் அதிகரித்தல்.
  - பாரிய வணிகங்கள் மேற்கொள்ளாத வணிகக் கருமங்களை மேற்கொள்ளல்.
  - பாரம்பரிய நுட்பமுறைகளைப் புதிய தொழில்நுட்ப முறைகளுடன் இணைப்பதன் மூலம் உற்பத்திகளின் தரப்பண்புகளை அதிகரிக்க முடிதல்.
  - பிரதேச அபிவிருத்தி ஏற்படுவதுடன் நகரமயமாக்கல் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறைவடைதல்.

- சிறிய வணிகங்களின் வெற்றிக்கு முயற்சியாளன் உதவுகின்றார் என,

  **உதாரணம்:**

  - சிறிய வணிகங்களை ஆரம்பிப்பது ஆபத்தானது. எனினும் முயற்சியாளன் ஆபத்துக்களுக்கு (இடர்களுக்கு) வெற்றிகரமாக முகங் கொடுக்கிறான். இங்கு முயற்சியாளர்களின் ஈடுபாடு சிறிய வணிகங்களின் வெற்றிக்கு அத்தியாவசிய மானதாகும்.

- சிறிய வணிகங்களை ஆரம்பிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்களில் சில பின்வருமாறு:

  **உதாரணம்:**

  - வணிகத்தின் தன்மை
  - உற்பத்தியின் தன்மை
  - தேவையான மூலதனமும் அதனைப் பெற்றுக் கொள்ளும் முறையும்
  - போட்டி
  - அமைப்பின் தோற்றம்
  - சந்தை
  - செல்வாக்குச் செலுத்தும் சட்டதிட்டங்கள்

- சிற்றளவு வணிகங்களின் வெற்றியில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளில் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - நிலையான அரசியல் பொருளாதாரப் பின்னணி காணப்படல்.
    - போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படல்.
    - நிதி மற்றும் வரிச் சலுகைகள் போன்ற ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
    - விரிவான சந்தை காணப்படல்.
    - நிறுவன ரீதியான வசதிகள் விற்பனை வசதிகள் போன்றவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- சிற்றளவு வணிகங்களின் தோல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளில் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - முயற்சியாண்மையின் திறன் குறைவாயிருத்தல்
    - முகாமைத்துவத்தின் பலவீனங்கள்
    - நிதியீட்டலில் காணப்படும் சிரமம்
    - வணிகத் திட்டங்கள் இல்லாமை
    - உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாகக் காணப்படாமை
    - நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தாமை
    - சந்தைப்படுத்தல் பிரச்சினைகள்

**தேர்ச்சிமட்டம் 6.5 :** சிறிய வணிகங்களை வெற்றியடையச் செய்வதற்குக் கிடைக் கத்தக்க ஊக்குவிப்புக்களைத் தேடியறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- சிற்றளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பட்டியல்படுத்துவார்.
- அரசாங்கம் பெற்றுக் கொடுக்கின்ற ஊக்குவிப்புக்களை நிதிசார்ந்தவை, நிதிசாராதவை என வகைப்படுத்திக் காட்டுவார்.
- சிற்றளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்களை யும் அவற்றினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற ஊக்குவிப்புக்களையும் அட்டவணைப் படுத்துவார்.
- தெரிவு செய்த வணிகமொன்றினூடாக அதற்கு அரசினால் வழங்கப்பட்டுள்ள ஊக்கு விப்புக்களை இனங்கண்டு அவற்றை நிதிசார்ந்தவை, நிதிசாராதவை எனும் வகையில் வகைப்படுத்திக் காட்டுவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- சிறு குழந்தையொன்று எழுந்து நிற்பதற்குக் கைகொடுக்கும் தாயின் படமொன்றை வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தி கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
    - குழந்தைக்குத் தனியாக நடக்க முடியாதபோது எழுந்து நிற்பதற்குக் கைகொடுத்தல் தேவையானது என,
    - அதேபோன்று சிறிய வணிகங்களுக்குத் தனியாக எழும்பி நிற்றல் முடியாது என,
    - அதற்காகப் பல்வேறுபட்ட கைகொடுத்தல்கள் அவசியமானது என,
    - வணிகர்கள் எழுந்து நின்ற பின்னர் அவர்கள் வணிகத்தை விரிவுபடுத்திக் கொள்வார்கள் என,
    - அது தேசிய அபிவிருத்திக்குக் காரணமாக அமையுமென,

**கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:**

- மாகாண வர்த்தகசபையின் வருடாந்த மாநாட்டின், தேநீர் இடைவேளையின் போது வர்த்தகர்கள் சிலரிடையே இடம்பெற்ற கருத்துப் பரிமாறல்கள் கீழே தரப்படுகின்றன. அவற்றில் உங்களது குழுவிற்கு கிடைக்கும் வணிகரின் கருத்து தொடர்பாகக் கவனஞ் செலுத்தவும்.

  **கிருபா :** எனது வணிகத்தில் ஈடுபடுத்துவதற்கு இன்னும் 25 இலட்சம் ரூபா இருந்திருந்தால் இந்த மாகாணம் முழுவதிலும் சந்தையைப் பிடிக்க எம்மால் முடிந்திருக்கும்.

**சதீஸ்** : எனது பிரச்சினை அதுவல்ல. நான் உற்பத்தி செய்த பொருட் களை விற்பனை செய்யும் முறையொன்று இல்லாமையே எனது பிரச்சினை பொருட்களை விற்பனை செய்து விட்டால் நான் உச்சத் திற்குப் போய்விடுவேன்.

**சேகர்** : நான் தற்போது பயன்படுத்தும் இயந்திர உபகரணங்களின் மூலம் சந்தையைப் பிடிக்கமுடியாது. புதிய இயந்திரங்கள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டால் வெளிநாட்டுச் சந்தைக்கு இலகுவாகச் செல்ல முடியும்.

**நிப்ராஜ்** : நான் ஈடுபடுத்திய பணத்திற்கு ஏற்ற உழைப்புப் போதாது என நினைக்கிறேன். சிலர் இந்தளவு பணத்தினைப் போடாமல் சிறப்பாக வணிகத்தை நடாத்திக் கொண்டு போகிறார்கள். நான் சரியாகப் பணத்தை ஈடுபடுத்தவில்லை என நினைக்கிறேன்.

- உங்களது குழுவிற்கு கிடைத்த வணிகரின் கூற்றை அவதானித்து அவரின் தேவையினை (பிரச்சினையினை) இனங்கண்டு எழுதவும்.
- அந்தத் தேவையினை வழங்குவதற்காகப் பிரதேசத்தில் அல்லது நாட்டில் செயற்படு கின்ற நிறுவனங்கள் அல்லது தனிநபர்களைத் தெரிவுசெய்து பட்டியல்படுத்தவும்.
- அந்நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய சேவைகள் அடங்கிய பட்டிய லொன்றைத் தயாரிக்கவும்.
- உங்களது தேடலை ஆக்கபூர்வமாக முழுவகுப்பிற்கும் முன்வைப்பதற்கு தயாராகவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- சிறிய வணிகங்களுக்கு அரசு பல்வேறு நிதிசார்ந்த ஊக்குவிப்புக்களை பெற்றுக் கொடுக்கின்றதென,

  **உதாரணம்:**

  - குறுகிய, நீண்டகாலக் கடன்கள்
  - நிதிசார்ந்த உதவிகள்
  - வரிச்சலுகை
  - மீள்நிதியிடல் வசதி

- சிறிய வணிகங்களுக்கு அரசு பல்வேறு நிதிசாராத ஊக்குவிப்புக்களையும் பெற்றுக் கொடுக்கின்றதென,

  **உதாரணம்:**

  - விசேட ஆலோசனைச் சேவைகள்
  - முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைத்திட்டம்
  - தகவல்களை வழங்கும் சேவை
  - உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.
  - சந்தைப்படுத்தல் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்
  - நிறுவன ரீதியான வசதிகளை வழங்கல்
  - தொழில்நுட்பச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்

- சிறிய வணிகங்களுக்கு பல்வேறு நிறுவனங்களின் மூலம் பல்வேறு ஊக்குவிப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன என,

**உதாரணம்:**

| நிறுவனங்கள் | பெற்றுக் கொடுக்கப்படுகின்ற ஊக்குவிப்புக்கள் |
|---|---|
| 1. கைத்தொழில் அபிவிருத்திச் சபை | 1. ஆலோசனைச் சேவை<br>2. தொழில்நுட்பச் சேவை<br>3. உட்கட்டமைப்பு வசதிகள் |
| 2. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை | 1. விற்பனை வசதிகள்<br>2. ஆலோசனைச் சேவைகள் |
| 3. இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகம் | 1. ஆலோசனைச் சேவை |
| 4. தேசிய அபிவிருத்தி வங்கி | 1. நிதிசார்ந்த வசதிகள் |
| 5. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம். | 1. தொழில்நுட்பச் சேவைகளை வழங்கல்.<br>2. ஆலோசனைச் சேவைகள் |

**தேர்ச்சிமட்டம் 6.6 :** சிற்றளவு வணிகங்களின் வெற்றிக்கு உதவும் விசேட திட்டங் களைத் தேடியறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- சிற்றளவு வணிகங்களின் வெற்றிக்காக நிகழ்காலத்தில் செயற்படுகின்ற திட்டங்களுக்கு உதாரணம் காட்டுவார்.
- சிற்றளவு வணிகங்களுக்கு உதவி வழங்குகின்ற நிகழ்கால செயற்றிட்டங்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்குவார்.
- தெரிவு செய்த சிறிய வணிகமொன்றுக்கு உதவி செய்கின்ற செயற்றிட்டம் தொடர் பாகத் தகவல்களைக் கோவைப்படுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

**சுவன** - இந்த வேலைத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்குவது சர்வதேச ஒத்துழைப் பிற்கான ஜப்பானிய வங்கியாகிய (JBIC) இருப்பதுடன், இதற்கான மீள்நிதியிடல் வசதியினை வழங்குவது தேசிய அபிவிருத்தி வங்கியாகும். இதன் மூலம் சிறு கைத்தொழில்களையும் முயற்சியாளர்களை மேம்படுத்து வதற்கான கடன்களை வழங்கும். இதனை SMILE (Small & Micro Industries Leader & Entrepreners Promotion Project) எனவும் கூறுவர். தற்போது இதன் III வது கட்டம் செயற்படுத்தப்படுகிறது.

**சுகன்யா** - சிற்றளவு வணிகர்களுக்குக் கடன் வழங்குவதற்காக இக்கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் DFCC வங்கியும் ஏனைய வணிக வங்கிகளும் தொடர்புபட்டுள்ளன. நிதி உதவியினைப் பெற்றுக் கொடுப்பது ஆசிய அபிவிருத்தி வங்கியாகும்.

**திறன் அபிவிருத்திச் செயற்றிட்டம்**

மூன்றாம் நிலைக் கல்விப்பயிற்சிகள் அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் திறன் பாடத்திட்டத்தினைத் திறமையாகப் பூர்த்தி செய்கின்றவர்களுக்கு கடன் வழங்கு வதற்காக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதற்கான நிதியுதவி ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் வழங்கப்படுகின்றது.

**கிராமிய எழுச்சிக்கடன்**

சுய தொழில்களுக்குக் கடன் வழங்குவதற்காக ஹற்றன் நஷனல் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டமாகும்.

**சிக்கன கடன் வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்திட்டம் (சனச)**

விவசாய கால்நடை வளர்ப்பு, சிறுகைத்தொழில், வியாபாரம் மற்றும் வர்த்தகக் கருமங்கள் என்பவற்றிற்காகக் கடன் வழங்கல் இதன் மூலம் நடைபெறுகின்றது. தேசிய அபிவிருத்திக்கான பொறுப்பு நிதியமும், அங்கத்தவர் வைப்புக்களும் இதற்காகப் பயன்படுத்தப்படுவதுடன் இதற்காக சனச, பாரிய அபிவிருத்திச்சங்கம் போன்றன நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

**கூட்டுறவு கிராமிய வங்கிக்கடன்**

விவசாய, மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, வியாபாரம் போன்ற வணிக நடவடிக்கை களுக்குக் கடன் வழங்கல் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக தேசிய அபிவிருத்தி பொறுப்பு நிதியமும் அங்கத்தவர்களின் வைப்புக்களும் பயன்படுத்தப் படும். இதற்காக பலநோக்குக் கூட்டுறவு சங்கமும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக் களமும் நிர்வாக உதவியினைப் பெற்றுக் கொடுக்கின்றன.

**சமுர்த்தி அபிவிருத்தி கடன் திட்டம்**

சமுர்த்தி வங்கிச் சங்கத்தினூடாக சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கு கடன் வழங்குதல், வேறு சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் என்பவற்றுக்காக இந்தக் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்குத் தேவையான நிதி அரசின் பிரதானிகளிடமிருந்தும் அங்கத்தவர்களின் வைப்பின் மூலம் சேர்க்கப்பட்ட சேமிப்புப்பணம் மூலமும் பெற்றுக் கொள்ளப்படும். இதன் நிர்வாகம் இலங்கை சமுர்த்தி அதிகார சபை மூலம் மேற்கொள்கின்றது.

**விவசாய வங்கி முன்னோடித் திட்டம்**

விவசாய அபிவிருத்தி கமத்தொழில் சேவை அமைச்சின் கீழுள்ள கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் திட்டமொன்றாகும். பயிர்ச்செய்கைக்காக விவசாயி களுக்கு குறுங்கால, நீண்டகாலக் கடன்கள் பெற்றுக் கொடுக்கப்படும். விவசாய அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நம்பிக்கை நிதியமும், அங்கத் தவர்களின் வைப்பும் இதற்காக பயன்படுத்தப்படும்.

- சிறிய வணிகங்களின் வெற்றிக்காக கீழ்வரும் வேறு கடன் திட்டங்களும் தற்காலத்தில் செயற்படுத்தப்படுகின்றன என,

  **உதாரணம்:**

  - புதிய சபிரி கிராமிய கடன் திட்டமுறை (NCRCS) (New Comprehensive Rural Credit Scheme)
  - விவசாய எழுச்சி கடன்திட்டம்
  - இரண்டாவது பல்வகை பயிர் அபிவிருத்தி சுழற்சி கடன் திட்டம் (SPCDP-RF)
  - தேயிலை அபிவிருத்தி சுழற்சி நிதிக்கடன் திட்டம் (TDP-RF)
  - விவசாய கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம் (ALDL)
  - வறுமை ஒழிப்புக்கான விரைவு சிறு நிதி செயற்றிட்டம் (PAMP)
  - சிறு விவசாயிகள், நிலமற்றவர்கள் கடன் திட்டம் (SFLCP)

**தேர்ச்சி 7.0** : வணிகங்களது வாழ்தன்மைக்கும், வளர்ச்சிக்கும் நிதி மற்றும் நிதி நிறுவனங்களின் பங்களிப்பினை மதிப்பார்.

**தேர்ச்சிமட்டம் 7.1** : கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்குப் பணத்தின் தேவையினை உறுதிப்படுத்துவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை** : 06

**கற்றல் பேறுகள்:**

- பணத்தினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பணத்தின் வளர்ச்சிப் போக்கினைக் கற்பதன் மூலம் பல்வேறு காலங்களில் பணமாகப் பயன்படுத்தியவற்றை அறிந்து கொள்வார்.
- பரிமாற்றத்திற்காகப் பணத்தின் தேவையினைச் சுட்டிக் காட்டுவார்.
- பணத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான தொழிற்பாடுகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை உதாரணங்களுடன் விபரிப்பார்.
- பணத்தின் பொதுவான பண்புகளைச் சுட்டிக் காட்டுவார்.
- பரிமாற்றத்தின்போது பயன்படுத்தப்படும் பல்வேறு பண வகைகளைப் பெயரிட்டு விபரிப்பார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- சுயமாக முன்வரும் மாணவர்களைக் கொண்டு பின்வரும் பாத்திரமேற்று நடித்தலை வகுப்பில் முன்வைக்கச் செய்யவும்.

**பாத்திரமேற்று நடித்தல் - 1 - இரண்டு பாத்திரங்கள்**

- பிடவை உற்பத்தியாளன் ஒருவரும், பழ உற்பத்தியாளன் ஒருவரும்
    - பாத்திரங்களது நடத்தை
        - பிடவை உற்பத்தியாளர் பழ உற்பத்தியாளரிடம் வருதல்.
        - பிடவை கொடுத்து பழங்களைக் கேட்டல்.
        - பரிமாற்றம் நடைபெறல்.
        - இருவரும் திருப்தியுடன் வெளியே செல்லல்.

**பாத்திரமேற்று நடித்தல் - 2 - இரண்டு பாத்திரங்கள்**

- பிடவை உற்பத்தியாளரொருவரும் தச்சுத் தொழிலாளியொருவரும்
    - பாத்திரங்களது நடத்தை
        - பிடவை உற்பத்தியாளர் பிடவையை எடுத்துக் கொண்டு தச்சுச் தொழிலாளரிடம் செல்கின்றார்.

        - பிடவையைக் கொடுத்து மேசையொன்றைக் கேட்கின்றார்.
        - பிடவை தனக்குத் தேவையற்றது எனவும் மேசையைப் பெறுவதற்கு அரிசி தேவை எனவும் கூறுகின்றார்.
        - கொடுக்கல் வாங்கல் இடம் பெறவில்லை. இருவரும் திருப்தியின்றி வெளியேறுகின்றனர்.

**பாத்திரமேற்று நடித்தல் - 3 - இரண்டு பாத்திரங்கள்**

- சிறப்புச் சந்தை உரிமையாளரும் வாடிக்கையாளரும்
    - பாத்திரங்களது நடத்தை
        - வாடிக்கையாளர் பொருட்களைத் தெரிவு செய்தபின் பணத்தை செலுத்த நாணயத் தாளொன்றை முன்வைக்கிறார்.
        - நாணயத்தாளைக் காசுப்பெட்டியில் இட்டு மீதிப்பணத்தினை செலுத்து கிறார்.
        - வாடிக்கையாளர் திருப்தியுடன் வெளியேறுகின்றார்.

**பாத்திரமேற்று நடித்தல் - 4 - இரண்டு பாத்திரங்கள்**

- சிறப்புச் சந்தை உரிமையாளரொருவரும் வாடிக்கையாளரொருவரும்
    - பாத்திரங்களது நடத்தை
        - வாடிக்கையாளர் பொருட்களைத் தெரிவு செய்து பணத்தைச் செலுத்து வதற்கு வியாபார நிலைய உரிமையாளருக்கு இலத்திரனியல் பிளாத்திக் அட்டையொன்றை முன்வைக்கிறார்.
        - அட்டையை இயந்திரமொன்றில் உட்படுத்தும் முறையில் பாவனை செய்து சிட்டையொன்றை வழங்குதல். அதில் வாடிக்கையாளர் ஒப்பமிடுதல்.
        - வாடிக்கையாளர் திருப்தியுடன் (உற்சாகத்துடன்) வெளியேறுதல்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலொன்றில் ஈடுபடுங்கள்.
    - முதலாவது பாத்திரமேற்று நடித்தலில் பொருளுக்குப் பொருள் பரிமாற்றம் இடம்பெற்றது என,
    - இரண்டாவது பாத்திரமேற்று நடித்தலில் பொருள் பரிமாற்றம் பூரணமாக இடம்பெறாமைக்கான காரணங்கள் உள்ளன என,
    - மூன்றாவது பாத்திரமேற்று நடித்தலில் புழக்கத்திலுள்ள பணம் பயன்படுத்தப் பட்டதனால் கொடுக்கல் வாங்கல் முழுமைபெற்றது என,
    - நான்காவது பாத்திரமேற்று நடித்தலில் கொடுக்கல் வாங்கல் முற்றாக நிறை வடைந்தது எனவும், கொடுப்பனவுக் கருவியாக கடனட்டை / வரவு அட்டை பயன்படுத்தப்பட்டது என,
    - நிகழ்காலத்தில் கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதற்காகப் பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன என,

**கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:**

- பின்வருவன கொடுப்பனவுக்குரிய சில கருவிகளாகும். அவற்றில் உங்களது குழுவிற்குக் கிடைக்கும் கருவியின் மீது கவனத்தைச் செலுத்தவும்.
    - ரூபா 100 பெறுமதியான தாள் நாணயம்
    - காசோலையொன்று
    - கடனட்டையொன்று
- உங்களுக்குக் கிடைத்த கருவியினைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தவும்.
- உங்களுக்குக் கிடைத்த கொடுப்பனவை நிறைவு செய்வதற்குரிய கருவியைப் பயன்படுத்தும்பொழுது ஏற்படக்கூடிய அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் காட்டவும்.
- உங்களுக்குக் கிடைத்த கருவியின் மூலம் நிறைவேற்றப்படும் கருமங்களைப் பட்டியல் படுத்துங்கள்.
- உங்களது தேடியறிதல்களை ஆக்கபூர்வமானதாக முழு வகுப்பிலும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொருள்கள் சேவைகள் பரிமாற்றத்தின்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் எந்தவொரு ஊடகமும் பணமாகக் கருதப்படும் என,
- பண்டமாற்று முறை தொடக்கம் இன்று வரை பணப் பயன்பாடு வரை ஏற்பட்ட முறையான வளர்ச்சிப் போக்கினைப் பின்வருமாறு பட்டியல்படுத்தப்பட முடியும் என,
    - பொருள் பாவனை :- கற்துண்டுகள், சிப்பிகள், மிருகங்களது எலும்புகள், புகையிலை போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.
    - உலோக வகைகளின் பாவனை :- தங்கம், வெள்ளி போன்ற உலோக வகைகளைப் பயன்படுத்தல்.
    - உலோக நாணயக் குற்றிகளின் பாவனை :- பல்வேறு அளவுகளைக் கொண்ட உலோகத் துண்டுகளது முகப்பெறுமதி, பூரணத்தன்மையும் பெறுமதிகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. பிற்காலப் பகுதியில் அச்சிடப்பட்ட நாணயங் களிற்கு இவையே அடிப்படைகளாக அமைந்தன.
    - தாள், குற்றி நாணயங்களது பாவனை :- பெறுமதியான உலோக நாணயங்களைப் பயன் படுத்துவதில் ஏற்பட்ட சிரமத்தின் காரணமாக தாள் நாணயங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அரசின் அதிகாரம் பெற்ற ஆளுநரினால் வெளியிடப்படுகின்ற தாள், குற்றி நாணயங்கள் இவற்றிற்கு உரித்தானவையாகும்.

**உதாரணம்:**

| | |
|---|---|
| இலங்கை | - ரூபாய், சதம் |
| ஐக்கியராச்சியம் | - ஸ்ரேலிங் பவுண் |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் | - டொலர் |
| ஐரோப்பிய ஒன்றியத்தின் சில நாடுகள் | - யூரோ |

- வங்கிப் பணப்பாவனை :- வங்கி நடைமுறைக் கணக்கின் மூலம் வழங்கப்படும் காசோலைகள்.
- இலத்திரனியல் பணப் பாவனை :- தகவல், டிஜிடல் என்பவற்றின் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட அட்டைகள் பல காணப்படுகின்றன.
  **உதாரணம்:** கடனட்டை, வரவட்டை, முற் செலுத்திய அட்டை

- சிறந்த பணத்தில் காணப்படும் சில பண்புகளைப் பின்வருமாறு குறிப்பிட முடியும் என,
  - பொதுவாக ஏற்றுக்கொள்ளும் தன்மை காணப்படல்.
  - மிக நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தக்கூடிய தன்மை இருத்தல். (நீண்ட காலப் பாவனை)
  - அருமைத்தன்மை கொண்டதாக இருத்தல்.
  - இலகுவாகக் கொண்டு செல்லக்கூடிய தன்மை காணப்படல்.
  - இலகுவாக இனங் காணக்கூடியதாக இருத்தல்.
  - சிறுசிறு அலகுகளாகப் பிரிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருத்தல்.
- பணத்தினைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும் என,
  - **சட்டப்பணம் (Legal tender)**

    நிதியாளுனரின் கட்டளைக்கேற்ப வெளியிடப்படும் தாள், குற்றி நாணயங்களைக் குறிப்பிடலாம். சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளும் தன்மை உள்ள பணமாகும்.
  - **வங்கிப்பணம் (Bank Money)**

    வணிக வங்கிகள் மூலம் பேணப்படும் கேள்வி வைப்புக்கள் அல்லது நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் வங்கிப்பணம் எனப்படும். காசோலைகள் மூலமே இப்பணத்தின் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. சட்டப் பணத்தினைப் போன்று 100% த் திரவத்தன்மையற்றதாக இருப்பினும் அண்மிய பணத்தினை விடத் திரவத்தன்மை கொண்டது.

- **அண்மிய பணம் (Near Money)**

  சட்டப் பணத்தைப் போன்று 100% த் திரவத்தன்மையற்றதாயினும் பெறுமானங் களுக்கு இணைவாகக் கருமங்களை நிறைவேற்றக்கூடிய, இலகுவாகப் பணமாக மாற்றக்கூடிய சொத்துக்களாகும்.

  **உதாரணம்:**

  வணிக வங்கிகளிலுள்ள பொது மக்களுக்குரித்தான நிலையான, சேமிப்பு வைப்புக்கள், வணிகத்தாள்கள், திறைசேரி உண்டியல்கள், முறிகள்.

- **இலத்திரனியல் பணம் (E - Money)**

  தகவல், டிஜிடல் தொழில்நுட்பத்தின் பெறுபேறாக உருவாகி உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கொடுக்கல் வாங்கல்களின் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் பணமாகும்.

  **உதாரணம்:**

  வரவு அட்டை (Debit Card) செலுத்தப்படும் பணத்தினளவு, இலத்திரனியல் முறையில் கணக்குகளில் வரவு வைக்கப்படும் வங்கிக் கணக்குகளில் பணம் உள்ளவர்களுக்கு மாத்திரம் பெற்றுக் கொள்ள முடியுமான அட்டையாகும்.

- **கடனட்டை (Credit Card)**
  - வங்கிக் கணக்கின்றி கடனாக பொருட்கள், சேவைகளை பெற்றுக் கொள்ளப் பயன்படுத்தப்படும் அட்டையாக இருப்பது இதன் விசேட அம்சமாகும்.
- **முற்செலுத்திய அட்டை (Prepaid Card)**
  - முன்னதாகப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய அட்டையாகும்.
- இவ்வட்டைகள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதனை இலகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் வசதிகளில் சில பின்வருமாறு:
  - தன்னியக்க டெலர் இயந்திரம் (ATM இயந்திரம்)
  - இலத்திரனியல் நிதிமாற்று விற்பனை நிலையம் என்றே மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. (EFTPOS உபகரணம்)
  - தொலைபேசி வங்கி வசதிகள் (Tele Banking)
  - இணைய வங்கிக் கருமங்கள் (On line Banking))

**தேர்ச்சிமட்டம் 7.2 :** இலங்கையின் நிதித்துறை நிறுவனங்கள் வணிகங்களது செயற்பாட்டிற்கும் அதன் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்யும் முறையை மதிப்பார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் நிதி நிறுவனங்களை வகைப்படுத்துவார்.
- வழங்கப்பட்ட நிதி நிறுவனத் தொகுதியிலிருந்து ஒவ்வொரு வகைகளின் கீழ் வேறுபடுத்திக் காட்டுவார்.
- ஒவ்வொரு வகைக்குமுரிய நிதி நிறுவனங்களானவை வணிகங்களது செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்யும் முறையை விமர்சிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கையின் நிதி நிறுவனங்களைப் பின்வரும் வகையில் வகைப்படுத்த முடியும் என,
    - இலங்கை மத்திய வங்கி
    - வங்கித்துறை
        - உரிமம் பெற்ற வணிக வங்கி
        - உரிமம் பெற்ற விசேட வங்கி
    - வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்
        - பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்
        - கூட்டுறவுக் கிராமிய வங்கி
        - சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் (சனச)
    - ஏனைய விசேட நிதி நிறுவனங்கள்
        - விசேட குத்தகைக் கம்பனிகள்
        - வணிக / வியாபார வங்கிகள்
        - முதன்நிலை வணிகர்கள்
        - பங்கு முகவர் கம்பனிகள்
        - அலகுப் பொறுப்பாட்சி
        - முயற்சி (Venture Capital Company) மூலதனக் கம்பனிகள்
        - கடன் தரப்படுத்தல் நிறுவனம்

- ஒப்பந்தச் சேமிப்பு நிறுவனங்கள்
    - காப்புறுதிக் கம்பனிகள்
    - ஊழியர் நம்பிக்கை நிதியம்
    - ஊழியர் சேமலாப நிதியம்
    - ஏனைய நம்பிக்கை நிதியங்கள்
    - அரச சேவையாளர் சேமலாப நிதியம்

(2008 ஆம் ஆண்டு மத்திய வங்கி வருடாந்த அறிக்கைக்கேற்ப)

- உரிமம் பெற்ற வணிக வங்கி என்பது நடைமுறைக்கணக்குகள் உள்ளடங்கலாக ஏனைய வைப்புக் கணக்குகளைப் பேணுகின்ற, பண ஆக்கத்தை உருவாக்கும் ஆற்றல் கொண்ட, வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் நிதி நிறுவன வகையைச் சார்ந்ததாகும் என,

- 2008 ஆம் ஆண்டாகும்பொழுது இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையில் பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற வணிக வங்கிகள் பெருந்தொகையில் காணப்பட்டது. இதில் சில அரச துறைக்கும், பல தனியார் துறைகளுக்கும் உரித்துடையதாகுமென,

- உரிமம் பெற்ற வணிக வங்கிகள் வைப்புக்களை ஏற்பதுடன் கடன் வழங்கல் உள்ளடங்கலாகப் பல சேவைகளை மேற்கொள்கின்றன எனவும், அச்சேவைகள் காரணமாக வணிக நடவடிக்கைகள் மிக இலகுவாக்கப்படுகின்றது என மாணவர்களுக் குத் தெளிவுபடுத்திக் கொடுக்கவும்.

  (வணிக வங்கிகளது சேவைகள் தொடர்பாகத் தேர்ச்சி மட்டங்கள் 7.3, 7.4 என்பவற்றில் விளக்கப்பட்டுள்ளது.)

- உரிமம் பெற்ற விசேட வங்கியொன்றைப் பின்வருமாறு அறிமுகப்படுத்த முடியும் என,

  வங்கிச் சட்டத்தினடிப்படையில் விசேட வங்கிகள் வணிக நடவடிக்கைகளை நடத்திச் செல்வதற்கு மத்திய வங்கியிலிருந்து அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுள்ள விசேட நிறுவன வகையொன்றாகும். இவ்வங்கிகள் நடைமுறைக் கணக்கைப் பேணாதிருப்பதுடன் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அனுமதி பெற்றிருப்பதும் இவற்றின் விசேட பண்பாகும். எனினும் சேமிப்பு வைப்பு கால வைப்பு எனும் கணக்கு வைப்புக்களின் பெயரில் மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்பதற்கு அனுமதி உண்டு.

- வைப்புக்களை ஏற்றல், கடன் வழங்கல் உட்படப் பொதுவாக இவ்வங்கிகள் மூலம் நிறைவேற்றப்படும் சேவைகள் வணிக நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் பெறும் முறையினைத் தெளிவாக எடுத்துக் கூறுங்கள்.

- உரிமம் பெற்ற விசேட வங்கிகள் தொடர்பாக உதாரணங்களை முன்வைக்கச் செய்யவும்.

- பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பாகப் பின்வருமாறு விபரிக்க முடியும் என,
    - நிலையான வைப்புக்களை ஏற்றல் அவ்வைப்புக்களின் மீது கடன் வழங்கல், முதலீட்டு வசதிகளை வழங்கல் போன்றவற்றை மேற்கொள்வதற்காக நிதிக் கம்பனிகளின் சட்டத்தினடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் அனுமதிப் பத்திரமொன்றை பெற்ற பொதுக் கம்பனி வகையைச் சார்ந்தவை நிதிக் கம்பனிகளாகும்.
- நிதிக் கம்பனிகளது கருமங்கள் சிலவற்றைப் பின்வருமாறு காட்ட முடியுமென,
    - வாடகைக் கொள்வனவு வசதிகளை வழங்கல்.
    - ஆதனம், சொத்து வியாபாரங்களில் ஈடுபடல்.
    - குத்தகை, நிதி வசதிகளை வழங்கல்.
    - குறுங்காலக் கடன்களை வழங்கல்.
    - வணிக வங்கிகளிலும் அரச பிணைப்பத்திரங்களிலும் முதலீடு செய்தல்.
    - நிலையான வைப்புக்களை ஏற்றல்.
- இக்கருமங்கள் வணிகங்களது தொழிற்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்யும் முறையினை விபரியுங்கள்.
- பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் சிலவற்றை உதாரணங்களாகக் காட்டுங்கள்.
- கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலம் நிறைவேற்றப்படும் கருமங்கள் பலவற்றைப் பின்வருமாறு காட்ட முடியும் என,
    - அங்கத்தவர்களினதும் அங்கத்துவரல்லாதவர்களினதும் வைப்புக்களை ஏற்றல்.
    - அடகு நடவடிக்கைகளில் ஈடுபடல்.
    - பல்வேறு வைப்புக் கணக்குகளைப் பேணுதல்

      (சேமிப்பு வைப்புக்கணக்குகள், நிலையான வைப்புக்கணக்குகள்)
    - அங்கத்தவர்களுக்கு விவசாய, உற்பத்தி, கைத்தொழில், விற்பனை போன்ற நடவடிக்கைகளுக்காகக் கடன் வசதியளித்தல்.
    - கூட்டுறவு வாழ்வாதார முறையினைக் கிராமிய மக்களிடையே பிரபல்யமடையச் செய்தல்.
- சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கமானது (சனச) வணிக நடவடிக்கைகளில் உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் என,
- இவை சேமிப்பை மேற்கொள்ள ஊக்கப்படுத்துவதுடன் அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்கும் நோக்கத்தையும் கொண்டதாகும். அங்கத்தவர்களின் சேமிப்புக்களையும் அவர்களுக்குப் பங்குகளாக வழங்கி, பணமாக பெற்றுக் கொண்டு, அந்த அங்கத்தவர் களுக்கு மாத்திரம் கடன் வழங்கும். கூட்டுறவுச் சட்டத்தினடிப்படையில் கூட்டுறவு ஆணையாளரிடம் பதிவு செய்யப்பட்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

- குத்தகைக் கம்பனிகளை பின்வருமாறு அறிமுகப்படுத்த முடியும் என வணிகர்களுக்குத் தேவையான இயந்திர உபகரணங்ளையும் மற்றும் சொத்துக்களையும் பயன்படுத்து வதற்காக வணிகர்களின் வேண்டுகோளுக்கேற்ப குத்தகைக்குப் பெற்றுக் கொள்வதற் குத் தேவையான நிதி வசதிகளை வழங்குவதைப் பிரதான நோக்கமாகக் கொண்ட நிதி நிறுவனமொன்றாக இருப்பது இதன் விசேட பண்பாகும். குறித்த சொத்துக் களைக் குத்தகைக்கு வழங்குவதனால் கிடைக்கப் பெறும் வாடகை வருமானம் இந்நிறுவனங்களது பிரதான வருமானமாகும்.
- குத்தகைக் கம்பனிகள் மூலம் வணிகரொருவருக்குப் பின்வரும் அனுகூலங்கள் கிடைக்கப் பெறுகின்றன,
    - கூடிய பெறுமதி கொண்ட சொத்துக்களுக்கு மொத்தப் பணத்தையும் செலுத்தாது அதனைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
    - குத்தகைக்காகச் செலுத்தப்படும் வாடகைக்கு வருமான வரியிலிருந்து விலக் களித்தல்.
    - இயந்திரங்கள் காலங் கடந்தவையாக மாறுவதால் ஏற்படும் நட்டங்களையும் மூலதன இடர்களையும் நீக்கிக் கொள்ள உதவுதல்.
    - வணிகத்தின் ஐந்தொகையில் பொறுப்பொன்றாகக் காட்டாதிருத்தல்.
    - பாரிய முதலீட்டினை முதலீடு செய்யாது அதிக வருமானத்தினை உழைக்க முடிதல்.
- குத்தகைக் கம்பனிகளுக்கான உதாரணங்களை முன்வைக்கவும்.
- பங்குத் தரகர் கம்பனிகளைப் பின்வருமாறு அறிமுகப்படுத்த முடியும் என,
    - கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளது பங்குகளை அல்லது தொகுதிக் கடன்களை விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடைநடுவர்களாகக் கருமங்களை மேற்கொள்ளும் நிறுவ னங்கள் பங்குத்தரகர் கம்பனிகள் எனக் கருதப்படும். பங்குச்சந்தை முதலீட் டாளர்களுக்காக இத்தரகு முகவர் நிறுவனங்கள் அதிகமான சேவைகளை நிறைவேற்றுகின்றன.
- பங்குத் தரகர் கம்பனியினால் நிறைவேற்றப்படும் வணிகச் சேவைகள் பலவற்றினைப் பின்வருமாறு காட்ட முடியுமென,
    - முதலீட்டாளர்களின் கொள்வனவுக் கட்டளைகள், விற்பனைக் கட்டளைகள் என்பவற்றைப் பொறுப்பெடுத்தல்.
    - முதலீட்டாளர்கள் சார்பில் மத்திய வைப்பக முறைக் கணக்கொன்றைத் திறத்தல்.
    - பங்குகளிலும் தொகுதிக் கடன்களிலும் முதலீடு செய்தல் தொடர்பான ஆலோ சனைகளை முதலீட்டாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
    - பங்குச் சந்தையைப் பகுப்பாய்வு செய்தல், சந்தையாய்வு அறிக்கை தயாரித்தல் என்பவற்றின் மூலம் முதலீட்டாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை உச்சப்படுத்துவதனை உறுதிப்படுத்தல்.
    - கம்பனிகளைப் பட்டியல்படுத்துவதற்கு அனுசரணை வழங்கல்.
    - வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளது மூலதனத் திரட்டலுக்கு உதவுதல்.

- பங்குத் தரகுக் கம்பனிகளுக்கான உதாரணங்களை முன்வைக்கவும். (பங்குத்தரகர் கம்பனி தொடர்பாக தேர்ச்சிமட்டம்
- வியாபார வங்கிகளைப் பின்வருமாறு அறிமுகப்படுத்த முடியும் என,
    - வணிகர்களுக்கான ஆலோசனைச் சேவைகள், முகாமைச் சேவைகள் போன்ற பல விசேட சேவைகளை வழங்குவதாக இருப்பினும் வைப்புக்களை ஏற்காத நிறுவனம் வியாபார வங்கிகள் என அழைக்கப்படும்.
- வியாபார வங்கிகளினால் வணிகர்களுக்குப் பின்வரும் பல சேவைகளை வழங்கு கின்றன என,
    - செயற்றிட்ட அறிக்கைகளைத் தயாரித்துக் கொடுத்தல்.
    - நிதி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் ஆலோசனைச் சேவைகளை வழங்கல்.
    - ஒப்புறுதிச் சேவை அளித்தல்.
    - குத்தகைச் சேவைகளை வழங்கல்.
- வியாபார வங்கிகளுக்கான உதாரணங்களை முன்வைக்கச் செய்யவும்.
- அலகுப் பொறுப்பாட்சியினைப் பின்வருமாறு அறிமுகப்படுத்த முடியும் என,
    - முதலீட்டாளர்களுக்கு அலகுகளை விற்பனை செய்வதன் மூலம் சேகரிக்கப் படும் பணத்தினை உள்ளடக்கிய முதலீட்டு நிதியமே அலகுப் பொறுப்பு என்று அழைக்கப்படும். இங்கு சேகரிக்கப்படும் பணத்தை தொழில்சார் நிதிய முகாமையாளர்கள் மூலம் முதலீட்டுத் தொகுதியொன்றினுள் ஈடுபடுத்தப்படும். இதன் அனுகூலங்கள் அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களின் அலகுகளைக் கொள்வனவு செய்த முதலீட்டாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.
- அலகுப் பொறுப்பாட்சி நிறுவன அமைப்பில் மூன்று பிரிவினர்கள் உள்ளடக்கப் பட்டுள்ளனர் என,
    - அலகு நம்பிக்கைப் பொறுப்பாளர்
    - நிதிய முகாமைத்துவக் கம்பனிகள்
    - அலகுரிமையாளர்கள் அல்லது முதலீட்டாளர்கள்
- அலகுப் பொறுப்பாட்சி தொடர்பாக உதாரணங்களை முன்வைக்கச் செய்யவும்.
- அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களில் அலகுகளின் முதலீடுகளில் பெறப்படும் அனுகூலங்கள் பலவற்றைப் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன என,
    - பல்வேறு வகையான முதலீடுகளில் முதலீடு செய்வதன் காரணமாக நட்ட அச்சம் குறைவடைதல்.
    - முதலீட்டு முகாமைக்குத் தொழில்சார் முகாமையாளர்களது சேவைகளைப் பெற முடிதல்.
- முயற்சி மூலதனக் கம்பனிகள் (Venture Capital Companies) வணிகச் சேவைகளை வழங்குகின்றன என,

- பங்குச் சந்தையில் பதிவு செய்யப்படாத கம்பனிகளுக்கான மூலதனத் தேவையை நிறைவு செய்யும் நோக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கம்பனி வகைகளாகும். புதிய வணிகங்களை ஆரம்பித்தல், நடைமுறையில் காணப்படும் வணிகங்களை விரிவாக்கல், வணிகங்களை உடைமையாக்கலும் கொள்வனவு செய்தலும் போன்ற நடவடிக்கைகளின்போது நிதியினை வழங்கும். இதற்கு மேலாக பங்கிற்கான உத்தரவாதம், கடன் ஒருமுகப்படுத்தல் போன்ற வற்றிலும் ஈடுபடும்.

- முயற்சி மூலதனக் கம்பனிகளது உதாரணங்கள் பலவற்றை காட்டவும்.

- கடன் தரப்படுத்தல் நிறுவனங்களால் வணிகச் சேவைகள் வழங்கப்படுகின்றன என,

    - நிதிச் சந்தையிலே கடன் கருவிகளில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு அவற்றின் தரரீதியான பண்புகளைச் சரியாக இனம்கண்டு முதலீடுகளைத் தெரிவு செய்வதற்கு ஒழுங்கான வழிகாட்டல்களை இவற்றின் மூலம் மேற் கொள்வதற்கு வழியமைத்துள்ளது. கடனொன்று அல்லது நிதிக் கருவிகள் அல்லது வழங்குபவரின் நிதிப்பலம் தொடர்பாக மதிப்பீடொன்றை முன்வைக்கப் படும் செயற்பாடொன்றாகும். கடன் தொகையொன்றைக் கொடுக்கும் பொழுது கடனை மீளப்பெறும் நிகழ்தகவு தொடர்பாக கடன்கொடுத்தோருக்கு அல்லது முதலீட்டாளருக்கு இதன் மூலம் அறிந்து கொள்வதற்கு இயலுமாக இருக்கும். கடன் தரப்படுத்தலுக்குப் பொது நியதிகள் பயன்படுத்தப்படுவதனால் அதனைச் சர்வதேச ரீதியாக ஒப்பிடக்கூடியதாக இருக்கும்.

- ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு வைப்பு நிறுவனங்களும் கூட வணிகச் சேவை களை வழங்குகின்றன என,

    - **காப்புறுதிக் கம்பனிகள்**

      பல்வேறு காப்புறுதி ஒப்பந்தங்களைப் பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்ளும். நிதிச் சந்தைக் கடன் களிலும் முதலீடு செய்யப்படுவதன் மூலம் நிதி இடைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. முயற்சியாளர்களுக்கு ஏற்படும் பல்வேறு நட்ட அச்சங்களுக்காக காப்புறுதி ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன.

    - **சேமலாப நிதியமும் ஓய்வூதிய நிதியும்**

      தொழிலாளர் சட்டத்தினடிப்படையில் உருவாக்கப்பட்டவையாகும். பெண், ஆண் எனும் இரு வகைப் பிரிவினர்களிடமிருந்தும் பங்களிப்பிற்காகப் பணம் பெற்றுக் கொள்ளப்படும். தொழிலாளர்கள் இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் பங்களிப்புச் செய்யப்பட்ட பணத்துடன் அனுகூலங்களையும் (வட்டி வருமானம்) மீள்திருப்பிப் பெற்றுக் கொள்ளப்படும்.

      நம்பிக்கை நிதியம் ஊழியர்களிடம் இருந்து பங்களிப்பை பெறுவதில்லை.

**தேர்ச்சிமட்டம் 7.3 :** வணிக வங்கிகளினால் பேணப்படும் பல்வேறு வைப்புக்கள், கடன் வழங்கல் என்பவற்றின் மூலம் வணிகங்களது செயற்பாட்டிலும் அதன் வளர்ச்சியிலும் ஏற்படுத்தும் தாக்கத்தைக் காட்டிக் கொடுப்பார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- வணிக வங்கிகள் மூலம் பேணப்படும் பல்வேறு வைப்பு வகைகளை அறிமுகப் படுத்துவார்.
- வணிக வங்கிகள் மூலம் பேணப்படும் பல்வேறு வைப்புக்களிடையேயான ஒத்த தன்மை கொண்ட, ஒத்த தன்மையற்ற பண்புகளை ஒப்பிட்டுக் காட்டுவார்.
- வணிக வங்கிகள் மூலம் பேணப்படும் பல்வேறு வகை வைப்புக்களினால் வணிகரொருவருக்கு முக்கியத்துவம் பெறும் முறையைக் காட்டுவார்.
- வணிக வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன்களை வகைப்படுத்துவார்.
- வணிக வங்கிகள் மூலம் வழங்கப்படும் பல்வேறு வகையான கடன்களின் பண்புகளை அட்டவணைப்படுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வணிக வங்கிகள் பின்வரும் வைப்பு வகைகளைப் பேணுகின்றன.
  - **நடைமுறைக் கணக்குகள் (கேள்வி வைப்புக்கள்)**

    காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதை இலகுபடுத்துவதும் மீதியின் மீது வட்டிக்கு உரித்தற்ற கணக்கு வகையொன்றாகும். வங்கி மேலதிகப் பற்று வசதியைப் பெற்றுக் கொடுப்பதுடன் இலத்திரனியல் ரெலர் அட்டையைப் பயன்படுத்தி ரெலர் இயந்திரத்தின் துணைகொண்டும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும்.

  - **சேமிப்பு வைப்புக்கள்**

    சேமிக்கும் நோக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ள இக்கணக்கு மீதி வட்டிக்கு உரித்துடையதாகும். வைப்பாளரின் விருப்பத்திற்கேற்றவாறு பணத்தினை வைப்பிலிடவோ அல்லது மீள்எடுக்கவோ முடியும். ரெலர் அட்டைகள் மூலமும் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியும்.

  - **நிலையான வைப்புக்கள்**

    குறித்தவொரு காலப்பகுதிக்குக் குறிப்பிட்ட தொகைகளில் நிலையான வட்டியின் அடிப்படையில் வைக்கப்படுகின்ற வைப்பாகும். இவ்வைப்புக்கள் கூடிய வட்டிக்கு உரித்துடையவையாக இருக்கும்.

- நடைமுறைக் கணக்கொன்றைப் பேணுவதனால் வணிகர்கள் பின்வரும் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என,
    - காசோலை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடிதல்.
    - நேரடி வைப்புக்களை மேற்கொள்ளக்கூடிய வசதிகள்.
    - நிலையியல் கட்டளைகள் மூலம் கொடுப்பனவுகளைச் செய்ய முடிதல்.
    - வங்கி மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
    - கணக்கறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி இருத்தல்.
- சேமிப்பு வைப்புக் கணக்குகள், நிலையான வைப்புக் கணக்குகள் என்பன வணிகர்களுக்கு முக்கியத்துவமுடையன என,

  **உதாரணம்:**

    - நடைமுறைக்கணக்கில் மேலதிகப் பணம் காணப்படும் சந்தர்ப்பங்களில் சேமிப்புக் கணக்குகளுக்கு மாற்றி வட்டி வருமானமொன்றைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
    - நீண்ட காலத்திற்கு மேலதிகமாகக் காணப்படும் பணத்தை நிலையான வைப்புக் கணக்கொன்றிற்கு மாற்றம் செய்வதன் மூலம் அதிக வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
- வணிக வங்கிகளினால் வழங்கப்படும் கடன் வசதிகளைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியுமென,
    - மேலதிகப்பற்று
    - கடன்
- நடைமுறைக்கணக்கில் போதிய பணமில்லாதபோது காசோலைகள் வழங்குவதற்கு வணிக வங்கி முகாமையாளர்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் அனுமதியொன்றே வங்கி மேலதிகப் பற்று எனப்படும் என,
- தற்காலிக வங்கிமேலதிகப் பற்று, நிலையான வங்கி மேலதிகப் பற்று எனும் இரு வகைகள் காணப்படுகின்றன என,
- யாதேனுமொரு வட்டி வீதத்தினடிப்படையில் பெற்றுக் கொள்ளும் கடன் தொகையும் அதற்குரிய வட்டியையும் செலுத்துவதற்கு உடன்பட்ட ஒப்பந்தத்தின் பேரில் வங்கி யொன்றின் மூலம் வழங்கப்படும் பணமே வங்கிக் கடன் எனப்படும் என,
- வங்கிக் கடனை வணிகக் கடன், நுகர்வுக் கடன் எனும் வகையில் வகைப்படுத்த முடியுமென,
- தனியொருவருக்கோ அல்லது நிறுவனமொன்றிற்கோ வணிக நடவடிக்கைகளின் பொருட்டு குறுங்கால அல்லது இடைக்கால அல்லது நீண்டகால எனும் வகையில் கடன் வழங்கலை வணிகக்கடன் என்றழைக்கப்படும் என,
- நீண்ட கால வாழ்வுத் தன்மை கொண்ட நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கும் திடீரென ஏற்படும் இடர்களினால் ஏற்படும் தேவைகளை நிறைவு செய்வதற்கும் நுகர்வாளர்களுக்கு வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடனே நுகர்வுக் கடன் என்றழைக்கப்படும் என,

**தேர்ச்சிமட்டம் 7.4 :** வணிக வங்கிகளினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளினால் வணிகங்களது செயற்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை காட்டிக் கொடுப்பார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- வணிக வங்கிகளினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளைப் பட்டியல்படுத்துவார்.
- வணிக வங்கிகளினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளை வெவ்வேறாக விபரிப்பார்.
- வணிக வங்கி நடவடிக்கைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் முறையைக் காட்டுவார்.
- தெரிவு செய்த வணிகமொன்று வணிக வங்கிகளினால் பெற்றுக் கொள்ளும் ஏனைய சேவைகளைக் கேட்டறிந்து பட்டியல்படுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வணிக வங்கிகளினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளை பலவற்றைப் பின்வருமாறு காட்டலாம்.

  - **குத்தகைச் சேவை**

  - **நாணயக் கடிதங்களை வழங்கல்**

    இறக்குமதியாளரின் வேண்டுகோளுக்கேற்ப இறக்குமதியாளரின் வங்கி மூலம் இறக்குமதியாளருக்குப் பிரதியீடாக பணம் செலுத்தப்படுவதற்கு உடன்பட்டு ஏற்றுமதியாளரது வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படும் கடிதமே நாணயக் கடிதம் எனப்படும்.

  - **பிரயாணிகள் காசோலைகளை வழங்கல்**

    பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் பண வகைகளில் பல்வேறு பெறுமானங்களினடிப்படையில் வழங்கப்படும். வழங்கும்பொழுது கட்டணம் அறவிடப்படும். அவை அந் நிதி நிறுவனத்தின் வருமானமாகும். உள்நாட்டு வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகளது கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக்குவதுடன் பாதுகாப்புப் பெறுவதற்கும் பிரயாணிகள் காசோலைகள் முக்கியமானதாகும்.

  - **பாதுகாப்பு வசதிகள் (Safe Custody / Safe Lockers)**

    தனிநபர்களது தங்கம், வெள்ளி, இரத்தினக்கல், ஆபரணங்கள், உறுதிப் பத்திரங்கள் போன்ற பெறுமதியான பொருட்களையும் முக்கியமான ஆபரணங்களையும் பாதுகாத்துக் கொடுப்பதற்காக வேண்டி உருவாக்கப்பட்டுள்ள விசேட பெட்டக முறையாகும்.

- **வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்**

  செலாவணிக் கட்டுப்பாட்டு நியமத்திற்கேற்ப வாடிக்கையாளர்கள் வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்யவும் அவர்கள் தம்மிடமுள்ள வெளி நாட்டுச் செலாவணியை விற்பனை செய்வதற்கும் உதவுகின்றன.

- **முகவர் சேவை**

  தேவையான சந்தர்ப்பங்களின்போது தமது வாடிக்கையாளர்களுக்காகப் பிரதிநிதியாளராக வணிக வங்கிகள் நடவடிக்கைகளைச் செய்கின்றன.

- தன்னியக்க வங்கிச்சேவையின் மூலம் வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் பின்வரும் அனுகூலங்கள் கிடைக்கின்றன என,

| **வங்கிகளுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள்** | **வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள்** |
|---|---|
| • செலவு குறைவடைதல்<br>• நெருக்கங்கள் குறைதல்<br>• சரியான தன்மை அதிகரித்துக் காணப்படல்.<br>• குறைவான ஊழியர்களைப் பயன்படுத்த முடிதல்.<br>• வங்கிகளது சேவைகள் அதிகரித்து வங்கிகளின் இலாபத்தன்மை அதிகரிக்கும். | • 24 மணித்தியாலமும் கொடுக்கல் வாங்கல் செய்ய முடிதல்.<br>• நேரம் மீதமாதல்<br>• சிட்டைகளுக்கான செலுத்துகை களை இலகுபடுத்தல்.<br>• கணக்கின் தகவல்களை அறியக் கூடியதாக இருத்தல்.<br>• விரைவாக மற்றோர் கணக்கிற்குப் பணத்தை மாற்றீடு செய்ய முடிதல். |

- **கடனட்டைச் சேவை**

  யாதேனுமொரு குறிப்பிட்ட பெறுமானம் வரையில்; அனுமதி வழங்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் பொருட்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமானவாறு வணிக வங்கிகள் அல்லது அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் விசேடமான இலத்திரனியல் பிளாத்திக் அட்டைகளாகும்.

  **உதாரணம்:** செலான் அட்டை - செலான் வங்கி

  பீபல்ஸ் அட்டை - மக்கள் வங்கி

- **தொலைபேசி வங்கிச்சேவை (Tele Banking)**

  வாடிக்கையாளர்கள் வங்கிக்குச் செல்லாது தொலைபேசியைப் பயன்படுத்தி வணிக வங்கிச் சேவையை நிறைவேற்றிக் கொள்ள இம்முறையினடிப்படையில் இயலுமாக இருக்கும்.

- **ஒன்லைன் வங்கிச் சேவை (Online Banking)**

  வலைப் பின்னலூடாக வங்கியின் இணையத்தளத்தில் பிரவேசித்து, இரகசிய இலக்கத்தைப் பயன்படுத்தி தன்னியக்கமாகத் தமது வங்கிச் சேவைகளை பெற்றுக் கொள்வதை இது குறிக்கின்றது. இலத்திரனியல் வங்கியமைப்பு, வீட்டு வங்கியமைப்பு, On line Banking வலைப்பின்னல் வங்கியமைப்பு போன்ற பெயர்கள் மூலமும் இம்முறை அழைக்கப்படும்.

- **அடகுச்சேவை (Pawning)**

  தங்க ஆபரணங்களைப் பிணையாக வைத்து அவசரப் பணத்தேவையினை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு வணிக வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படுவது. வணிக வங்கிகளின் முக்கிய சேவைகளுள் ஒன்றாகும்.

- **பணப்பரிமாற்று நடவடிக்கை (Money transfer activities)**

  கணக்குரிமையாளர் பொருட்டு அவருக்குக் கிடைக்கவேண்டிய பணத்தை அவரது கணக்கில் சேர்க்கப்படுவது இதன் மூலம் கருதப்படும்.

- வணிக வங்கிகளினால் எதிர்காலங்களில் அறிமுகப்படுத்தப்படும் புதிய சேவைகள் இருப்பின் அவை பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடவும்.

**தேர்ச்சிமட்டம் 7.5 :** காசோலைகளைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தும் முறையினைக் காட்டுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- காசோலைகளை வரைவிலக்கணப்படுத்துவார்.
- முன்வைக்கப்படும் காசோலைகளை அவதானித்ததன் மூலம் அவற்றின் அடிப்படைகளை விபரிப்பார்.
- காசோலையுடன் தொடர்புடைய பிரிவினரைப் பெயரிட்டு விபரிப்பார்.
- காசோலைகளை வகைப்படுத்துவார்.
- உத்தரவு / கட்டளைக் காசோலை, காவியின் காசோலை என்பவற்றிற்கிடையே காணப்படும் வேறுபாட்டை விபரிப்பார்.
- காசோலையொன்றை வரையும்பொழுது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களை விபரிப்பார்.
- காசோலையின் குறுக்குக் கோடிடலை அறிமுகப்படுத்தி அதன் தேவைப்பாட்டினை விபரிப்பார்.
- வழங்கப்பட்ட கோடிடப்பட்ட காசோலையை அவதானித்து அவற்றில் காணப்படும் கோடுகளின் வகைகளை வகைப்படுத்துவார்.
- பொது முறைக் குறுக்குக் கோடிடலையும் சிறப்பு முறைக் குறுக்குக் கோடிடலையும் மேற்கொள்ளக்கூடிய முறைகளை விபரிப்பார்.
- காசோலையில் புறக்குறிப்பிடலை வரைவிலக்கணப்படுத்துவார்.
- புறக்குறிப்பிடல் செய்யப்படும் சந்தர்ப்பங்களைக் காட்டுவார்.
- காசோலை மறுக்கப்படலை அறிமுகப்படுத்தி மறுக்கப்படும் சந்தர்ப்பங்களை விபரிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- நடைமுறைக் கணக்குரிமையாளரொருவர் மூலம் (கட்டளை இடுபவர்) அதில் குறிப்பிடப்பட்டுள்ள பணப் பெறுமதியை பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு (கட்டளையைப் பெறுபவர்) அல்லது கொண்டு வருபவருக்கு வழங்கப்பட வேண்டும் என வங்கிக்குக் (கட்டளையைப் பெறுபவர்) கட்டளை இடப்படும் எழுத்து மூல உத்தரவொன்றே காசோலை என வரைவிலக்கணப்படுத்த முடியும்.
- காசோலையொன்றின் அடிப்படை அம்சங்களைப் பின்வருமாறு குறிப்பிட முடியும் என,

    - திகதி
    - வங்கியினதும் கிளை அமைந்துள்ள இடத்தினதும் பெயர்
    - பெறுபவரின் பெயர்
      அல்லது
    - கொண்டு வருபவரிடம் எனும் பதம்

- தொகை எழுத்திலும் இலக்கத்திலும்
- செலுத்துக எனும் பதம்
- கட்டளை இடுபவரின் பெயர்
- காசோலை இலக்கம், வங்கியின் இலக்கமும், அதன் கிளையின் இலக்கமும்
- கணக்கிலக்கம்
- மின்காந்தப் மைப்பகுதி

- காசோலையொன்றில் பல்வேறு தரப்பினர் தொடர்புபடுகின்றனர் என,
    - கட்டளை இடுபவர் / பிறப்பிப்பவர்
    - கட்டளையைப் பெறுபவர் (பணம் செலுத்துபவர்) / வங்கி
    - கட்டளையை ஏற்பவர் / கொடுணி

  இப்பிரிவினர் மட்டுமன்றி பின்வரும் பிரிவினரும் தொடர்புபடுகின்றனர்.

    - பெறுபவர்
    - சாட்டுதல் செய்பவர் / சாட்டுவோன்
    - சாட்டப்படுபவர் / சாட்டப்படுவோன்
- பின்வரும் முறையில் காசோலையை வகைப்படுத்த முடியும் என,
    - காவியின் காசோலை
    - உத்தரவுக் அல்லது கட்டளைக் காசோலை
- காசோலையொன்றை எழுதும்பொழுது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களைப் பின்வருமாறு காட்டமுடியுமென,
    - வரையும்பொழுது விரைவில் அழிந்துவிடும் தீந்தை வகைகளைப் பயன்படுத்தக் கூடாது.
    - அடியிதழில் காசோலையின் விபரங்களை பதிவு செய்தல் வேண்டும்.
    - வரையும்பொழுது ஏற்படும் பிழைகளைத் தனியொரு கோட்டினால் கீறி விடப் பட்டு கட்டளை இடுபவரின் (வரைபவரின்) பூரணமான கையொப்பத்தை இட வேண்டும்.
    - கட்டளை இடுபவரின் கையொப்பத்தை ஏற்கனவே வங்கிக்குச் சமர்ப்பித்த கையொப்பத்திற்கு ஒத்ததான ஒப்பத்தை இடுதல்.
    - காசோலையில் எழுதப்படும் திகதி, பாதுகாப்பு என்பன தொடர்பாகக் கவனமாக இருத்தல்.
    - வெற்றுக் காசோலையில் கையொப்பமிடாதிருத்தல்.
- காசோலையொன்றின் முகப்பில் சமாந்திரமாக இரு கோடுகள் வரைதல் அல்லது அக்கோடுகளினுள் வணிக வங்கியொன்றின் பெயரைக் குறிப்பிடுதலை காசோலையில் குறுக்குக் கோடிடல் எனப் பொருள்படும். இவ்வாறு கோடிடப்பட்ட காசோலை குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை எனப்படும் என,

- காசோலையின் மேலதிகப் பாதுகாப்புக் கருதி காசோலையில் குறுக்குக் கோடிடப்படும் என,
- குறுக்குக் கோடிடலை பொதுமுறைக் குறுக்குக் கோடிடல், சிறப்பு முறைக் குறுக்குக் கோடிடல் என வகைப்படுத்த முடியும் என,
- குறுக்குக் கோடுகளுக்கிடையே “கைமாறத்தகாதது” எனும் வாசகத்தை இடுவதன் மூலமோ அல்லது அவ்வாசகம் இன்றி வெறுமனே காசோலையின் முகப்பில் எளிய சமாந்திரமாக இரு கோடுகளை வரைவதை பொதுமுறைக் குறுக்குக் கோடிடல் என்றழைக்கப்படும்.

**உதாரணம்:**




- குறுக்குக் கோடுகளுடனோ அல்லது இன்றியோ காசோலையின் முகப்பில் குறுக்காக வணிக வங்கியொன்றின் பெயரைக் குறிப்பிடுதல் சிறப்பு முறைக் குறுக்குக் கோடிடல் என்றழைக்கப்படும் என,

**உதாரணம்:**




- காசோலையின் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் பெறுபவர் தனது பெயரை காசோலையின் பின்பக்கத்தில் எழுதுதல் புறக் குறிப்பிடல் என அழைக்கப்படும் எனவும் பின்வரும் சந்தர்ப்பங்களில் புறக் குறிப்பிடல் செய்ய வேண்டும் என,
    - பெறுபவர் மூலம் காசோலையை வங்கியில் வைப்புச் செய்யும்பொழுது,
    - கட்டளை / உத்தரவுக் காசோலையொன்றாயின் வேறொரு நபருக்கு வழங்கும் சந்தர்ப்பத்தின்போது,
    - குறுக்குக் கோடிடப்படாத காசோலையொன்றை வங்கிக் கருமபீடத்தில் சமர்ப்பித்துக் காசாக்கும்போது,

- கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படும் காசோலைக்கு பணம் செலுத்தப் படுவது வங்கியினால் மறுக்கப்படவும் முடியும். இதனைக் "காசோலை மறுக்கப்படல்" எனக் கூறுவர் என,
- காசோலையொன்று மறுக்கப்படுவதற்கான காரணங்கள் பின்வருமாறு காட்டப்பட முடியும் என,
    - கட்டளை இடுபவரே மூலம் கொடுப்பனவை நிறுத்துமாறு கோருதல்.
    - கட்டளை இடுபவர் இறந்திருப்பின் அது தொடர்பாக வங்கிக்கு அறிவித்திருத்தல்.
    - கட்டளை இடுபவர் முதிர்ந்தவராதல்.
    - நீதிமன்றத்தினால் கொடுப்பவை நிறுத்தக்கோரும் கட்டளை கிடைத்தல்.
    - எழுத்துப் பிழைகள்
    - கணக்கில் போதிய பணம் இல்லாதிருத்தல்.

**தேர்ச்சிமட்டம் 7.6 :** இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கல்கள் இலகுபடுத்தப்படுவதைக் காட்டுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- இலத்திரனியல் பணத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பயன்பாட்டில் காணப்படும் இலத்திரனியல் பண வகைகளை விபரிப்பார்.
- இலத்திரனியல் பண அட்டையின் பண்புகளையும் அதனுடன் தொடர்புடைய பிரிவினர் களையும் விபரிப்பார்.
- இலத்திரனியல் பணத்தின் அனுகூலங்களையும், வரையறைகளையும் பட்டியல் படுத்துவார்.
- பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வகை இலத்திரனியல் பண வகைகளின் சிறப்புக்களைப் பட்டியல்படுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பௌதீகப் பணம் இலத்திரனியல் முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டு அதன் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதனூடாக அவற்றின் பெறுமானங்கள் குறைவடையும் முறையில் தயாரிக்கப்பட்ட பிளாத்திக்கிலான இலத்திரனியல் பண அட்டையே இலத்திரனியல் பணம் என அறிமுகப்படுத்த முடியும்.
- பின்வரும் இலத்திரனியல் பண வகைகள் நடைமுறையில் பயன்பாட்டில் உள்ளன என,
    - கடனட்டை
    - வரவு அட்டை
- குறித்தவொரு பெறுமானம் வரையில் அனுமதிக்கப்பட்ட வணிக நிலையங்கள் மூலம் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு வணிக வங்கி யொன்றினால் அல்லது அதிகாரம் பெற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரமொன்றே கடனட்டை என்று அழைக்கப்படும் என,
- வணிக வங்கிகளின் கணக்குரிமையாளர்களுக்கு, கணக்கில் காணப்படும் பணத்தை விற்பனை நிலையங்களுக்கான கொடுப்பனவுகளை நிறைவு செய்வதற்கும், தன்னியக்க ரெலர் இயந்திரத்தைப் பயன்படுத்திப் பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் வணிக வங்கிகள் மூலம் வழங்கப்படும் இலத்திரனியல் பிளாத்திக்கு அட்டை வகைகள் வரவு அட்டைகள் எனப்படும் என,
- இலத்திரனியல் பணவகைகளினால் கொடுக்கல் வாங்கல்களை நிறைவு செய்வதற்குப் பின்வரும் பிரிவினர் தொடர்புபடுகின்றனர் என,
    - அட்டையின் உரிமையாளர்
    - அட்டைகளை வழங்கிய (பிறப்பிக்கும்) வங்கி
    - விற்பனையாளர் / வியாபாரிகள்
    - கடனட்டைச் சங்கம்

- இலத்திரனியல் பண அட்டைகளில் பின்வரும் பண்புகள் காணப்பட முடியும் என,
    - இலத்திரனியல் பண அட்டையின் முகப்பில் காணப்படும் பண்புகள்
        - வழங்கப்பட்ட வங்கியின் இலச்சினை (Logo / Crest)
        - முப்பரிமாணப்படம்
        - அட்டையின் இலக்கம்
        - கடனட்டையின் வியாபாரக்குறி (Brand Logo)
        - காலம் முடிவடையும் திகதி
        - கடனட்டை உரிமையாளரின் பெயர்
- இலத்திரனியல் பணஅட்டையின் பின்பக்கத்தில் காட்டப்பட்டுள்ள விபரங்கள் (Reverseside)
    - காந்தப்பட்டி (Magnatic Stripe)
    - கையொப்பப்பட்டி (Signature Stripe)
    - கடனட்டையின் பாதுகாப்புக் குறியீடு (Card Security Code)
    - வழங்கும் நிறுவனத்தின் பெயரும் நிபந்தனைகளும்
    - வாடிக்கையாளரின் சேவைக்குரிய தொலைபேசி இலக்கம் (Customer Service Hot line)
- கடனட்டைகளைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கல் செய்வதன் மூலம் வாடிக்கை யாளர்களுக்கும் பின்வரும் அனுகூலங்கள் கிடைக்கின்றன என,
    - இலகுத்தன்மை
    - யாதேனுமொரு குறித்த காலப்பகுதி வரையில் வட்டியின்றிக் கடனொன்றைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
    - வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்.
    - அனுமதிக்கப்பட்ட கால வரையறையினுள் A.T.M. இயந்திரத்தின் மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
    - பணத்தை இடத்திற்கிடம் எடுத்துச் செல்லும்போது ஏற்படும் அச்சத்தை நீக்குதல்.
    - கழிவுகள், உபகாரப் புள்ளிகளுக்கு உரித்துடையதாக இருத்தல்.
- கடனட்டைகளைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கல்கள் செய்வதன் காரணமாகப் பின்வரும் பிரதிகூலங்கள் ஏற்படுகின்றன என,
    - செலவொன்று ஏற்படுவதைப் பொறுக்க வேண்டி ஏற்படும்.
    - கொடுப்பனவைச் செலுத்துவதற்குக் கால தாமதம் ஏற்படும் பொழுது தாமதக் கட்டணத்துடன் உயர்வட்டியும் செலுத்த வேண்டியேற்படும்.
    - அனைத்து விற்பனை நிலையங்களுக்குமான கொடுப்பனவைச் செய்வதற்கு இயலாது இருக்கும்.

    - சர்வதேச ரீதியான மோசடிகள் இடம் பெறலாம்.
    - தேவையற்ற நுகர்வுகள் செய்வதற்குத் தூண்டப்படுதல்.
- கடனட்டையைப் பயன்படுத்துவதனால் வணிகங்களுக்குப் பின்வரும் அனுகூலங்கள் கிடைக்கின்றன என,
    - கடனுக்கு விற்பனை செய்வதனால் பணம் கிடைப்பதில் நிச்சயத்தன்மை உண்டு.
    - புரள்வு அதிகரிப்பதனால் இலாபம் அதிகரிக்கும்.
    - கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தும்.
    - இலவசமாக விளம்பரமொன்று கிடைக்கும்.
- கடனட்டைகளைப் பயன்படுத்துவதனால் வணிகர்களும் பின்வரும் பிரதிகூலங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என,
    - தொழிற்படு மூலதனப் பற்றாக்குறைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும்.
    - வங்கிக்குத் தரகுக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்படும்.
    - விசேட பயிற்சிகளுடன் கூடிய ஊழியர்களை ஈடுபடுத்த வேண்டி ஏற்படும்.
- வரவு அட்டைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்குப் பின்வரும் அனுகூலங்கள் கிடைக்கின்றன என,
    - கொடுக்கல் வாங்கல்களைக் கணக்கினூடாகப் பூர்த்தி செய்தல்.
    - கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அறிக்கையொன்றிருத்தல்.
    - கழிவுகள் கிடைத்தல்
    - காசோலைகளைப் பெற்றுக் கொள்வதில் சில வியாபாரிகள் பின்வாங்கும் நிலை காணப்படும் வேளையில் வரவு அட்டைகளைப் பெறுவதில் ஏற்றுக் கொள்ளும் தன்மை அதிகரித்ததாக இருக்கும்.
    - வரவு அட்டைகளைப் பயன்படுத்தி A.T.M. மூலம் கணக்கில் காணப்படும் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.
    - பணத்தை இடத்திற்கிடம் எடுத்துச் செல்லும் அச்சத்தைக் குறைக்கும்.
- வரவு அட்டைகளைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கல் செய்வதன் காரணமாக வாடிக்கையாளர்களுக்கும் பின்வரும் பிரதிகூலங்கள் ஏற்படுகின்றன என,
    - செலவுகளைப் பொறுக்க வேண்டியேற்படும்.
    - தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பரிமாற்றத்தின்போது பிரச்சினைகள் ஏற்படலாம்.
    - பாதுகாப்புக் குறைதல், இரகசிய இலக்கத்தை (Pin இலக்கம்) மோசடிகளுக்குட் படுத்தி வேறு நபர்களும் பயன்படுத்த இடமுண்டு.
    - கணக்கில் பணமீதி அற்றுப் போகும் பொழுது கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாது இருக்கும்.

**தேர்ச்சிமட்டம் 7.7 :** இலங்கை மத்திய வங்கியின் கருமங்களையும் பொறுப்புக் களையும் கேட்டறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- இலங்கை மத்திய வங்கி தொடர்பாக அறிமுகப்படுத்துவார்.
- இலங்கை மத்திய வங்கியின் நோக்கத்தை விபரிப்பார்.
- இலங்கை மத்திய வங்கியின் கருமங்களைப் பட்டியல்படுத்துவார்.
- தகவல்களைத் தேடியறிந்து இலங்கை மத்திய வங்கியின் கருமங்களையும் பொறுப்புக்களையும் விமர்சிப்பார்.
- இலங்கை மத்திய வங்கியின் கருமங்கள் வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் முறையினை விமர்சிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- 1949 ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினடிப்படையில் 1950 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி இலங்கையின் நாணயக் கொள்கையினைச் செயற்படுத்துவதற்காக அரசின் பிரதிநிதி யொருவராக செயற்படும் மையநிறுவனமாகும் என,
- ஐந்து பேர்களைக் கொண்ட நாணயச் சபையின் மூலம் மத்திய வங்கியின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்நாணயச் சபையானது மத்திய வங்கி ஆளுநர், நிதிக்குப் பொறுப்பான நிதி அமைச்சின் செயலாளர் கட்டளைத் தரத்தில் இல்லாத மூன்று அங்கத்தவர்களையும் கொண்டு உருவாக்கப் பட்டது என,
- இலங்கை மத்திய வங்கி இரு பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என,
  - பொருளாதாரத்தையும் விலையையும் நிலைத்த தன்மையில் பேணிச் செல்லல்.
  - நிதி முறையின் உறுதியான தன்மையினைப் பேணுதல்.
- வீக்க அச்சுறுத்தல்களற்ற புழக்கத்திலுள்ள நாணயங்களின் பெறுமதியைப் பாதுகாப்பதன் காரணமாக விலையின் உறுதித்தன்மை பேணப்பட்டு சாதகமான பொருளாதார வளர்ச்சியும் அதிகமான சேவைப் பிரவேசங்களையும் தோற்றுவிப்ப தற்கு இது துணையாக அமைகின்றது என,
- நாடொன்றில் உள்ளக ரீதியாகவோ அல்லது வெளியக ரீதியாகவோ ஏற்படும் பிரச்சினைகளுக்கு மத்தியில் அசைவற்றிருக்கும் இயலுமை நாணயத்துறையில் உறுதித்தன்மையுடையதாக இருப்பதுடன் பொதுவாக நாணயத்துறை எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களை இனங்காணவும், அச்சுறுத்தல்களைக் குறைத்துக் கொள்வதனூடாக நாணயமுறையின் உறுதித்தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என,

- மத்திய வங்கி தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பின்வரும் கருமங்களில் ஈடுபடுகின்றன என,
    - நாணயக் கொள்கைகளை அமுல்படுத்துதல்.
    - நாணயமாற்று வீதங்களை அமுலாக்கல்.
    - இலங்கையின் சட்டபூர்வமான வெளிநாட்டு ஒதுக்கங்களை முகாமை செய்தல்.
    - நாணயங்களை வெளியீடு செய்தலும் அவற்றைப் பங்கீடு செய்தலும்.
    - வங்கியினதும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களினதும் கண்காணிப்பாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
    - அரசின் பொருளாதார ஆலோசகராகவும் வங்கியாளராகவும் நிதிமுகவராகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
    - மத்திய வங்கியில் தீர்ப்பனவுக் கணக்குகள் பேணும் வணிக வங்கிகளுக்கும் முதன்நிலை வியாபாரிகளுக்கும் தீர்ப்பணவு செய்யும் வசதிகளை வழங்கல்.
- மேற்காட்டிய பிரதான கருமங்களுக்கு மேலாகப் பின்வரும் பிரதிநிதித்துவச் சேவை களையும் நிறைவேற்றுகின்றது என,
    - அரச கடன் முகாமைத்துவம்
    - அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு
    - சிறியளவு நிதியீட்டல் செயற்றிட்டம், கிராமியக் கடன் திட்ட முறை தொடர்பாக அடிப்படையான நிறுவனமாகக் கருமமாற்றல்.
    - ஊழியர் சேமலாப நிதியை முகாமைத்துவம் செய்தல்.
- வணிக வெற்றிக்கு மத்திய வங்கியின் நடவடிக்கைகள் துணையாக அமைகின்றன என,

    **உதாரணம்:**

    - காசோலைத் தீர்ப்பனவுத் தொழிற்பாட்டினை மேற்கொள்வதனால் மிக விரைவாக வணிகர்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும்.
    - பல்வேறு பெறுமானங்களைக் கொண்டதான தாள், குற்றி நாணயங்களை வெளியீடு செய்வதனால் எந்தவொரு பெறுமானம் கொண்ட கொடுக்கல் வாங்க லொன்றினையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.
    - ஊழியர் சேமலாப நிதியை முகாமை செய்வதன் மூலம் வணிகத்தின் ஊழியர் களுக்கிடையே பாதுகாப்புத் தன்மை உறுதிப்படுத்தப்பட்ட ஊழியர் பிரிவினர் உருவாதல்.
    - சிறியளவிலான வணிகங்களது வளர்ச்சி கருதிப் பல்வேறு செயற்றிட்டங்களை யும் கடன் ஆலோசனை முறைகளையும் அறிமுகம் செய்தல்.
    - நிதிக் கம்பனிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொடுத்தல், மேற்பார்வை செய்தல் என்பவற்றின் மூலம் வணிகத்துறையில் நீடித்த வாழ் தன்மைக்கு பங்களிப்புச் செய்தல்.

**தேர்ச்சி 8.0** : வணிகங்களின் வாழ்தன்மைக்கு காப்புறுதியின் அவசியத்தை உறுதிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 8.1** : வணிகங்களின் நிலைப்பாட்டிற்குக் காரணமாய் அமையும் காப்புறுதியின் முக்கியத்துவத்தைத் தேடியறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை** : 05

**கற்றல் பேறுகள்:**

- நட்ட அச்சம் என்பதனை விபரிப்பார்.
- வணிகங்கள் முகங் கொடுக்கும் நட்ட அச்சங்களைப் பட்டியல்படுத்துவார்.
- காப்புறுதியை அறிமுகப்படுத்துவார்.
- காப்புறுதி செய்யக்கூடிய நட்ட அச்சங்கள்; காப்புறுதி செய்ய முடியாத நட்ட அச்சங்கள் என நட்ட அச்சங்களை வகைப்படுத்துவார்.
- காப்புறுதி செய்யக்கூடிய நட்ட அச்சங்களை விபரித்து உதாரணங்களை முன்வைப்பார்.
- காப்புறுதி செய்ய முடியாத நட்ட அச்சங்களை விபரித்து உதாரணங்களை முன்வைப்பார்.
- வணிகங்களது வாழ்தன்மைக்குக் காப்புறுதியின் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார்.
- காப்புறுதி ஒப்பந்தத்தை விபரிப்பார்.
- காப்புறுதி ஒப்பந்தத்துடன் தொடர்புடைய பிரிவினர்களை அறிமுகப்படுத்துவார்.
- காப்புறுதி ஒப்பந்தமொன்றில் உள்ளடங்கும் விடயங்களை விமர்சிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- காப்புறுதி செய்பவரினால் தவணைக் கட்டணம் செலுத்துவதாகவும் காப்புறுதி செய்யப்பட்ட யாதேனும் இடர்கள் காரணமாக காப்புறுதி செய்பவருக்கு ஏற்படக் கூடிய நட்டங்களுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்துவதற்குக் காப்புறுத்துவோன் உடன்பட்டிருப்பதும் காப்புறுதியில் இடம்பெறும் விடயங்களாகும் என,

- பல்வேறு நட்ட அச்சங்களுக்கு முகங் கொடுத்துள்ள காப்புறுதி செய்பவர் மூலம் காப்புறுதிக் கம்பனிக்குச் செலுத்தப்படும் தவணைக் கட்டத்தினால் காப்புறுதி நிதியம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது எனவும்; தவணைப் பணத்தினைச் செலுத்தும் நபர்களிடையில் யாரேனுமொருவருக்கு ஏற்படும் நட்டத்திற்காகக் காப்புறுதிக் கம்பனியானது இழப்பீட்டுத் தொகையை அந்நிதியத்தின் மூலமே வழங்கும் என,

- காப்புறுதியின்போது பணரீதியாக அளவிடக்கூடிய நட்டமொன்று ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தை நட்ட அச்சம் எனக் குறிப்பிட முடியும் என,

- நட்ட அச்சத்தை காப்புறுதி செய்யக்கூடிய நட்ட அச்சம் எனவும், காப்புறுதி செய்ய முடியாத நட்ட அச்சம் எனவும் இரு வகைப்படுத்த முடியும் என,

- காப்புறுதி செய்யக்கூடிய நட்ட அச்சங்களுக்குப் பின்வரும் பண்புகள் காணப்பட வேண்டும் என,

    - எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நட்டங்களைப் பணரீதியாக அளவிடக்கூடியதாக இருத்தல்.

    - நட்ட அச்சம் நிச்சயமாக நடைபெறுமெனக் கூறமுடியாதிருத்தல் வேண்டும். அதாவது தற்செயலாக நிகழக்கூடிய தொடர்புகளற்றிருத்தல் வேண்டும். அதாவது ஏற்பட்ட நட்டம் வேறு காப்புறுதி நட்டங்களுடன் தொடர்பற்றிருத்தல் வேண்டும்.

    - நிச்சயிக்கக்கூடியதாக இருத்தல். அதாவது நட்டமேற்படுவதற்கான காரணங்கள் இடம், நேரம், பெறுமானங்கள் என்பவற்றை பகுப்பாய்வு செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

- பின்வருவன காப்புறுதி செய்ய முடியாத நட்ட அச்சங்கள் தொடர்பான உதாரணங் களாகும் என,

    - காலம் கடந்தவையாதல், தேய்வுறுதல் போன்ற இயற்கைத் தன்மைக் காரணங் களினடிப்படையில் தோன்றும் வணிக இடர்கள்.

    - பரீட்சையில் சித்தியடையாமை, அன்பை இழத்தல் போன்ற தனிநபர் இயலுமை களினடிப்படையில் தீர்மானிக்கப்படும் இடர்கள்.

    - பிழையான முகாமைத் தீர்மானத்தினால் ஏற்படும் வணிக நட்டங்கள்

- காப்புறுதி முக்கியமாக தேவைப்பாடுடையது என்பதனை பின்வருமாறு விபரிக்க முடியும் என,

  **உதாரணமாக,**

    - காப்புறுதியானது வணிக இடர்களைக் காப்பீடு செய்வதன் காரணமாக வணிகங் களை ஆரம்பிப்பதற்கு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

    - அகால மரணம், அங்கவீனமான நிலை அல்லது சுகவீனமுற்ற நிலை போன்ற நிலைமைகளில் நபர்களுக்குப் பணரீதியான பாதுகாப்புக் கிடைக்கிறது.

    - காப்புறுதிக் கம்பனி தமது நிதியை மீண்டும் முதலீடு செய்வதன் காரணமாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான மூலதன உருவாக்க லுக்கு காப்புறுதி துணையாக இருத்தல்.

    - கடலில் ஏற்படும் இடர்களுக்கான காப்புறுதி காரணமாக சர்வதேச வியாபாரம் முன்னேற்றமடைவதற்குத் துணையாக இருத்தல்.

- காப்புறுதி ஆவணத்தைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் நபரினால் முன்வைக்கப் படும் காப்புறுதிக் கோரிக்கைப் பத்திரமொன்றை காப்புறுதி நிறுவனத்தின் மூலம் ஏற்றுக் கொண்டதன் பின்னர் அவ்விரு பிரிவினருக்குமிடையே ஏற்படும் எழுத்து மூல உடன்பாட்டைக் காட்டும் ஆவணம் "காப்புறுதி ஒப்பந்தம்" எனப்படும் என,

- காப்புறுதி ஒப்பந்தமொன்றில் பின்வரும் கட்சியினர் தொடர்புபடுகின்றனர் என,
    - **முதலாம் கட்சியினர்:-** காப்புறுதி செய்பவர் அல்லது அதாவது காப்புறுதிக் கோரிக்கையை முன்வைப்பவர் அல்லது காப்புறுதி ஆவணத்தைப் பெற்றுக் கொள்ளும் நபர் இவராவர்.
    - **இரண்டாவது கட்சியினர்:-** காப்புறுத்துவோன் காப்புறுதிக் கோரிக்கையை ஏற்றுக் கொள்பவர் அல்லது காப்புறுதிக் கம்பனி.
    - **மூன்றாம் கட்சியினர்:-** ஒப்பந்தச் செயற்பாட்டினூடாக வெளியகக் கட்சியினர் தொடர்பான தொடர்புகள்
- காப்புறுதி ஒப்பந்தமொன்று செல்லுபடியாவதற்கு பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என,
    - சட்டரீதியான தொடர்பொன்றை உருவாக்கிக் கொள்ளும் எண்ணம்
    - முன்மொழிவுகள் அல்லது பிரேரித்தல்கள்
    - ஏற்புடைமை
    - சட்டரீதியான தன்மை
    - ஒவ்வொரு பிரிவினர்களுக்குமிடையே சட்டரீதியான உடன்பாட்டை உருவாக்கிக் கொள்வதற்கான இயலுமை.
    - யாதேனும் ஆயுளுக்கோ அல்லது சொத்துக்களுக்கோ உரித்தான குறித்த காப்புறுதி ஒப்பந்தமொன்றை உருவாக்கிய பின்னர் அதற்குரிய காப்புறுதிக் கம்பனி மூலம் காப்புறுதி செய்பவருக்கு வழங்கப்படும் உறுதிப்பத்திரமே காப்புறுதி உறுதிப் பத்திரமாகும் என,

**தேர்ச்சிமட்டம் 8.2 :** காப்புறுதியின் நடைமுறைப் பாவனைக்கேதுவாகும் காப்புறுதிக் கோட்பாடுகளைத் தேடியறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- காப்புறுதி செய்யும் உரிமையை உதாரணங்களுடன் விபரிப்பார்.
- காப்புறுதி ஒப்பந்தமொன்றின்போது மிக்குயர்வான நம்பிக்கையுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியத்தை உறுதிப்படுத்துவார்.
- பதிலாள் வைப்புத் தத்துவத்தை அறிமுகப்படுத்தி அதன் தேவைப்பாட்டினை விபரிப்பார்.
- பெறுமதி கூடிய சொத்துக்கள் பல காப்புறுதிக் கம்பனிகளில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் நிலைமையில் சொத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்கு ஒவ்வொரு நிறுவனங்களும் பங்களிப்புச் செய்யும் முறையினை விமர்சிப்பார்.
- காப்புறுதிக் கோட்பாடுகள் காப்புறுதிக்கு முக்கியத்துவம் பெறும் முறையினை மதிப்பிடுவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- பாரிய மரமொன்றின் படத்தை வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- அது தொடர்பாக மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டறியவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலொன்றை ஒழுங்கமைக்கவும்.
    - மரத்தின் வாழ்தன்மை, பலமான தன்மை என்பன அம்மரத்தின் வேர்களின் மீதே தங்கியுள்ளது என,
    - வேர்களுக்குச் சேதம் ஏற்படுமாயின் மரத்தின் வாழ்தன்மை அற்றுவிடும் என,
    - காப்புறுதி வணிகத்தின் வாழ்தன்மைக்குக் காப்புறுதிக் கோட்பாடுகள் பங்களிப்புச் செய்யும் என,

**கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:**

- பின்வருவன காப்புறுதிக் கம்பனியினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள கூற்றுக்களில் சிலவாகும். அவற்றில் உங்களது குழுவிற்குக் கிடைக்கும் கூற்றுத் தொகுதியின் மீது கவனஞ் செலுத்தவும்.

  **கூற்றுத்தொகுதி - 01**

    - கீர்த்தியின் ஒரே உறவினராக அவரது வயது முதிர்ந்த சகோதரர் மட்டுமே இருப்பினும் அவரது ஆயுளுக்கு கீர்த்தியினால் காப்புறுதி செய்ய முடியாது.
    - காப்புறுதி உறுதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளும்பொழுது சமிரா தான் கடும் சுகவீனமுற்ற நிலையில் இருந்தமையால் இழப்பீட்டைப் பெற முடியாது விட்டது.

**கூற்றுத்தொகுதி - 02**

- ராஜாவின் மோட்டார் வாகனம் ரூபா 15 இலட்சத்திற்குக் காப்புறுதி செய்யப் பட்டிருப்பினும் அதன் சேதத்திற்கேற்ப ரூபா 200,000 மட்டுமே வழங்கக்கூடியதாக இருந்தது.
- ஆனந்தன் தனது தொழிற்சாலையை ரூபா 5 இலட்சம் வீதம் நான்கு காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்திருப்பினும் ஏற்பட்ட ரூபா 100,000 சேதத் திற்காக ஐந்து நிறுவனங்களிலும் இருந்து இழப்பீடாக மொத்தம் ரூபா 100,000 ஐ மட்டுமே பெறக்கூடியதாக இருந்தது.

**கூற்றுத்தொகுதி - 03**

- இழப்பீடு வழங்குவதற்கு முன், விபத்தின் மூலம் சேதமடைந்த உங்களது பேரூந்தின் பழுதடைந்த பாகங்களைக் காப்புறுதி நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.
- கமலன் வணிகத்திற்கு தீ அபாயக் காப்புறுதிப் பத்திரமொன்றைப் பெற்றிருந்த துடன் அவரது வணிகம் பயங்கரவாதச் செயற்பாடு காரணமாக அழிவிற்குட் பட்டது. போராட்டங்கள், கலகங்கள் காரணமாக நட்டமேற்பட்டதனால் இழப்பீடு வழங்க முடியாதென காப்புறுதி நிறுவனம் கூறியது.

- உங்களது குழுவிற்குக் கிடைத்த விடயத்தை இனங்கண்டு கொள்வதற்காக குழுக் கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.
- விடயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது குழுவின் கருத்துக்களை விபரிக்கச் செய்யவும்.
- அக்கூற்றுக்களுக்குரியவர் நீங்களாக இருப்பின் இத்தீர்மானங்கள் தொடர்பாக உங்களது கருத்துக்களை முன்வைக்கச் செய்யவும்.
- இக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட காப்புறுத்துவோனிடம் காணப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக நீங்கள் இணங்குவீர்களா? காரணங்களை விபரிக்குமாறு கூறவும்.
- உங்களது குழு காப்புறுத்துவோனாக இருப்பின் இந்நிகழ்வுகள் தொடர்பாக குழுவினது தீர்மானங்களை முன்வைக்கச் செய்யவும்.
- உங்களது தேடியறிதல்களை ஆக்கபூர்வமானதாக முழு வகுப்பிலும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- காப்புறுதி வணிகத்தை முறையாக நடாத்திச் செல்வதற்குக் காப்புறுதிக் கோட்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும் என,
- அக்காப்புறுதிக் கோட்பாடுகள் அல்லது தத்துவங்கள் பின்வருமாறு காட்டப்படலாம் என,
    - காப்புறுத்தும் உரிமை / காப்புறுதி செய்யும் உரிமை
    - மிக்குயர் நம்பிக்கை
    - இழப்பீட்டுத் தத்துவம்
    - பங்களிப்புத் தத்துவம்

- பதிலாள் வைப்புத் தத்துவம்
- அண்மைக் காரணித் தத்துவம்

- யாதேனும் விடயம் தொடர்பாகச் சொத்தொன்று காணப்படும் சந்தர்ப்பத்தில் அதனால் அனுகூலமொன்றும், அச்சொத்து இல்லாமல் போகும் வேளையில் பிரதிகூலமொன்றும் ஏற்படுமாயின் அச்சொத்து தொடர்பாகக் காணப்படும் உரிமை காப்புறுத்தும் உரிமை எனப்படும் என,

  **உதாரணம்:** கணவனின் ஆயுள் தொடர்பாக மனைவிக்கும், மனைவியின் ஆயுள் தொடர்பாக கணவனுக்கும் காப்புறுத்தும் உரிமையுண்டு. யாதேனுமொரு சொத்தொன்றின் உரிமையாளருக்கு அச்சொத்துத் தொடர்பான உரிமைத்துவம் உண்டு.

- காப்புறுதி செய்யப்படும் சொத்தொன்று தொடர்பாகக் காப்புறுதி செய்பவர் காப்புறுத்துவோனிடம் உண்மைத் தன்மையுடன் சகல விடயங்களையும் எடுத்துரைத்தல் வேண்டும் என்பது மிக்குயர் நம்பிக்கைத் தத்துவமாகும் என,

- யாதேனுமொரு காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்குச் சேதமேற்படும் பொழுது அச் சொத்துக்களை முன்னைய இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காக மட்டும் தேவையானளவு இழப்பீட்டுத்தொகை வழங்கப்படும் என்பதை இழப்பீட்டுத் தத்துவம் குறிப்பிடுகின்றது என,

- யாதேனுமொரு சொத்து பல காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் போது அச்சொத்திற்குச் சேதம் ஏற்படுமாயின் அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தப் பெறுமதிகளின் விகிதாசாரப்படி அக் காப்புறுதி நிறுவனங்கள் பங்களிப்புச் செய்து இழப்பீட்டுத்தொகை வழங்கப்படும் என்பதே பங்களிப்புத் தத்துவம் குறிப்பிடப்படுகின்றது என, (உதாரணத்தினூடாக விபரிக்கச் செய்யவும்.)

- காப்புறுதி செய்யப்பட்ட சொத்தொன்றின் சேதத்தின்போது காப்புறுதிக் கம்பனியானது இழப்பீடு வழங்கியதன் பின்னர் வெளியகக் கட்சியினரிடமிருந்து காப்புறுதி செய்பவர் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்களும் உரிமைகளும் காப்புறுத்துவோனால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படும் என்பதையே பதிலாள் வைப்புத் தத்துவம் விளக்குகின்றது என,

- காப்புறுதி செய்யப்பட்ட சொத்தொன்றிற்குச் சேதம் ஏற்படும் சந்தர்ப்பத்தின் போது அச்சேதம் ஏற்படுவதற்குப் பல காரணிகள் காரணமாக அமையும் சந்தர்ப்பத்தில் அக்காரணிகளுள் அண்மைக் காரணி காப்புறுதி ஒப்பந்தத்தில் உள்ளடக்கப் பட்டிருப்பின் மட்டும் இழப்பீடு வழங்கப்படும் என்பதையே அண்மைக் காரணித் தத்துவம் குறிப்பிடுகின்றது என,

- ஆயுள் காப்புறுதி தொடர்பாகக் காப்புறுதி செய்யும் உரிமை, மிக்குயர் நம்பிக்கை, அண்மைக் காரணம் போன்ற அடிப்படைத் தத்துவங்கள் மட்டும் உரித்துடையதாக இருக்கும் என,

- இழப்பீடு, பதிலாள் வைப்பு, பங்களிப்பு எனும் அடிப்படைக் கோட்பாடுகள் ஆயுள் காப்புறுதி தொடர்பாக உரித்தற்றதாக இருக்கும் என,

**தேர்ச்சிமட்டம் 8.3 :** வணிகங்களைப் பல்வேறுபட்ட இடர்களிலிருந்து பாதுகாக்கும் காப்புறுதி ஒப்பந்தங்களின் வகைகளைப் பரீட்சிப்பார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- வணிகமொன்று பெற்றுக் கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகளைப் பட்டியல்படுத்துவார்.
- பின்வரும் ஒவ்வொரு காப்புறுதி ஒப்பந்தங்களிலும் காப்பீட்டிற்குட்படும் நட்ட அச்சங் களை விபரிப்பார்.
    - ஆயுட் காப்புறுதி ஒப்பந்தம்
    - தீ அபாயக் காப்புறுதி
    - களவபாயக் காப்புறுதி
    - இயற்கை விபத்துக் காப்புறுதி
    - கடலபாயக் காப்புறுதி
    - மோட்டார் வாகனக் காப்புறுதி
    - தொழில் பொறுப்புக் காப்புறுதி
    - வழிச் சரக்குக் காப்புறுதி
    - பொது மக்கள் பொறுப்புக் காப்புறுதி
- ஆயுட் காப்புறுதிக்கும் ஏனைய காப்புறுதிகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாடு களை ஒப்பிடுவார்.
- தீ அபாயக் காப்புறுதியின் கீழ் காப்பீட்டிற்குட்பட்ட நட்ட அச்சங்களையும் காப்பீட்டிற் குட்படாத நட்ட அச்சங்களையும் வேறுபடுத்திக் காட்டுவார்.
- மோட்டார் வாகனக் காப்புறுதியில் பெற்றுக் கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகளை விபரிப்பார்.
- கடலபாயக் காப்புறுதி தொடர்பாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய பல்வேறு காப்புறுதி ஒப்பந்த வகைகளை விபரிப்பார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- பின்வரும் காட்சிகளை உள்ளடக்கிய படத்தை வகுப்பில் முன்வைக்கச் செய்யவும்.
    - கட்டடமொன்று தீப்பற்றியெரியும் காட்சி
    - மோட்டார் வாகனங்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டுள்ள காட்சி
    - பகுதியளவில் கடலில் மூழ்கிக் காணப்படும் கப்பலொன்றின் காட்சி
    - வீடொன்றினுள் கள்வர்கள் உட்புகும் காட்சியொன்று

- படங்கள் மூலம் காட்டப்படும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களது கருத்துக்களைக் கேட்டறியவும்.
- அவ்வாறான விடயங்களின்போது மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை மாணவர் களிடம் கேட்டறியவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலொன்றை ஒழுங்கமைக்கவும்.
    - பல்வேறு வகைப்பட்ட தன்மைகளையுடைய நட்ட அச்சங்கள் காணப்படுகின்றன என,
    - இந் நட்ட அச்சங்களுக்காகக் காப்பீட்டினைக் காப்புறுதி ஒப்பந்தங்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என,

## கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- கீழே குறிப்பிடப்படும் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மூன்று பாத்திரங்கள் தொடர்பான தகவல்களுக்கும், அவற்றில் உங்களது குழுவிற்குக் கிடைக்கும் பாத்திரத்தின் மீதும் கவனத்தைச் செலுத்தவும்.

    **ஆனந்தி**

    பெண் எழுதுவினைஞரொருவராவர். 10 வயதிலும் குறைந்த மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். கணவர் இறந்துவிட்டார். கணவனின் பேரில் உரித்தான வீடும் சொத்துக்களும் உள்ளன.

    **குமார்**

    தளபாட உற்பத்தி நிறுவனமொன்றையும் பல விற்பனையகங்களையும் நடத்திச் செல்கிறார். களனி கங்கையின் அருகிலேயே தொழிற்சாலை காணப்படுகின்றது. தனது உற்பத்திகளைத் தனக்குச் சொந்தமான இரண்டு லொறிகள் மூலம் நாடு முழுதும் காணப்படும் வியாபாரிகளுக்கு விநியோகிக்கின்றார்.

    **நயீம்**

    பல தேயிலை, இறப்பர் தோட்டங்களுக்கு உரித்துடையவராவர். அவருக்கு இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் உரித்துடையதாகக் காணப்பட்டன. ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காகத் தோட்டங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் செல்வதே வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது உற்பத்திகளை அவரே ஏற்றுமதியும் செய்கின்றார்.

- உங்களது குழுவிற்குக் கிடைத்த பாத்திரத்தின் நடவடிக்கைகளையும் வாழ்க்கை அமைப்பு முறையையும் நன்கறிந்து பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துங்கள்.
    - உங்களது குழுவிற்குக் கிடைத்த நபருக்கு முகம் கொடுக்கக்கூடிய நட்ட அச்சங்களை வேறுவேறாக எழுதிக் காட்டுங்கள்.
    - அந்நட்டங்களைக் காப்பீடு செய்வதற்காக காப்புறுதி நிறுவனத்தில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ஒப்பந்த வகைகளைக் குறித்துக் காட்டுங்கள்.
    - உங்களது தேடியறிதல்களை ஆக்கபூர்வமானதாக முழுவகுப்பிலும் முன்வைப்ப தற்கு ஆயத்தமாகவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- தற்செயலாக அல்லது வயது முதிர்வின் காரணமாக யாரேனுமொரு நபருக்கு மரணம் ஏற்படக்கூடிய இழப்புக்கும் பாதுகாப்பு வழங்குவது ஆயுட் காப்புறுதியின் நோக்கமாகும் என,

- காப்புறுதி செய்பவரின் மரணம் அல்லது வேறு உடல்ரீதியான உபாதைகள் காரணமாக நட்ட அச்சங்களுக்கு முகங் கொடுக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் பொழுது காப்புறுதி செய்பவருக்கு அல்லது அவரில் தங்கி வாழ்பவருக்கு நிதி ரீதியான அனுகூலத்தினைப் பெற்றுக் கொடுப்பதே ஆயுட் காப்புறுதியின் மூலம் நடைபெறுகின்றது என,

- ஆயுட் காப்புறுதி யாதேனுமொரு குறித்த காலப் பகுதிக்காகப் பெற்றுக் கொள்ளப் படுவதுடன் காப்புறுதி செய்பவர் அக்குறித்த காலப்பகுதிக்குள் இறந்துவிட்டால் உடன்பட்ட மொத்தக் காப்புறுதிப் பெறுமானத்துடன், வட்டி, உபகாரப் பணம் என்பன அடங்கலாக இம் மொத்தத் தொகை அவரில் தங்கி வாழ்வோருக்கு அல்லது ஏற்கனவே காப்புறுதி ஒப்பந்தத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு உரித்துடையதாக இருக்கும். அக்குறித்த காலம் முடியும் வரையில் காப்புறுதி செய்பவர் உயிரோடிருப்பின் முதிர்வின்போது காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட பெறுமானத்துடன் வட்டி, உபகாரப்பணம் (போனஸ்) என்பன அடங்கலாக பெற்றுக் கொள்ள முடியும் என,

- யாரேனுமொரு நபரது கட்டடமோ அல்லது அதில் காணப்படும் சொத்துக்களுக்குத் தீயினால் ஏற்படக்கூடிய இழப்புக்களை காப்பீடு செய்வதற்காகப் பெற்றுக் கொள்ளக் கூடிய காப்புறுதியானது “தீ அபாயக் காப்புறுதி” எனப்படும் என,

- தீ அபாயக் காப்புறுதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீ அழிவுகளுக்கு மேலாக பின்வரும் அனர்த்தங்களைக் கருத்திற் கொண்டு மேலதிகத் தவணைக் கட்டண மொன்றைச் செலுத்துவதன் மூலம் காப்புறுதி ஒப்பந்தத்தை விரிவுபடுத்திக் கொள்ள முடியும் என,
  - கலகங்கள் / போராட்டங்கள் / வேலைப் புறக்கணிப்பு
  - வெடிப்புச் சம்பவங்கள்
  - மின்சாரக் கோளாறினால் ஏற்படும் இழப்பு
  - பூமியதிர்ச்சி
  - வெள்ளப்பெருக்கு, வரட்சி, சூறாவளி
  - ஆகாய விமான விபத்துக்கள்
  - குழப்பங்களினால் ஏற்படும் சேதம்

- வணிக நிறுவனங்களில் அல்லது வீடுகளில் ஏற்படக்கூடிய களவபாயங்களினால் ஏற்படும் நட்டங்களிற்குக் காப்பீடு செய்வதற்காக களவபாயக் காப்புறுதி ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என,

- இயற்கை நியதிகளினால் ஏற்படும் சுனாமி, வரட்சி போன்றவைகளினால் சொத்துக் களுக்கு ஏற்படும் இழப்புக்களுக்குக் காப்பீடு செய்வதற்காக இயற்கை விபத்துக் காப்புறுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியுமென,

- கடல் மார்க்கமாகப் போக்குவரத்துச் செய்யும்போது கப்பலுக்கும் கப்பலிலுள்ள பொருட்களுக்கும் ஏற்படக்கூடிய இழப்பினைக் "கடலபாயக் காப்புறுதியின்" மூலம் காப்பீடு செய்ய முடியும் என,
- கப்பல் காப்புறுதி; கப்பல் சரக்குக் காப்புறுதி எனும் வகையில் கடலபாயக் காப்புறுதியை பிரதானமாக இரு பிரிவுகளாக வகைப்படுத்த முடியும் என,
- கப்பல் காப்புறுதி ஒப்பந்தமானது அனைத்து ஆபத்துக்களுக்கான ஒப்பந்தம், பூரண நட்டம் மட்டும் செலுத்தப்படும் ஒப்பந்தம்; துறைமுக ஒப்பந்தம், பழுதுபார்த்தல் ஒப்பந்தம் போன்ற ஒப்பந்த வகைகளாகப் பெற்றுக் கொள்ள முடியும் என,
- கப்பல் சரக்குக் காப்புறுதி ஒப்பந்தமானது பெறுமதி குறித்த ஒப்பந்தம், திறந்த ஒப்பந்தம், எதிர்காலப் பாதுகாப்பு ஒப்பந்தம் போன்ற வகைகளாகப் பெற்றுக் கொள்ள முடியும் என,
- மோட்டார் வாகன விபத்துக் காப்புறுதியானது மோட்டார் வாகனங்களுக்கும், அவற்றில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கும், வெளிக் கட்சியினருக்கும் ஏற்படக்கூடிய இழப்புக்களுக்காக நட்டஈட்டுத் தொகையினைப் பெறும் பொருட்டு மோட்டார் உரிமையாளருக்கும் காப்புறுதி கம்பனிக்குமிடையே ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்த மொன்றாகும் என,
- மோட்டார் வாகனக் காப்புறுதியினைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும் என,
    - பூரண மோட்டார் வாகனக் காப்புறுதி
    - மூன்றாம் நபர்; தீ மற்றும் களவபாயக் காப்புறுதி
    - ஆகக் குறைந்த மூன்றாம் நபர் காப்புறுதி
- பூரண மோட்டார் வாகனக் காப்புறுதியின் மூலம் குறித்த வாகனத்திற்கும், அதில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கும் வெளியகக் கட்சியினருக்கும் சொத்துக் களுக்கும் ஏற்படும் இழப்புக்களுக்குக் காப்பீடு செய்யப்படும் என,
- மூன்றாம் நபர்; தீ மற்றும் களவபாயக் காப்புறுதியின் மூலம் குறித்த வாகனத்திற்குத் தீயினாலும் கலவரங்களினாலும் ஏற்படும் இழப்புக்களுக்கு மேலாக வெளியக நபர் களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படும் நட்டங்களுக்கு எதிராகக் காப்பீடு செய்யப் படுவதாக இருக்கும் என,
- ஆகக் குறைந்த மூன்றாம் நபர் காப்புறுதியின் மூலம் மூன்றாம் கட்சியினருக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படும் நட்டங்களுக்கு மட்டும் காப்பீடு செய்யப்படுவதுடன் எந்தவொரு மோட்டார் வாகனமும் வீதியில் செல்வதற்காகக் குறைந்தது மூன்றாம் நபர் காப்புறுதி ஒப்பந்தத்தையேனும் பெற்றிருத்தல் வேண்டும் என,
- தன் கீழ் பணியாற்றும் ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் வேளையில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதன் காரணமாக ஏற்படும் விபத்துக்கள், சுகவீனங்கள் என்பவற்றிற்கு இழப்பீடு வழங்குவதற்காக தொழில் வழங்குனர்களால் பெற்றுக் கொள்ளும் காப்புறுதி "ஊழியர் பொறுப்புக் காப்புறுதி" எனப்படும் என,
- நிலத்திலும் நீரிலும் பொருட்களைக் கொண்டு செல்லும்போது மட்டுமின்றிப் பொருட்களை வாகனத்தில் ஏற்றும் சந்தர்ப்பத்திருந்து இறக்கும் சந்தர்ப்பம் வரையிலும் ஏற்படக்கூடிய சேதங்களிலிருந்து காப்பீடு செய்தல் "பயணச் சரக்குக் காப்புறுதி" ஆகுமென,

- ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பணத்தை எடுத்துச் செல்லும்போது ஏற்படக்கூடிய இழப்புக்களைக் காப்பீடு செய்வதற்காகப் பெற்றுக் கொள்ளப்படும் காப்புறுதி "பயணக் காசுக் காப்புறுதி" ஆகும் என,
- வணிகர்களினால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்களிலிருந்து காப்பீடு செய்வதற்காகப் பெற்றுக் கொள்ளப்படும் காப்புறுதி "மக்கள் பொறுப்புக் காப்புறுதி" எனப்படும் என,

  **உதாரணம்:**

  உணவு, குடிபானங்களைப் போத்தல்களில் அடைத்து விற்பனை செய்யும் நிறுவனமானது அவைகள் விசமடைவதன் காரணமாக நுகர்வோருக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு எதிராகக் காப்புறுதி ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளல்.

**தேர்ச்சிமட்டம் 8.4 :** காப்புறுதி வணிக நிலைப்பாட்டிற்குப் பங்களிப்பினை வழங்கும் இலங்கையின் காப்புறுதிச் சந்தையின் பிரிவினரைத் தேடியறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- காப்புறுதிச் சந்தையின் அமைப்பினை விபரிப்பார்.
- இலங்கைக் காப்புறுதிச் சபையின் கடமைகளையும் பொறுப்புக்களையும் மதிப்பீட்டிற் குட்படுத்துவார்.
- இலங்கையில் செயற்பாட்டில் உள்ள காப்புறுதி நிறுவனங்களைப் பட்டியல்படுத்துவார்.
- காப்புறுதித் தரகர்களினாலும் காப்புறுதி முகவர்களினாலும் காப்புறுதி வணிகத்தின் வாழ்தன்மைக்குப் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறிவார்.
- இரட்டைக் காப்புறுதி, மீள் காப்புறுதி என்பதனை விபரிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கையின் காப்புறுதிச் சந்தையானது இலங்கைக் காப்புறுதிச் சபை, காப்புறுதிக் கம்பனிகள் காப்புறுதித் தரகர்கள், காப்புறுதி முகவர்கள் போன்றோர்களை உள்ளடக்கி யுள்ளன என,
- இலங்கையில் காப்புறுதித் தொழிலினை அபிவிருத்தி செய்தல், மேற்பார்வை செய்தல், முறைமைப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கைக் காப்புறுதிச் சபை நிறுவப்பட்டுள்ளது என,
- இலங்கைக் காப்புறுதிச் சபை பின்வரும் கருமங்களை நிறைவேற்றுகின்றது என,
    - காப்புறுதிக் கம்பனிகளைப் பதிவு செய்தல்.
    - காப்புறுதி முகவர்களைப் பதிவு செய்தல்.
    - காப்புறுதிக் கம்பனிகளது பதிவை இரத்துச் செய்தல்.
    - காப்புறுதி நிதியினை முதலீடு செய்தல் தொடர்பான எல்லையை நிர்ணயம் செய்தல்.
    - காப்புறுதித் தொழிலை முறைமைப்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் அரசிற்கு ஆலோசனை வழங்கல்.
    - காப்புறுதி வணிகம் தொடர்பான அரச கொள்கைகளையும் செயல் திட்டங்களை யும் நடைமுறைப்படுத்தல்.
    - காப்புறுதி வணிகத்தின் மேம்பாட்டிற்காக செஸ் (CESS) வரியை விதித்தல்.
- காப்புறுதி வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக 2003 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்கமைத்தல் சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றே காப்புறுதிக் கம்பனி எனப்படும் என,

- பதிவு செய்யப்பட்டவர்களாகவும் தரகுக் கட்டணத்தை அல்லது தரகுப் பணத்தை எதிர்பார்ப்பவர்களாகவும் காப்புறுத்துவோனொருவருடன் காப்புறுத்துவோனொரு வராகவும் காப்புறுதி ஒப்பந்தத்தை உடையவராக அல்லது காப்புறுதி செய்தல் அல்லது மறு காப்புறுதி செய்தலுக்காக எதிர்பார்க்கும் ஒருவருக்குக் காப்புறுதி வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு இடை நடுவர்களொருவராகவும் செயற்படுகின்ற வர்கள் காப்புறுதித் தரகராவர் என,

- காப்புறுதித் தரகரொருவரிடம் அல்லது தரகருடன் காப்புறுதி முகவர் எனும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ள தரகுப் பணத்தைப் பெறும் நோக்கில் அக்காப்புறுத்துவோனது தரகுக்காக காப்புறுதி வணிகம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் நபரொருவர் காப்புறுதி முகவராவார் என,

- காப்புறுதி முகவரொருவருக்குக் குறித்த ஒரு காப்புறுதிக் கம்பனியைத் தவிர வேறு காப்புறுதிக் கம்பனிகளுடன் தொடர்புகளை வைத்திருக்க முடியாது என,

- காப்புறுதி முகவர்கள் எனப்படுபவர்கள் காப்புறுதியில் காணப்படும் அனுகூலங்களை அறிமுகப்படுத்தி தனிநபர்கள் காப்புறுதியில் இணைவதைத் தூண்டுவதும் காப்புறுதி செய்பவர்களுக்கு உரிய வேளைகளில் இழப்பீட்டுத் தொகைகளைப் பெற்றுக் கொடுப்ப தற்கும் உதவு கின்றார்கள் என,

- விபத்துக் காப்புறுதியில் கூடிய வருமானம் தரும் சொத்துக்கள் தொடர்பாகக் காணப்படும் நட்ட அச்சத்தினைப் பகுதிபகுதியாக வேறுபடுத்திப் பல காப்புறுதிக் கம்பனிகளில் ஒப்படைக்கப்படும் அதேவேளை அபாயமொன்று ஏற்படும்பொழுது ஒவ்வொரு கம்பனியும் பொறுப்பேற்ற நட்ட அச்சத்தின் பெறுமானங்களுக்கேற்ப அக் கம்பனிகள் மூலமும் இழப்பீடு வழங்கப்படுவது இரட்டைக் காப்புறுதி எனப்படும் என,

- காப்புறுதி கம்பனியொன்றினால் பொறுப்பேற்ற காப்புறுதி நட்ட அச்சமொன்றை அந் நிறுவனத்தின் மூலம் மற்றோர் காப்புறுதிக் கம்பனியில் / கம்பனிகளில் காப்புறுதி செய்தல் மறுகாப்புறுதி எனப்படும் என,

- மறு காப்புறுதியில் காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்களுக்கு சேதம் ஏற்படும் பொழுது மறு காப்புறுதி செய்யப்பட்ட கம்பனி மூலம் காப்புறுதி செய்பவருக்கு இழப்பீடு செலுத்தப்படுவதனால் காப்புறுத்துவோனுக்கு ஏற்படும் நட்டத்தை இழிவு படுத்துவதற்கு முடியுமாக இருப்பது மறுகாப்புறுதியின் மூலம் காப்புறுத்துவோன் பெறும் அனுகூலமாகும் என,

- மறு காப்புறுதியின் மூலம் காப்புறுதி செய்பவர்கள் பின்வரும் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வார்கள் என,

    - மறு காப்புறுதியின் மூலம் காப்புறுதிக் கம்பனிகளது பொறுப்புக்கள் பரவலாக் கப்படுவதனால் காப்புறுதி செய்பவரிடம் அறவிடப்படும் காப்புறுதிக் கட்டணம் குறைந்தளவில் காணப்படும்.

    - அதிக பெறுமதி கொண்ட சொத்துக்களைக் காப்புறுதி செய்ய முடியுமாக இருப்பதனால் இழப்பீடு கிடைக்கும் என்ற உறுதிப்பாடும் இருக்கும்.

**தேர்ச்சி 9.0** : வணிகக் கருமங்களின் வெற்றிக்கு போக்குவரத்தை விளைதிறனுடையவாறு பயன்படுத்துவதன் அவசியத்தை எடுத்துக் காட்டுவார்.

**தேர்ச்சிமட்டம் 9.1** : வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்காகப் பயன்படுத்தக்கூடிய போக்குவரத்து முறைகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங் களையும் ஒப்பிடுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை** : 05

**கற்றல் பேறுகள்:**

- வணிக கருமங்களின் வெற்றிக்குத் தேவையான சேவையொன்றாகப் போக்குவரத்தை அறிமுகப்படுத்துவார்.
- போக்குவரத்து அமைப்பொன்றின் அடிப்படைகளை விபரித்து ஒவ்வொரு அடிப்படை களுக்குமான உதாரணங்களை முன்வைப்பார்.
- மாற்றுப் போக்குவரத்து முறைகளைச் சுட்டிக்காட்டி ஒவ்வொன்றினதும் பொதுவான அனுகூலங்கள் பிரதிகூலங்களையும் ஒப்பிடுவார்.
- போக்குவரத்துச்சேவையின் முக்கியத்துவத்தினைக் காட்டி அதனைச் சிறப்பாக்கிக் கொள்வதற்குத் தேவையான முன்மொழிவுகளை முன்வைப்பார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்யக்கூடிய முறைகளை மாணவர் களிடம் கேட்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்திச் கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
    - கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்வதாயின் பேரூந்து, மோட்டார் வான், மோட்டார் சைக்கிள், புகையிரதம், விமானம், கப்பல், படகு போன்ற பல்வேறு முறைகளைப் பயன்படுத்தலாம் என,
    - அதற்கேற்ப போக்குவரத்திற்கு பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றது என,
        - தெருப் போக்குவரத்து
        - புகையிரதப் பாதைப் போக்குவரத்து
        - வான்வழிப் போக்குவரத்து
        - நீர்வழிப் போக்குவரத்து

### கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- போக்குவரத்து முறைகள் நான்கு கீழே தரப்படுகின்றன. அவற்றில் உங்களது குழுவிற்கு கிடைக்கும் போக்குவரத்து முறை தொடர்பாகக் கவனஞ் செலுத்தவும்.
    - தெருப் போக்குவரத்து
    - புகையிரதப் பாதைப் போக்குவரத்து
    - வான் போக்குவரத்து
    - நீர்ப் போக்குவரத்து
- தலைப்பினைச் சுருக்கமாக இனங்காட்டவும்.
- தலைப்பிற்குரியதாகப் பயன்படுத்தப்படுகின்ற போக்குவரத்து வழிகளைக் குழுக் கலந்துரையாடல் மூலம் இனங்காணவும்.
- அந்த வழிகளில் பயணிக்கும் வாகனங்களின் பட்டியலொன்றைத் தயாரிக்கவும்.
- அந்த வாகனங்களைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய வலுவினை (சக்தியினை) வெவ்வேறாகக் காட்டவும்.
- அந்த வாகனங்கள் நிறுத்தப்படும் தரிப்பிடங்களைக் குழுக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொண்டு வரவும்.
- அப்போக்குவரத்து முறை பின்வரும் ஒவ்வொரு தரப்பினருக்கும் முக்கியத்துவமாக அமைகின்ற முறையினைத் தெளிவுபடுத்தவும்.
    - தனிநபர்களுக்கு
    - வணிகர்களுக்கு
- உங்களுக்குக் கிடைத்த போக்குவரத்து முறை, போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பொருத்தமாக அமைவது எச்சந்தர்ப்பத்தில் என்பதைத் தெளிவுபடுத்தவும்.
- குறிப்பிட்ட போக்குவரத்து முறையின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குழுக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணரவும்.
- அப்போக்குவரத்து முறையினைச் சிறப்பாக்கிக் கொள்வதற்கு உங்களது முன்மொழிவு களை முன்வைக்கவும்.
- உங்களது தேடல்களை ஆக்கபூர்வமாக முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்குத் தயாராகவும்.

### பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- வணிக நிறுவனங்களினதும், தனிநபர்களினதும் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்காகத் துணைச் சேவைகளில் ஒன்றாகிய போக்குவரத்து முக்கிய கருமமாற்றுகின்றது என,
- போக்குவரத்து ஒரு சாதனமொன்று மாத்திரமல்ல பல அடிப்படைகள் சமஅளவில் விருத்தியடைந்து உருவாக்கப்பட்டுள்ள அமைப்பொன்றாகுமென,

- அப்போக்குவரத்துகளின் அடிப்படை அம்சங்களைப் பின்வருமாறு விபரிக்க முடியுமென,
    - வழி / பாதை - போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு வழிகளாகும்.

      **உதாரணம்:** பெருந்தெரு, புகையிரதப் பாதை, நீர்வழி, ஆகாய வழி, குழாய் வழி
    - ஊடகம் / சாதனம் - பல்வேறு பாதைகளில் பயணிக்கும் வாகனங்கள் ஊடகமாகும்.

      **உதாரணம்:** படகு, கப்பல், உலங்கு வானூர்தி, ஆகாய விமானம்
    - சக்தி / வலு - வெவ்வேறு சாதனத்தையும் இயங்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவது சக்தி அல்லது வலுவாகும்.

      **உதாரணம்:** மனித முயற்சி, மிருக வலு, காற்று மற்றும் சூரிய ஒளி போன்ற இயற்கைச் சக்திகள், நிலக்கரி, மசகு எண்ணெய், மின்சாரம், எரிவாயு
    - தரிப்பிடம் / நிலையம் - போக்குவரத்துச் சாதனம் பிரயாணக் கருமத்தின் போது நிறுத்தப்படுகின்றவை தரிப்பிடங்களாகும்.

      **உதாரணம்:** பேரூந்துத் தரிப்பிடம், புகையிரத நிலையம், விமான நிலையம், துறைமுகம்
- தெருப் போக்குவரத்தின் அனுகூலங்கள் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - தேவைக்குப் பொருந்தக்கூடிய முறையில் ஊடகத்தினை தெரிவு செய்யக் கூடியதாயிருத்தல்.
    - நாடு பூராவும் பரந்து காணப்படல்.
    - தேவைப்படும் எவ்வேளையிலும் பெருந்தெருவினைப் பயன்படுத்தக்கூடியதாயிருத்தல்.
    - பெரும்பாலும் பயணம் முடியும் வரையிலும் ஒரேவகையான போக்குவரத்துச் சாதனத்தைப் பயன்படுத்தக்கூடியதாயிருத்தல்.
    - குறுகிய தூரப் பயணத்திற்காக வேகமான முறையொன்றாயிருத்தல்.
- தெருப் போக்குவரத்தின் பிரதிகூலங்களில் சில கீழே காட்டப்படுகின்றன என,
    - பெருமளவு பொருட்களைக் கொண்டு செல்வது சிரமமானது.
    - பெருந் தெருக்களைப் பராமரிப்பது சிரமமானது.
    - பயணத் தாமதமும் விபத்துக்கள் அதிகரித்தலும்.
    - வானிலைத் தன்மைக்கேற்ப தடைகள் ஏற்படல்.

- புகையிரதப் போக்குவரத்தில் காணப்படும் அனுகூலங்களில் சில பின்வருமாறு என,
    - பெருமளவு பொருட்களையும், பயணிகளையும் ஒரே முறையில் கொண்டு செல்லக்கூடியதாக இருத்தல்.
    - தெருப் போக்குவரத்தை விடப் பாதுகாப்பானதாகயிருத்தல்.
    - பொருட்களின் தன்மைக்கேற்ப பெட்டிகளைப் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்.
    - ஏனைய போக்குவரத்து முறைகளுடன் ஒப்பிடும்போது கட்டணம் குறைவாயிருத்தல்.
    - சிற்றுண்டிச்சாலை, உறங்கல் இருக்கைப்பெட்டி, வெளிக்காட்சிகளைப் பார்வையிடக்கூடிய விசேட பெட்டி போன்ற பல வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமாயிருத்தல்.
- புகையிரதப் போக்குவரத்து முறையில் காணப்படுகின்ற பிரதிகூலங்களில் சில பின்வருமாறு:
    - புகையிரதப்பாதைகள் நாடுபூராவும் பரந்து காணப்படாமை.
    - தேவையான எந்த நேரத்திலும் சேவையினைப் பெற்றுக் கொள்ள முடியாமை.
    - பயணம் முடியும் வரையில் இதனைப் பயன்படுத்த முடியாமையால் வேறு போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்த வேண்டியேற்படல்.
    - மின்சார சமிக்ஞை தடைப்படல், புகையிரதப்பாதை பழுதடைதல் போன்றவைகள் காரணமாக தாமதமேற்படல்.
- நீர்ப்போக்குவரத்து முறையின் அனுகூலங்களும், பிரதிகூலங்களும் கீழே காட்டப்படுகின்றன என,

    **அனுகூலங்கள்**

    - சர்வதேச வியாபாரத்திற்கு உதவுதல்.
    - பெருமளவுப் பொருட்களை ஒரே முறையில் கொண்டு செல்ல முடிதல்.
    - பொருட்களின் தன்மைக்கேற்ப மிதவைகளைத் தெரிவு செய்ய முடியுமாயிருத்தல்.

    **பிரதிகூலங்கள்**

    - கப்பல் சேவை இலகுவாக கிடைக்கக்கூடியதல்ல.
    - கூடுதலான காலம் எடுத்தல்.

- ஆகாயப் போக்குவரத்து முறையின் அனுகூலங்களும், பிரதிகூலங்களும் கீழே காட்டப்படுகின்றன.

  **அனுகூலங்கள்**

  - வேகத்தில் மிகவும் உயர்நிலையிலிருத்தல்.
  - விரைவாக அழியக்கூடிய பொருட்களை கொண்டு செல்வதற்கு பொருத்தமாயிருத்தல்.
  - பாதைப் பராமரிப்புச் செலவுகள் இல்லாதிருத்தல்.

  **பிரதிகூலங்கள்**

  - பாரிய, நிறையில் கூடிய பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பொருத்தமற்றதாயிருத்தல்.
  - போக்குவரத்துச் செலவு மிக அதிகமாயிருத்தல்.
  - விபத்துக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாயிருத்தல்.
  - தேவையான நேரத்திற்குப் பெற்றுக் கொள்ள முடியாதிருத்தல்.

- போக்குவரத்து முறையானது வணிகர்களைப் போன்றே நுகர்வோருக்கும் முக்கியத்துவமாக அமைகின்ற முறையினைக் கலந்துரையாடவும்.

**தேர்ச்சிமட்டம் 9.2 :** போக்குவரத்து முறையொன்றில் இருக்கக்கூடிய பண்புகளைத் தேடியறிந்து வினைதிறன் மிக்க போக்குவரத்து முறையினைத் தெரிவு செய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- பொருத்தமான போக்குவரத்து முறையொன்றினைத் தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களைத் பரிசீலிப்பார்.
- போக்குவரத்து முறையினை / சாதனத்தைத் தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை அறிவதன் மூலம் பொருத்தமான போக்குவரத்து முறையினை / சாதனத்தை தெரிவு செய்வார்.
- சிறப்பான போக்குவரத்து முறையொன்றில் இருக்கவேண்டிய பண்புகளை விபரிப்பார்.
- சிறப்பான போக்குவரத்து முறையொன்றிற்கான புதிய முன்மொழிவுகளை முன்வைப்பார்.
- பொருட்கள் அல்லது பயணிகள் போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களைத் தெளிவுபடுத்துவார்.
- போக்குவரத்தின் புதிய போக்குத் தொடர்பாக விளக்குவார்.
- போக்குவரத்தின் எதிர்காலத்தை எதிர்வு கூறுவார்.
- பொருட்கள், பயணிகள் பிரயாணத்திற்காகவுள்ள மாற்றுப் போக்குவரத்து முறை களையும், சாதனங்களையும் ஒழுங்குபடுத்துவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

- அவர்களது பிரதேசத்திற்கு மசகு எண்ணெயினைப் பெற்றுக் கொள்ளும் முறையினை மாணவர்களிடம் கேட்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்திக் கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
    - பிரதேசத்திற்கு மசகு எண்ணெய் கிடைக்கப் பெறுவது மசகு எண்ணெய் வகைகளைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற விசேட தாங்கிகள் மூலமாகுமென,
    - அது தெருக்களிலும், புகையிரதப் பாதைகளிலும் பயணிக்கும் சாதனமொன்றாகு தென,
    - அச்சாதனம் மிகவும் பாதுகாப்பானதுடன், இலங்கையில் அனைத்துப் பிரதேசங் களையும் சென்றடையக்கூடிய போக்குவரத்து முறையொன்றினூடாகச் செல்கின்றது என,
    - மசகு எண்ணெய்ப் போக்குவரத்திற்காக அந்த ஊடகத்தினைத் தெரிவு செய்யும் போது கொள்ளளவு, பாதுகாப்பு போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படு மென,

## கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- போக்குவரத்துச் சேவைகளைப் பெறவேண்டிய நான்கு சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படு கின்றன. அவற்றில் உங்களது குழுவிற்கு கிடைக்கும் சந்தர்ப்பம் தொடர்பாகக் கவனஞ் செலுத்தவும்.
    - அநுராதபுர வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு நோயாளியொருவரை கொண்டு செல்லல்.
    - பண்டாரவளைப் பூந்தோட்டத்திலிருந்து கொழும்பு நகரத்தில் அமைந்துள்ள பூச்சாலைக்கு இயற்கைப் பூக்களைக் கொண்டுவரல்.
    - கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு பெருமளவு அரிசியினைக் கொண்டு செல்லல்.
    - அம்பாந்தோட்டையிலிருந்து, பதுளையிலுள்ள வியாபார நிலைய மொன்றுக்குப் பசும்பாலினைக் கொண்டு செல்லல்.
- குறிப்பிட்ட கருமம் தொடர்பாகப் பயன்படுத்தக்கூடிய சகல போக்குவரத்து முறைகளை யும் (வழிகளையும்) குழுக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொண்டு வரவும்.
- அந்த ஒவ்வொரு வழிகளிலும் பயணிக்கும் சாதனங்களில் உங்களின் செயற்பாட் டிற்காக பயன்படுத்தக்கூடிய சகல சாதனங்களையும் பட்டியற்படுத்தவும்.
- மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வழிகளிலும் அவைகளுக்குரிய ஊடகங்களில் உங்களது செயற்பாட்டிற்கு மிகவும் பொருத்தமான வழியினையும் ஊடகத்தினையும் குழுக் கலந்துரையாடலின் மூலம் தீர்மானிக்கவும்.
- அந்த வழியினையும், ஊடகத்தினையும் தெரிவு செய்வதற்கு உங்களது குழுவினால் கவனத்தில் கொள்ளப்பட்ட விடயங்களை ஒழுங்குபடுத்தவும்.
- நீங்கள் தெரிவு செய்த வழியில் பொருட்களை அல்லது சேவைகளைக் கொண்டு செல்லும்போது பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்களை இனங்காணவும்.
- அந்தப் போக்குவரத்துப் பாதையினதும் ஊடகத்தினதும் நவீன போக்கினைத் தரவும்.
- உங்களது தேடலை ஆக்கபூர்வமாக முழுவகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்த மாகவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- பொருத்தமான போக்குவரத்து முறையொன்றில் இருக்கவேண்டிய பண்புகளில் சிலவற்றைக் கீழே காட்டியுள்ளவாறு பட்டியற்படுத்த முடியும் என,
    - பொருளின் தன்மை
    - தூரம்
    - வேகம்
    - பாதுகாப்பு
    - கிரயம்
    - கொள்ளளவு / இயலளவு
    - கிடைப்பனவுத் தன்மை
    - நியமமும், சர்வதேச அங்கீகாரமும்

- போக்குவரத்து முறையொன்றுடன் தொடர்புடையதாகப் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் கீழே காட்டப்படுகின்றன என,

| **போக்குவரத்து முறை** | | | | **பயன்படுத்தப்படும் ஆவணங்கள்** |
|---|---|---|---|---|
| தெருப்போக்குவரத்து | - | பொருட்கள் போக்குவரத்து | : | ஒப்படைக்கும் கட்டளை / ஒப்படைக்கும் சீட்டு |
| | | பயணிகள் போக்குவரத்து | : | பயணச்சீட்டு / பருவகால அனுமதிச்சீட்டு / போக்குவரத்து ஆணைச்சீட்டு |
| கடல்வழிப் போக்குவரத்து | - | பொருட்கள் போக்குவரத்து | : | கப்பல் சீட்டு / வார்நாமம் |
| | | பயணிகள் போக்குவரத்து | : | கப்பல் பயணச்சீட்டு |
| ஆகாயவழிப் போக்குவரத்து | - | பொருட்கள் போக்குவரத்து | : | விமானவழிப் பற்றுச்சீட்டு |
| | | பயணிகள் போக்குவரத்து | : | விமான டிக்கட் அனுமதிச்சீட்டு |
| புகையிரதப் போக்குவரத்து | - | பொருட்கள் போக்குவரத்து | : | புகையிரத வார் நாமம் |
| | | பயணிகள் போக்குவரத்து | : | அனுமதிச்சீட்டு (டிக்கட் / பருவகால அனுமதிச்சீட்டு / போக்குவரத்து ஆணைச்சீட்டு |

- போக்குவரத்துத்துறையின் நவீன போக்கானது விருத்தியடைந்து வருவதுடன் அவற்றுக்குப் பின்வரும் உதாரணங்களைக் காட்டமுடியும்.
    - சுரங்க வழிப் போக்குவரத்து
    - மேம்பாலங்களை அமைத்தல்
    - அதிவேக நெடுஞ்சாலைகளை உருவாக்குதல்
    - கம்பிகளைப் பயன்படுத்தல்
    - மின்சார தொடரூர்திகளைப் பயன்படுத்தல் (Electric train)

**தேர்ச்சி 10.0** : வணிகத்தின் வெற்றிக்குத் தொடர்பாடலை வினைத்திறனுடைய வகையில் பயன்படுத்துவதன் அவசியத்தை உறுதிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 10.1** : தொடர்பாடல் செயற்பாடொன்றின் வெற்றிக்கு உறுதுணையாக அமையும் சாதனங்களைத் தேடியறிவர்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை** : 05

**கற்றல் பேறுகள்:**

- தொடர்பாடலைத் தெளிவுபடுத்துவார்.
- வணிகக் கருமங்களில் தொடர்பாடலின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.
- சமூகக் கருமங்களுக்காகத் தொடர்பாடலின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார்.
- தொடர்பாடல் செயன்முறையினை வரைபடம் மூலம் முன்வைப்பார்.
- தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைகளை தெளிவுபடுத்துவார்.
- வினைதிறன்வாய்ந்த தொடர்பாடலொன்றில் இருக்க வேண்டிய பண்புகளின் பட்டியலொன்றைத் தயாரிப்பார்.
- செய்தியொன்றைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கவனத்தில் கொண்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான செய்தியொன்றைத் தயாரிப்பார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- வகுப்பின் முன்னால் அமர்ந்திருக்கும் மாணவன் ஒருவரை அழைத்து ஏதாவது செய்தியொன்றை அவருக்குக் கூறவும். அதனை அருகிலுள்ள மாணவனுக்குத் தெரிவிக்குமாறு ஆலோசனை கூறவும். இறுதியாக உள்ள மாணவன் பெற்ற செய்தியினைக் கரும்பலகையில் எழுதச் செய்யவும்.
- ஆரம்பத்திலிருந்த மாணவனுக்கு கொடுத்த செய்தியானது இறுதியாக உள்ள மாணவனுக்கும் கிடைத்ததா என்பதைக் கேட்கவும். செய்தி வேறுபடுவதற்கான காரணங்களை மாணவர்களிடம் கேட்கவும்.
- செய்தி மாற்றமடைந்ததாயின் அதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காரணிகளை வெளிப்படுத்திக் கொள்வதற்கான கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.
    - செய்தியை வழங்கியவர் செய்தியை தெளிவாக வழங்காமை.
    - செய்தியை பெற்றவர் தெளிவாகக் கேட்காமை.
    - செய்தி தெளிவற்றதாயிருத்தல்.
    - செய்தியில் காணப்பட்ட சொற்களை விளங்கிக் கொள்ள முடியாமை
- வினைதிறனான தொடர்பாடலிற்குச் சரியான செய்தித் தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டுமென,

## கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- தொடர்பாடலை மேற்கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள் சில கீழே தரப்படுகின்றன. அவற்றில் உங்களது குழுவிற்குக் கிடைக்கும் சந்தர்ப்பம் தொடர்பாகக் கவனஞ் செலுத்தவும்.
    - பாடசாலை நேரத்தின் பின்னர் சகல பகுதித் தலைவர்களுக்குமான கூட்டமொன்று அதிபரினால் நடாத்தப்படுகின்றது என உரிய பகுதித் தலைவர்களுக்கு அறிவித்தல்.
    - திடீரென சுகவீனமுற்ற நிறுவனத்தின் ஊழியரொருவர் வேலைக்கு சமூக மளிக்க முடியாமை தொடர்பாக நிறுவனத்திற்கு அறிவித்தல்.
    - நிறுவனத்தினால் தீர்மானிக்கப்பட்ட விசேட விடுமுறை நாளொன்று தொடர்பாக நாடுபூராகவும் அமைக்கப்பட்டுள்ள தமது அனைத்துக் கிளை களுக்கும் அறிவித்தல்.
- உங்களது குழுவிற்குக் கிடைத்த செய்தியில் செய்தியை அனுப்புவர், செய்தி பெறுபவர்களைக் குழுக்கலந்துரையாடல் மூலம் இனங்காணவும்.
- அனுப்பவரினால் அனுப்பவேண்டிய செய்தியினை குழுக்கலந்துரையாடல் மூலம் தயாரித்துக் கொள்ளவும்.
- அச்செய்தியினை அனுப்பக்கூடிய முறையினை முன்மொழியவும்.
- நீங்கள் தயாரித்த செய்தி அனுப்புவரிலிருந்து பெறுபவர் வரை அனுப்பும்போது இடம்பெற்ற நடவடிக்கைகளை வரைபடம் மூலம் காட்டவும்.
- மேற்குறிப்பிட்ட உங்களது குழுவினால் தயாரிக்கப்பட்ட செய்தியினைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொண்ட விடயங்களை ஒழுங்குபடுத்தல்.
- தொடர்பாடல் பின்வரும் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவமானது என்பதைக் காட்டவும்.
    - வணிகச் செயற்பாடுகளுக்காக
    - சமூகச் செயற்பாடுகளுக்காக
- உங்களது தேடலை ஆக்கபூர்வமாக முழுவகுப்பிற்கும் முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- ஒரு தரப்பிலிருந்து இன்னொரு தரப்பினருக்கு அல்லது பல தரப்பினர்களுக்குத் தகவல்களை அனுப்புதல், பெறுதல், தகவல்களை விளங்கிக் கொள்ளுதலும் பகிர்ந்து கொள்ளுதலும் என்பவைகள் தொடர்பாக விபரிக்க முடியும் என,
- வணிகக் கருமங்களுக்காகத் தொடர்பாடல் பின்வரும் முறைகளில் முக்கியத்துவ முடையது என,
    - வியாபாரக் கொடுக்கல் வாங்கலின்போது உரிய தரப்பினர்களிடையே கருத்துக் களை பரிமாற்றிக் கொள்வதற்காக
    - உரிமையாளர் - ஊழியர் தொடர்பினைப் பேணுவதற்காக
    - விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக
    - மனித, பௌதீக வளங்களைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்வதற்காக

- சமூக ரீதியாக சகல செயற்பாடுகளுக்கும் தொடர்பாடல் முக்கியத்துவமுடையது என,
- தொடர்பாடல் செயன்முறையைப் பின்வருமாறு வரைபடம் மூலம் காட்ட முடியும் என,




- தொடர்பாடலின் அடிப்படை அம்சங்கள் கீழே காட்டப்படுகின்றன என,
    - அனுப்புவர்
    - செய்தி
    - ஊடகம்
    - பெறுபவர்
    - துலங்கல்
    - பின்னூட்டல்
- வினைதிறனான தொடர்பாடலொன்றில் இருக்க வேண்டிய பண்புகளைப் பின்வருமாறு பட்டியல்படுத்தலாம் என,
    - செம்மை
    - சுருக்கம்
    - பூரணத்துவம்
    - தெளிவு
    - நெறிமுறையான தன்மை
    - உறுதியான தன்மை
    - அங்கீகரிக்கப்படுவது / கவனத்தை ஈர்க்கக்கூடியது
    - குறைவான கிரயம்
    - விரைவு / வேகம்
- செய்தியொன்றினைத் தயாரிக்கும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டுமென,
    - செய்தியின் தன்மை
    - முழுமையான தன்மை
    - சரியான தன்மை
    - ஒழுக்கமான தன்மை
    - செய்தியைப் பெறுபவருக்கு விளங்கக்கூடிய தன்மை
    - சுருக்கமான தன்மை
    - உறுதியான தன்மை

**தேர்ச்சிமட்டம் 10.2:** பல்வேறுபட்ட தொடர்பாடல் முறைகளைத் தேடியறிந்து வினைதிறன்மிக்க தொடர்பாடல் சேவையினைத் தெரிவு செய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- தொடர்பாடல் முறைகளை இனங் காண்பார்.
- அந்த ஒவ்வொரு தொடர்பாடல் முறைகளையும் காட்டி, அந்த ஒவ்வொரு முறைக்கு மான உதாரணங்களை முன்வைப்பார்.
- நவீன இலத்திரனியல் தொடர்பாடல் முறைகளை வெவ்வேறாகத் தெளிவுபடுத்துவார்.
- வணிக நிறுவனமொன்றில் பயன்படுத்தப்படுகின்ற உள்ளக, வெளியகத் தொடர்பாடல் முறைகளைப் பட்டியல்படுத்துவார்.
- தொடர்பாடல் செயன்முறைக்குள்ள தடைகளைத் தெளிவுபடுத்தி அவற்றை அகற்று வதற்கான முறைகளை முன்மொழிவார்.
- ஒவ்வொரு தொடர்பாடல் முறைகளிலுமுள்ள அனுகூலங்களையும் பிரதிகூலங்களை யும் ஒப்பிடுவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- அதிபர் பாடசாலையின் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கும் பாடவேளை மாற்றத்தினை அறிவிப்பதற்கும் மாணவர்களின் அடைவுமட்டத்தினை பெற்றோர்களுக்கு அறிவிப்ப தற்கும் பாடசாலையில் பயன்படுத்தும் தொடர்பாடல் முறைகளை மாணவர்களிடம் கேட்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிப்படுத்திக் கலந்துரையாடலை நடாத்தவும்.
    - அதிபர் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு வாய்மொழித் தொடர்பாடல் முறை யினைப் பயன்படுத்தப்படுகின்றார் என,
    - பாடவேளைகளின் தொடக்கம் - முடிவுகளை அறிவிப்பதற்கு மணிஒலிகள் பயன்படுத்தப்படுகின்றன என,
    - மாணவர் அடைவுமட்டத்தினைப் பெற்றோர்களுக்கு அறிவிப்பதற்கு எழுத்து மூல தொடர்பாடல் பயன்படுத்தப்படுகின்றது என,
    - இவைகள் தொடர்பாடல் முறைகள் என,
    - இதேபோன்று வணிக நிறுவனங்களும் எழுத்து, வாய்மொழி, சமிக்ஞை தொடர்பால்களைப் பயன்படுத்துகின்றன என,

## கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:

- தொடர்பாடல் முறைகளைக் காட்டும் படங்களில் சில கீழே காட்டப்படுகின்றன. அவற்றில் உங்களது குழுவிற்குக் கிடைக்கும் தொடர்பாடல் முறை தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.



**தொலைபேசி உரையாடல்**



**விளம்பரப் பலகை (Notice board)**



**வீதி / தெரு வர்ண மின்சார சமிக்ஞை**

- உங்களது குழுவிற்குக் கிடைத்த தொடர்பாடல் முறையினைத் தெளிவுபடுத்துவதற்கு முயற்சிக்கவும்.
- அம்முறையின் மூலம் தொடர்பாடல் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்களை இயலுமான வரை முன்வைக்கவும்.
- அவற்றை உள்ளக (அக) வெளியக (புற) தொடர்பாடல் முறைகளாக வேறுபடுத்திக் காட்டவும்.
- உங்களது குழுவிற்குக் கிடைத்த தொடர்பாடல் முறைகளுக்குரிய இலத்திரனியல் தொடர்பாடல் முறைகள் ஒவ்வொன்றையும் வெவ்வேறாகத் தெளிவுபடுத்தவும்.
- உங்களது குழுவிற்குக் கிடைத்த தொடர்பாடல் முறையின் மூலம் தொடர்பாடலை மேற்கொள்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள், பிரதிகூலங்களை வெவ்வேறாக ஒழுங்குபடுத்தவும்.
- அத்தொடர்பாடல் முறையினை நடைமுறையில் பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய தடைகளைச் சுட்டிக் காட்டவும்.
- அத்தடைகளை இழிவுபடுத்திக் கொள்வதற்காக உங்களது முன்மொழிவுகளை முன்வைக்கவும்.
- உங்களது தேடலை ஆக்கரீதியாக முழுவகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:

- தொடர்பாடலுக்குப் பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றது என,
  - வாய்மொழி முறை
  - எழுத்து முறை
  - சமிக்ஞையும் குறியீடும்

- பல்வேறு தொடர்பாடல் முறைகளின் மூலம் தொடர்பாடல் இடம்பெறுகின்ற முறைகளுக்கான உதாரணங்கள் கீழே காட்டப்படுகின்றன என,

| | | |
|---|---|---|
| வாய்மொழி | உள்ளக(அக) | **உதாரணம்:-** கலந்துரையாடல், கருத்தரங்கு, கூட்டம், உள்ளக தொலைபேசி (இன்டகொம்) |
| | வெளியக (புற) | **உதாரணம்:-** தொலைபேசி, கைத்தொலைபேசி, ஒலிபெருக்கி |
| எழுத்து | உள்ளக(அக) | **உதாரணம்:-** ஞாபகக் குறிப்புப்பத்திரம் (memo) அறிவித்தல், அறிவிப்புப்பலகை |
| | வெளியக (புற) | **உதாரணம்:-** கடிதம், பத்திரிகை, சஞ்சிகை, பதாதை, அறிவித்தல், தொலைநகல் செய்தி |
| சமிக்ஞைகளும் குறியீடும் | உள்ளக | **உதாரணம்:-** மணி, மின்மணி, பாதைக்குறியீடு |
| | வெளியக | **உதாரணம்:-** பொதிக்குறியீடு, அபாயத்தை உணர்த்தும் ஒலி, புகையிரதப் பாதை, தெருப்பாதை சமிக்ஞை. |

- வணிக நிறுவனமொன்று பயன்படுத்துகின்ற உள்ளக, வெளியகத் தொடர்பாடல் முறைகளைப் பின்வருமாறு பட்டியல்படுத்த முடியுமென,
- உள்ளக
    - அறிவித்தல் பலகை
    - கூட்டம்
    - உள்ளகத் தொலைபேசி (இன்டகொம்)
    - சுற்றறிக்கை
    - கடிதம்
    - ஞாபகக் குறிப்புப்பத்திரம்
    - அறிக்கை
- வெளியக
    - தொலைபேசி
    - வெளியகக் கடிதங்கள்
    - வெளியக அறிவித்தல்கள்
    - அறிவித்தல்
    - பதாதை

- வர்த்தமானி அறிவித்தல்
- பத்திரிகைகள்
- தொலைக்காட்சி
- இலத்திரனியல் கடிதம்
- தொலைநகல்

- நவீன இலத்திரனியல் தொடர்பாடல் முறைகளில் சிலவற்றை பின்வருமாறு தெளிவு படுத்த முடியும் என,

### இணையம் (Internet)

பாரிய பரப்பினை உள்ளடக்கி கணினியினை சர்வதேச ரீதியாக இணைக்கும் கணினி இணைப்பாகும். இங்கு பல்வேறு இடங்களில் உட்செலுத்தப்படும் தகவல்களை தனிப்பட்ட கணினி மூலம் பெற்றுக் கொள்ள முடியுமாயிருத்தல்.

### இலத்திரனியல் தபால் (E-mail)

கணினியிலிருந்து கணினிக்கு இணைய வலைப்பின்னலினூடாகச் செய்திகளைப் பரிமாற்றிக் கொள்வது இலத்திரனியல் தபாலாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. தனிப்பட்ட கணினிகளுக்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள "மொடம்" ஒன்றினை அல்லது சுட்டியைப் பயன்படுத்திச் செய்தியைப் பெறுபவரின் இலத்திரனியல் தபால் முகவரியை அச்சிட்டு குறிப்புக்களையும், நீண்ட ஆவணங்களையும் கூட இலத்திரனியல் தபால் மூலம் அனுப்ப முடியும்.

### அக இணையம் (Intranet)

வெப் தொழில் நுட்பத்தையும் இணையத் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு நிறுவனமொன்றினுள் விரிவான தொடர்புகளை இணையத்தினூடாக ஏற்படுத்திக் கொள்வதாகும். இணையத்தினை அடிப்படையாகக் கொண்டு வணிக நிறுவனத்தினுள் உள்ள தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனம் சார்ந்த வலைப்பின்னலாகும்.

### குரல் அஞ்சல் (Voice Mail)

அனுப்புவரினால் தொலைபேசியில் வாய்மொழி மூலம் வழங்கப்படுகின்ற செய்தியினை வலைப்பின்னலினூடாக வெளிப்படுத்தி பின்னர் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இறுவட்டொன்றில் களஞ்சியப்படுத்துகின்ற ஒலிப்பதிவு செயற்பாட்டு முறையொன் றாகும்.

### தொலைநகல் இயந்திரம் (Fax machine)

பொதுத் தொலைபேசி முறையொன்றின் மூலம் கடிதங்களையும், சித்திரங்களையும் கொண்ட ஆவணங்களை உடனடியாக அனுப்பக்கூடிய இலத்திரனியல் உபகரண மாகும். தொலைநகல் முறையின்படி செய்து அனுப்பப்படுகின்ற தொலைநகல் இயந்திரத்தில் உரிய ஆவணங்களின் புகைப்படப்பிரதி டிஜிடல் தொழில்நுட்பம் மூலம் அதனைப் பெறுகின்ற தொலைநகல் இயந்திரத்திற்குப் பரிமாற்றம் செய்யப்படும்.

## உள்ளகத் தொலைபேசி (Inter Com)

தொலைபேசி வலைப்பின்னலின் உதவியுடன் நிறுவனமொன்றினுள் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக நிறுவனத்தினுள் தனிப்பட்ட தொலைபேசிகளின் வலைப் பின்னலொன்றை உருவாக்கிக் கொள்வதாகும்.

- வினைதிறனான தொடர்பாடலுக்குப் பின்வரும் முறைகளில் தடைகள் உருவாகின்றது என,
    - புதிய தொழில் நுட்ப முறைப் பாவனை தொடர்பாக உள்ள அறிவு பலவீன மடைதல்.
    - தொடர்பாடல் உபகரணங்களைப் பாவிக்கும்போது இடம்பெறுகின்ற வெளியகத் தடைகள்.
    - பழைய தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தல்.
    - தொடர்பாடல் செல்லும் வழியில் ஏற்படும் தடைகள்.
    - தொடர்பாடலை ஒழுங்குபடுத்துவதில் காணப்படும் பலவீனங்கள்
    - மொழிப் பிரச்சினை, அறிவு, மனப்பாங்கு போன்றவைகள்
- தொடர்பாடல் கருமத்திற்கு உள்ள தடைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட வேண்டுமென,
- ஒவ்வொரு தொடர்பாடல் முறைகளிலும் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் உள்ளன என,

### எழுத்து மூலத் தொடர்பாடல் - அனுகூலங்கள்

- மிகவும் விரிவான தகவல்களை முன்வைக்க முடியும் என,
- தகவல்கள் தொடர்பாடல் செய்யப்பட்டது என்பதற்கும் பெறப்பட்டது என்பதற்கும் அத்தாட்சியாக பயன்படுத்த முடியும் என,
- தரவுகள், குறிப்புக்கள், அட்டவணைகள் என்பவற்றை இலகுவாக தொடர்பாடல் செய்ய முடியும் என,

### எழுத்து மூலத் தொடர்பாடல் - பிரதிகூலங்கள்

- தகவல்களைப் புரிந்து கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படல்.
- வாசிப்புத்திறன் இல்லாவிடின் தகவல்களைத் தொடர்பாடல் செய்தல் கடினமா யிருத்தல்.
- தகவல்களைத் தொடர்பாடும்போது திரிவுபடல்.

### வாய்மொழித் தொடர்பாடல் - அனுகூலங்கள்

- பிரச்சினையொன்றை மிகவும் விரிவாக முன்வைத்து, கலந்துரையாடி முன்வைகக முடியும் என,
- தகவலை வழங்குபவரும் பெறுபவரும் நேரடியாகத் தொடர்புபடல்.
- தகவலை மிக விரைவாகவும் இரகசியமாகவும் முன்வைக்க முடியுமாயிருத்தல்.

**வாய்மொழித் தொடர்பாடல் - பிரதிகூலங்கள்**

- மொழிரீதியான பிரச்சினை ஏற்படல்.
- வாய்மொழிப் பலவீனமுள்ள தரப்பினருடன் தகவல்களைப் பரிமாறுவதில் பிரச்சினை ஏற்படல்.
- தகவல்கள் பரிமாறப்பட்டது என்பதற்கான அத்தாட்சி இல்லாமை.

**சமிக்ஞையும் குறியீடும் தொடர்பாடல் - அனுகூலங்கள்**

- தகவல்களைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் முன்வைக்க முடிதல்.
- தகவல்களின் பிழையற்ற தன்மை உயர் மட்டத்தில் காணப்படல்.

தகவல்களை இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.

**சமிக்ஞையும் குறியீடும் தொடர்பாடல் - பிரதிகூலங்கள்**

- பார்வைக் குறைபாடு உள்ள தரப்பினருடன் தகவல்களைப் பரிமாறுவதில் பிரச்சினை ஏற்படல்.
- சமிக்ஞையும், குறியீடும் திரிவுபட்டுச் செல்வதனால் தகவல் தொடர்பாடலுக்குத் தடைகள் ஏற்படல்.
- சில சமிக்ஞைகளையும் குறியீடுகளையும் விளங்கிக் கொள்வது கடினமா யிருத்தல்.

**தேர்ச்சி 11.0 :** உற்பத்திப் பொருட்களை விநியோகிப்பதற்கு வியாபாரம் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறிவார்.

**தேர்ச்சிமட்டம் 11.1:** வியாபாரத்தின் வகைகள் தொடர்பாகக் கவனத்திற் கொண்டு சில்லறை வியாபாரம் நடைபெறும் முறையினைத் தேடி யறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- வியாபாரத்தை அறிமுகப்படுத்துவார்.
- வியாபாரத்தின் வகைகளை வேறுபடுத்திக் காட்டுவார்.
- சில்லறை வியாபாரம் தொடர்பாக விமர்சனத்தில் ஈடுபடுவார்.
- சில்லறை வியாபாரிகளினால் நிறைவேற்றப்படும் சேவையை மதிப்பிடுவார்.
- விநியோகச் செயற்பாடுகள் நடைபெறும் பல்வேறுபட்ட முறைகளை விபரிப்பார்.
- வியாபார இடை நடுவர்களை அறிமுகப்படுத்தி அவர்களின் கருமங்களை விமர்சிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்குமிடையே உற்பத்திப் பொருட்களை யும் சேவைகளையும் பரிமாற்றிக் கொள்ளும் செயற்பாட்டை வியாபாரம் என்று அறிமுகப்படுத்தலாம் என,
- கொள்வனவு, விற்பனை எனும் பிரதான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வியாபாரம் இடம் பெறுகின்றது என,
- இங்கு உற்பத்திப் பொருளின் உரிமை ஒரு தரப்பினரிடமிருந்து மற்றோர் தரப்பினருக்கு மாற்றப்படுதல் இடம்பெறுகின்றது என,
- வியாபாரத்தின் பிரிவுகளை பின்வரும் முறையில் பாய்ச்சல் கோட்டு வரைபடத்தின் மூலம் முன்வைக்க முடியுமென,



- நாடொன்றின் அரசியல் எல்லைக்குள் இடம்பெறும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் உள்நாட்டு வியாபாரமாகும் என,
- உள்நாட்டு வியாபாரம் பின்வருமாறு இரு பிரிவுகளைக் கொண்டது என,
    - சில்லறை வியாபாரம்
    - மொத்த வியாபாரம்
- இறுதி நுகர்விற்காகப் பொருட்கள், சேவைகளை விற்றல் சில்லறை வியாபாரம் எனப்படும் என,
- சில்லறை வியாபாரியினால் பின்வரும் கட்சியினருக்குப் பாரிய சேவைகள் கிடைக்கப் பெறுகின்றன என,
    - உற்பத்தியாளர்களுக்கு
    - மொத்த வியாபாரிகளுக்கு
    - நுகர்வோர் / பாவனையாளர்களுக்கு
- உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கப் பெறும் சேவைகளில் சில பின்வருவன என,
    - உற்பத்தியாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கல்.
    - காட்சிப் பலகை, பதாதைக்காட்சி (போஸ்டர் காட்சி) மாதிரி வழங்கல், காட்சிப் பொருட்கள் போன்றவைகள் மூலம் பொருள் பிரசித்தம் பெறுவதற்கு உதவுதல்.
- மொத்த வியாபாரிகளுக்கு வழங்கப்படும் சேவைகளில் சில பின்வருமாறு காட்டப் படுகின்றது என,
    - பல்வேறு வகையான பொருட்களை மொத்த வியாபாரியிடமிருந்து பெற்று களஞ்சியப்படுத்தி வைத்தல்.
    - மொத்த வியாபாரிகளுக்குப் பயனுள்ள தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் சில பின்வருமாறு காட்டப்படுகின்றன என,
    - நுகர்வோர்களுக்குத் தேவையான பொருட்களைத் தேவையான அளவில் தேவையான நேரத்தில் வழங்கல்.
    - நுகர்வோர்களுக்குப் பண்டங்களை அறிமுகப்படுத்தல்.
    - நுகர்வோர்களுக்குக் கடனுக்குப் பண்டங்களை வழங்கல்.
    - பொருட்களைப் பயன்படுத்தும் முறையினைத் தெளிவுபடுத்திக் கொடுத்தல்.
- உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோர் வரையில் பொருட்களை விநியோகிக்கும் பொழுது பல இடை நடுவர்கள் தொடர்புபடுகின்றனர் என,
- நுகர்வுப் பண்டங்களை விநியோகிக்கும் முறைகளைப் பின்வரும் அட்டவணை மூலம் காணலாம் என,



**தேர்ச்சிமட்டம் 11.2:** உள்நாட்டு வியாபாரத்தின் மேம்பாடு தொடர்பாகக் கவனத்திற் கொண்டு தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்குப் பொருத்தமான சில்லறை வியாபார நிலையங்களைத் தெரிவு செய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- சில்லறை வியாபார நிலையங்களை வகைப்படுத்தக்கூடிய அடிப்படைகளை வெளிப் படுத்துவார்.
- சில்லறை வியாபார நிலையங்களை வகைப்படுத்திக் காட்டுவார்.
- ஒவ்வொரு சில்லறை நிலையங்களினதும் வகைகளின் முக்கிய பண்புகளைக் காட்டுவார்.
- சில்லறை வியாபார நிலையங்களின் நவீன போக்கினைத் தேடியறிவார்.
- சில்லறை வியாபாரம் தொடர்பாக எதிர்கால நிலைமையினை எதிர்வு கூறுவார்.

**கற்றல்-கற்பித்தல் செயலொழுங்குகள்:**

**பிரவேசம்:**

- உணவு, உடை, மின்சார உபகரணங்கள் போன்ற வகைகளின் சிலவற்றின் படங்களை வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- இப்பொருட்கள் நுகர்வோருக்கு எங்கிருந்து யாரிடமிருந்து கிடைக்கின்றது? எனும் வகையில் கேட்டறியவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - பல்வேறு சில்லறை வியாபாரிகளினாலும் மற்றும் விற்பனை நிலையங்கள் மூலமும் நுகர்வோர் தேவைகள் நிறைவு செய்து கொள்ளப்படுகின்றன என,
    - சில வகையான பொருட்கள், சேவைகள் நுகர்வோருக்கருகே வியாபாரிகளி னால் கொண்டு வரப்படுகின்றன என,
    - சிலவகையான பொருட்கள், சேவைகளை நுகர்வோர்கள் வியாபாரியை நோக்கித் தேடிச் செல்கின்றனர் என,

**கற்றலுக்காக முன்மொழியப்படும் ஆலோசனைகள்:**

- சில்லறை வியாபார முகவர்களாக தொழிற்படும் சில வியாபாரிகள் அல்லது சில நிறுவனங்கள் என்பவற்றினைப் பின்வருமாறு காட்டலாம்.
    - மரக்கறி வண்டி
    - கணினி விற்பனை ஊர்தி / வண்டி
    - கொழும்பு மளிகை / கொழும்பு ஸ்ரோர்ஸ்
    - உயர்சந்தை (Super Market)

- உங்களது குழுவிற்குக் கிடைக்கும் வியாபாரி அல்லது வியாபாரம் தொடர்பாகக் கவனத்திற் கொண்டு பின்வரும் விடயங்களைத் தேடியறியுங்கள்.
    - உங்களுக்குக் கிடைத்த வியாபாரத்திற்கு ஒத்த தன்மை கொண்ட வேறு வியாபாரிகள் அல்லது வியாபார நிலையங்கள் காணப்படுமாயின் எழுதிக் காட்டுங்கள்.
    - அவ்வியாபாரிகள் அல்லது வியாபார நிலையங்கள் அனைத்திற்கும் பொது வாகக் காணப்படும் பண்புகளைக் கோவைப்படுத்திக் காட்டுங்கள்.
    - உங்களுக்குக் கிடைத்த வியாபாரங்களது நவீன போக்குகள் யாவை என்பதனைக் காட்டுங்கள்.
    - உங்களது தேடியறிதல்களை ஆக்கபூர்வமானதாக முழு வகுப்பிலும் முன்வைப்ப தற்கு ஆயத்தமாகவும்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பரந்து காணப்படும் முறைக்கேற்ப சில்லறை வியாபாரிகளைப் பின்வருமாறு வகைப் படுத்த முடியும் என,
    - நடமாடும் சில்லறை வியாபாரிகள்
    - நிலையான சில்லறை வியாபாரிகள்
- ஒவ்வொரு வகைக்குமுரிய சில்லறை வியாபாரிகளைப் பின்வருமாறு பாய்ச்சல் கோட்டு வரைபட மூலம் காட்ட முடியும் என,



- ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டு சென்று பொருட்கள் விற்பனை செய்வது நடமாடும் வியாபாரம் எனப்படும். ஓர் இடத்தில் நிலையாக இருந்து விற்பனை செய்வது நிலையான வியாபாரமாகும் என,

- நடமாடும் வியாபாரங்களை சிற்றளவான, பாரியளவான எனும் வகையில் வகைப்படுத்த முடியும் என,

- பல்வேறு வகையான சிறிய பொருட்களைத் துவிச்சக்கர வண்டிகளிலும் அல்லது தள்ளு வண்டிகளிலும் வைத்துக் கொண்டு சிறிய அளவுகளில் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளவர்களை கூவிவிற்போன் என்றழைக்கப்படும் என,

- ஓர் இடத்தில் பொருட்களைத் தேக்கி வைப்பதற்காக சிறிய இடமொன்றைத் தயார் படுத்தி அதில் மரக்கறி வகைகள், பழ வகைகள் என்பன போன்ற சிறியளவில் தேக்கி வைத்து மேற்கொள்ளப்படும் வியாபாரமே பெட்டிக்கடையாகும் என,

- ஒரே கட்டடத்தினுள் ஒவ்வொரு வகைப் பொருட்களையும் வேறுவேறான பகுதிகளில் வைக்கப்பட்டு ஒரே உரிமையாளரின் கீழ் செயற்படும் வியாபார நிலையங்களை சிறப்புச் சந்தை வியாபார நிலையமாகும் என,

- ஒரு உற்பத்தியாளரது பொருட்களை விநியோகிப்பதற்காக நாடு முழுவதும் கிளைக் கடைகளை நடத்திச் சென்று விற்பனை செய்வது சங்கிலிக்கடை (கிளைக்கடை/ மடங்குக்கடை) வியாபார நிலையம் எனப்படும் என,

- ஒரு உற்பத்தியாளரது பொருட்களை மட்டும் விற்பனை செய்வதற்கு ஒப்பந்தம் செய்து அதன் இணக்கப்பாட்டிற்கேற்ப செயற்படும் வியாபார நிலையங்கள் கட்டுண்ட வியாபார நிலையமாகும் என, (மேற்குறிப்பிடப்பட்ட கோட்டுப்படத்தில் காட்டப்பட்ட ஏனைய வியாபார நிலையங்கள் தொடர்பாகச் சுருக்கமாக விபரிக்கவும்.)

- நடைமுறையில் காணப்படும் சில்லறை வியாபாரங்களின் நவீன போக்குகள் சிலதைப் பின்வருமாறு காட்ட முடியும் என,

    - நவீன முகாமைத்துவ நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல்.

    - பொதுவாக பாரியளவான சில்லறை வியாபார நிலையங்களை நடத்திச் செல்லுதல்.

    - அதிகளவான இருப்புக்களைப் பேணாது தேவையான அளவுகளில் உடனடியாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல் (J.I.T)

- கணினிமயப்படுத்தப்பட்ட விலைக்குறியீடு (Bar Code)

- கடனட்டைகள் மூலம் கொடுப்பனவுகளைச் செய்தல்.

- வாடிக்கையாளர்களுடன் வலையமைப்புத் தொடர்புகளைப் பேணுதல்.

**தேர்ச்சிமட்டம் 11.3:** மொத்த வியாபாரம் இடம்பெறும் முறையினைத் தேடியறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- மொத்த வியாபாரத்தைத் தெளிவுபடுத்துவார்.
- மொத்த வியாபாரத்தின் பண்புகளை விபரிப்பார்.
- மொத்த வியாபாரியினால் உற்பத்தியாளருக்கும் சில்லறை வியாபாரிக்கும் கிடைக் கப் பெறுகின்ற சேவையினை வெவ்வேறாகத் தெளிவுபடுத்துவார்.
- பிரதிநிதிகளை (முகவர்களை) அறிந்து அவர்களின் தொழிற்பாடுகளை விபரிப்பார்.
- வியாபாரத்திற்கு இடைநடுவர்களைப் பயன்படுத்துவதன் அனுகூலங்களையும், பிரதி கூலங்களையும் குறிப்பிடுவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- மீள்விற்பனைக்காக அல்லது வேறு வணிக நோக்கங்களுக்காக உற்பத்திப் பொருட் களை விலைக்கு வாங்குதல் மொத்த வியாபாரமாக அறிமுகப்படுத்தலாம் என,
- மொத்த வியாபாரத்தில் பின்வரும் பண்புகளைக் காணமுடியும் என,
    - மீள்விற்பனை நோக்கில் பொருட்களை விலைக்கு வாங்குதல்.
    - பொருட்களை மொத்தமாக விற்பனை செய்தல்.
    - வியாபாரக்கழிவினை பெற்றுக் கொடுத்தல்.
    - பொருட்களை மொத்தமாகக் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.
    - பொருட்களைப் பிரசித்தப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறல்.
    - சந்தை தொடர்பான ஆய்வு இடம்பெறல்.
    - சரக்கினைக் கொண்டு சென்று கொடுத்தல்.
- மொத்த வியாபாரியினால் பின்வரும் பிரிவினருக்கு பல்வேறு சேவைகள் கிடைக்கப் பெறுகின்றது என,
    - உற்பத்தியாளருக்கு
    - சில்லறை வியாபாரிக்கு
- உற்பத்தியாளருக்கு கிடைக்கப் பெறுகின்ற சேவைகள்

  **உதாரணம்:**

    - மொத்தமாக பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்.
    - சந்தை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

- சில்லறை வியாபாரிக்கு கிடைக்கப் பெறுகின்ற சேவைகள்

  **உதாரணம்:**

  - பொருட்களைத் தேவைக்கேற்ப வழங்கல்.
  - நிதிவசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
  - சில்லறை வியாபார நிலையத்திற்கு கொண்டு வந்து கொடுத்தல்.

- முதல்வர் ஒருவரின் அதிகாரத்தின் கீழ் ஏதாவது செயற்பாடொன்றில் ஈடுபடுபவர் முகவர் (Agent) ஆவாரென,

- முகவர்களை அவர்கள் வழங்கும் சேவைகளுக்கேற்ப பின்வருமாறு வகைப்படுத்த முடியும் என,




- முதல்வருக்கு நன்மை பயக்கும் வகையில் தனது விருப்பத்திற்கேற்ப முதல்வரின் சார்பாகப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தலை மேற்கொண்டு அதற்குரிய தரகுப்பணத்தினைப் பெற்றுக்கொள்ளும் முகவர் தரகு முகவராவாரென,

- கொடுக்கல் வாங்கலுக்கு கொள்வனவாளரையும், விற்பனையாளரையும் நேரடியாகத் தொடர்புபடுத்தி, விற்பனை இடம் பெறச் செய்து இரு தரப்பினரிடமும் தரகுப் பணத்தினை பெற்றுக் கொள்ளும் நபர் தரகர் எனப்படுவாரென,

- முதல்வரின் சார்பாக பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது அல்லது விற்பனை செய்யும்போது அக்கொடுக்கல் வாங்கல்களை தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளும் முகவர் காரணிகர் எனப்படுவாரென,

- முதல்வரின் சார்பாக பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தால், அக்கடன் பணத்தினை குறிப்பிட்ட தரப்பினரிடம் பெற்று முதல்வருக்குக் கொடுப்பதில் ஈடுபாட்டுடன் (பொறுப்புடன்) செயற்படுகின்ற முகவர் பொறுப்பு முகவர் எனப்படுவாரென, அவருக்கு பொதுவான தரகுப்பணத்திற்கு மேலதிகமாக பொறுப்புத் தரகுப்பணம் கிடைக்கின்றதென,

- முதல்வரின் பொருட்கள் தொடர்பாக திறந்த, வாய்மொழி மூல உயர் விலையினை முன்வைக்கும் கொள்வனவாளருக்கு விற்பனை செய்வதில் ஈடுபடுபவர் ஏலவர் ஆவாரென. இதற்காக அவருக்கு ஏல விற்பனை தொடர்பான தரகொன்று கிடைக்கப் பெறுகின்றது என,

- வியாபாரத்தில் சில்லறை வியாபாரி, மொத்த வியாபாரி, முகவர்கள் போன்றோர் இடைநடுவர்களாக செயற்படுகின்றனர் என,

- சாதாரணமாக இடைநடுவர்களைப் பயன்படுத்துவதனால் பின்வரும் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் காணமுடியும் என,

**அனுகூலங்கள்**

- பொருட்களை விநியோகிப்பது இலகுவாக அமைதல்
- தமது பொருட்களை அறிமுகப்படுத்துவது இலகுவாக அமைதல்.
- உற்பத்தியாளரின் கருமங்கள் இலகுவாதல்.
- சந்தைத் தகவல்களை உரிய தரப்பினருக்கு இலகுவாக பெற்றுக் கொள்ள முடியுமாயிருத்தல்.

**பிரதிகூலங்கள்**

- சந்தையில் தேவையற்ற வகையில் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படக் கூடியதாயிருத்தல்.
- பொருட்களின் விலைமட்டம் உயர்வடையக்கூடியதாயிருத்தல்.

**தேர்ச்சிமட்டம் 11.4:** வெளிநாட்டு வியாபாரம் மற்றும் அதனுடன் இணைந்த நன்மைகளையும் தடைகளையும் கேட்டறிவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- வெளிநாட்டு வியாபாரத்தினை விபரிப்பார்.
- வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளை விபரிப்பார்.
- வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகளை வெவ்வேறாக விபரிப்பார்.
- வெளிநாட்டு வியாபாரத்தின் அனுகூலங்களை மதிப்பிடுவார்.
- சுதந்திர வர்த்தகத்திற்குத் தடையாக அமையும் சுங்கவரியுடன், சுங்கவரியற்ற எனும் வகைகளில் வகைப்படுத்தி அவற்றை விபரிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- யாதேனுமொரு நாடு வேறொரு நாட்டுடன் அல்லது பல்வேறு நாடுகளுடன் மேற்கொள்ளும் வியாபாரம் வெளிநாட்டு வியாபாரம் எனப்படும் என,
- வெளிநாட்டு வியாபாரம் தொடர்பாகப் பின்வரும் காரணிகள் அடிப்படையாக உள்ளன என,
    - நேரில் உற்பத்தி
    - உற்பத்தியில் மிகை அல்லது குறைவு ஏற்படுதல்.
    - உற்பத்திக்கிரயம்
    - பூகோளமயமாதல்
    - வகைகளில் வேறுபட்டிருத்தல்
    - பொருட்களின் மேம்பாடு
    - வியாபாரத் தடைகள் குறைவாகக் காணப்படல்
- யாதேனுமொரு நாடு, வெளிநாடொன்றில் அல்லது வேறு நாடுகளில் இருந்து பொருட்களை வரவழைத்தல் “இறக்குமதி” என்றழைக்கப்படும். அதன் காரணமாகக் குறித்த நாட்டிற்கு வெளிநாட்டுச் செலாவணி செலவாகும் என,
- யாதேனுமொரு நாடு வெளிநாடொன்றிற்கு அல்லது பல்வேறு நாடுகளுக்கு பொருட்களை அனுப்புதல் “ஏற்றுமதி” எனப்படும் என,
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் துறைமுகத்திலே ஒழுங்கமைக்கப்பட்டு அல்லது ஒழுங்கமைக்கப்படாமல் ஏற்றுமதி செய்யப்படுமாயின் அது “இறக்கி ஏற்றல்” எனவும், இறக்குமதி செய்யப்பட்ட நாட்டிற்குள் கொண்டு வந்து மாற்றத்திற்குட்படுத்தி அல்லது மாற்றத்திற்குட்படுத்தாது அதே முறையில் மீண்டும் ஏற்றுமதி செய்தலை “மீள் ஏற்றுமதி” எனப்படும் என,

- நாடொன்று வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதன் மூலம் பல்வேறு அனுகூலங் களைப் பெற்றுக் கொள்ள முடியும் என,
    - மேலதிக உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடிதல்.
    - உற்பத்தி செய்ய முடியாத பொருட்களை இறக்குமதி செய்ய முடிதல்.
    - வெளிநாட்டுச் செலாவணியை உழைக்க முடிதல்.
    - சர்வதேச வியாபாரத் தொடர்புகள் வளர்ச்சியடைதல்.
    - நவீன தொழில்நுட்பங்களும் முகாமைத்துவத் தேர்ச்சியும் வளர்ச்சியடைதல்.
    - புதிய சர்வதேசச் சந்தைகள் உருவாகுதல்.
    - சர்வதேச ஒத்துழைப்புகள் அதிகரித்தல்.
    - அதிகளவான பொருட்களை நுகர்வு செய்ய முடிதல்.
- எந்தவொரு தடையுமின்றி பல்வேறு பிரிவினர்களும் சுதந்திரமாகப் பொருட்களை இறக்குமதி, ஏற்றுமதி செய்வதற்குச் சந்தர்ப்பமொன்று இருத்தல் “சுதந்திர வர்த்தகம்” எனப்படும் என,
- சுதந்திர வர்த்தகத்தினை சுங்கவரியுடனானது, சுங்கவரியற்றது என வகைப்படுத்த முடியுமென,
- நாடுகளுக்கிடையேயான வியாபாரத்தின்போது வரி விதிப்பது சுதந்திர வர்த்தகத்திற் குத் தடையொன்றாகும் என,
- சுதந்திர வர்த்தகத்திற்குத் தடையாக அமையும் சுங்கத்தீர்வை தவிர்ந்த காரணிகளும் காணப்படுகின்றன என,

  **உதாரணம்:**
    - இறக்குமதிகளை மட்டுப்படுத்தல்
    - ஏற்றுமதிகளை மட்டுப்படுத்தல்
    - ஏற்றுமதி இறக்குமதிகளைத் தடைசெய்தல்
    - வர்த்தக ஒப்பந்தங்கள்
    - இறுக்கமான செலாவணிக் கொள்கைகள்

**தேர்ச்சிமட்டம் 11.5:** இறக்குமதி ஏற்றுமதி நடைமுறைகளைத் தேடியறிந்து வெளிநாட்டு வியாபாரத்தில் பிரவேசிக்கும் ஆயத்தத்தை வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- இறக்குமதி, ஏற்றுமதி நடைமுறைகளை விபரிப்பார்.
- இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களையும், வழிமுறை களையும் தெளிவுபடுத்துவார்.
- வெளிநாட்டு வியாபாரத்தில் பணக் கொடுப்பனவு இடம்பெறுகின்ற முறைகளை வெவ்வேறாகத் தெளிவுபடுத்துவார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் பொதுவாக நேர்முறை, முகவர் முறை என்ற இரு முறைகளில் இடம்பெறுகின்றதென,
- வெளிநாட்டு உற்பத்தியாளருக்கு அல்லது அவரின் பிரதிநிதிக்கு (முகவர்) நேரடி யாகக் கட்டளைகளை அனுப்பி பொருட்களைப் பெற்றுக் கொள்ளல் நேர்முறையின் கீழ் இடம் பெறுகின்றதென,
- கட்டளை, தரவாணை முகவரின் மூலம் பொருட்களை கொண்டு வருதல் முகவர் முறையின் கீழ் இடம் பெறுகின்றதென,
- நேர்முறை அல்லது முகவர் முறை இரண்டில் எம்முறையைப் பின்பற்றானாலும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகளிலும், ஆவணங்களிலும் எந்த வேறுபாடும் இடம்பெறுவதில்லையென,
- இறக்குமதி நடைமுறைகளுக்கான படிமுறைகளைப் பின்வருமாறு காட்டமுடியும் என,
    - வெளிநாட்டு வழங்குநர் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
    - விலை விசாரணைக்கடிதம் அனுப்புதல்.
    - விலைகூறலின் பின்னர் பொருளை இறக்குமதி செய்வது தொடர்பாகப் பொருத்த மான தீர்மானத்திற்கு வருதல்.
    - இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய பொருட்கள் தொடர்பில் இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளல்.
    - கட்டளையை வெளிநாட்டு ஏற்றுமதியாளருக்கு அனுப்புதல்.
    - ஏற்றுமதியாளருக்கான கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.
    - இறக்குமதிப் பண்டம் துறைமுகத்திற்கு வந்த பின்னர் அவற்றை விடுவித்தல்.

- ஏற்றுமதி வியாபாரத்தின் நடைமுறைகளைப் பின்வருமாறு காட்டமுடியும் என,
    - ஏற்றுமதியாளரொருவராகப் பதிவு செய்தல்
    - வெளிநாட்டுக் கொள்வனவாளர்களைத் தேடிக் கொள்ளல்
    - தேவையாயின் ஏற்றுமதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளல்
    - இறக்குமதியாளரிடமிருந்து கிடைத்த விலை விசாரணைக்குப் பதிலாகக் கூறு விலைக்கடிதத்தினை அனுப்புதல்.
    - கட்டளையினைப் பெற்றுக்கொள்ளல்
    - பண்டத்தொகையினைக் கப்பலேற்றுவதற்குத் தேவையான இடத்தினை ஒதுக்கு தலும் தேவையான ஆவணங்களைத் தயாரித்துக் கொள்ளலும்.
    - கப்பலேற்றுவதற்குப் பொருத்தமான முறையில் பண்டங்களைப் பொதி செய்தல்
    - ஏற்றுமதிப் பண்டங்களைக் காப்புறுதி செய்தல்
    - பண்டங்களைக் கப்பலிலேற்றிச் சுமைச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல்
    - பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களைப் பின்வரும் முறையில் காட்டலாம் என,
    - **இறக்குமதி / ஏற்றுமதி அனுமதிப்பத்திரம்**
      **(Import & Export Licence)**

      இவ்வாறான அனுமதிப்பத்திரம் இறக்குமதி / ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக் களத்தினால் வழங்கப்படுவதுடன், அனுமதிப்பத்திரம் தேவைப்படுகின்ற பொருட் களை இறக்குமதி ஏற்றுமதி திணைக்களம் பிரசித்தப்படுத்தும்.

    - **கட்டளை அட்டவணை / தரவாணை (Indend)**

      இறக்குமதியாளனொருவனால் வெளிநாட்டு வழங்குநர் ஒருவருக்கு அனுப்பப் படுகின்ற இக்கட்டளையில் இறக்குமதியாளனுக்குத் தேவைப்படுகின்ற பொருட்கள் தொடர்பான விபரம், விலை, கப்பலேற்றுவதுடன் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

    - **சுமைச்சீட்டு / வார்நாமம் (Bill of Lading)**

      கப்பல் கம்பனி சார்பாகக் கப்பல் தலைவன் அல்லது அவரின் முகவரினால் ஏற்றுமதியாளனுக்கு இது வழங்கப்படும். சுமைச்சீட்டில் குறிப்பிட்ட பொருட்கள் கப்பலில் பொறுப்பேற்கப்பட்டது என்பதையும், குறிப்பிட்ட நாட்டிலுள்ள துறை முகத்திற்குக் கொண்டு சென்று ஒப்படைக்கப்படும் எனவும், கப்பல் கம்பனி இதன் மூலம் உறுதிப்படுத்தும்.

    - **பட்டியல் (Invoice)**

      ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களின் விபரம், விலை, கொடுப்பனவு, நிபந்தனை, போக்குவரத்துப்பாதை, நிராகரிப்பதற்கான நிபந்தனைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஆவணமாகும்.

- **தோற்றுவாய்ச் சான்றிதழ் (உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்) (Certificate of orgin)**

  கப்பலேற்றும் பண்டங்கள் ஏற்றுமதி செய்யும் நாட்டினால் உற்பத்தி செய்யப் பட்டது என்பதை உறுதிப்படுத்தி, ஏற்றுக் கொள்ளப்பட்ட வணிகக் கழகத்தினால் அல்லது அரச நிறுவனமொன்றினால் வழங்கப்படும் ஆவணமொன்றாகும்.

- **நாணயக்கடிதம் (Letter of Credit)**

  ஏற்றுமதியாளனொருவனால் இறக்குமதியாளனொருவனுக்கு அனுப்பப்படுகின்ற பண்டங்களுக்கான பணத்தினை செலுத்துவதற்காக வழங்கப்படுகின்ற ஆவண மொன்றாகும். பொதுவாக இறக்குமதியாளனின் கோரிக்கைக்கேற்ப அவரின் வங்கியினால் நாணயக்கடிதம் வழங்கப்படும்.

- **இறக்குமதிக் குறிப்பு (Import note)**

  இறக்குமதியாளன் தொடர்பாக துறைமுகத்திற்குக் கிடைத்துள்ள பண்டங்களின் உரிமையினைத் தெரிவிப்பதற்கு இறக்குமதியாளன் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவரினால் சுங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணமாகும்.

- **ஏற்றுமதிக் குறிப்பு (Export note)**

  தான் ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கின்ற பண்டங்கள் தொடர்பான பூரண விபரங்களை உள்ளடக்கி ஏற்றுமதியாளரொருவரால் ஏற்றுமதி நாட்டின் சுங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கின்ற ஆவணமாகும்.

- **காப்புறுதிப்பத்திரம் (Insurance Certificate)**

  ஏற்றுமதிக்கான பண்டங்களை ஏற்றுமதி செய்யும்போது அப்பண்ட இருப்பினைக் காப்புறுதி செய்து ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளர் பெற்றுக் கொள்ளும் காப்புறுதிப்பத்திரமாகும். விற்பனை ஒப்பந்தப்படி ஏற்றுமதியாளன் அல்லது இறக்குமதியாளனால் இது மேற்கொள்ளப்படும்.

- **கப்பல் தளப்பத்திரம்**

  சுங்கத்திணைக்களத்திற்குப் பண்டங்களை ஒப்படைத்த பின் அப்பண்டங்கள் பொறுப்பேற்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டு சுங்கத் திணைக்களத்தினால் ஏற்றுமதியாளருக்கு வழங்கும் ஆவணமொன்றாகும்.

- **நட்டஈட்டுக் கடிதம் (Letter of Indenity)**

  குற்றமுடைய வார்நாமம் (சுமைச்சீட்டு) ஒன்றினை வழங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கும்போது உடைந்த அல்லது பழுதடைந்துள்ள அப்பண்ட இருப்பின் எதிர்கால சகல நட்டங்களையும் தாம் பொறுப்பெடுப்பதாகக் கூறி தூய சுமைச்சீட்டினை பெற்றுக் கொள்வதற்காக ஏற்றுமதியாளரால் கப்பல் தலைவ னுக்கு வழங்கும் ஆவணமே இதுவாகும். கப்பலில் ஏற்பட்ட பண்டங்கள் நல்ல நிலையில் காணப்படும்போது வழங்கப்படுகின்ற சுமைச்சீட்டு தூய சுமைச்சீட்டாகும். கப்பலில் ஏற்றப்படுகின்ற பொருட்களில் சில அல்லது முழுவ தும் உடைந்து அல்லது பழுதடைந்து உள்ளன எனக் குறிப்பிட்டு வழங்கப்படு கின்ற ஆவணம் குற்றமுடைய சுமைச்சீட்டு ஆகும்.

- **சுகநலச் சான்றுப்பத்திரம் (Pitho Sanitory Certificate)**

  இறக்குமதி நாட்டின் தேவைக்கேற்ப சில நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்ற சில வகையான விவசாய உற்பத்திப்பொருட்களின் நுகர்வுத் தகைமையினை உறுதிப்படுத்தி ஏற்றுமதி செய்யும் நாட்டிலிருந்து சில அரச நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற ஆவணமாகும்.

- **பண்டகசாலை ஆவணப்பத்திரம் (Ware house Certificate)**

  பந்தித்த பண்டகசாலையில் பண்டங்களை வைத்த பிறகு பண்டகசாலை அதிகாரியினால் வழங்கப்படுகின்ற ஆவணமொன்றாகும்.

- வெளிநாட்டு வியாபாரத்தில் பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குப் பயன் படுத்துகின்ற முறைகளை பின்வருமாறு தெளிவுபடுத்த முடியும் என,

  - வங்கி ஆணை
  - நாணயக்கடிதம்
  - இலத்திரனியல் கொடுப்பனவு முறை
  - வெளிநாட்டு அஞ்சலும், டெலெக்ஸ் ஒப்படைப்பும்

- **வங்கி வரைவு (Bank draft)**

  இது தனது நாட்டில் தூர பிரதேசமொன்றுக்கு அல்லது வெளிநாட்டில் வசிக்கும் ஒருவருக்கு பணம் அனுப்புவதற்கு பயன்படுத்த முடியும்.

  ஒரு நபர் தனது வங்கிக்கு குறித்த பணத்தையும் அதற்குரிய கட்டணத்தையும் செலுத்திய பின்னர் வழங்கப்படும் அறிவித்தலுக்கேற்ப பெயரிடப்பட்டுள்ள பணத்தைப் பெறவேண்டிய நபருக்கு அப்பணத்தை செலுத்துமாறு குறிப்பிட்டு பணம் அனுப்புவரின் வங்கியினால் பணம் கிடைக்க வேண்டிய நபரின் வங்கிக்கு அல்லது முகவருக்கு வழங்குகின்ற ஆவணமாகும்.

- **இலத்திரனியல் கொடுப்பனவு முறை (Electronic payment system)**

  தற்காலத்தில் இணையத் தொடர்பினைப் பயன்படுத்தி பணத்தினை உடனடியாக செலுத்தக்கூடிய முறை இதுவாகும்.

  **உதாரணம்:** கடன் அட்டை

  நேர் செலவு ஒப்படைப்பு

  தன்னியக்க டெலர் இயந்திரம், தொலைபேசி, இணைய வலைப்பின்னல் போன்ற இலத்திரனியல் ஊடகங்களினூடாக அல்லது எழுத்து மூலமான நிலையான கட்டளையின் மூலம் தமது வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கி தமது கணக்கு களில் செலவில் இடல்.

- **வெளிநாட்டு அஞ்சலும் தொலைமாற்று ஒப்படைப்பும் (Foreign mail & Telex transfers)**

ஏதாவது வங்கியொன்றினால் அந்த வங்கி சார்பாக, வெளிநாட்டுக் கடன் கொடுத்தோருக்கு குறிப்பிட்ட பணத்தொகையொன்றினைச் செலுத்துமாறு அந்த வங்கியின் வெளிநாட்டுக் கிளைக்கு அல்லது முகவர் வங்கிக்கு தொலைபேசி மூலம் அல்லது கம்பி (கேபள்) முறையில் செய்யப்படுகின்ற கட்டளையாகும். இதற்காகப் பயன்படுத்தப்படுவது மின்னியல் செய்தி முறையாகும். மேற்குறிப் பிட்டபடி டெலெக்ஸ் இயந்திரம் மூலம் செய்தி அனுப்பப்படுமாயின் அது தொலைமாற்று ஒப்படைப்பு எனப்படும். பக்ஸ் இயந்திரம் மூலம் அவ்வாறு அனுப்பப்படின் அது தொலைநகல் ஒப்படைப்பு எனப்படும்.

**தேர்ச்சிமட்டம் 11.6:** வர்த்தக வலயங்களினதும் சர்வதேச அமைப்புக்களினதும் செயற்பாடு வெளிநாட்டு வியாபாரத்தின் மேம்பாட்டில் பங்களிப்புச் செய்யும் முறையினை நுணுகி ஆய்வார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 06

**கற்றல் பேறுகள்:**

- வர்த்தக வலயங்களை அறிமுகப்படுத்தி அதற்கான உதாரணங்களைக் காட்டுவார்.
- சர்வதேச அமைப்புக்கள் வெளிநாட்டு வியாபாரத்தின் மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறிவார்.
- நடைமுறையில் ஏற்படும் வர்த்தக ஒப்பந்தங்களும், அமைப்புக்களும் தொடர்பாகத் தேடியறிவார்.
- வெளிநாட்டு வர்த்தகத்திற்கு வெளிநாட்டு ஒப்பந்தங்களினால் ஏற்படும் தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்வார்.
- வெளிநாட்டு வியாபாரத்தின் வளர்ச்சியினை விமர்சிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பல நாடுகள் மூலம் வரி, சுங்கக் கட்டணம், வர்த்தகம் என்பன தொடர்பாக ஒப்பந்தத்திற்குட்பட்ட சுதந்திர வர்த்தக வலயமொன்றை வர்த்தக வலயம் என்று அறிமுகப் படுத்தலாம் என,
- அதிகமான வர்த்தக வலயங்களைப் பூகோள ரீதியாகக் காணக்கூடியதாக உள்ளது என,
- சுதந்திர வர்த்தக வலயங்களுக்குப் பல உதாரணங்களைப் பின்வருமாறு காட்ட முடியும் என,
    - ஐரோப்பியச் சங்கம்
    - ஆசியான் அமைப்பு
    - சார்க் அமைப்பு
    - வட அமெரிக்கச் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்
- வெளிநாட்டு வர்த்தக மேம்பாட்டிற்கெதிராக பல்வேறு காரணிகளினால் தடைகள் ஏற்படுகின்றன என,
- அக்காரணிகளுக்கிடையே பின்வரும் காரணிகள் பிரதானமானவையென,
    - இயற்கையான தடைகள்

      **உதாரணம்:**
      - மொழி மாற்றங்கள்
      - கலாச்சார மாற்றங்கள்

- இயற்கையல்லாத தடைகள்

  **உதாரணம்:**
  - சுங்கக்கட்டணம், இறக்குமதிப் பங்கினைத் தடைசெய்தல்.
  - செலாவணிக் கட்டுப்பாடு
  - சுங்கச் சட்டதிட்டங்கள்

- வெளிநாட்டு வர்த்தகத்திற்கு எதிராகக் காணப்படும் இத்தடைகளை இழிவுபடுத்தி அதன் மேம்பாட்டிற்காக நாடுகள் மூலம் பல்வேறு அமைப்புக்களை நிறுவியுள்ளன என,
- அவ்வாறான அமைப்புகள் சிலவற்றுக்கு உதாரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம் என,
  - உலக வர்த்தக அமைப்பு (WTO)
  - புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச வங்கி (IBRD - உலக வங்கி)
  - சர்வதேச நாணய நிதியம் (IMF)
  - எட்டு நாடுகள் குழு (G8)
- இரு நாடுகள் அல்லது பலவற்றிற்கிடையே யாதேனுமொரு காலப்பகுதியினுள் வியாபாரப் பொருட்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கான இணக்கப்பாடு வர்த்தக ஒப்பந்தம் என இலகுவாக அறிமுகப்படுத்தலாம் என,
- இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தமொன்று கையொப்பமிடப்பட்டு யாதேனுமொரு பொருட் தொகுதியை யாதேனுமொரு காலப்பகுதிக்குப் பரிமாற்றிக் கொள்வதை இருபக்க வர்த்தக ஒப்பந்தம் எனவும், இரு நாடுகளுக்கு மேற்பட்ட அளவுகளில் ஒன்று சேர்ந்து பொருட்களைப் பரிமாற்றிக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளப் பட்ட ஒப்பந்தம் பல்பக்க வர்த்தக ஒப்பந்தம் எனவும் அறிமுகப்படுத்த முடியும் என,
- வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வதினூடாக நிலையான சந்தையொன்றைப் பெற்றுக் கொள்ள முடிதல், விலையேற்றங்களின் போது பாதிப்பேற்படாதிருத்தல், சர்வதேச ரீதியான ஒத்துழைப்பு வளர்ச்சியடைதல் போன்ற பல்வேறு அனுகூலங்கள் கிடைக்கின்றன என,
- நிகழ்காலத்தில் பல நாடுகள் ஒன்றிணைந்து அந்நாடுகளது பொருளாதார நிலைமை களைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்காக ஒப்பந்தங்களை அமைத்துக் கொள்கின்றன என,
- நிகழ்காலத்தில் வெளிநாட்டு வியாபாரம் தொடர்பாக பல நவீன அபிவிருத்திப் போக்குகள் தோன்றியுள்ளதுடன் அவற்றிற்கான உதாரணங்கள் பலவற்றைக் காட்டமுடியும் என,
  - இலத்திரனியல் வணிகத்தினூடாக வெளிநாட்டு வியாபாரம் வியாபித்தல்
  - இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளைப் பயன்படுத்தல்
  - வர்த்தக வலயங்களும் வர்த்தகக் கூட்டுக்களும் உருவாதல்

**தேர்ச்சிமட்டம் 11.7:** இலத்திரனியல் வணிகமானது வியாபாரத்தின் மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்யும் முறையினை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகளின் எண்ணிக்கை :** 05

**கற்றல் பேறுகள்:**

- இலத்திரனியல் வணிகத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலத்திரனியல் செயற்பாட்டு விதிமுறைகளை விபரிப்பார்.
- இலத்திரனியல் வணிகத்தின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஒப்பிடுவார்.
- இலத்திரனியல் வணிகம் நடைபெறும் முறையினை வேறுவேறாக விபரிப்பார்.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலத்திரனியல் வலையமைப்பினூடாகக் கொள்வனவு, விற்பனையாளர்களுக்கிடையே சந்தைவாய்ப்புக்களைத் தோற்றுவித்து பொருட்களின் கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகள் நடைபெறுவதை இலத்திரனியல் வணிகம் / இலத்திரனியல் வியாபாரம் எனப்படும் என,
- இலத்திரனியல் வணிக முறைகள் பின்வருமாறு நடைபெற முடியும் என,
    - வலைப் பின்னலினூடாக கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் தொடர்புறுதல்.
    - வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்கமைத்துக் கொள்ளல்.
    - பொருள் விற்பனை, கொள்வனவு நடவடிக்கைகள் நடைபெறல்.
    - கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கொடுப்பனவு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படல்.
- இலத்திரனியல் வியாபாரத்தின் மூலம் வணிகர்களுக்கும் நுகர்வோருக்கும், சமூகத்திற்கும் அனுகூலங்கள் கிடைக்கின்றன என,
- வணிகர்கள் பெறும் அனுகூலங்கள்:
    - கொடுக்கல் வாங்கல்கள் விரைவாக நடைபெறும்.
    - சந்தை விரிவடைதல்
    - கொடுக்கல் வாங்கல்களுக்குரிய செயற்பாட்டுச் செலவு குறைவாதல்.
- நுகர்வோருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள்
    - பொருட்களைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தல்.
    - கட்டளைகளை விரைவாக நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியுமாக இருத்தல்.
    - உற்பத்திப் பொருட்களது விலை பொதுவாகக் குறைவடைதல்.

- சமூக ரீதியாகப் பெறப்படும் அனுகூலங்கள் பின்வருவனவாகும் என,
  - மக்களது வாழ்க்கைத் தரம் உயர்வடைதல்
  - நவீன பொருட்களைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்
  - பல்வேறு தரப்பினர்களுடன் தொடர்புகொண்டு வியாபார நடவடிக்கைகளைத் தொடர்புபடுத்திக் கொள்ள முடியும்.
- இலத்திரனியல் வணிகத்தில் பின்வரும் பிரதிகூலங்களும் காணப்படுகின்றன என,
  - குறிப்பிட்ட உபகரணத்தைப் பயன்படுத்துவதில் வசதியீனங்கள் காணப்படல்.
  - பரவலாக்கலில் காணப்படும் வரையறைகள்
  - பயன்படுத்தும்பொழுது பாதுகாப்புத் தொடர்பாகப் பிரச்சினைகள் ஏற்படல்.
- இலத்திரனியல் வணிகம் பல்வேறு முறைகளில் இடம்பெறுகின்றன என,
  - வணிகத்திலிருந்து வணிகத்துக்கு (B2B) வலைப் பின்னலூடாக வணிகத்தி லிருந்து வணிகத்துக்குக்கிடையே கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறல்.
  - வணிகத்திலிருந்து வாடிக்கையாளர்களுக்கு (B2C) வலைப் பின்னலூடாக வணிகத்தின் மூலம் வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களின் விற்பனை நடைபெறும்.
  - வாடிக்கையாளர்களிடமிருந்து வாடிக்கையாளர்களுக்கு (C2C) வலைப்பின்ன லூடாக நுகர்வாளர் ஒருவர் மூலம் நேரடியாக மற்றோர் நுகர்வாளர்களுக்குப் பொருட்கள் விற்பனை செய்தல்
  - அரசின் மூலம் குடிமக்களுக்கு (G2C)
- நடைமுறை ரீதியாக இலத்திரனியல் வணிகம் தொடர்பாக இடம்பெறும் மாற்றங்களைக் கலந்துரையாடுங்கள்.

# பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு முறைகள்

# பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்றேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்கு தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல், முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேன்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி / முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு
14. பேச்சுக்கள்

15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கருப் படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவர்ப் பத்திரிகைகள்
20. வினா - விடை நிகழ்ச்சிகள்
21. வினா - விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்
25. உடனடிச் சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் - கற்பித்தல், மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லா பாடங்களினதும் எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர் பார்க்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான வகைகளைத் தெரிவு செய்து கொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும். அதற்கமைய அவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் கணிப்பீட்டு வகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத் திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்கள்

**(1) மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் :** முதலாவது தவணை - கருவி - 01

**(2) உள்ளடக்கப்படும் தேர்ச்சிமட்டங்கள் :** 1.1, 1.2, 1.3, 1.4, 1.5, 1.6, 1.7

**(3) கருவிக்கான பாடப் பரப்புக்கள் :**

- வணிகத்தை வரைவிலக்கணப்படுத்தல்.
- வணிகத்தின் வளர்ச்சி
- வணிகங்களை வகைப்படுத்தலுக்கான நியதிகளும், வணிகங்களை வகைப் படுத்தலும்
- பொருளாதாரத்திற்கு வணிகங்களது பங்களிப்பு
- உற்பத்தியின் வகைகள்
  வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் கட்சியினர்.

**(4) கருவியின் தன்மை :** பேச்சுச் சோதனை

**(5) கருவியின் நோக்கம் :**

- பேச்சுத்திறனை அதிகரித்துக் கொள்வார்.
- சபைக் கூச்சத்தைக் குறைத்துக் கொள்வார்.
- வணிகத்துடன் இணைந்த எண்ணக்கருவைப் பகுப்பாய்வு செய்வார்.
- வணிகங்களை வகைப்படுத்தும் முறையை முன்வைப்பார்.
- வணிகத்தின் வளர்ச்சிப் போக்கினைப் பட்டியல்படுத்துவார்.
- வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினரே பகுப்பாய்வு செய்வார்.

**(6) கருவியினைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் :**

**ஆசிரியருக்கான ஆலோசனைகள் :**

- தேர்ச்சிமட்டம் 1.7 இன் இறுதியில் பேச்சுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படும் எனத் தேர்ச்சி மட்டம் 1.1 தொடக்கத்தின் போதே மாணவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கவும்.
- மதிப்பீட்டு நியதிகள் தொடர்பாக மாணவர் களை அறியச் செய்யவும்.

- பின்வரும் தலைப்புக்களினூடாக வகுப்பில் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக் குச் சமனாக தலைப்புக்களின் எண்ணிக் கையை ஒவ்வொரு தேர்ச்சி மட்டம் பூர்த்தி செய்யப்படும் திகதியில் அனைத்து மாணவர்களுக்கும் பெற்றுக் கொடுக்கவும்.

  **உதாரணம்:**
  - வணிக தேவைகளும் விருப்பங்களும், பொருட்களும் சேவைகளும்
  - சந்தை, வணிக வகைப்படுத்தலுக் கான நியதிகள்.
  - உரிமையின் அடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்தல், நோக்கத்தினடிப்படையில் வணிகங்களை வகைப்படுத்தல்.
  - உள்ளீடுகளும் வெளியீடுகளும் பொருள் வகைப்படுத்தல்.
  - சேவைகள் வகைப்படுத்தல்
  - நேர் உற்பத்தியும் நேரில் உற்பத்தியும்
  - பண்டமாற்று முறையும், பணமும், துணைச்சேவைகளும்
  - இலத்திரனியல் வணிகம்
  - வணிக நடவடிக்கைகளின் நவீன போக்கு
  - வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் கட்சியினர்
  - வியாபாரம்
  - வர்த்தகம்
  - கேள்வி
  - உற்பத்தி

  (தலைப்புக்கள் போதாமையாக இருப்பின் தேர்ச்சி மட்டத்திற்குரிய வேறு தலைப்புக் களை முன்வைக்கவும்.)
- வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கைக்குப் பொருந்தக்கூடிய அளவில் தலைப்புக்களின் எண்ணிக்கைகளை மட்டும் பெற்றுக் கொடுக்கவும்.
- அனைத்துத் தலைப்புத் தொடர்பாகவும் இரண்டு நிமிடங்கள் பேசுவதற்கு ஆயத்த மாகுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத் துங்கள்.
- பேச்சினை மதிப்பிடும் திகதியை சரியாக அறியச் செய்யுங்கள்.

- மதிப்பீடு செய்யப்படும் திகதி, ஒவ்வொரு மாணவருக்குமான தலைப்புக்கள் அவள்/அவன் பேசுவதற்காக ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் எழுமாறாகத் தெரிவு செய்வதற்கு இடமளியுங்கள்.
- மாணவர் பேசும் சந்தர்ப்பத்தின்போது நியதிகளுக்கேற்பப் புள்ளி வழங்குங்கள்.

**மாணவருக்கான ஆலோசனைகள்** :

- ஆசிரியர் ஆலோசனைகளைக் கடைப்பிடியுங்கள்.
- ஆசிரியரினால் வழங்கப்படும் அனைத்துத் தலைப்புக்கள் தொடர்பாகவும் ஆயத்தமாகவும். ஆயினும் ஒரு தலைப்பின் கீழே பேசுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.
- மதிப்பீடு நடைபெறும் திகதியின்போது எழுமாறாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தலைப்புத் தொடர்பாக இரண்டு நிமிடங்கள் வரையில் பேச்சொன்றினை வகுப்பில் முன்வைக்கவும்.

**(7) மதிப்பீட்டு நியதிகள்** :

- தலைப்புக்கேற்றவாறு விடயங்களை முன்வைத்தல்.
- குறிப்பிட்ட நேரத்தை பயன்படுத்திக் கொள்ளல்.
- பாடவிடயங்களோடு இணைந்ததாக இருத்தல்.
- தேவையான சந்தர்ப்பங்களின்போது தொனி வேறுபாடு, கட்டுப்பாடு, உடல் அசைவுகள் என்பவற்றை முன்வைத்தல்.
- பேச்சுத் தொடக்கத்தின்போதும் இறுதியின் போதும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கான முறையாகப் பின்பற்றல்.

**(8) புள்ளிப்பரம்பல்** :

- மிகநன்று 04
- நன்று 03
- மத்திமம் 02
- விருத்தியடைய வேண்டும் 01

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்கள்

**(1) மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் :** முதலாவது தவணை - கருவி - 02

**(2) உள்ளடக்கப்படும் தேர்ச்சிமட்டங்கள் :** 4.1, 4.2, 4.3, 4.4, 4.5, 4.6

**(3) கருவிக்கான பாடப் பரப்புக்கள் :**

- அரசு வணிகங்களில் செல்வாக்கு செலுத்துகின்ற முறை.
- வணிகங்களில் அரசின் பங்களிப்பு
- அரசொன்றின் நோக்கம்
- அரசின் நாணயக்கொள்கை (பிஸ்கால்)
- அரசின் நாணயக்கொள்கை
- நுகர்வோர் பாதுகாப்பு
- நுகர்வோர் பாதுகாப்பிற்காக செயற்படும் நிறுவனங்கள்

**(4) கருவியின் தன்மை :** விவாதம்

**(5) கருவியின் நோக்கம் :**

- ஆக்கரீதியாகவும், தர்க்கரீதியாகவும் விடயங்கள் முன்வைப்பார்.
- பேச்சுத்திறனை விருத்தி செய்துகொள்வார்.
- அரசொன்றின் நோக்கத்தினை ஒழுங்கு படுத்துவார்.
- அரசின் நோக்கத்தினை நிறைவேற்று வதற்கு வணிகம் பங்களிப்புச் செய்கின்ற முறையினைக் காட்டிக் கொடுப்பார்.
- அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற முறையினைத் தெளிவு படுத்துவார்.
- அரசுக்கும் வணிகத்திற்குமிடையிலான நெருங்கிய தொடர்பின் முக்கியத்துவத்தை காட்டிக் கொடுப்பார்.

**(6) கருவியினைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் :**

**ஆசிரியருக்கான ஆலோசனைகள் :**

- தேர்ச்சிமட்டம் 4.6 முடிவில் விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டுமென தேர்ச்சி மட்டம் 4.1 ஆரம்பிக்கும்போதே மாணவர் களுக்கு தெரியப்படுத்தவும்.
- வகுப்பில் மாணவர்களை இரு குழுக்களா கப் பிரிக்கவும்.

- தேர்ச்சி மட்டம் 4.1 ஆரம்பத்திலே பின்வரும் தலைப்புக்களை இரு குழுக்களுக்கும் பெற்றுக் கொடுத்து விவாதத்திற்கு தயாராகுமாறு கூறவும்.
  "வணிகத்தில் அரசு தலையிட வேண்டும். அரசு தலையிடத் தேவையில்லை."
- ஒவ்வொரு செயற்பாட்டின் இறுதியில் அதற்குரிய பாடவிடயங்களை விவாதத்திற்காகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென ஆலோசனை கூறவும்.
- குறிக்கப்பட்ட பாடவேளைகள் இரண்டினுள் விவாதத்தை நடத்த வேண்டுமெனவும், மதிப்பீட்டு நியதிகள் தொடர்பாகவும் மாணவர்களுக்கு அறியச் செய்யவும்.
- விவாதம் நடக்கும்போது குறிப்பிட்ட நியதிகளின் அடிப்படையில் மாணவர்களுக்குப் புள்ளி வழங்கவும்.

**மாணவருக்கான ஆலோசனைகள்** :

- ஆசிரியரின் ஆலோசனை வழிகாட்டலின்படி செயற்பாட்டில் ஈடுபடவும்.
- தங்களது குழுவிற்குக் கிடைத்த தலைப்பிற்குரிய தகவல்களைச் சேகரித்துக் கொள்ளவும்.
- குழுத் தலைவரை நியமித்தல், ஒவ்வொரு உறுப்பினருக்கும் கிடைக்கின்ற நேரம், சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை தொடர்பாக ஆசிரியருடன் கலந்துரையாடித் தீர்மானித்துக் கொள்ளவும்.
- குழுவின் வெற்றிக்காக ஒத்துழைப்புடன் செயலாற்றவும்.
- புள்ளி வழங்கும் முறை தொடர்பாகக் கவனத்தில் கொள்ளவும்.

**(7) மதிப்பீட்டு நியதிகள்** :

- தலைப்பிற்கு உரிய விடயங்களை முன்வைத்தலும், ஒழுங்கமைக்கப்பட்ட விடயங்களை முன்வைத்தலும்.
- கருத்துக்களை ஆக்கரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் முன்வைத்தல்.
- பொருத்தமான முறையில் அங்க அசைவுகளையும், நேரத்தையும் முகாமை செய்தல்.
- எதிர்த்தரப்பினரின் தர்க்கங்களைத் தகர்த்தல்.
- குழுவின் ஒத்துழைப்புடனும், உத்வேகத்துடனும் கருமமாற்றல்.

**(8) புள்ளிப்பரம்பல்** :

- மிகநன்று 04
- நன்று 03
- மத்திமம் 02
- விருத்தியடைய வேண்டும் 01

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்கள்

**(1) மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் :** இரண்டாம் தவணை - கருவி - 03

**(2) உள்ளடக்கப்படும் தேர்ச்சிமட்டங்கள் :** 5.1, 5.2, 5.3, 5.4, 5.5, 5.6, 5.7, 5.8

**(3) கருவிக்கான பாடப் பரப்புக்கள் :**

- உரிமையின் அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்தல்.
- தனியார் துறை வணிக அமைப்புக்களின் விசேட பண்புகள்
- தனியார் துறை வணிக அமைப்புக்களைப் பதிவு செய்தல்.
- தனியார் துறை வணிக அமைப்புக்களின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்

**(4) கருவியின் தன்மை :** குறுக்கெழுத்துப் போட்டி உருவாக்கம்

**(5) கருவியின் நோக்கம் :**

- உரிமையின் அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்துவார்.
- பல்வேறு நியதிகளின் அடிப்படையில் தனியார் துறை வணிக அமைப்புக்களின் பண்புகளை ஒழுங்குபடுத்துவார்.
- தனியார் துறை வணிக அமைப்புக்களை பதிவு செய்யும் நடைமுறையினை விபரிப்பார்.
- உறுதியாக விடை கிடைக்கக்கூடிய வினாக்களை உருவாக்குங்கள்.

**(6) கருவியினைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் :**

**ஆசிரியருக்கான ஆலோசனைகள் :**

- தேர்ச்சிமட்டம் 5.8 முடிவின்போது குறுக் கெழுத்துப் போட்டியொன்றை உருவாக்க வேண்டுமென தேர்ச்சி மட்டம் 5.1 ஆரம்பத்தின்போதே மாணவர்களுக்கு தெரிவிக்கவும்.
- மதிப்பீட்டு நியதிகள் தொடர்பாக மாணவர் களை அறியச் செய்யவும்.
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும்.

- தனியுடைமை வணிகம், பங்குடைமை வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், கூட்டுறவு வணிகம் போன்ற தலைப்புக்கள் நான்கையும் குழுக்களிடையே எழுமாற்றாக பகிர்ந்தளிக்கவும்.
- ஒவ்வொரு குழுவும் தமக்குக் கிடைத்த தலைப்பிற்காகப் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் குறுக்கெழுத்துப் போட்டியொன்றை உருவாக்க வேண்டும் என்பதைத் தெரியப்படுத்தவும்.
    - மேலிருந்து கீழாக சொற்களும் இடமிருந்து வலமாக 10 சொற்களும் இருத்தல் வேண்டும்.
    - விருப்பப்படி சதுரக்கோடுகளை அமைத்துக் கொள்ள முடியும்.
    - குறுக்கெழுத்துப் பதங்கள் (சொற்கள்) தமது குழுவிற்குக் கிடைத்த தலைப்புடன் நேரடியாகத் தொடர்புபடல் வேண்டும்.
- குறுக்கெழுத்துப் போட்டியினை முன்வைக்க வேண்டிய திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் அனைத்துக் குழுக்களும் குறுக்கெழுத்துச் சொற்களையும், குறுக்கெழுத்தினையும் பரீட்சித்துப் பார்க்கவும் மாற்றங்கள் தேவையாயின் ஆலோசனைகளை வழங்கவும்.
- ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட தினத்தில் (பாடவேளைகள் இரண்டில்) குறுக்கெழுத்துப் போட்டியினைத் தயாரித்த ஒவ்வொரு குழுவினரையும் பயன்படுத்தி அவற்றை முன்வைக்கச் செய்யவும்.
- ஏனைய குழுக்களைப் பயன்படுத்தி குறுக்கெழுத்துச் சதுரங்களை பூரணப்படுத்தச் செய்யவும். (போட்டி முறையில் நடாத்தவும்.)
- மதிப்பீட்டு நியதிகளுக்கேற்ப குறுக்கெழுத்தினை முன்வைக்கின்ற ஒவ்வொரு குழுவிற்கும் புள்ளி வழங்கவும்.

**மாணவருக்கான ஆலோசனைகள்** :

- ஆசிரியரின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் ஏற்ப செயற்பாட்டில் ஈடுபடவும்.
- குழுவிலுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களும் ஆகக் குறைந்தது ஒரு குறுக்கெழுத்துச் சொல்லையாவது உருவாக்க வேண்டும்.

- ஆசிரியர் கூறுகின்ற தினமொன்றில் அவற்றை ஆசிரியருக்குக் காட்டித் தேவையான மாற்றங்களை மேற் கொள்ளவும்.
- ஆக்கபூர்வமான குறுக்கெழுத்துப் போட்டியினை உருவாக்கவும்.

**(7) மதிப்பீட்டு நியதிகள் :**

- குறுக்கெழுத்துப்போட்டியின் விடைச்சொல் தலைப்புக்குப் பொருத்தமாக அமைதல்.
- நோக்கம் நிறைவேறும் வகையில் குறுக் கெழுத்துப் போட்டியினை உருவாக்கி யிருத்தல்.
- ஆசிரியர் ஆலோசனைகளைப் பின்பற்றலும் உரிய காலத்தினுள் செயற்பாடுகளை முடித்தலும்.
- உரிய சொற்கள் தொகையினை உள்ளடக்கல்.
- ஆக்கரீதியானது என

**(8) புள்ளிப்பரம்பல் :**

- மிகநன்று 04
- நன்று 03
- மத்திமம் 02
- விருத்தியடைய வேண்டும் 01

# கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்கள்

**(1) மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் :** இரண்டாம் தவணை - கருவி - 04

**(2) உள்ளடக்கப்படும் தேர்ச்சிமட்டங்கள் :** 6.1, 6.2, 6.3, 6.4, 6.5, 6.6

**(3) கருவிக்கான பாடப் பரப்புக்கள் :**

- முயற்சியாண்மையை வரைவிலக்கணப் படுத்தலின் முக்கியத்துவமும், அனுகூலங் களும்
- பொருளாதார வளர்ச்சிக்கும் முயற்சி யாண்மைக்கும் இடையே காணப்படும் தொடர்பு
- முயற்சியாண்மையும், முயற்சியாண்மை யின் பின்னணியும்.
- முயற்சியாண்மைத் திறனும், முயற்சி யாண்மைத் திறனை அபிவிருத்தி செய்வ தற்கான வழிமுறைகளும்
- சிற்றளவான வணிகங்களது பண்புகளும் அவை இலங்கைக்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களும்
- சிறிய வியாபாரங்கள் தொடர்பாக உதவி வழங்கும் செயற்திட்டங்கள்

**(4) கருவியின் தன்மை :** தேடியறிதல்

**(5) கருவியின் நோக்கம் :**

- வழங்கப்படும் தலைப்புச் செய்திகளின் அடிப்படையில் சேகரிப்பதற்குப் பொருத்த மான வினாக்கொத்தொன்று தயாரிப்பார்.
- தேடியறிதலின் மூலம் தகவல்களைச் சேகரிப்பார்.
- சேகரிக்கப்பட்ட தகவல்களினூடாக அறிக்கை தயாரிப்பார்.
- முயற்சியாண்மையை வரைவிலக்கணப் படுத்துவார்.
- முயற்சியாண்மையின் முக்கியத்துவத்தை யும் அதன் அனுகூலங்களையும் தேடி யறிவார்.
- முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை மேம் படுத்திக் கொள்ளக்கூடிய முறைகளைக் காட்டிக் கொடுப்பார்.

**(6) கருவியினைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் :**

**ஆசிரியருக்கான ஆலோசனைகள் :**

- தேர்ச்சிமட்டம் 6.6 இறுதியின்போது முயற்சி யாளரொருவர் தொடர்பான அறிக்கை யொன்றை முன்வைக்க வேண்டும் என தேர்ச்சி மட்டம் 6.1 இன் தொடக்கத்தின் போதே மாணவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கவும்.
- மதிப்பீட்டு நியதிகள் தொடர்பாக மாணவர் களை அறியச் செய்யவும்.
- தமது பிரதேசத்தில் இருக்கும் முயற்சி யாளரொருவரைச் சந்தித்து அவரிடம் பின்வரும் தகவல்களைச் சேகரிப்பதற்கு உரிய வகையில் வினாக்கொத்தொன் றைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கவும்.
    - வணிக நடவடிக்கைகளது தன்மை
    - அவரது குடும்பப் பின்னணி
    - முயற்சியாண்மையைத் தெரிவு செய்வதற்கான காரணங்கள்
    - ஆரம்பிக்கப்பட்ட முறை
    - ஆரம்ப மூலதனம்
    - உதவிகள் செய்த பிரிவினர்
    - தொடக்கத்தில் காணப்பட்ட வணிகத்தின் தன்மை
    - முகம் கொடுப்பதற்கு நேரிட்ட சவால்கள்
    - தற்போதைய நிலை
    - கடன் பெறப்பட்டுள்ளதா? (அவ்வாறாயின் கடன் பெறப்பட்ட முறை)
    - வணிகத்தின் தன்மை
    - உதவி வழங்கும் கட்சியினர்
    - சமூகப் பொருத்தப்பாடு
    - எதிர்கால எதிர்பார்ப்புக்கள்
- மாணவர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தினை ஏற்கனவே குறிப் பிடப்பட்ட திகதியொன்றில் பரிசீலனை செய்து தேவையான மாற்றங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கவும்.

- பாடசாலை நேரம் தவிர்ந்த காலத்தில் தெரிவு செய்த முயற்சியாளரொருவருடன் கலந்துரையாடல் செய்த தகவல்களைச் சேகரிக்குமாறு அறிவித்தல் வழங்கவும்.
- சேரிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இரு பாட வேளைகளில் அறிக்கையைத் தயாரிக்கச் செய்யவும்.
- அதற்காகப் பொருத்தமான தலைப் பொன்றை இடவேண்டும் எனவும் அறியச் செய்யுங்கள்.
- உரிய நியதிகளினடிப்படையில் புள்ளிகளை வழங்கவும்.

**மாணவருக்கான ஆலோசனைகள்** :

- ஆசிரியரது ஆலோசனைகளுக்கேற்ப செயற்படுங்கள்.
- நேரடியாகக் கலந்துரையாடலொன்றை நடத்துவதற்காகப் பிரதேசத்திலுள்ள முயற்சியாளர் ஒருவரைத் தெரிவு செய்யவும்.
- அவரிடம் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறையில் வினாக்கொத்தொன்றை ஆசிரியரின் வழிகாட்டலிலும் ஆலோசனையின் பேரிலும் தயாரிக்கவும்.
- ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திகதியில் முயற்சியாண்மையாளரைச் சந்தித்துத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும்.
- சேகரிக்கப்பட்ட தகவல்களினூடாக அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு ஆயத்தமாகவும்.
- ஆசிரியர் மூலம் குறிப்பிடப்பட்ட திகதியில் முயற்சியாளர் தொடர்பான அறிக்கை யொன்றை எழுதி ஒப்படைக்கவும்.
- வினாக்கொத்தைத் தயாரித்தல், தகவல்களைச் சேகரித்தல் மற்றும் அறிக்கையைத் தயாரித்தல் என்பன தனித்தனியாக இடம்பெற வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

**(7) மதிப்பீட்டு நியதிகள் :**

- நோக்கங்களுக்குப் பொருந்தக்கூடியவாறு வினாக்கொத்தொன்றைத் தயாரித்தல்.
- தரவு சேகரித்தலும் அதன் பொருத்தப்பாடும்
- சுயமாகச் செயற்படல்
- குறிப்பிடப்பட்ட காலப் பகுதியினுள் பூரணப்படுத்துதல்
- ஆக்கபூர்வமான அறிக்கையொன்றைத் தயாரித்தல்

**(8) புள்ளிப்பரம்பல் :**

- மிகநன்று 04
- நன்று 03
- மத்திமம் 02
- விருத்தியடைய வேண்டும் 01

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்கள்

**(1) மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் :** மூன்றாம் தவணை - கருவி - 05

**(2) உள்ளடக்கப்படும் தேர்ச்சிமட்டங்கள் :** 7.1, 7.2, 7.3, 7.4, 7.5, 7.6, 7.7

**(3) கருவிக்கான பாடப் பரப்புக்கள் :**

- பணத்தின் அறிமுகம் மற்றும் வளர்ச்சி, பணத்தின் வகைகள்.
- இலங்கையின் நிதித்துறை
- வணிகவங்கியின் வைப்பு வகைகள்
- வணிக வங்கிகளின் ஏனைய சேவைகள்
- காசோலைகள், இலத்திரனியல் பணம்
- இலங்கை மத்திய வங்கியின் நோக்கங் கள், அதன் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்.

**(4) கருவியின் தன்மை :** வினாவிடை வேலைத்திட்டம்

**(5) கருவியின் நோக்கம் :**

- சரியான விடை கொண்ட வினாக்களைத் தயாரிப்பார்.
- பணமும் நிதி நிறுவனங்களுக்குரிய நடைமுறை ரீதியான வினாக்களைத் தயாரிப்பார்.
- புதிய அறிவுகளைச் சேர்ப்பார்.
- குழு ஒருமைப்பாடுகளுடன் நடவடிக்கை களை மேற்கொள்வார்.

**(6) கருவியினைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் :**

**ஆசிரியருக்கான ஆலோசனைகள் :**

- தேர்ச்சிமட்டம் 7.7 இன் இறுதியில் வினா விடை வேலைத் திட்டமொன்று நடத்தப் படுவதாகத் தேர்ச்சி மட்டம் 7.1 தொடக் கத்தின் போது மாணவர்களுக்கு அறியச் செய்யுங்கள்.
- மதிப்பீட்டு நியதிகள் தொடர்பாக மாணவர் களை அறியச் செய்யவும்.
- வகுப்பு மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு தேர்ச்சிமட்ட இறுதியிலும் உரிய பாடவிடயங்கள் உள்ளடங்கக்கூடியவாறு வினாக்கள் தயாரிப்பதில் ஈடுபடுத்தவும்.

- இடையிடையே மாணவர்களினால் எழுதப் பட்ட வினாக்களையும் விடைகளையும் பரிசீலனை செய்து மீளவூட்டலை வழங்கவும்.
- வினாவிடை வேலைத்திட்டத்திற்குச் சரியான விடைகொண்ட இருபது வினாக்கள் வீதம் இரு குழுக்களாலும் தயாரிக்கப்பட வேண்டும் என அறிவியுங்கள்.
- ஒத்த வினாக்களை இரு குழுக்கள் மூலமும் முன்வைப்பதைத் தவிர்ப்பதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்ள வும். இதற்காக அனைத்துக் குழுக்களும் இருபது வினாக்களுக்கு மேல் தயாரிக்கப் படவேண்டும் என அறிவியுங்கள்.
- குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் ஒவ்வொரு வினாவையேனும் தயாரிக்க வேண்டும் என அறிவியுங்கள்.
- வங்கி அறிக்கைகள் போன்ற மூலங் களைப் பரிசீலனை செய்து குறித்த பாட விடயங்களை அளவிடக்கூடிய முறையில் வினாக்களைத் தயாரிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட குறிப்பிட்ட திகதியொன்றில் (இரு பாடவேளைகளில்) வினாவிடை வேலைத்திட்டத்தினை இரு குழுக்களின் பங்களிப்புடன் நடத்துங்கள்.
- சரியான விடைக்குப் பொருத்தமானவாறு புள்ளி வழங்குவதற்கும் அவற்றைப் பதிவு செய்வதற்கும் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- வினாவிடை வேலைத்திட்டம் நடைபெறும் அதேவேளை நியதிகளுக்கேற்ப மாணவர் களுக்குப் புள்ளி வழங்கவும்.

**மாணவருக்கான ஆலோசனைகள்** :

- ஆசிரியரின் ஆலோசனைகள் வழிகாட்டல் களின் அடிப்படையில் நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள்.
- தயாரிக்கப்பட்ட வினாக்களையும் விடை களையும் இடையிடையே ஆசிரியரிடம் சமர்ப்பித்துச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு தேர்ச்சி மட்ட இறுதியின்போதும் உரிய பாடவிடயங்களை உள்ளடக்கக் கூடியவாறு வினாக்களை இயன்றளவு தயாரிக்கவும்.

- அதற்குரிய சரியான விடை தொடர்பாகக் குழுவின் அனைத்து வகுப்பினர்களையும் அறியச் செய்யுங்கள்.
- தனது குழுவின் வெற்றியை உறுதிப் படுத்திக் கொள்வதற்கும் கூடிய புள்ளி களைப் பெற்றுக் கொள்வதற்கும் உற்சாக மூட்டுங்கள்.

**(7) மதிப்பீட்டு நியதிகள் :**

- பாடவிடயங்களுக்குரிய சரியான வினாக் களைத் தயாரித்திருத்தல்.
- வினாக்களுக்கான சரியான விடையை எழுதி இருத்தல்.
- குறித்த திகதியில் உரிய கருமங்களைப் பூர்த்தி செய்திருத்தல்.
- ஆசிரியர் ஆலோசனைகளைக் கடைப் பிடித்தலும் பங்களிப்பும்
- குழுவொன்றாகக் ஒருமைப்பாட்டுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**(8) புள்ளிப்பரம்பல் :**

- மிகநன்று 04
- நன்று 03
- மத்திமம் 02
- விருத்தியடைய வேண்டும் 01

# கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத் திட்டங்கள்

**(1) மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் :** மூன்றாம் தவணை - கருவி - 06

**(2) உள்ளடக்கப்படும் தேர்ச்சிமட்டங்கள் :** 11.6

**(3) கருவிக்கான பாடப் பரப்புக்கள் :**
- வர்த்தக வலயங்களும், சர்வதேச அமைப்புக்களும்
- நடைமுறையில் தோன்றும் வர்த்தக ஒப்பந்தங்களும், அமைப்புக்களும்
- வர்த்தக ஒப்பந்தங்களினால் வர்த்தகத் திற்கு ஏற்படும் தாக்கங்கள்
- வெளிநாட்டு வர்த்தகத்தின் நவீன போக்குகள்

**(4) கருவியின் தன்மை :** தனியாள் ஒப்படை

**(5) கருவியின் நோக்கம் :**
- வர்த்தக வலயங்களைப் பெயரிட்டு அதன் ஒவ்வொரு வலயங்களுக்குமுரிய நாடுகளைப் பட்டியல்படுத்துவார்.
- வர்த்தக அமைப்புக்களின் நோக்கங்களை யும் அவற்றின் தொழிற்பாடுகளையும் விபரிப்பார்.
- வர்த்தக ஒப்பந்தங்கள் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை தேடிப் பார்ப்பார்.
- வெளிநாட்டு வர்த்தகத்தின் நவீன போக்கு களை விபரிப்பார்.

**(6) கருவியினைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் :**

**ஆசிரியருக்கான ஆலோசனைகள் :**
- தேர்ச்சி மட்டம் 11.6 இன் இறுதியில் தனியாள் ஒப்படையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென தேர்ச்சிமட்டம் 11.1 தொடக் கத்திலேயே மாணவர்களுக்கு அறியச் செய்யவும்.
- மதிப்பீட்டு நியதிகள் தொடர்பாக மாணவர் களை அறிவூட்டுங்கள்.
- பின்வரும் தகவல்கள் உள்ளடங்கலாகச் சிறு புத்தக ஏடொன்றைத் தயாரிக்குமாறு மாணவர்களுக்கு அறிவித்தல் கொடுங்கள்.
    - வர்த்தக வலயங்களும் சர்வதேச அமைப்புக்களும்

- அதற்குரிய நாடுகள்
- அவற்றின் தொழிற்பாடுகள்
- நடைமுறையில் தோன்றும் அமைப் புக்களும் ஒப்பந்தங்களும்
- வர்த்தக ஒப்பந்தங்கள் வெளி நாட்டு வர்த்தகத்திற்கு ஏற்படுத்தும் தடைகள்
- வெளிநாட்டு வர்த்தகத்தின் நவீன போக்கு
- ஆக்கபூர்வமானதாக முன்வைத்தல் தொடர்பாகக் கவனத்திற் கொள்ள வேண்டுமெனவும் அறிவியுங்கள்.
- இவ்வாறு தயாரிக்கப்பட்ட கையேட் டுப் புத்தகத்தைப் பூரணப்படுத்தி ஒப்படைக்கப்பட வேண்டிய இறுதித் திகதியை ஆரம்பத்திலேயே அறிவித்து விடுங்கள்.

**மாணவருக்கான ஆலோசனைகள்** :

- ஆசிரியரின் வழிகாட்டல், ஆலோசனை களின் அடிப்படையில் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
- உங்களது ஆக்கபூர்வமான தன்மை வெளிப்படுமாறு ஒப்படையைத் தயாரியுங்கள்.
- இயன்றளவு தேவையான அனைத்துத் தகவல்களும் உள்ளடக்குவதற்கு முயற்சி யுங்கள்.
- ஆசிரியரினால் குறிப்பிடப்பட்ட திகதிக்குள் ஆக்கத்தை ஒப்படையுங்கள்.

**(7) மதிப்பீட்டு நியதிகள்** :

- போதியளவான பாடவிடயங்கள் உள்ளடக் கப்பட்டிருத்தல்.
- தரவு / தகவல்கள் சேகரிப்பதற்கு எடுக்கப் பட்ட நடவடிக்கைகளின் பொருத்தப்பாடு உண்டென.
- தயாரிக்கப்பட்ட ஒப்படையின் ஆக்கபூர்வ மான தன்மையும் பூர்த்தியும்.
- ஆசிரிய ஆலோசனைகளைப் பின்பற்றல்.
- குறித்த திகதியினுள் ஒப்படைத்தல்.

**(8) புள்ளிப்பரம்பல்** :

- மிகநன்று 04
- நன்று 03
- மத்திமம் 02
- விருத்தியடைய வேண்டும் 01

## உசாத்துணை:


(1) பண்டாரநாயக்க, ஜகத் - உயர்தர வணிகக்கல்வி - புதிய பதிப்பு

(2) விஜயசூரிய ஏ. பி, (2005) - உயர்தர வணிகக்கல்வி

(3) இலங்கை மத்திய வங்கி (2008) - ஆண்டறிக்கை

(4) இலங்கை மத்திய வங்கி சமூக மற்றும் பொருளாதார மாதாந்த அறிக்கை

(5) Griffin, R. W. - 2000. Management, 5th Edition. AITBS Publishers - INDIA

(6) Hall, D, Jones, R., Raffo. C, Chambers. I. and Gray, D. - 2001, Business Studies, Causeway Press Limited.

(7) Nuttall, C. J, - 2004 Business Studies Cambridge University Press.

(8) Rayport, J. F. and Jaworski, B. J. - 2002, e-Commerce, Tata McGraw - Hill Edition.